# மலேசியத் தமிழ் ஆய்விதழ்

# MALAYSIAN JOURNAL OF TAMIL

தொகுதி 1 (பகுதி 1)
Volume 1 (Issue 1)

சூன் 2023 / June 2023

வெளியீடு:
மலேசியத் தமிழ்க்கல்வியாளர் மகிழ்மன்றம்

Published by:
Malaysian Tamil Academics Appreciative Association

eISSN 2990-9694

# Malaysian Journal of Tamil

# மலேசியத் தமிழ் ஆய்விதழ்

**Website: http://kpatmalaysia.com/ojs/index.php/mjt/index**

**eISSN:**

**2990-9694**

**Publisher:**

**Malaysian Tamil Academics Appreciative Club**
No. 64, Fasa 2, Taman Kenanga, 33000 Kuala Kangsar, Perak, Malaysia
016-8956014
kpat.malaysia@gmail.com

**வெளியீடு:**

**மலேசியத் தமிழ்க்கல்வியாளர் மகிழ்மன்றம்**

The publisher of Malaysian Journal of Tamil will not be responsible for the statement made by the authors in any articles published in the journal. Under no circumstances will the publisher of this publication be a liable for the loss or damage cost by your reliance on the advice, opinion or information obtained either explicitly or implied through the contents of this publication.

©Malaysian Tamil Academics Appreciative Association. All rights reserved. No part of this journal may be reproduced in any forms or by any means without publisher's prior permission.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# விடுதலைக்கு முந்தைய மலேசிய மரபு கவிதைகளில் வரலாற்றுப் பதிவுகள்

# Historical Evidence in The Malaysian Tamil Traditional Poetry Before Independence

சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல்/ Samikkanu Jabamoney Ishak Samuel[1]
[1]Associate Professor, Tamil Language Programme, Quest International University,
Corresponding Email: samjabarose@yahoo.com.my

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் விடுதலைக்கு முந்தைய மலேசிய மரபு கவிதைகளில் இடம்பெற்றுள்ள வரலாற்றுப் பதிவுகளை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் விடுதலைக்கு முந்தைய மரபு கவிதைகளில் பத்துமலை, தண்ணீர்மலை, கல்லுமலை ஆகிய திருத்தலங்களின் வரலாற்றுப் பதிவுகள், மலாயாவில் தமிழர்களின் வாழ்வியல் பதிவுகள், தனி மனித வரலாற்றுப் பதிவுகள், இயற்கைப் பேரிடர் குறித்த வரலாற்றுப் பதிவுகள், ஜப்பானியர் ஆட்சிக் கால வரலாற்றுப் பதிவுகள் ஆகியவை ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வின் வழி, இளைய தலைமுறையினர் விடுதலைக்கு முந்தைய மரபு கவிதைகளில் இடம்பெற்றுள்ள வரலாற்றுப் பதிவுகளை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு விடுதலைக்கு முந்தைய மரபு கவிதைகளில் இடம்பெற்றுள்ள வரலாற்றுப் பதிவுகளை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** சுதந்திரத்திற்கு முந்தைய, மலேசிய மரபு கவிதை, வரலாற்றுப் பதிவுகள்

**Abstract**

The major objective of the research is to explore the historical evidence in the Malaysian traditional Tamil poetry before independence. This research is designed in a qualitative approach. The library work is used for this study. The findings show that the characteristics of Lord Muruga enshrined in the shrines of Batumalai, Tannirmalai and Kallumalai in Malaya, natural disaster in Malaya, the lives of individuals, the social lifestyles of Malaysian Tamils, and the records of the Japanese regime were recorded in the Malaysian Tamil poems. This study is useful in teaching the younger generation about the historical evidence in the Malaysian Tamil poetry. The research claims to be the first such attempt to do a study regarding the historical evidence in the Malaysian Tamil poetry.

**Keywords:** Historical Evidence, Malaysian Tamil Traditional Poetry, before independence.

## முன்னுரை

ஆங்கிலேயர்களால் மலேசியாவிற்கு இரண்டு வகையான தமிழர்கள் கொண்டுவரப்பட்டனர். இரப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்காகத் தமிழகத்திலிருந்து படிப்பறிவு இல்லாத கூலித் தொழிலாளர்களையும் அலுவலகங்களில் வேலை செய்வதற்காகத் தமிழகத்திலும் இலங்கையிலுமிருந்து படிப்பறிவுள்ள தமிழர்களையும் கொண்டு வந்தனர். இவர்களோடு சேர்ந்து வியாபார நோக்குடைய சில படித்த தமிழர்களும் சுயேச்சையாக மலேசியாவிற்கு வருகை புரிந்தனர். மலேசியாவிற்கு வருகைபுரிந்த படித்த தமிழர்களே மலேசியத் தமிழ் இலக்கியத்திற்கு வித்திட்டனர். மலேசியா விடுதலை அடைவதற்கு முன் தோன்றிய பெரும்பான்மையான இலக்கியப் படைப்புகள் தமிழகம், யாழ்ப்பாணம் ஆகிய இரண்டு பகுதிகளிலிருந்து வருகைபுரிந்த கல்வியறிவு பெற்ற தமிழர்களால் இயற்றப்பட்டவையாகும். இவர்கள் படைத்த முதல் இலக்கிய வடிவம் மரபு கவிதையாகும்.

## ஆய்வு முன்னோடிகள்

மலேசிய மரபு கவிதை குறித்த ஆய்வுக் கட்டுரைகளும் புத்தகங்களும் எழுதப்பட்டுள்ளன. பெரும்பாலான நூல்கள் மலேசிய மரபு கவிதை வரலாறு குறித்து எழுதப்பட்டுள்ளன. ஆய்வுக் கட்டுரைகள் மலேசிய மரபு கவிதைகளில் இடம்பெற்றுள்ள பல்வேறு சிந்தனைகள் குறித்து எழுதப்பட்டுள்ளன.

சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல் (2020), மலேசிய மண்ணில் தமிழ்க் கவிதை வளர்ச்சி என்னும் நூலை எழுதியுள்ளார். இந்நூல், மலேசிய மரபு கவிதை, புதுக்கவிதை வரலாற்றை விளக்குவதாக அமைந்துள்ளது.

மேலும், சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல் (2019), மலேசியத் தமிழ் மரபு கவிதைகளின் மரபும் மாற்றமும் என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். இவ்வாய்வுக் கட்டுரையில் மலேசியத் தமிழ் மரபு கவிதையின் வளர்ச்சி குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

கோட்டி முருகானந்தம் (2012) சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதை வரலாறு என்னும் ஒரு நூலை இயற்றியுள்ளார். இந்நூல் சிங்கப்பூர், மலேசிய ஆகிய இரண்டு நாடுகளின் மரபு கவிதை வளர்ச்சியை ஆராயும் நூலாக அமைந்துள்ளது.

சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல் (2008), மலேசியத் தமிழ் மரபு கவிதைகளிலும் புதுக்கவிதைகளிலும் இராமாயண மகாபாரதத் தொன்மங்கள் என்ற தலைப்பில் முனைவர்ப் பட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளார். இந்த ஆய்வேட்டில் மலேசிய மரபு கவிதை, புதுக்கவிதை வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முரசு நெடுமாறன் (2007), மலேசியத் தமிழரும் தமிழும் என்னும் தலைப்பில் ஒரு நூலை இயற்றியுள்ளார். இந்நூலில் மலேசியத் தமிழ் மரபு கவிதையின் வரலாறு இடம்பெற்றுள்ளது. முரசு நெடுமாறன் (2007), மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்னும் ஒரு தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலிலும் மலேசிய மரபு கவிதை வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சபாபதி, வி. (1999), மலேசியத் தமிழ்க் கவிதை வளம் என்னும் ஒரு நூலை இயற்றியுள்ளார். இந்நூலில் மலேசியத் தமிழ்க் கவிதைகள் குறித்த பல்வேறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ராமையா, மா. (1996), மலேசியத் தமிழ் வரலாற்றுக் களஞ்சியம் என்னும் ஒரு தொகுப்பை வெளியிட்டுள்ளார். இந்நூலில் மரபு கவிதை வரலாற்றை எழுதியுள்ளார். மேலும். ராமையா, மா. (1979), மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு என்னும் ஒரு நூலை எழுதியுள்ளார். இந்நூலிலும் அவர் மலேசிய மரபு கவிதை வரலாற்றை இணைத்துள்ளார்

**ஆய்வு நெறிமுறைகள்**

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு**

ஆய்வுத் தரவுகள் விடுதலைக்கு முந்தைய மலேசிய மரபு கவிதைகளில் இடம்பெற்றுள்ள வரலாற்றுப் பதிவுகள் பத்துமலை, தண்ணீர்மலை, கல்லுமலை ஆகிய திருத்தலங்களில் வீற்றிருக்கும் முருகப் பெருமானின் வரலாற்றுப் பதிவுகள், மலாயாவில் தமிழர்களின் வாழ்வியல் பதிவுகள், தனி மனித வரலாற்றுப் பதிவுகள், இயற்கை பேரிடர் குறித்த வரலாற்றுப் பதிவுகள், ஜப்பானியர் ஆட்சி கால வரலாற்றுப் பதிவுகள் ஆகிய பிரிவுகளில் பகுப்பாயப்பட்டுள்ளன.

**பத்துமலை, தண்ணீர்மலை, கல்லுமலை ஆகிய திருத்தலங்களின் வரலாற்றுப் பதிவுகள்**

1786ஆம் ஆண்டு, பிரான்சிஸ் லைட் பினாங்குத் தீவைக் கண்டு பிடித்தார். ஆங்கிலேயர்கள் கெடா சுலுத்தானிடமிருந்து பினாங்குத் தீவின் உரிமையைப் பெற்றுக்கொண்டனர். பின் பினாங்குத் தீவை மேம்படுத்துவதற்காக மருத்துவர், ஆசிரியர், இராணுவ வீரர், காவலர் போன்ற பணியாளர்களைத் தமிழ் நாட்டிலிருந்து கொண்டு வந்தனர். பினாங்குத் தீவுக்குக் கொண்டுவரப்பட்ட தமிழர்கள் தங்களுடைய வழிபாட்டுக்காக 1800ஆம் ஆண்டு தற்போதைய பினாங்குத் தாவரவியல் பூங்காவிற்குள் பெரிய நீர்வீழ்ச்சியின் அடிவாரத்தில் பாலதண்டாயுதபாணி திருக்கோயில் அமைத்துத் தைப்பூசம் கொண்டாடினார்கள். இக்கோயில் நீர்வீழ்ச்சியின் அடிவாரத்தில் அமைக்கப்பட்டதால் தண்ணீர்மலைக் கோயில் என்று அழைக்கப்பட்டது. தண்ணீர்மலைக் கோயிலின் வரலாற்றுப் பதிவுகள் மலேசிய மரபு கவிதைகளில் இடம்பெற்றுள்ளன. மலேசிய மரபு கவிதை இலக்கியத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் மரபு கவிதை நூல் தண்ணீர்மலை கோவில் குறித்துப் பாடப்பட்ட நூலாகும். இந்நூல் 1863ஆம் ஆண்டில் முத்துக்கருப்பன் செட்டியாரால் இயற்றப்பட்ட தண்ணீர்மலை வடிவேலர் பேரில் ஆசிரியர் விருத்தம் என்னும் மரபு கவிதை நூலாகும். தண்ணீர்மலை வடிவேலர் பேரில்

ஆசிரிய விருத்தம் நூலின் முதல் பகுதி பினாங்கில் குடிகொண்டிருக்கும் முருகப்பெருமானின் பெருமைகளைச் சிறப்பாகப் பேசுகிறது (கோட்டி முருகானந்தம், 2012).

தொடர்ந்து, 1869ஆம் ஆண்டில் தண்ணீர்மலைக் கோவில் குறித்த மேலும் ஒரு மரபு கவிதை நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலை வீரப்பிள்ளை உபாத்தியாயர் என்பவர் பினாங்குத் தண்ணீர்மலை வடிவேலர் பேரில் பாடிய இரட்டை ஆசிரிய விருத்தமும் தேவாரப் பதிகமும் என்ற தலைப்பில் பாடியுள்ளார். இந்நூலும் தண்ணீர்மலை முருகனின் சிறப்புகளைப் பாடுகின்றது.

மேலும், 1890ஆம் ஆண்டில், பினாங்குத் தண்ணீர்மலை வடிவேலன் மீது நவரத்தின மாலை என்னும் மரபு கவிதை நூலை வெங்கடாச்சலம் பிள்ளை என்பவர் இயற்றியுள்ளார். இந்நூல், பினாங்குத் தண்ணீர்மலையில் வீற்றிருக்கும் தண்டாயுதபாணியைப் போற்றும் வகையில் அமைந்துள்ளது. மேலும் இக்கவிதைத் தொகுப்பு நூலில், பினாங்குத் தண்ணீர்மலை தேவஸ்தானத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் தைப்பூசத் திருவிழாவைப் பற்றியும் பாடப்பட்டுள்ளது.

1894ஆம் ஆண்டில் மேலும் ஒரு நூல் பினாங்கு தண்ணீர்மலை கோவில் பற்றி இயற்றப்பட்டுள்ளது. இந்நூலை இராமநாதச் செட்டியார், தண்ணீர்மலை வடிவேலர் பேரிற்துதிகவி எனும் தலைப்பில் இயற்றப்பட்டுள்ளார். 52 கவிதைகள் இடம்பெற்றுள்ள இந்நூல் பினாங்குத் தண்ணீர்மலையில் குடிகொண்டிருக்கும் தண்டாயுதபாணியைத் துதித்துப் பாடுகிறது.

1895ஆம் ஆண்டில் கோசா மரைக்காயரால் பினாங்கு உற்சவத் திருவலங்காரச் சிந்து எனும் நூல் இயற்றப்பட்டுள்ளது. இந்நூல் பினாங்கில் நிகழ்ந்த கந்தூரித்திருவிழாவினைப் பற்றிப் பாடுகிறது.

1900ஆம் ஆண்டில் இராமநாதச் செட்டியாரால் தண்ணீர்மலை வடிவேலர் பேரிற் துதி என்னும் மரபு கவிதை நூல் இயற்றப்பட்டுள்ளது. இந்நூல் பினாங்குத் தண்ணீர்மலை முருகனின் சிறப்புகளைப் பாடுகின்றது.

1902ஆம் ஆண்டில் பினாங்குத் தண்ணீர்மலை வடிவேலர் காவடிச்சிந்து எனும் கவிதைத் தொகுப்பு நூலை இராமநாதச் செட்டியார் படைத்துள்ளார். இக்கவிதை நூல் பினாங்குத் தண்ணீர்மலைக் கோவில் தைப்பூச விழாவைப் பற்றியும் பினாங்கு நகரைப் பற்றியும் பாடுகின்றது.

1917ஆம் ஆண்டில் தண்ணீர்மலை தண்டாயுதபாணி பிள்ளைத் தமிழ் என்னும் மரபு கவிதை நூல் இயற்றப்பட்டுள்ளது. முத்துக்குமார முதலியார் இயற்றிய இம்மரபு கவிதை நூல், தண்ணீர்மலைத் தண்டாயுதபாணியின் பிள்ளைத் தமிழைப் பாடுகின்றது.

1922ஆம் ஆண்டில், தண்ணிமலை வடிவேலர் பேரில் தோத்திர கீர்த்தனை என்னும் மரபு கவிதை நூல் வெளிவந்துள்ளது. சரவண முதலியார் இயற்றிய இம்மரபு கவிதை நூல் பினாங்குத் தண்ணீர்மலை முருகன் மீது பாடப்பட்ட கவிதையாக அமைந்துள்ளது (கோட்டி முருகானந்தம், 2012).

1928ஆம் ஆண்டில் ஸ்ரீ தண்ணீர்மலை வடிவேலர் பதிகமும் ஸ்ரீ வாலைப்பூர் முத்து மாரியம்மை பதிகமும், தண்ணீர்மலை ஸ்ரீ தண்டாயுதபாணி காவடிச்சிந்து, பினாங்குத் தண்ணீர்மலை வடிவேலர் காவடிச்சிந்து ஆகிய மூன்று மரபு கவிதைத் தொகுப்பு நூல்கள் தண்ணீர்மலை முருகன் மீது பாடப்பட்ட மரபு கவிதை நூல்களாக வெளிவந்துள்ளன. குமரசாமி பிள்ளையால் பாடப்பட்ட தண்ணீர்மலை ஸ்ரீ தண்டாயுதபாணி காவடிச்சிந்து, பினாங்கு நகரின் சிறப்புகள், செட்டிமார் வீதியின் சிறப்புகள், செட்டியார்களின் விருந்தோம்பல் முறை, தண்ணீர்மலைத் தண்டாயுதபாணியின் சிறப்புகள், தைப்பூச விழா ஆகியவை பற்றிப் பாடப்பட்டுள்ளது (கோட்டி முருகானந்தம், 2012).

1932ஆம் ஆண்டில் தண்ணீர்மலை முருகக்கடவுள் பக்தி பாவென்னும் தோத்திரக் கீர்த்தனத் தேன்மாரி என்னும் மரபு கவிதை நூல் இயற்றப்பட்டுள்ளது. சொக்கலிங்க தேசிகர் இயற்றிய இம்மரபு கவிதை நூல், தண்ணீர்மலை முருகனைப் புகழ்ந்து பாடும் கவிதை நூலாக அமைந்துள்ளது.

1949ஆம் ஆண்டில் கந்தையா இயற்றிய தண்ணீர்மலை வளர் முருகவேல் பஜனாமிர்த கீதப் பாமாலை எனும் ஒரு கவிதை நூல் வெளிவந்துள்ளது. இக்கவிதை நூலில் பினாங்குத் தண்ணீர்மலை முருகனைப் புகழ்ந்துரைக்கும் பஜனைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

தண்ணீர்மலைக் கோவிலைத் தவிர்த்து, பத்துமலை முருகன் கோவிலைக் குறித்தும் கல்லுமலை முருகன் கோவிலைக் குறித்தும் மரபு கவிதைகள் இயற்றப்பட்டுள்ளன. மலாயாவில் பினாங்கு மாநிலத்தை அடுத்து ஒவ்வொரு மாநிலமாக ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டன. 1819ஆம் ஆண்டு சிங்கப்பூர் ஆங்கிலேயர்கள் கைவசமானது. 1824ஆம் ஆண்டு ஆங்கிலோ டச்சு ஒப்பந்தத்தின் கீழ், மலாக்காத் துறைமுகமும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. பேரா (1874), சிலாங்கூர் (1874), பஹாங் (1888), நெகிரி செம்பிலான் (1896), கெடா (1909), கிளந்தான் (1909), திரங்கானு (1909), பெர்லிஸ் (1909), ஜொகூர் (1914) போன்ற மாநிலங்கள் ஆங்கிலேய ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. இதன் காரணமாக தமிழர்கள் இம்மாநிலங்களில் குடியேரினர். இங்குக் கோவில்களை உருவாக்கினர். இக்கோவில்களின் சிறப்பை மரபு கவிதைகளாக வடித்துள்ளனர்.

அவ்வகையில் சிலாங்கூர் மாநிலத்தில் அமைந்துள்ள பத்துமலை முருகன் கோவில் குறித்து மரபு கவிதைகள் பாடப்பட்டுள்ளன. 1891ஆம் ஆண்டு, தம்புசாமிப் பிள்ளை பத்துமலையில் ஒரு கோயிலைக் எழுப்பி ஸ்ரீ சுப்ரமணியர் சிலையை அமைத்தார். 1892ஆம் ஆண்டு முதல் பத்துமலையில் தைப்பூசம் கொண்டாடப்பட்டு வருகிறது. பத்துமலைக் கோவில் குறித்த செய்தி 1912ஆம் ஆண்டில் பத்துமலை வடிவேலரின் வழிநடைச் சிந்து என்னும் மரபு கவிதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இம்மரபு கவிதையை நாராயணசாமி பிள்ளை இயற்றியுள்ளார். இம்மரபு கவிதை நூல் பத்துமலை முருகன் மீது வேண்டல் வைத்த பக்தர்கள் தங்கள் ஊரிலிருந்து பத்துமலைக்குக் காவடி ஏந்தி கால்நடையாகச் சென்ற போது பாடிய பாடலாகும் (கோட்டி முருகானந்தம், 2012).

1933ஆம் ஆண்டில் பத்துமலைச் சக்தி வேலர் பேரில் காவடி அலங்கார ஆசிரிய விருத்தம் என்னும் மரபு கவிதை நூல் வெளியிடப்பட்டுள்ளது. கணபதி இயற்றிய இம்மரபு

கவிதை நூல் பத்துமலை முருகனுக்குக் காவடி ஏந்தி வரும் போது ஆசிரியப்பாவில் பாடப்படும் பாடலாக அமைக்கப்பட்டுள்ளது.

1936ஆம் ஆண்டில் கோலாலம்பூர் பத்துமலைச் சக்தி வடிவேல் பேரில் காவடி அலங்கார ஆசிரிய விருத்தம் என்னும் மரபு கவிதை நூல் வெளிவந்துள்ளது. கணபதி இயற்றியுள்ள இம்மரபு கவிதை நூல் பத்துமலை முருகனின் புகழ் பாடும் பாடலாக அமைக்கப்பட்டுள்ளது.

1937ஆம் ஆண்டு, செல்லையா பண்டிதர் இயற்றிய பத்துமலைக் கந்தசாமி பெயரில் பக்திரசக் கீர்த்தனங்களும் பதிகங்களும் எனும் கவிதை நூல் பத்துமலை முருகனைப் பக்திப் பரவசத்தில் உருகிப் பாடிய பாடல்களாக அமைக்கப்பட்டுள்ளது.

சிலாங்கூர் மாநிலத்தைத் தவிர்த்து, கெடா மாநிலத்திலுள்ள கோவில் பற்றியும் மரபு கவிதைகள் இயற்றப்பட்டுள்ளன. 1916ஆம் ஆண்டில், ஸ்ரீமாரியம்மன் பதிகம், என்னும் மரபு கவிதை செல்லையா செட்டியாரால் இயற்றப்பட்டுள்ளது. இம்மரபு கவிதை தமிழகத்திலிருந்து டப்லீன் தோட்டத்திற்கு வேலைக்கு வந்த தமிழர்கள் தங்கள் குலத்தெய்வமான மாரியம்மனுக்குக் கோவில் கட்டி வழிபாடு நடத்துவதைப் பற்றிப் பாடுகின்றது.

மலேசியாவில் பத்துமலை, தண்ணீர்மலையை அடுத்துத் தைப்பூசம் மிக சிறப்பாக கொண்டாடப்படும் திருத்தலம், கல்லுமலைத் திருத்தலமாகும். கல்லுமலைத் திருத்தலம் குறித்தும் மரபு கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. 1974ஆம் ஆண்டு பேரா மாநிலம் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்தது. இதன் பின் தமிழர்கள் இம்மாநிலத்தில் குடிபுகுந்தனர். இம்மாநிலத்தில் கல்லுமலை அருள்மிகு சுப்பிரமணியர் கோயில் 1889ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. 1918ஆம் ஆண்டில் ஈப்போக் கல்லுமலையில் எழுந்தருளிய ஸ்ரீ சுப்ரமணியக் கடவுள் பாசுரப் பதக் கீர்த்தனைகள் எனும் கவிதை நூலை நாராயணசாமி பிள்ளை இயற்றியுள்ளார். இக்கவிதை நூல் ஈப்போக் கல்லுமலை ஸ்ரீ சுப்ரமணியக் கடவுளை நினைத்துருகிய போது சுரந்த பாடல்களைக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது (கோட்டி முருகானந்தம், 2012).

தண்ணீர்மலை, பத்துமலை, கல்லுமலை ஆகிய முருகன் திருத்தலங்களைத் தவிர்த்து, பினாங்கு மாநிலத்திலிருக்கும் ஜாலான் பாரு முனியாண்டி கோவிலைப் பற்றியும் மரபு கவிதை இயற்றப்பட்டுள்ளது. 1933ஆம் ஆண்டில், ஜாலான் பாரு முனியாண்டி திருவிளையாடல் எனும் மரபு கவிதை நூல் இயற்றப்பட்டுள்ளது. பரமசிவம் இயற்றிய ஜாலான் பாரு முனியாண்டி திருவிளையாடல் எனும் மகத்துவச் சிந்து எனும் கவிதை நூல் பிறை, ஜாலான் பாருவில் எழுந்தருளியிருக்கும் முனீஸ்வரரின் மகிமையைப் போற்றிப் பாடும் பாடலாக அமைந்துள்ளது.

**மலாயாவில் தமிழர்களின் வாழ்வியல் பதிவுகள்**

தண்ணீர்மலை, பத்துமலை, கல்லுமலை ஆகிய கோவில்கள் குறித்த பதிவுகளைத் தவிர்த்து, மலேசிய மரபு கவிதைகளில் மலாயாவில் வாழ்ந்த தமிழர்களின் வாழ்வியல் பதிவுகளும்

இடம்பெற்றுள்ளன. 1903ஆம் ஆண்டில் வீரபத்ர படையாச்சியால் இயற்றப்பட்ட நூதன விவேக லாகிரிச் சிந்து எனும் கவிதை நூல் மதுப் பழக்கத்தின் கேடுகளை விளக்குகிறது. மலாயாத் தமிழர்கள் சம்பாதிக்கும் பணத்தில் மது அருந்துவதற்கு அதிகம் செலவு செய்வதை இந்நூல் சுட்டிக் காட்டுகின்றது. இந்நூல் அக்கால மலாயாத் தமிழர்களின் வாழ்க்கை முறைகளைச் சித்தரிக்கின்றது (கோட்டி முருகானந்தம், 2012).

மேலும், 1909ஆம் ஆண்டில் முத்துத்தம்பி இயற்றிய மலாய்க்கும்மி எனும் நூல் அக்கால மலாயாவின் சூழல், மலாயாவில் ஆங்கிலேயர், சீனர், மலாய்க்காரர், தமிழர் ஆகிய மூவின மக்களும் வாழ்ந்த வாழ்க்கை, விபச்சாரத்தில் ஈடுபடும் ஆண்களின் நிலை, கடன் வாங்குவதால் உண்டாகும் தீமைகள், விபச்சாரத் தொழிலின் தீமை ஆகியவற்றை விளக்குவதாக அமைந்துள்ளது.

1913ஆம் ஆண்டில் நாராயணசாமிக் கவுண்டரினால் இயற்றப்பட்ட கப்பலேறும் கங்காணிச் சிந்து எனும் கவிதை நூல் மலாயாவிற்குத் தமிழர்கள் கங்காணி முறையில் கொண்டுவரப்பட்ட செய்தியை விளக்குகின்றது.

1925ஆம் ஆண்டில், கந்தையா சாமிப்பிள்ளையின் இந்திய நண்பர்களின் நல்லுபதேசச் சிந்து எனும் கவிதை நூல் இந்தியாவிலிருந்து பொருள் தேட மலாயாவிற்கு வந்த நண்பர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்று அறிவுரை கூறும் கவிதைகளாகப் படைக்கப்பட்டுள்ளது.

1933ஆம் ஆண்டில் கணபதி பிள்ளை கிருஷ்ணன் இயற்றிய நமற்கார நவீன நவரசக் கீதங்கள் எனும் கவிதை நூல் 1930ஆம் ஆண்டுகளில் மலாயாவில் வாழ்ந்த தமிழர்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் பாடல்களாக அமைந்துள்ளன (கோட்டி முருகானந்தம், 2012).

1934ஆம் ஆண்டில் முசுகொடுத்த நாட்டு அலங்கார வழிநடை சிந்து, மலாயாத் தற்காலச் சிந்து ஆகிய இரண்டு கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன. இவ்விரண்டு மரபு கவிதைத் தொகுப்பு நூல்களும் மலாயாச் சூழலை மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட மரபு கவிதைத் தொகுப்பு நூல்களாகும். வழிநடைச் சிந்து மரபு கவிதையில் மலாயாவில் வாழும் மலாய்காரர்கள், சீனர்கள், தமிழர்கள், பாபா ஞோஞாக்கள் ஆகியோர் பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வழிநடைச் சிந்துக் கவிதைத் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ள கவிதை வரிகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

அங்காடிக் கடைவிற்கும் ஆச்சிகளா –தங்கை
அண்ணன் மாரேசிறு தம்பிகளா –ஒரு
மங்கையைப் பார்த்தீர்களா? பார்த்தால்
இப்பாவிக் குரைப்பீர்களே!
அங்கமிக வாடுதய்யோ
எங்குச்சென்று தேடுவே னினியே!

சீன மலாய்க்கார நேயர்களா –பெற்ற
தாய்மக்களா செல்வ ஞோஞாக்களா –மேனி
ரெத்தச் சிவப்புடையாள்: கண்ணத்திலோர்
பச்சை மச்ச முடையாள்;

தேனே கண்ணால் காணீர்களா?
கண்டிருந்தால் விண்டிடுவீர் நீங்களே!

1929ஆம் ஆண்டில் பெரியார் மலாயாவிற்கு வருகை புரிந்தார். இவர் வருகைக்குப் பின் இயற்றப்பட்ட பல மரபு கவிதைகள் சீர்த்திருத்த கருத்துகளைக் கொண்டவையாக இயற்றப்பட்டன. அவ்வகையில், 1936ஆம் ஆண்டில் வெங்கடாசல உபாத்தியாயர் இயற்றிய கலியுக பசார் சிந்தும் சண்முகசுந்தரம் இயற்றிய மெய்ஞான உதய தீபம் ஆகிய இரண்டு கவிதை நூல்களும் சீர்திருத்தக் கருத்துகளை உள்ளடக்கிய நூல்களாக மலர்ந்துள்ளன.

1947ஆம் ஆண்டில் கவிதை மலர்கள் என்னும் மரபு கவிதை நூல் வெளிவந்துள்ளது. பழநிவேல் இயற்றிய கவிதை மலர்கள் எனும் கவிதை நூல் மது அருந்துவதால் குடும்பத்தில் ஏற்படும் இன்னல்களை மனைவி கணவனுக்குக் கூறுவதைப் போலப் படைக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கவிதை நூலில் சப்பானியர் ஆட்சிக் காலத்தில் மக்கள் அடைந்த துன்பங்களும் தோட்டப்புறத்தில் தமிழர்கள் எதிர்நோக்கிய சிக்கல்களும் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

**தனி மனித வரலாற்றுப் பதிவுகள்**

1886ஆம் ஆண்டில், செவத்த மரைக்காயரின் மலாக்கா பிரவேசத் திரட்டு எனும் மரபு கவிதை நூல் வெளிவந்துள்ளது. இந்நூல் மலாக்காவிற்கு அருகிலுள்ள புக்கிட் பெசார் எனும் பெரிய மலையில் அடக்கம் செய்யப்பட்டுள்ள ஹஸறத்து ஒலியுல்லா செய்கு இசுமாயில் சாகிபு பற்றிய பாடல்களைக் கொண்டுள்ளது.

1893ஆம் ஆண்டில் அதிவினோதக் குதிரைப் பந்தயலாவணி என்னும் மரபு கவிதை நூல் எழுதப்பட்டுள்ளது. இரங்கசாமிதாசன் இயற்றிய அதிவினோதக் குதிரைப் பந்தயலாவணி எனும் நூல் தஞ்சாவூரிலிருந்து கணவனும் மனைவியும் பினாங்கு, மலாக்கா ஆகிய நகரங்களைக் கடந்து சிங்கப்பூரில் நடக்கும் குதிரைப் பந்தயத்தைக் காண வருவதை விவரிக்கிறது.

1941ஆம் ஆண்டில், பினாங்கு ஜெனரல் ஆஸ்பித்திரியில் வீரையா செய்த பரிதாபக் கொலைச் சிந்து என்னும் மரபு கவிதை நூல் வெளிவந்துள்ளது. இம்மரபு கவிதைத் தொகுப்பு நூல் வீரையாவின் கொலை குறித்தச் செய்திகளை விவரிக்கின்றது.

**இயற்கை பேரிடர் குறித்த வரலாற்றுப் பதிவுகள்**

1932ஆம் ஆண்டில் மலாயா நாட்டில் வெள்ளத்தால் விளைந்த விபத்துச் சிந்து, பினாங்கு ஆயர் ஈத்தாம் வெள்ளச்சேதம் ஆகிய இரண்டு கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன. சொக்கலிங்க தேசிகரின் மலாயா நாட்டில் வெள்ளத்தால் விளைந்த சேதம், நாகலிங்கம் பிள்ளையின் பினாங்கு ஆயர் ஈத்தாம் வெள்ளச்சேதம் ஆகிய இரண்டு மரபு கவிதைத் தொகுப்பு நூல்களும் 1932ஆம் ஆண்டில் பினாங்கில் நடந்த வெள்ளச் சேதத்தை விவரிக்கும் மரபு கவிதைத் தொகுப்பு நூல்களாக அமைந்துள்ளன.

## ஜப்பானியர் ஆட்சிக் கால வரலாற்றுப் பதிவுகள்

8 டிசம்பர் 1941இல் சப்பானிய இராணுவம், மலாயாவிலுள்ள கோத்தா பாரு நகரில் நுழைந்தது. நுழைந்த இரண்டரை மாதங்களில் மலாயாவையும் சிங்கப்பூரையும் கைப்பற்றிக்கொண்டது. இக்காலக்கட்டத்தில், ஆங்கிலேயர்கள் நாட்டைவிட்டு முழுவதுமாக வெளியேறினர். இதனால் அரசியல், பொருளாதாரம், கல்வி ஆகிய அனைத்துத் துறைகளும் வீழ்ச்சி அடைந்தன. சப்பானியர்கள் 15 பிப்ரவரி 1942இல் மலாயா முழுவதையும் அதிகாரப்பூர்வமாக கைப்பற்றியிருந்தனர். ஏறத்தாழ மூன்றறை ஆண்டுக்காலம் நடைபெற்ற இவர்களது ஆட்சியினால் மலாயாச் சமூகம், அரசியல் பொருளாதாரம் ஆகிய துறைகளில் பெரும் மாற்றங்களைச் சந்தித்தது. இதனால் மக்கள் பெரும் துயருக்கு ஆளானார்கள்.

சப்பானியர் ஆட்சிக் காலம் மலாயாவில் இருண்ட காலமாகக் கருதப்பட்டது. இக்காலக் கட்டத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சியும் தேக்க நிலையைக் கண்டது. 1942ஆம் ஆண்டில் பக்கிரிசாமி உடையாரின் நிப்பானியரின் வெற்றிக் கீர்த்தனைகள், முத்துசாமியின் மாட்சிமை தாங்கிய நிப்பானியர் மலாயாவில் யுத்தம் புரிந்து ஜெயம் அடைந்த வெற்றிமாலை, வீரையாவின் மாட்சிமை தாங்கிய நிப்பானியர் மலாயாவில் யுத்தம் புரிந்து ஜெயம் அடைந்த மாபெரும் ஜெய சிந்து, ஆகிய மூன்று மரபு கவிதைத் தொகுப்பு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த மூன்று மரபு கவிதைத் தொகுப்பு நூல்களும் மலாயாவில் சப்பானியரின் வெற்றியையும் மேன்மையையும் புகழ்ந்து பாடும் கவிதைகளாக இயற்றப்பட்டுள்ளன.

## நிறைவுரை

விடுதலைக்கு முன்பு மலாயாவில் இயற்றப்பட்ட தமிழ் மரபு கவிதை நூல்களில் மலாயாவின் வரலாற்றுப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. இவை மலாயாவில் தமிழர்களின் வழிபாட்டுத் தலங்கள் பற்றிய தகவல்களையும் மலாயாவில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடர்கள் பற்றிய தகவல்களையும் மலாயாத் தமிழர்களின் வாழ்க்கை முறைகளையும் அறிந்துகொள்ள ஏதுவாக அமைந்துள்ளது.

## துணைநூற்பட்டியல்


கோட்டி முருகானந்தம். (2012) சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதை வரலாறு. சென்னை: சமூக வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

சபாபதி, வி. (1999). மலேசியத் தமிழ்க் கவிதை வளம். சென்னை: மாணிக்க வாசகர் பதிப்பகம்.

சபாபதி, வி. (2001). கருத்தரங்கக் கட்டுரைகள். மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல். (2008). மலேசியத் தமிழ் மரபு கவிதைகளிலும் புதுக்கவிதைகளிலும் இராமாயண மகாபாரதத் தொன்மங்கள். முனைவர்ப் பட்ட ஆய்வேடு. மலாயாப் பல்கலைக்கழகம். கோலாலம்பூர்.

சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல். (2020). மலேசிய மண்ணில் தமிழ்க் கவிதை வளர்ச்சி. சென்னை: சக்தி பதிப்பகம்.

முரசு நெடுமாறன். (2007) மலேசியத் தமிழரும் தமிழும். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

முரசு நெடுமாறன். (2007). மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம். கிள்ளான்: அருள்மதியம் பதிப்பகம்.

முரசு நெடுமாறன். (2007). மலேசியத் தமிழ் மரபு கவிதைகள், தமிழ்ச் செம்மொழிச் சிறப்பு மலர், பினாங்கு: உங்கள் குரல்.

ராமையா, மா. (1979). மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு. சேலம்: புரட்சி பண்ணை.

ராமையா, மா. (1996). மலேசியத் தமிழ் வரலாற்றுக் களஞ்சியம். சேலம்: புரட்சி பண்ணை.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் உளத்தியல் அணுகுமுறை

# Kabila's psychological approach in Kurunthokai

நா. காணிக்கராஜூ / N. Kanikkaraju[1]
[1] Assistant Professor, Chennai Cristian College
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் குருந்தொகைப் பாடல்களில் காணக்கிடக்கும் கபிலரின் உளத்தியல் அணுகுமுறைகளை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, குருந்தொகைப் பாடல்களில் காணப்படும் கபிலரின் உளத்தியல் அணுகுமுறைகளை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு குருந்தொகைப் பாடல்களில் காணப்படும் கபிலரின் உளத்தியல் அணுகுமுறைகளை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** குறுந்தொகை, கபிலர், உளத்தியல், அணுகுமுறை

**Abstract**

The major objective of the research is to explore the Kabila's psychological approach in the Kurunthokai. This research is designed in a qualitative approach. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the Kabila's psychological approach in the Kurunthokai. The research claims to be the first such attempt to do a study regarding the Kabila's psychological approach in the Kurunthokai.

**Keywords:** Kurunthokai, Kabilar, Psychological, approach

## முன்னுரை

பண்டைய காலம் முதல் இன்றைய காலம் வரையில் படைக்கப்படும் இலக்கிய வடிவங்கள் அனைத்தும் சமுகத்தை மையப்படுத்தியே படைக்கப்படுகின்றன. அவை, மனித இனம் மாண்படையும் நோக்கத்தை முதன்மைப் படுத்துவதாகவே அமைகின்றன. இலக்கியப் படைப்பொன்றை உருவாக்கும் படைப்பாளனும் தன்னுடைய படைப்புகளில் சமுக அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் படைக்கப்பட்ட படைப்பின் ஊடாகத் தங்களின் உணர்வுகளோடு பொறுத்தமுறத் தொடர்புபடுத்தும் வகையில் படைக்கப்படுகிறது. இந்தப் படைப்புகளான இலக்கியப் பனுவல்கள் அனைத்தின் வழியாக நல்லதொரு சமூகத்தைப் படைக்க முயல்கிறான். அவன், தான் சார்ந்து வாழும் சமுகத்தவரைப் போற்றி, பாதுகாக்கும் கடப்பாடு கொண்டவர்களாகத் திகழ வேண்டுமென்ற நோக்கத்தோடு படைப்பிலக்கியம் உருவாக்கப்படுகின்றது.

அவ்வகையில், சங்க இலக்கியத்தைப் பாட்டும் தொகையும் என்றும் பதினெண்மேற்கணக்கு என்றும் அழைக்கப்படுகின்றது. சங்க இலக்கியம் 2381 பாடல்களைக்கொண்டது. எட்டுத்தொகை நூல்களில் ஐந்து அகநூல்களும், இரண்டு புறநூல்களும், அகப்புறநூல் ஒன்றும் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவைகளில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை ஆகியவை அன்பின் ஐந்திணையை மையப்படுத்திப் பாடப்பட்ட அகவுணர்வுகளின் தொகுப்பாக அமைந்துள்ளன. இவ்வைந்து நூல்களில் நல்ல என்னும் அடையோடு உள்ள அகநூல் குறுந்தொகையே ஆகும். இந்நூலின் பாடல்களைப் பல்வேறு உரையாசிரியர்கள் கையாண்டுள்ளனர். குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் உளத்தியல் அணுகுமுறை என்னும் தலைப்பில் இக்கட்டுரை அமைகிறது. குறிஞ்சிக் கபிலர் என்றழைக்கப்படும் புலவர் உளத்தியல் அணுகுமுறையின் ஊடாக இலக்கியப்படைப்பை எடுத்துரை உத்தியின் வழியாகப் பயன்படுத்தியுள்ள பாங்கினை ஆராயும் நோக்கத்தில் இக்கட்டுரைக் கொண்டுள்ளது.

இதற்கு அரண்சேர்க்கும் நோக்கில் உளத்தியலுக்கான விளக்கம் குறித்து மேனாட்டு அறிஞர்களின் விளக்கமும் இடம்பெறுகின்றது. அத்துடன் உளத்தியல் அணுகுமுறை குறித்த ஆய்வறிஞர்களின் விளக்கங்களும் இங்கு அமைந்துள்ளன. இவ்விளக்கங்களும் அணுகுமுறையும் குறுந்தொகையில் பாடப்பட்டுள்ள இருபத்தெட்டுப் பாடல்களும் உளத்தியல் அணுகுமுறையுடன் பொருந்துமாற்றை இக்கட்டுரையில் ஆராயப்படவுள்ளது.

## உளத்தியல் விளக்கம்

ஒரு மனிதனின் ஒட்டுமொத்தமான செயல்கள், உணர்ச்சிகளின் வழியாக, தான் வாழும் சமுகத்தில் வெளிப்படுத்தே உளத்தியல் என்பர். இன்றைய காலச்சூழலில் மனிதன் பிறரைவிடத் தன்னையே மேலானவனாக வெளிப்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறான். அவ்வாறு வெளிப்படுத்தும் முதன்மையான பணிகளில் குறிப்பாக கல்வி, குடும்பம், தொழில் போன்ற காரணிகளால் தனக்குப் பாதிப்பு ஏற்படுவதை அறிந்துகொள்கிறான். இந்தப் பாதிப்புகளால் மனமும் உடலும் உளத்தியல் ரீதியான பாதிப்புக்கு ஆட்படுகிறான். இப்பாதிப்பு அவனது ஒட்டுமொத்தமான வளர்ச்சியையும்

தடைசெய்கிறது. இதற்குத் தடையாக உள்ள உளத்தியலை அணுகும் நுட்பத்தை மனிதன் நன்கு புரிந்துகொள்ளாததே முக்கியமான காரணமாகும். மனிதன் வாழ்க்கையில் உறுதியாக வெற்றியைக் காண முடியும். நாம் வாழும் உலகில் எவ்வகையாகச் செயலாற்றவேண்டும் என்னும் சிந்தனை ஊற்றுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் போது வெற்றிபெறுவது உறுதி. உளத்தியல் என்பதை ஆங்கிலத்தில் சைக்காலஜி (psychology) என்றழைக்கின்றனர். சைக்கி, லோகஸ் எனும் கிரைக்கச் சொற்களும் இணைந்து சைக்காலஜி என்று அழைக்கப்படுகிறது.

உளத்தியல் என்பது 'மனிதனுடைய வெளிப்படையான செயற்பாடு மட்டுமல்லாது, அவனுடைய சிந்தனை வளம், உணர்ச்சி வயப்படும் பாங்கு, மகிழ்ச்சி, அச்சம் அல்லது துணிச்சல் போன்ற உணர்வுகள் அனைத்தைப் பற்றியும் ஒட்டு மொத்தமாக ஆய்வதே மனோதத்துவம் அல்லது உளத்தியல்' என்பர். உளத்தியல் குறித்த விளக்கம் மேற்கூறப்பட்ட விளக்கங்களுக்கு அடுத்து 'ஆன்மா' அல்லது ஆவியின் இயல்புகளை ஆராய்வதே என்ற கருத்தும் பரவலாகக் குறிப்பிடப்பட்டு வந்தது. இக்கருத்துகள் பற்றிய ஆய்வே உளத்தியல் என்று அறிஞர்கள் குறிப்பிட்டனர். இவ்வாறு குறிப்பிட்ட சூழலில் சமுக ஆர்வலர்களிடையே பல்வேறு எதிர்ப்புகள் எழுந்தன. பிறகு, மனிதனுடைய மனம் அல்லது மனித உள்ளத்தை ஆராய்வதே உளத்தியல் என்று சொல் மாற்றம் பெற்றது. உளத்தியல் என்ற சொல்லிற்குக் க்ரியாவின் அகராதி பின்வரும் விளக்கம் தருகிறது. 'மனிதத் தனச்செயல்பாடுகள் குறித்து வெளிப்படும் குணம், நடத்தை ஆகியவைகளை ஆராயும் அறிவியல் துறை உளத்தியல்' என்று குறிப்பிடுகிறது. உளத்தியல் துறை பல்வேறு படிநிலைகளைக் கடந்து இலக்கியத்துறையின் வளர்ச்சியில் ஒப்பீடு மேற்கொள்ளும் ஆய்விற்கு வழிவகைகளை வகுத்துள்ளது என்பர்.

சங்க இலக்கியத்தோடு உளத்தியல் துறையை ஒப்புமைப்படுத்தும் ஆய்வுகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சங்க இலக்கியம் தொடக்க காலத்தில் பாட்டும் தொகையும் என்று அழைக்கபட்ட மரபைக்கொண்டது. ஆனால், சங்க இலக்கியத்தைப் பற்றி தமிழண்ணல் கூறும்போது, 'சங்க இலக்கியத்திற்குப் பிறிதொரு பெயர் சூட்டுக என்று கேட்டால் தயங்காமல் 'உளத்தியல் இலக்கியம்' எனக் குறிப்பிடலாம். அகத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு நூறும், புறத்திணைப்பாடல்கள் நூற்றுக்கு எழுபத்தைந்தும், 'உளத்தியல்' பற்றியனவே" என்றுரைக்கிறார்.

ஆகவே, தமிழின் பெருமையையும் தமிழரின் அகத்திணை வாழ்க்கை அகவுணர்வுகளை முதன்மையாகக் கொண்ட களவு, கற்பு வாழ்க்கையும், புறம் என்ற வகைப்பாட்டில் உள்ள கொடை முதலான மற்றவர்கள் தெரிந்துகொள்ளக் கூடிய வாழ்க்கையையும் இன்றும் பிரதிபலிக்கும் சங்க இலக்கியம் உளத்தியல் இலக்கியம் என்று துணிந்துரைக்கலாம். 'தமிழ்க் கவிதையில் அகப்புறப் பாகுபாடுகள் உளத்தியல் அடிப்படை கொண்டவை. அகமென்பது உள்ளத்தின்கண் நிகழ்வது, புறத்தே தோன்றாது. உணர்வு அறிவது அகத்தே பூத்து மலரும் தன்மையதாகிய காதல் உணர்வை அகம் என்றனர். தமிழ்ச்சான்றோர்கள் புறமென்பது வெளியே புலனாகும் நிலைகள் தொல்காப்பியர் கூறும் ஐந்திணை மரபும் அம்மரபின் வழிப்பட்ட சங்கச் சான்றோர் செய்யுட்களும் ஆழ்ந்த உளத்தியல் அடிப்படை கொண்டவை. இவற்றில் சமுதாய யதார்த்தத்தினும் உளத்தியல் யதார்த்தமே (Psychologyrealism) முன்னுரிமை பெறுகின்றது' இக்கருத்துகளை நோக்குமிடத்துச் சங்க இலக்கியம் உளத்தியல் இலக்கியம் என்னும் முடிவுக்கு வரலாம்.

**குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் உளத்தியல் அணுகுமுறை**

சங்க இலக்கியப்பாடல்களில் மனித மனங்களின் பண்புநலன்களாலும் உணர்வுகளாலும் இணைத்துப் பின்னப்பட்ட இலக்கியமாகும். சங்க இலக்கியத்தை ஆய்வு செய்த அறிஞர்களின் கூற்றுகளின் வழியாக உளத்தியல் இலக்கியம் என்று கூறலாம். இவ்விலக்கியத்தை அணுகுமுறை வகைகளில் உளத்தியல் அணுகுமுறையும் (Psychological Approach) ஒருவகையைச் சார்ந்தது. சங்கப் பாடல்கள் அனைத்தும் மனித மனங்களின் ஒட்டுமொத்தமான உணர்வுகளின் வெளிப்பாடுகளையும் முதன்மையாகக் கொண்டவை. ஆதலால் இக்கருத்துகளின் வழியாகக் குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் உளத்தியல் அணுகுமுறையை இங்கு ஆராயலாம். ஐந்திணைப் பாடல்களில் குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாடுவதில் புலமைப்பெற்றவர் கபிலர்.

இவர் குறுந்தொகையில் இருபத்தெட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். தலைவன் கூற்றாக ஐந்து பாடல்களையும், தலைவி கூற்றாகப் பதினைந்து பாடல்களையும், தோழி கூற்றாக ஐந்து பாடல்களையும் பாடியுள்ளார். இவர் பாடியுள்ள பாடல்கள் அனைத்தும் குறிஞ்சி நிலமக்களின் காதல் ஒழுகலாறுகளை எடுத்துரைப்பதாக உள்ளன. இப்பாடல்களில் உளத்தியல் அணுகுமுறையில் அமைந்துள்ள பாங்கினை இங்கு விளக்க முயலுகிறது .

**தலைவன் கூற்றுப் பாடல்களில் உளத்தியல் அணுகுமுறை**

குறுந்தொகையில் இடம்பெறும் தலைவன் கூற்றுப் பாடல்கள் தலைவனின் எண்ணங்களின் வெளிப்பாட்டை முழுவதுமாக எடுத்தியம்பும் வகையில் கபிலர் படைத்துள்ளார். தலைவனின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் முறையில் பாடல்களை உளத்தியல் அணுகுமுறையில் படைத்துள்ளார்.

தலைவன் கூற்று ஐந்து பாடல்கள் உள்ளன. அகவுணர்வுகளை எடுத்துரைக்கும் மாந்தர்களில் முதன்மையானவர்கள் தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலித்தாய், நற்றாய் போன்றவர்கள். தலைவன் தலைவியின் களவு வாழ்வு கற்பு வாழ்க்கையாக மலர்வதற்கு உறுதுணையாய் இருப்பவர்கள் பலர். அவர்களில் தலைவனுக்கு நெருங்கிய நண்பனாக விளங்கும் பாங்கன் திகழ்வான். தலைவன், தலைவி சந்தித்த பிறகு, அதைத் தனக்கு இனமான பாங்கனுடன் பகிர்ந்துகொள்கிறான். இக்கருத்தைக் குறிப்பிடுமிடத்து,

> மால்வரை இழிதரும் தூவெள் அருவி
> கல்முகைத் ததும்பும் பல்மலர்ச் சாரல்
> சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
> நீர்ஓ ரன்ன சாயல்
> தீ ஓரன்ன என் உரன்அவித் தன்றே. (குறுந். 95)

என்னும் உளத்தியல் நுட்பத்தை வெளிப்படுத்தும் பாடலின் வழி குறிப்பிடுகிறான். இப்பாடலில் தலைவன், தான் விரும்பும் தலைவி இனியசாயலை உடையவள் என்று கூறுகின்றான். அவளின் அச்சாயல் தன்னுடைய நெருப்புப் போன்ற மனவலிமையை இழக்கச் செய்துவிட்டதாகப் பாங்கனிடம் எடுத்துரைக்கிறான். நீர், தீயை அழித்துவிடுவதைப் போல்

தலைவனின் வலிமையைத் தலைவியின் மென்மையினால் வென்றுவிட்டதாகக் குறிப்பிடுகிறான்.

**தலைவன் அல்லகுறிப்பட்டதை பாங்கனிடம் கூறுதல்**

தலைவன், தோழி தலைவியைச் சந்திக்க வரச்சொல்லிய இடத்திற்குச் செல்கிறான். அவ்விடத்தில் அவளைப் பார்க்க இயலாத வருத்தத்தைப் பாங்கனிடம் விளக்குகிறான். இச்சூழலை உளத்தியல் நோக்குடன் கூறுகிறான். இப்பாடலில் கொல்லிமலையைக் குடைந்து உருவாக்கப்பட்ட வல்வில் ஓரியின் கொல்லிப்பாவைப் போன்றவள். அவள் இளமையும் அழகும் வாழ்ந்தவள். அவள் தோள்களைத் தழுவிக் கூடுவதற்கும் அரிதாய் இருந்தது என்கிறான். இக்கருத்தை விளக்குமிடத்து,

..... வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்திற்கு அரிய பணைப்பெருந் தோளே. (குறுந். 100)

என்ற பாடல் வரிகளின் மூலம் ஆசிரியர் விளக்குகிறார்.

மற்றொரு பாடலில், தலைவியைத் தினைப்புனத்தைக் காத்துக்கொண்டிருக்கிறாள். அவள் தினைப்புனத்திற்கு வரும் கிளிகளை விரட்ட குளிர் என்னும் கருவியைப் பயன்படுத்துகிறாள். குளிர் கருவியின் இனிய இசை கிளிகளை விரட்டுவதற்குப் பதிலாக, அக்கிளிகளை அழைப்பதாக நினைத்துக்கொள்கிறது. இசையில் மயங்கி தினைப்புனத்திலேயே இருக்கின்றது. அதைப் பார்த்தத் தலைவி அழுகிறாள். அக்காட்சி மலைச்சாரிலில் ஆழமான சுனையில் பூக்கும் குவளை மலர்களில் மழைத்துளிகள் படும்போது தலைவியின் கண்களில் இருந்து வடியும் கண்ணீர் வெளிப்பட கலங்கினாள். இக்காட்சியைத் தலைவன் பாங்கனிடம் கூறுவதாக உவமைநயத்துடன் உளத்தியல் கருத்துகளைக் கபிலர் படைத்துள்ளார். இதைப் பின்வரும் பாடல் விளக்குமிடத்து,

சுடுபுனல் மருங்கில் கலித்த ஏனல்
படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
இசையின் இசையா இன்பா ணித்தே!
கிளி அவள் விளியென எழல்ஒல் லாவே
அது புலந்து அழுத கண்ணே, சாரல்
குண்டுநீர்ப்பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்லிதழ் கலைஇத்
தண்துளிக்கு ஏற்ற மலர்போன் றனவே. (குறுந். 291)

இப்பாடலில் தலைவியின் மென்மையைக் குவளை மலரோடு ஒப்புமைப்படுத்தி உவமை நயத்துடன் கவிஞர் விளக்குகிறார்.

**தலைவன் வருத்தத்துடன் உளத்தியல் சிக்கலைக் கூறுதல்**

தலைவன் இயற்கைப் புணர்ச்சியில் தலைவியை சந்தித்து வீடு திரும்புகிறான். அவளைப் பார்த்த நினைவிலேயே பெருமூச்சு விட்டவனாகத் திரும்புகிறான். அவனது மனவருத்தத்தை

உளத்தியல் பாங்குடன் ஆசிரியர் படைத்துள்ளார். தலைவனின் அந்நிலைப்பாடு நள்ளிரவில் படுத்திருக்கும் யானை பெருமூச்சுவிட்டது போன்று நான் வருத்துகின்றான். இதைக் காட்சிப்படுத்தும் போது,

..... பானாள்
பள்ளி யானையின் உயிர்த்து, என்
உள்ளம் பின்னும் தன்உழை யதுவே. (குறுந். 142)

என்பது பாடல் அடிகளாகும்.

மற்றொருப் பாடலில், தலைவனும் தலைவியும் களவில் ஈடுபடுகின்றனர். தலைவி, தன் காதலரைக் கற்பு வாழ்க்கையில் இணையும் வரையில் பிறர் அறியாதவாறு போற்றிப் பாதுகாக்கும் அகவொழுக்கத்தின் உளத்தியல் நுட்பத்தை விளக்குவதாகப் பாடல் இடம்பெற்றுள்ளது. இப்பாடல் பின்வருமாறு,

இரண்டு அறி கள்விநம் காத லோளே
முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்
மூள்ளூர்க் கானம் நாற வந்து
நள்ளென் கங்குல் நம் ஓரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி
அமரா முகத்த ளாகித்
தமர் ஓரன்னள் வைகறை யானே. (குறுந். 312)

எனும் பாடலாகும். இங்கு தலைவிக்கும் தலைவனுக்கும் உள்ள அகவொழுக்கம் ஊரார் அறியாதவறு மறைந்தொழுகும் தன்மையை விளக்கும் பாடலின் ஆழத்தை எடுத்துரைக்கின்றது.

**தலைவி கூற்றுப் பாடல்களில் வெளிப்படும் உளத்தியல் அணுகுமுறை**

தலைவியின் கூற்றாகக் குறுந்தொகைப் பாடல்களில் பதினாறு பாடல்களை ஆசிரியர் பாடியுள்ளார். இப்பாடல்கள் தலைவன் தலைவியின் அகவொழுக்கத்தின் நெறிக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. இவை அனைத்தும் உளத்தியல் அணுகுமுறையை நுட்பமாக எடுத்துரைக்கின்றன.

**தலைவனுக்காக தலைவி ஆற்றியிருத்தல்**

தலைவி தலைவன் மீது கொண்ட காதலால் மன உறுதியுடன் அவன் வருகைக்காகக் காத்திருக்கிறாள். இவளது மனவுறுதிப்பாட்டை விளக்குவன இருபாடல்கள் உள்ளன. தோழி தலைவனின் மலையில் மாலைபெய்த மழையில் ஆற்றில் அடித்து வந்த காந்தள் மணம் கமழும். அவ்வாறு வெள்ளப்பெருக்கெடுத்து வந்த நீரில் நம்மூர் ஆற்றங்கரையில் காந்தள் கொடி வந்துசேர்ந்தது. அதை தழுவி வந்து நம் வீட்டுத்தோட்டத்தில் நட்டு வளர்த்துவந்தேன். அந்தக் காந்தள் செடியைப் பாரத்த நம் அன்னை என்னிடம் கோபத்தை

வெளிப்படுத்தவில்லை. அந்தச் செயலுக்காக நம் அன்னைக்குக் கைமாறாகத் தேவலோகத்தையே பரிசாகக் கொடுத்தாலும் அது சிறிதாகும் என்கிறாள். அந்தக் காந்தள் கொடியைத் தான் உணர்ச்சி மேலீட்டோடு தழுவிவந்ததை மகிழ்ச்சியுடன் எடுத்துரைக்கிறாள். இக்கருத்தை,

அம்மவாழி தோழி! அன்னைக்கு
உயர்நிலை உலகமும் சிறிதாதல், அவர்மலை
மாலைப்பெய்த மணங்கமழ் உந்தியொடு
காலை வந்த காந்தள் முழுமுதல்
மெல்லிலை குழைய முயங்கலும்
இல்உய்த்து நடுதலும் கடயா தோளே. (குறுந். 361)

என்பது பாடலாகும். இப்பாடலில் தலைவி தலைவன் நாட்டிலுருந்து வந்த காந்தள் கொடியை மகிழ்ச்சியோடு தான் அதைத் தழுவிவந்து நட்டேன். ஆனால், உறுதியாக நம் தலைவன் விரைவில் வருவார் அவருக்காக ஆற்றியிருப்போம் என்ற உளத்தியல் நோக்குடன் உணர்ச்சி ஊக்கத்துடனும் கூறுவதாக அமைந்துள்ளது.

மற்றுமொரு பாடலில் தோழி, தலைவன் நம்மைப் பிரிந்து சென்றுள்ளான். ஆனால், அவன் வருகையினால் பிரிவுத் துன்பம் நமக்கு இரட்டிப்பான மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று தலைவி குறிப்பிடுகின்றாள். இதை விளக்குமிடத்து,

கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறிஅருந்து
குரங்கு ஒருங்கு இருக்கும் பெருங்கல் நாடன்
இனியன் ஆகலின் இனத்தின் இயன்ற
இன்னா மையினும் இனிதோ
இனிதெனப் படூஉம் புத்தேள் நாடோ! (குறுந். 288)

என்ற பாடல் விளக்குகிறது.

**தலைவி, தலைவனுக்காக வரைவிடை வைப்பக் காத்திருத்தலைக் கூறுதல்**

தலைவனின் வரைவிடை வைத்துப் பிரிந்து செல்கின்றான். அவன் வருகைக்காகத் தலைவி காத்திருத்தலைக் கூறுவன மூன்று பாடல்கள். தலைவன் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள காலம் தாழ்த்துகிறான். இந்தக் காலங்களில் தலைவி ஆற்றியிருக்கிறாள். உளத்தியளின் அடிப்படைகளில் ஒன்றாக இயல்பு ஊக்கம் என்று கூறுவர். தலைவி இவ்வியல் ஊக்கத்துடன் தலைவனுக்காகக் காத்திருக்கிறாள். இக்கருத்தை விளக்குமிடத்து,

யாரும் இல்லை தானே கள்வன்
தான்அது பொயப்பின் யான்எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பாரக்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே. (குறுந். 25)

என்னும் அமைகின்றது. தலைவன் என்னைக் களவில் மணம் செய்து சூளுரைத்த போது ஆரல் மீனுக்காகக் காத்திருக்கும் குருகு மட்டும் இருந்தது. அவன் அதை மறுத்துரைத்தால் என்னால் என்ன செய்யமுடியும் என்று உளத்தியல் நுட்பத்துடன் எடுத்துரைக்கிறாள்.

மற்றொரு பாடல், பின்வருமாறு இடம்பெறுகின்றது. அவை,

கான மஞ்ஞை அறைஈன் முட்டை
வெயில்ஆடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை..... (குறுந். 38)

என்பது பாடல். இப்பாடலில் தலைவனுடைய மலையிலுள்ள காட்டில் திரியும் மயில் பாறையின்மீது முட்டைகளை ஈன்றுவிட்டுச் செல்லும். அந்த முட்டைகளைக் கருங்குரங்குகள் உருட்டி விளையாடும். அத்தகைய காட்சி என்னைப் போன்றவர்க்கு அது நற்செயல் இல்லை. எனவே, தலைவன் விரைவில் என்னை மணம் செய்துக்கொள்ளதே நல்லது என்று தலைவி உள்ளுணர்வுகள் வெளிப்படுமாறு தன் உளத்தியலோடு தொடர்பு படுத்தும் நுட்பத்துடன் இந்தப் பாடல் அமைந்துள்ளது.

தலைவியின் உளத்தியல் அணுகுமுறைக்குச் சான்றாக அமையும் மற்றொரு பாடல் அமைந்துள்ளது. அவை,

யாம்எம் காமம் தாங்கவும் தாம்தம்
கொழுதகை மையின் அழுதன தோழி!
..... (குறுந். 241)

என்பது பாடல். இப்பாடலில் தலைவி குறிப்பிடும்போது, ஆவின் கன்றுகளை மேய்ப்பதற்காக ஓட்டிச் செல்கின்றனர். அவர்கள் செல்லும் வழியில் மொட்டும் மலரும் மிகுந்திதுக்கும் மரத்தில் ஏறாவில்லை. அம்மலர்கள் கீழை விழுவதற்காக புலி புலி என்று மரத்தின் கீழிருந்தே கூவிஆரவாரம் செய்கின்றனர். அந்த ஒலி விண்ணகத்தே செல்லும் மலை நாட்டின் தலைவனுக்காக தான் காத்திருக்கிறேன் என்கிறாள் தலைவி. ஆனால், தலைவனோடு கொண்ட நட்பினால் என் கண்கள் தாமே அழுதன என்கிறாள். இப்பாடல் தலைவி உளத்தியல் நுட்பத்தை எடுத்துரைப்பதாக உள்ளது எனலாம்.

இன்னுமொரு பாடலில், தலைவி தோழியிடம் தலைவன் நம்மைப் பிரிந்திருக்கின்றான். ஆனால், நான் தலைவன் நாட்டிலுள்ள வளமான குன்றைப் பார்த்தேன். அந்த மலையில் மயிலினங்கள் அகவுகின்றன. அங்கு குரங்கினங்கள் தன் குட்டிகளோடு நடுங்கும் மலைப்பொழிவு மிகுந்த குன்றினைப் பார்த்தேன். தோழி அதனால் என் நெற்றி பொன்னிற ஒளியுடையதாக மாற்றம் பெற்றுள்ளதா என்று பார்த்துச்சொல் என தலைவி கேட்கிறாள். இப்பாடல் வழி தலைவி தோழியிடம் எடுத்துரைக்கும் உளத்தியல் அணுகுமுறை சிறப்பிடம் பெறுகிறது.

தலைவன் வரைவு நீட்டித்த விடத்துக் குறிப்பிடுவதாகப் பின்வருமாறு அமையும் பாடல்.

.....
கல்லினும் வலியன் தோழி!
வலியன் என்னாது மெலியும்என் நெஞ்சே! (குறுந். 187)

இப்பாடல் தலைவியை ஆற்றுவிப்பதற்காகத் தலைவனைத் தோழி பழித்துப்பேசுகிறாள். அதற்குப் பதிலுரையாகக் குறிப்பிடும் தலைவி, அவன் கல்லினும் வலிமையுடையவன். அதைப் புரிந்துகொள்ளாத என் உள்ளம் வருந்துகிறது. ஆகையால், தலைவன் எவ்வகையிலும்

குற்றமற்றவன் எனவே என்னைத் திருமணம் செய்துக்கொள்வான் என்று நுட்பமாக எடுத்துரைக்கிறாள்.

**தலைவன் இரவில் வருவதால் துன்பம் ஏற்படும் என வருந்துதல்.**

தலைவன் தலைவியுடன் களவின்பத்தை அனுபவிப்பதில் நாட்டம் உடையவனாக இருக்கிறான். அதனால், அவன் இரவுக்குறியில் வருகிறான். அவ்வாறு வரும்போது துன்பம் ஏற்படும் எனவருந்துகிறாள். இக்கருத்தை உணர்த்தும் பாடலில் தலைவி குன்றிலுள்ள கோட்டான் சத்தமிட்டாலும், தன் வீட்டின் முற்றத்திலுள்ள பலா மரத்தின் பழத்திற்காக ஆண்குரங்கு ஒரு மரம்விட்டு மற்றொரு மரத்திற்குத் தாவினாலும் அவ்வொலியைக்கேட்டு மனம் அஞ்சுவதாகத் தோழியிடம் கூறுகிறாள். அவர் வரும் இருள் சூழ்ந்த வழியிலே அவருடன் என் நெஞ்சும் செல்கிறது என்றுரைக்கிறாள். தலைவி அவனோடு ஒன்றிப்போன உளத்தியல் சிக்கலைச் சுட்டிக்காட்டடுவதாகப் புலவர் பாடலைப் புனைந்துள்ளார். இக்கருத்தை விவரிக்கும்,

..... .
என் நெஞ்சம் இனியே
ஆரிருட் கங்குல் அவர்வரின்
சாரல் நீள்இடைச் செலவுஆ னாதே. (குறுந். 153)

என்பது பாடலாகும்.

**தலைவன் செய்த தவறுக்கு என தோள் மெலிவுற்றது என்று கூறுதல்.**

தலைவன் தலைவியை விட்டுப் பிரியேன் என்று கூறுகிறான். அவ்வாறு பிரிய நேர்ந்தாலும் விரைவில் திரும்பி வருவேன் என்று செல்கிறான். அவன் குறிப்பிட்டுச் சென்ற காலத்தில் அவனால் வரமுடியவில்லை. இதனால் தலைவியின் தோள் மெலிவுற்றது. மலைநாடனும் தான் திரும்புவதற்குரிய அடையாளமானக் குறியும் தவறிப்போனது. அதனால் தலைவி என் அகன்ற தோள்களும் பசப்புற்றன. தலைவன் குறித்துச் சென்ற காலம்கடந்த பிறகு அவன் வந்துள்ளதாகத் தோழி தலைவியிடம் கூறுகின்றாள். அக்கருத்தைத் தலைவி நீ கூறுவது உண்மைதானா எனும் பொருளில் வினவுவதாகப் பாடல் அமைந்துள்ளது. இக்கருத்தைப் பின்வருமாறு கவிஞர் படைத்துள்ளார். இதை,

.....
தான் குறி வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தனஎன் தடமென் தோளே. (குறுந். 121)

என்று முடியும் பாடல் எடுத்துரைக்கிறது. தலைவி இப்பாடலில் உளத்தியல் நயத்துடன் மிகவும் நுட்பத்துடன் விவரிப்பதாக உள்ளது.

**தலைவியின், தன் மனவலிமையை வெளிப்படுதல்**

தோழி, தலைவன் நம்மீது கொண்ட நட்பினால், குறித்தக்காலத்தில் வராததால் நமக்குப் பசலை நோய் உண்டானது. அந்தப் பசலை நோய் நம்மைத் துன்புறுத்தினாலும், அது நம் உள்ளத்தின் மன உறுதி சிறிதளவும் தளராது என்று தலைவி, தோழியிடம் கூறுகின்றாள். இந்த மனவலிமைக்குக் காரணம் தலைவன் நம்மீது கொண்ட நட்பினால் நமக்கு உண்டானதே உள்ளத்து உண்டாயிக்கும் மன உறுதியே என்றுரைக்கிறாள். இங்கு,

..... நம்மொடு
நயந்தனன் கொண்ட கேண்மை
பயந்தக் காலும் பயப்பு ஒல்லாதே. (குறுந். 264)

பாடல் வரிகள் விளக்கியுரைக்கிறது.

**தலைவியின் கண்கள் பசலைப் படர்ந்தைக் கூறுதல்**

தலைவன் பொருள்தேடவதற்காகப் பிரிந்துச் செல்கின்றான். அந்தப் பிரிவுக்கு முன்னர் தலைவியின் கண்கள் குவளைமலர்கள் போன்றிருந்தன என்கிறார் ஆசிரியர். பின்னர் அவை முழுவதும் பசலை நிறம் அடைந்துள்ளது என்கிறாள். தலைவனைக் காணாத்தால் கண்கள் பசலைப்படர்ந்தது எனும் உளத்தியல் திறத்தை இங்கு கபிலர் தலைவி கூற்றின்வழி விளக்கியுரைக்கிறார். இதை,

.....
நோய்தந் தனனே தோழி!
பசலை ஆர்ந்தன குவளைஅம் கண்ணே! (குறுந். 13)

என்று முடியும் பாடல் விளக்குகிறது.

**தலைவனின் தூதுவன் கேட்க தலைவி தோழியிடம் உரைத்தல்**

தோழி, தலைவனின் குற்றமற்ற உள்ளத்தைக் காட்டும் செய்தி நம்மிடம் வந்துள்ளது என்றுரைக்கிறாள். அவர் அனுப்பிய தூதுவனிடம் நற்செய்தியை அனுப்புவோம் என்கிறாள். இவன் நாம் தலைவனிடம் தூதுவனிடம், அவனிடம் நாம் போற்றுகின்ற உண்மையான நட்பினை எடுத்துரைப்பான் என்று கூறுகிறாள். இதை,

..... நாமும்
நெய்பெய் தீயின் எதிர்கொண்டு
தான்மணந் தனையம் என விடுகம் தூதே. (குறுந். 106)

என்ற பாடல்வரிகள் விளக்குகிறது.

**நொதுமலர் வரைவின்போது தலைவி உரைத்தல்**

தலைவன் தலைவியின் களவு வாழ்க்கையை ஊரார் அறியாதவாறு உள்ளது. அதனால், ஊர்மக்கள் புதியர்களிடம் மணம் பேசகின்றனர். இதை, அறிந்த தலைவி, இவ்வூரார் மனம் புழுங்கும் இயல்பினர் என்று குறிப்பிடுகின்றாள். தலைவன் முதல்நாள் காட்டிய அதே அன்புடன் இன்றும் பழகிவரும் குணத்தினன். அவன் நட்பிற்கு இலக்கணமாக விளங்குபவன். இதைப் புரிந்துக்கொள்ளாத ஊராரின் பேச்சிலிருந்து விடுதலைப்பெற விரும்புகிறாள். ஆதலால், தாம் விரும்பும் காதலனைத் திருமணம் செய்துக்கொள்ள தோழியை அறத்தோடு நிற்க வேண்டுகிறாள். இதை விளக்கும்,

.....
பெருவரை அடுக்கத்துக் கிழவன் என்றும்
அன்றை அன்ன நட்பினன்
புதுவோர்த்து அம்மஇவ் அழுங்கல் ஊரே. (குறுந். 385)

என்ற பாடலாகும். களவு மணம் கற்புமணமாவதற்குரியச் சூழலை விவரிக்கும் தலைவியின் உளத்தியல் அணுகுமுறை இவண் குறிப்பிடத்தக்கது.

**தலைவி தலைவனோடு மனம் ஒன்றாத காரணத்தைக் கூறுதல்**

தோழி, தலைவனிடம் நான் மனம் பொருந்தாதவள் இல்லை. நான் அவனிடம் என்றும் ஒற்றுமைப்படுவேன். ஆனால், தலைவனின் மலைநாட்டில் புலியுடன் போரிடும் யானைக்குக் கோபம் மிகுந்ததனால் வேங்கை மரத்தின் அடிமரத்தைத் நெரித்து மிதித்தது. கீழேசாய்ந்த அந்த மரத்தின் மலரைக் குறவரின பெண்கள் மரத்தின் மேலேராமல் கீழிருந்தே பரித்துத் தங்கள் கூந்தலில் சூடிக்கொள்கின்றனர். அத்தகைய மலைநாட்டின் தலைவன் மேல் இக்காரத்தினால் மட்டுமே சினம் அடைகிறேன் என்கிறாள். தலைவி இப்பாடலில் உள்ளுறை உவமத்தால் உணர்த்துவதாக அமைந்துள்ளது. இங்கு, வேங்கை மரமாகத் தலைவியும் உருவகிக்கப்படுத்தப்படுகிறது. தலைவனை யானைக்கு உதாரணமாக ஒப்பிட்டு ஆசிரியர் பாடலை அமைத்து உளத்தியல் நுட்பம் வெளிப்படுமாற்றை விளக்கியுரைக்கிறார். இதை,

ஒன்றேன் அல்லன்; ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரும் நாடனொடு
ஒன்றேன் தோழி! ஒன்றி னானே. (குறுந். 208)

என்று பாடல் விவரிக்கிறது. இப்பாடலில் தலைவனும் தலைவி குற்றமற்றவள். அவள் தவறே செய்யவில்லை. தலைவியைக் காதலித்துக் காமநோயினால் வேங்கை மரத்தைப்போல் காரணமில்லாமல் சாய்த்துவிட்டான். அதனால் நான் மெலிவடைந்துவிட்டேன் என்று தலைவி கூறுகின்றாள். தலைவன் மீது இந்த ஒரே காரணத்தால் மட்டுமே மனம் ஒன்றாததற்குக் காரணம் என்று கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது.

**தோழி கூற்றில் வெளிப்படும் உளத்தியல் அணுகுமுறை**

தலைவன் தலைவியின் அகத்திணை ஒழுக்கம் இன்றளவும் போற்றப்படுவதற்குத் தோழியின் பங்கு மட்டற்றது. தோழி, இவ்விருவரின் காதல் ஒழுகலாறுகள் களவில் தொடங்கி கற்பில் முடியும் வரைக்கும் உற்றத் துணையுடன் செயலாற்றுகிறாள். தலைவிக்கு நூற்றுக்கு நூறு சதவிகிதம் நம்பிக்கைக்கு உரியவளாகத் திகழ்பவள். தலைவன் தலைவியின் காதல் வாழ்வு அன்பினால் உறுதிப்படுத்தப்படுவதற்குப் பாலமாக விளங்குபவள். தலைவிக்குத் தனக்குக் காதல் வாழ்வில் சிக்கல் ஏற்படும் சூழலில் உளத்தியல் அணுகுமுறையுடன் அதைச் சரி செய்பவள். அவ்வணுகு முறையை மிகவும் நுட்பமாகக் கையாளுபவள். இருவருக்கும் எந்தவகையிலும் இடையூறு நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளும் பண்ணினள். இவளின் உளத்தியல் நுட்பத்தைக் கபிலர், தம் படைப்பாளுமையில் ஏழுபாடல்களின் வழி தோழி கூற்றாகப் பாடியுள்ளார்.

**இரவுக்குறியிடத்து தலைவனுக்கு தோழி கூறுதல்**

ஓங்கி உயர்ந்த மலைக்குரிய தலைவனே, மழைமிகுதியாகப் பெயத்ததால் உன்னால் ஆகாயத்தைப் பார்க்கமுடியாது. நீ கடந்து வந்த வழிமுழுவதும் மழைநீரால் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுவதால் பூமியைக் காண இயலாது. சூரியனின் ஒளிமறைந்ததனால் இருள்மிகுதியாக சூழ்ப்பட்டுள்ளது. இவ்வாறு இயற்கை சீற்றம் மிகுந்துள்ள காலத்தில் எப்படி வந்தாய். இங்குள்ள அனைவரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கின்றனர். இரவுக்குறிக்காக எங்களை எங்ஙனம் தேடிவந்தாய் என்று தோழி குறிப்பிடுகிறாள். எம் சிற்றூரில் வேங்கைமணம் கமழும் இவ்விடத்தில் எவ்வாறு அறிந்தாய். இந்த நிலையில் நீ வந்திருப்பதைப் பார்த்து மனம் நோகின்றது என்கிறாள். இப்பாடலில் தலைவன் நலனில் மிகுந்த அக்கறை உள்ளவளாய் செயல்படுகிறாள். தோழி இக்கருத்தை வெளிப்படுத்தும் பாங்கு உளத்தியல் அணுகுமுறையுடன் விளக்கியுரைக்கிறாள். இவ்வுளவியல் பாங்கினை விளக்குமாறு,

பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலையே
நீர்பர்ந்து ஒழுகலின் நிலங்கா ணலையே
எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ, ஓங்கல் வெற்ப!
வேங்கை கமழும்எம் சிறுகுடி
யாங்குஅறிந் தனையோ? நோகோ யானே. (குறுந். 355)

என்னும் பாடல் இடம்பெறுகின்றது.

மற்றொரு பாடலில், தலைவன் தோழியிடம் இரவுக்குறி வேண்டுகிறான். அவள் அதற்கு உடன்படுவள் போல் மறுத்துரைக்கும் உளத்தியல் நுட்பத்துடன் கூடிய அணுகுமுறையை விளக்கிறது. இதைக் குறிப்பிடுமிடத்து,

காமம் ஒழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென , அருவி

விடரகத்து இயம்பும் நாட! எம்
தொடர்பும் தேயுமோ நின்வயி னானே. (குறுந். 42)

இப்பாடல் அமைகின்றது. இங்கு மலைமுழஞ்சுகளில் தொடர்ந்து அருவியின் ஒலிமிக்க நாட்டின் தலைவனே! தலைவிக்கு உன்னிடம் சேர்ந்து காம இன்பத்தை அனுபவிக்க முடியாமல் போகலாம். ஆனால், உன்மீது எமக்கு உள்ள நட்பு இதனால் குறைந்துபோகாது. ஆதலால், தலைவனிடம் இரவுக்குறியில் தலைவியைக் கூடுவதைத் தவிர்கக்ச் சொல்கின்றாள். இந்த உளத்தியல் அணுகுமுறையின் வழி தலைவியை விரைவில் ஊர்மக்கள் அறியுமாறு நீயும் தலைவியும் திருமணம் செய்துக்கொள்ளுங்கள் என்று தோழி எடுத்துரைக்கிறாள்.

**தலைவன் கேட்குமாறு தோழி, தலைவியிடம் கூறுதல்**

தலைவி, வெற்பன் உன்னைக் கூடி மகிழ்வதற்கு முன்பு உன் தோள்கள் வலிமையுடன் இருந்தது. இப்போதோ உனது மூங்கிலைப் போன்ற திரண்ட அழகுடைய தோள்களின் நெகிழ்ச்சியடைந்து மெல்லியவைகளாக மாற்றம் அடைந்துள்ளன. இவை நல்ல அழகிய தோள்கள் என்னும் பெயரை இழந்துவிட்டன. இப்போது வெறுப்புறும் துன்பத்தில் உழன்றுக் கொண்டிருக்கிறாய். அதனால் நீ உறக்கமின்றி துன்புகின்றாய். அத்துடன் உன்னுடைய மையுண்ட கண்களில் நீர் பெருக்கெடுத்துவருவதால் முந்தைய அழகை இழந்துவிட்டாள் என்று தோழி உளத்தியல் பாங்குடன் தலைவன் கேட்குமாறு எடுத்துரைக்கிறாள். இந்த உளத்தியல் அணுகுமுறையை விளக்குவதாக,

முனிபடர் உழந்த பாடுஇல் உண்கண்
பனிகால் போழ்ந்து – பணைஎழுல் ஞெகிழ் தோள்
மெல்லிய வாகலின் மேவரத் திரண்டு
நல்ல என்னும் சொல்லை மன்னிய!
..... . (குறுந். 357)

என்னும் பாடல் விவரிக்கின்றது.

மற்றொரு பாடலில் மலையமான் திருமுடிக்காரியின் முள்ளூர்க் காட்டின் சந்தனம் மணக்கும் மார்பினையுடைய தலைவன், நீ இவ்விடத்தில் எம்மைச் சந்திக்க வரவேண்டாம். எம்முடைய தாய் இங்கு அடிக்கடி வருவாள். எனவே, திணைப்புனம் காக்குமிடத்துக்குச் செல்கிறோம். ஆகையால், அங்கு வந்து எங்களைக் காண்பது எளிது என்று தோழி நயம்பட தலைவனிடம் உரைக்கிறாள். இவ்வுளவியல் நுட்பம் நீ தலைவியை விரைவில் மணம் செய்துகொள்ள வேண்டும் என்பதைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. இக்கருத்தை,

.....
எஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்து
ஆரம் நாறும் மார்பினை
வாரற்க தில்ல வருகுவள் யாயே. (குறுந். 198)

என்ற பாடல் விளக்குகிறது.

**தலைவியை விரைவில் மணந்துகொள் என்று கூறுதல்**

தலைவன் களவு இன்பத்திலேயே காலத்தைக் கடத்துகிறான். இதை மிகவும் உளத்தியல் நுட்பம் வெளிப்படுமாறு உவமைநயத்துடன் தோழி எடுத்துரைக்கும் விதமாக அமைந்துள்ளது. இந்த உளத்தியல் அணுகுமுறையை விரித்துரைக்கும்,

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார்அஃது அறிந்திசி னோரே, சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்குஇவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே. (குறுந். 18)

என்ற பாடல் இடம்பெறுகின்றது. இப்பாடலில் தலைவனே, தலைவி உன்மீது வைத்துத்துள்ள காதல் மிகவும் அதிகம். எனவே, அவளை விரைவில் திருமணம் செய்துக்கொள் என்றுரைக்கிறாள். அவ்வாறு நீ அவளை மணம் செய்யாவிட்டால், அவளுடைய உயிருக்கு என்ன நடக்குமோ தெரியாது என்று குறிப்பிடுகின்றாள். இக்கருத்தை விளக்குமிடத்துச் சிறந்த உவமையை ஆசிரியர் கையாண்டுள்ளார். பக்க மலையில் பலாமரத்தின் வலிமையில்லாத கிளையில் பெரியபலா பழுத்துத் தொங்கிக் கொண்டிருப்பதைப் போல் அவள் உன்மீது கொண்ட காமமிகுதியால் உன்னையே நினைத்துக் கொண்டுள்ளாள். எனவே, நீ, தலைவியை விரைவில் திருமணம் செய்துக்கொள் என்று தோழி வரைவுக்கு வற்புறுத்துகிறாள்.

மற்றொரு பாடலில் (குறுந். 225)

தோழி, தலைவனிடம் உனக்கு நாங்கள் களவுகாலத்தில் செய்த நன்றியை மறந்துவிடாதே என்று கூறுகிறாள். அவ்வாறு நீ மறப்பாயானால் வளம் குன்றிய காலத்தில் அரசனுக்கு உதவியவர்களை, அவன் செல்வ வளம் பெற்றபோது உதவியர்களை மறந்துவிடுபவனைப்போல் நீ இருக்கவேண்டாம் என்னும் பாடலும் இடம்பெறுகின்றது.

**உடன்போக்கு செல்லும் தலைவனுக்கு தோழி கூறுதல்**

தலைவியைத் தோழி, உடன்போக்கிற்கு உடன்படவைக்கிறாள். அதன் பின்னர் அவளுடன் செல்ல எதிர்படும் தலைவனிடம் தோழி உளத்தியல் நோக்குடன் எடுத்துரைக்கிறாள். அவ்வாறு குறிப்பிடும்போது, நமக்குப் பெரிதான நன்மையை ஒருவர் செய்தால் அதை இவ்வுலகத்தார் மறக்கமாட்டார்கள். அவ்வாறு காலத்தால் செய்த நன்றி மிகவும் முக்கியமானது. தனக்கு உதவிசெய்தவரையே போற்றிவாழ்வர். இவள் உன்னோடு வாழத்துணிந்து உன்னுடன் வருகிறாள். பிற்காலத்தில் இவள் சிறிதான உதவியே செய்பவளாக இருந்தாலும், நீ வெறுப்பின்றி அவளைப் போற்றி பாதுகாப்பாயாக என்று தோழி குறிப்பிடுகிறாள். ஏனெனில், அவள் உன்னையே பற்றுக்கோடாக நினைத்து வருகிறாள். இக்கருத்தை எடுத்துரைக்கும்,

..... .
நன்மலை நாட! நின் அலது இலளே. (குறுந். 115)

என்று முற்றுப்பெறும் பாடல் அமைகின்றது.

## முடிவுரை

இதுகாறும் கண்டவற்றுள் சங்க இலக்கியம் பண்டையத் தமிழரின் வாழ்க்கையை எடுத்துரைக்கும் கருத்துக் கருவூலம். இவற்றில் ஒன்றான குறுந்தொகைப் பாடல்களில் குறிஞ்சிக் கபிலரின் இருபத்தெட்டுப் பாடல்களையும் உளத்தியல் அணுகுமுறையில் ஆராயப்பட்டன. முதற்கண் இக்கட்டுரைக்கு அணிசேர்க்கும் விதமாக உளவியலுக்கான மேனாட்டு அறிஞர்களின் விளக்கங்கள் குறிப்பிடப்பட்டன. அத்துடன் உளவியலுக்கு அடிப்படைக் காரணங்களையும் விளக்கப்பட்டன. இன்றைய காலங்களில் உளத்தியல் அணுகுமுறையின் தேவையையும் விளக்கப்பட்டது. குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் பாடல்கள் இன்றைய சமுகத்திற்குப் பொறுந்தும் வகையில் அமையும் எனலாம். தலைவன் கூற்றாக அமையும் பாடல்களில் உளத்தியல் நுட்பம் பயின்றுவந்துள்ள பாங்கினையும் எடுத்துரைக்கப்பட்டது. கபிலர் தலைவன் கூற்றாகக் கூறுமிடத்து அந்தமாந்தராகவே நினைத்துக்கொண்டு உள்ளுணர்வுகளை விளக்கியுரைக்கும் பான்மையும் இடம்பெறுகின்றது. அதேபோல் தலைவி கூற்றாக உள்ளப்பாடல்களிலும் பெண்களின் அகவுணர்வுகளையும் சுட்டிக்காட்டியுரைக்கும் உளத்தியல் நோக்கும் விளக்கப்பட்டுள்ளது. அகத்திணை வாழ்க்கையின் அடிப்படைக் காரணி என்றும் உயிரின் மூச்சு எனவும் அழைக்கும் சிறப்பிற்குரிய அகமாந்தர் தோழி. இந்தத் தோழி கூற்றாகப் புலவர் எடுத்துரைக்கும் உளத்தியல் நுட்பத்தை வெளிப்படும் திறம்மிக்கவையாகக் கபிலர் பாடல்களைப் படைத்துள்ளார். எனவே, குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் உளத்தியல் அணுகுமுறை என்னும் ஆய்வுக்கட்டுரை இன்றைய தலைமுறையினரின் ஆராய்ச்சிக்கும் பயனுள்ளதாக அமையும் எனலாம்.

## துணைநூற்பட்டியல்


பாலுசாமி, நா. (ப. ஆ) வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-5, ப. 444.

ஸ்ரீநிவாசன், பயன்தரும் மனோதத்துவம், ப. 6.

சுப்பிரமணியன், (தொ. ஆ.) க்ரியாவின் தற்கால தமிழகராதி, ப. 156.

தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப. 123.

மருதநாயகம், ப. சங்க இலக்கிய ஆய்வு தெ. பொ. மீயும் மேல அறிஞரும், ப. 108.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# திருநாவுக்கரசர் பாடல்களில் சிவனின் எண்குணங்கள்

# God Sivan's Engunanggal in Tirunaavukarasar's Songs

பிரவினா முத்துவேல் / Pravina Muthuvel[1]
[1] Teacher, Smk Bandar Baru Batang Kali
Corresponding Email: g-64338231@moe-dl.edu.my

**ஆய்வுச் சுருக்கம்**

பத்தி இலக்கியம் தோன்றிய காலக்கட்டங்களில் பல சமய பிரிவுகள் தோன்றின. அவற்றுள் சைவச் சமயமும் வைணவச் சமயமும் பெரும்பாண்மையான மக்கள் வழிபடும் சமயங்களாகத் திகழ்ந்தன. சைவச் சமயத்தில் சிவனை முழுமுதற்கடவுளாக வழிபட்டனர். வைணவச் சமயத்தில் திருமாலை முழுமுதற்கடவுளாக வழிபட்டனர். சைவச் சமய அடியார்கள் நாயன்மார்கள் எனவும்; வைணவச் சமய அடியார்கள் ஆழ்வார்கள் எனவும் அழைக்கப்பட்டனர். சைவச் சமயத்தில் சிவனின் அற்புதங்களைப் பாடல் வழியாக மக்களுக்கு வெளிப்படுத்திய பெருமைகள் அனைத்தும் 63 நாயன்மார்களைச் சாரும். 63 நாயன்மார்களில் நால்வர் என அழைக்கப்படும் நான்கு நாயன்மார்கள் உள்ளனர். அந்த நால்வரில் திருநாவுக்கரசரும் ஒருவராவார். அவர் பாடிய பாடல்கள் சிவனின் எண்குணங்களையும் அற்புதங்களையும் எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளன. திருநாவுக்கரசர் பாடிய பாடல்கள் தேவாரம் எனவும் அழைக்கப்படுகின்றது. பன்னிரு திருமுறைகளில் திருநாவுக்கரசர் பாடி அருளிய திருமுறைகள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகும். திருநாவுக்கரசர் பாடிய தேவாரங்கள் யாவும் மரபுகவிதைகளாகக் கருதப்படுகின்றன. இந்த ஆய்வு திருநாவுக்கரசர் தேவாரங்களிலுள்ள எண்குணங்களை அடையாளம் காண மேற்கொள்ளப்பட்டது. எண்குணங்கள் எனப்படுவது சிவனின் எட்டுக் குணங்களைக் குறிக்கின்றது. இந்த ஆய்வில் நூலாய்வு அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் முடிவில் சேகரிக்கப்பட்ட தரவுகள் அனைத்தும் விளக்கமுறை அணுகுமுறையில் விளக்கப்பட்டுள்ளன. திருநாவுக்கரசரின் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்காம் திருமுறையில் இடம்பெற்றுள்ள பாடல்களில், இரண்டாம் பதிகத்தின் முதல் ஐந்து பாடல்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் இறுதியில் திருநாவுக்கரசரின் பாடல்களில் சிவனின் எண்குணங்கள் வெளிப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கருச்சொற்கள்:** திருநாவுக்கரசர், திருமுறை, எண்குணங்கள்

**Abstract**

Many religious sects emerged during the period when devotional literature appeared. Among them, Saivism and Vaishnavism were the religious worshiped by many people. In Saivism, Shiva is worshiped as the supreme deity. In Vaishnava times Tirumal was worshiped as the first deity. Saivite followers are Nayanmars; Vaishnavism followers were also known as Alwars. In Saivism, the glory of showing the miracles of Shiva to the people through songs is attributed to 63 Nayanmars known as four. Thirunaavukarasar is one of those four. The songs he sang are devoted to highlighting the virtues and miracles of Shiva. The songs sung by Thirunaavukarasar are also known as Devaram. Out of the twelve Thirumurai, the Thirumurais sung and blessed by Thirunaavukarasar are the fourth, fifth and sixth Thirumurais. All the Devarams sung by Thirunaavukarasar are traditional poems. This study was carried out to identify the 'Enkunam' in Thirunaavukarasar devarams. The 'Enkunam' refer to Shiva's eight qualities. A book reserach approach has been used in this study. At the end of this study all the collected data are interpreted in a descriptive approach. Among the hymns featured in Thirunaavukarasar's selected fourth hymn, only the first five hymns of the second hymn have been selected and examined. At the end of this research, it has been confirmed that the eight qualities of Shiva are revealed in the songs of Thirunaavukarasar.

Keywords: Tirunaavukarasar, Thirumurai, Engunanggal

**முன்னுரை**

பத்தி இலக்கியக் காலமானது கி.பி. ஏழு எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் தோன்றியது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டில் சைவச் சமயப் பெரியவர்களான நாயன்மார்களும் வைணவச் சமயப் பெரியவர்களான ஆழ்வார்களும் தோன்றிப் பத்திப் பாடல்கள் பாடி ஊர் ஊராகச் சென்று தத்தம் சமயங்களைப் பரப்பி வந்தனர் (வரதராசன், 2009). அதுமட்டுமன்றி, சிவனை வழிபடும் நாயன்மார்களும் திருமாலை வழிபடும் ஆழ்வார்களும் ஒவ்வொரு கோயிலாகச் சென்று பத்திப் பாடல்களைப் பாடி இறைவனை வழிபட்டனர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் மக்களுக்கு இறைவன் மீது பத்தியை ஏற்படுத்துவதற்கு அச்செயலைப் புரிந்தனர்.

நாயன்மார்களில் நால்வராகக் கருதப்படுபவர்களில் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளனர். அவர்கள் பாடிய பாடல்கள் அனைத்தும் தேவாரம் என அழைக்கப்படுகின்றது. திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் பாடிய தேவாரங்கள் ஏறக்குறைய ஏழாயிரம் உள்ளன. அதன் பிறகு, அடுத்த நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி நாயன்மாரின் ஆயிரம் பாடல்கள் கிடைக்கப்பெற்றன. ஆதலால், இந்த மூன்று நாயன்மார்களின் பாடல்கள் எண்ணாயிரமும் தேவாரம் என்ற பெயரால் சிறந்த பத்தி இலக்கியமாக விளங்குகின்றன (வரதராசன், 2009). நாயன்மார்கள் பாடி அருளிய பாடல்கள் தேவாரம் என்று மட்டுமல்லாமல் திருமுறை எனவும் அழைக்கப்படுகின்றது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பகுதிகளே சைவ ஆகமங்கள் எனப்படுகின்றன. இவ்வாறு ஆகமங்கள் கோட்பாடுகளாக் கூறும் அருட்செய்திகளைப் பத்தி நெறியாக நடைமுறைப்படுத்திக் காட்டுகிறது திருமுறை (நாகப்பன், 2008). நாயன்மார்கள் மனம் கனிந்து சிவப்பெருமானைப் போற்றிப் பாடிய தேவாரங்களே திருமுறை எனப்படுகின்றது. திருமுறை எனும் சொல்லில் திரு என்னும் சொல்லானது சிவத்தையும் முறை என்னும் சொல்லானது சிவத்தை அடையும் நெறியையும் எடுத்துரைக்கின்றது (நாகப்பன், 2008). நாயன்மார்கள் பாடி அருளிய திருமுறை மொத்தம் பன்னிரண்டு உள்ளன. அவை பன்னிரு திருமுறை என்று அழைக்கப்படுகின்றது.

நால்வரில் ஒருவரான திருநாவுக்கரசர் அப்பர் என்றும் மருள் நீக்கியார் என்றும் அழைக்கப்படுகிறார். அப்பர் எனும் பெயர் திருஞானசம்பந்தரால் சூட்டப்பட்ட பெயராகும். அப்பர் பல சிவன் கோயில்களுக்குச் சென்று பல திருமுறைகளைப் பாடியுள்ளார். அதுமட்டுமன்றி, சமணர் கை ஓங்கியிருந்த காலத்தில் சிவ வழிபாடு நிறுத்தப்பட்டு மூடிக்கிடந்த கோயில்களை அப்பர் திறந்தார்; அரசர்கள் உதவியால் புதுப்பித்தார் (நாகப்பன், 2008). அக்கால மக்கள் பலரும் சமணர்களுக்குப் பயந்து சைவச் சமயத்தைத் தொழாத காலக்கட்டத்தில் அப்பர் ஒவ்வொரு ஊராகச் சென்ற போது அப்பரைக் கண்டு புத்துணர்வும் துணிவும் கொண்டனர். மேலும், அப்பரின் கையில் இருக்கும் உழவாரப்படை என்னும் கருவி சமணரால் பூட்டப்பட்ட கோயில்கள் அப்பரால் திறக்கப்பட்ட வரலாற்றை உணர்த்தும் அடையாளமாகும் (நாகப்பன், 2008)

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் சிவன் எட்டுக் குணங்களை உடையவன் என்று குறிப்பிட்டுள்ளது. அப்பரும் அவ்வாறே கூறியுள்ளார். அதாவது, சிவன் எனப்படுபவன்

எண்குணத்தான் ஆவான். சிவனின் எண்குணங்களானது அவனின் பெருமையை விளக்கும் வகையில் அமைந்துள்ளன. தன் வயத்தன், தூய உடம்பினன், இயற்கை அறிவினன், முற்றறிவு உடைமை, இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன், பேரருளுடைமை, பேராற்றல் உடைமை, வரம்பிலின்பம் உடைமை ஆகியவை சிவனின் எட்டுக் குணங்களாகும்.

தன்வயத்தன் எனப்படுவது இறைவன் எந்தப் பொருளின் துணையுமின்றிச் சுதந்திரமாய்ச் செயல்படுபவன் ஆவான். தூய உடம்பினன் என்பதோ இறைவன் இன்பம் துன்பம் இல்லாதவன் என்று பொருள்படுகின்றது. இயற்கை அறிவினன் என்பது இறைவனுக்கு மற்ற பொருள்களாலோ பிறராலோ அறிவு கிடைப்பதில்லை மாறாக இறைவனே அனைத்தையும் அறிந்தவனாய்க் கருதப்படுகிறான். அடுத்து, முற்றறிவு எனப்படுவது இறைவன் என்பவன் மூன்று காலங்களாகிய இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களையும் ஒன்றாய் அறிபவன் ஆவான்.

இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன் எனப்படுவது இறைவன் மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்கள், அறியாமை ஆகியவை இல்லாதவன் என்று பொருள்படுகின்றது. பேரருளுடைமை என்பது இறைவன் பெரிய அளவில் கருணையும் அருளுடைமையும் உடையவன் ஆவான். அடுத்து, பேராற்றல் உடைமை என்பதோ இறைவன் முடிவில்லா; எல்லையற்ற ஆற்றல் உடையவன் என்று புலப்படுத்துகின்றது. வரம்பிலின்பம் உடைமை எனப்படுவது இறைவன் எந்தக் குறையும் அற்றவனாகவும்; குறை இருப்பின் அந்தக் குறையைத் தானே சரி செய்பவனாகவும் திகழ்கிறான். எனவே, இறைவனின் இந்த எட்டுக் குணங்களையும் திருநாவுக்கரசர் பாடல்களில் ஆராய்ந்து கண்டவறிதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வு அணுகுமுறை**

இந்த ஆய்வானது பண்புசார் அணுகுமுறையைக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆய்வில் நூலாய்வு அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நூலாய்வு அணுகுமுறையில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவைத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, இந்த ஆய்வின் முடிவில் சேகரிக்கப்பட்ட தரவுகள் அனைத்தும் விளக்கமுறை அணுகுமுறையில் விளக்கப்பட்டுள்ளன.

**தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

தேர்ந்தெடுக்கப்பட்ட நான்காம் திருமுறையிலுள்ள இரண்டாம் பதிகத்தின் பத்துப் பாடல்களில் சிவனின் எண்குணங்கள் ஆராயப்பட்டுள்ளன. திருநாவுக்கரசர் பாடி அருளிய நான்காம் திருமுறையிலுள்ள பாடல்களில் காணப்படும் சிவனின் எட்டுக் குணங்கள் கண்டறியப்பட்டுப், பின் விளக்கமுறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**முற்றறிவு உடைமை**

சுண்ண வெண் சந்தனச் சாந்தும் சுடர்த் திங்கள் சூளாமணியும்
வண்ண உரிவை உடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண் முரண் ஏறும் அகலம் வளாய அரவும்
திண் நல் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை

மேற்காணும் பாடலில் சிவன் தனது பக்தருக்கு ஏற்படவிருக்கும் துன்பத்தை முன்கூட்டியே அறிந்து கொண்டு தனது பக்தருக்கு எந்தவொரு துன்பமும் நெருங்காமல் காத்து அருள் புரிகின்றான். சமணர்கள் அப்பரை மதயானையை இடறச் செய்து அவரைக் கொன்றுவிடலாம் என்று ஆலோசனை கூறினர். அதனை அறிந்த சிவபெருமான் அந்த யானையின் தோலை உரித்து அதனைத் தனது உடலின் மேல் போர்வையாகப் போர்த்துக் கொள்கின்றார். சிவன் மூன்று காலங்களையும் அறியும் காரணத்தினால் தனது பக்தருக்கு நிகழவிருக்கும் துன்பத்தை முன்கூட்டியே அறிந்து கொண்டு காப்பாற்றுகிறார். எனவே, திருநாவுக்கரசர் பாடல் மூலம் சிவனின் எண்குணங்களில் ஒன்றான முற்றறிவு உடைமை எனும் குணம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**வரம்பிலின்பம் உடைமை**

பூண்டதோர் கேழல் எயிறும் பொன் திகழ் ஆமை புரள
நீண்ட திண்தோள் வலம் சூழ்ந்து நிலாக்கதிர் போல வெண்ணூலும்
காண் தகு புள்ளின் சிறகும் கலந்த கட்டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை

மேற்காணும் பாடலில் சிவன் தனக்குத் தேவையானவற்றைத் தானே சுயமாகச் செய்து கொள்பவன். அதாவது, சிவபெருமான் தன் பொருட்டுச் செயல்படுபவனாக உள்ளான். சிவன் எந்தக் குறையும் இல்லாதவன், அப்படிக் குறை இருப்பினும் அக்குறையைத் தானே நிறைவு செய்து கொள்பவனாக உள்ளான். அதுவே அவன் வரம்பு இல்லா இன்பம் உடையவனாகத் திகழப்படுகிறான். அதுமட்டுமன்றி, சிவன் குறைவு இல்லாத நிறை மட்டுமே உடையவன் என்பதால் அவன் தன் பொருட்டுச் செயல்படுகிறான். சிவன் தனது ஆபரணங்களாக மார்பினில் பன்றிக் கொம்பு, ஆமை ஓடு, கொக்கின் சிறகு ஆகியவற்றை அணிந்தவனாய்த் திகழ்கிறான். சிவன் தான் வென்ற திருமாலின் அவதாரங்களான பன்றிக் கொம்பு, ஆமை ஓடு, கொக்கின் சிறகு ஆகியவற்றைத் தன் பொருட்டுச் செயல்படுவதால் தன்னுடைய விருப்பத்திற்கு ஏற்ப அவற்றை அணிந்து கொள்கிறான். எனவேதான், திருநாவுக்கரசர் பாடல் மூலம் சிவனின் எண்குணங்களில் ஒன்றான வரம்பிலின்பம் உடைமை எனும் குணம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**பேராற்றல் உடைமை**

ஒத்த வடத்து இளநாகம் உருத்திரபட்டம் இரண்டும்
முத்து வடக் கண்டிகையும் முளைத்தெழு மூவிலை வேலும்
சித்த வடமும் அதிகைச் சேணுயர் வீரட்டம் சூழ்ந்து
தத்தும் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை

மேற்காணும் பாடலில் சிவன் நாகத்தைத் தன் கழுத்தில் மாலையாக அணிந்து கொள்பவன் என்று திருநாவுக்கரசர் பாடுகிறார். சிவன் முடிவு இல்லாத ஆற்றல் உடையவனாகத் திகழ்கின்றான். முடிவில்லா ஆற்றல் உடையவன் எனும் செயலானது சிவனின் எல்லை இல்லாத செயல் ஆற்றலைத் தெளிவுப்படுத்துகிறது. சிவன் பேராற்றல் கொண்டவன் என்பதால்தான் இப்பூவுலகத்தைப் படைத்த பெருமை அனைத்தும் அவனையே சாரும். சிவன் எந்தவொரு பெரிய செயலையும் நினைத்த மாத்திரத்திலேயே செய்யக்கூடியவன். அந்தக் காரணத்தினாலேயே சிவன் பேராற்றல் உடையவனாகக் கருதப்படுகிறான். எவராலும் செய்ய முடியாத செயல்களைச் செய்ய முடியாத சூழ்நிலையில் சிவன் ஒருவனே அச்செயல்களைச் செய்யக்கூடியவனாகத் திகழ்கிறான். அதனால்தான், உயிருள்ள நாகத்தையே தனது கழுத்தில் மாலையாக அணிந்து கொள்வதைப் பாடல் புலப்படுத்துகின்றது. அதுமட்டுமன்றி, சிவன் கழுத்திலுள்ள நாகமானது தனது தோலை உரித்து என்றும் இளமையாக உள்ளது என்றும் தன் பாடலில் குறிப்பிட்டுள்ளார் திருநாவுக்கரசர். ஆகையால், திருநாவுக்கரசர் பாடல் மூலம் சிவனின் எண்குணங்களில் ஒன்றான பேராற்றல் உடைமை எனும் குணம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**தன் வயத்தன்**

மடமான் மறி பொற்கலையும் மழுப் பாம்பு ஒரு கையில் வீணை
குடமால் வரைய திண்தோளும் குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமால் தழுவிய பாகம் இருநிலன் ஏற்ற சுவடும்
நடமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை

மேற்காணும் பாடலில் சிவன் என்பவன் தன் வயத்தன் என்பது புலப்படுகின்றது. சிவன் எனப்படுபவன் சுதந்திரமாகச் செயல்படுபவனாகத் திகழ்கிறான். அதாவது, சிவனுக்கு எந்தப் பொருளின் சார்பும் தேவையில்லை. ஆனால், இப்பூவியில் வாழும் உயிர்களுக்கு மட்டுமே சிவனின் சார்பும் துணையும் தேவைப்படுகின்றது. சிவனுக்குத் தலைவன் இல்லாத காரணத்தால் அவனே அனைத்திற்கும் தலைவனாய்த் திகழ்கின்றான். அதுமட்டுமன்றி, சிவன் தலைவனாகக் கருதப்படுவதால் இவ்வுலகிலுள்ள அனைத்து உயிர்களும் தேவர்கள் உட்பட சிவனுக்கு அடிமையாகும். ஆதலால், சிவன் அனைத்து உயிர்களையும் அடிமைப்படுத்தும் ஆற்றல் படைத்தவனாய்த் திகழ்கின்றான். திருநாவுக்கரசர் பாடி அருளிய இப்பாடலில் சிவன் இளமையான மான் கன்றினைத் தனது கையில் ஏந்தியது, தோலை ஆடையாக அணிந்து கொள்வது, ஒரு கையில் மழுப்படையும், மற்றொரு கையில் பாம்பினையும், மற்றொரு கையில் வீணையும் ஏந்தி, தனது உடலின் இடது பக்கத்தில் திருமாலை கொண்டுள்ளார்.

சிவன் சுதந்திரமாகச் செயல்படுபவன் என்ற காரணத்தினால் மட்டுமே திருமாலையே தனது உடலின் இடது பக்கத்தில் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, திருநாவுக்கரசர் பாடல் மூலம் சிவனின் எண்குணங்களில் ஒன்றான தன் வயத்தன் எனும் குணம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**பேரருளுடைமை**

பலபல காமத்தராகிப் பதைத்து எழுவார் மனத்துள்ளே
கல மலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்
வலம் ஏந்தி இரண்டு சுடரும் வான் கயிலாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை

மேற்காணும் பாடலில் சமணர் தன்னைக் கொல்லுவதற்காக அனுப்பிய மதயானையைக் கண்டவுடன் திருநாவுக்கரசருக்குக் கணபதிதான் நினைவில் தோன்றினார். அதாவது, பக்தர்களின் இடர் தீர்ப்பதற்காகச் சிவபெருமான் அருளிய யானை முகம் கொண்ட கணபதிதான் அப்பரின் நினைவுக்குத் தோன்றினார். சிவனின் பக்தர்களுக்குத் துன்பம் நேரும் பொழுது, கணபதியை நினைத்து வணங்கினால், அனைத்துத் துன்பங்களும் நீங்கிவிடும் என்ற காரணத்தால் யானை முகம் கொண்ட கணபதியைப் படைத்தார் சிவபெருமான். எனவே, இவ்வுலகில் மக்களின் துன்பங்களைப் போக்குவதற்காகச் சிவபெருமான் மக்களுக்காகக் கணபதியைப் படைத்தார் என்பது வெள்ளிடைமலையாகின்றது. சிவன் கருணை, அருளுடைமை ஆகிய குணங்களை இயற்கையாகவே கொண்டுள்ளான். உயிர்களுக்காகச் சிவபெருமான் உலகத்தைப் படைத்தான். அதுமட்டுமில்லாமல், அவ்வாறு படைத்த உயிர்களை அறியாமையிலிருந்து மீட்கவும் செய்கிறான். இதன் வழி, சிவன் பேரருள் அருள்பவனாகத் திகழ்கிறான் என்பது புலப்படுகின்றது. ஆகையால், திருநாவுக்கரசர் பாடல் மூலம் சிவனின் எண்குணங்களில் ஒன்றான பேரருளுடைமை எனும் குணம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**நிறைவுரை**

திருநாவுக்கரசர் பாடி அருளிய நான்காம் திருமுறையின் இரண்டாவது பதிகத்திலுள்ள முதல் ஐந்து பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பகுப்பாய்வு செய்த பிறகு, அப்பாடல்களில் சிவனின் எண்குணங்கள் வெளிப்பட்டுள்ளதை அடையாளம் காண முடிகின்றது. திருநாவுக்கரசரின் நான்காம் திருமுறையில் இரண்டாவது பதிகத்தின் முதல் ஐந்து பாடல்களில் முற்றறிவு உடைமை, வரம்பிலின்பம் உடைமை, பேராற்றல் உடைமை, தன் வயத்தன், பேரருளுடைமை ஆகிய குணங்கள் கண்டறியப்பட்டுள்ளன. எனவே, திருநாவுக்கரசர் பாடல்களில் சிவனின் எண்குணங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

## துணைநூற்பட்டியல்

அருணாசலம், ப. (2007). *பக்தி இலக்கியம்.* சென்னை:மோனார்க் கிராபிக்ஸ்.

ஞானப்பூங்கோதை, மோ. (2007). *சைவ சித்தாந்தத் திறன்.* மதுரை:எழில் ஆப்செட் பிரிண்டர்ஸ்.

தட்சிணாமூர்த்தி, அ. (2008). *தமிழர் நாகரிகமும் பண்பாடும்.* சென்னை: அமர் ஆப்செட்.

நாகப்பன், ஆ. (2008). *சித்தாந்த சைவம்.* கோலாலம்பூர்:சிவா எண்டர்பிரைஸ்.

வரதராசன், மு. (2009). *தமிழ் இலக்கிய வரலாறு.* புது தில்லி:சாகித்திய அகாதெமி.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சங்க மரபு கவிதைகளில் மெய்ப்பாட்டியல் – அழுகை

# The Sangha Poetry, Manifest Physical Expression Of The Emotions, Of Eight Kinds, - Weeping

கி. துர்காதேவி / K. Durgadevi[1]
[1]Assistant Professor, Department of Tamil, Vels University, India
Corresponding Email: drdurgabadrinath@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியப் பாடல்கள் மனத்துடன் தொடர்பு கொள்ளும் மெய்ப்பாடுகளுடன் விளங்குகின்றன. மெய்ப்பாடுகளின் வகை, எண்வகை மெய்ப்பாடுகள், ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகள், ஏனைத்திணைக்குரிய மெய்ப்பாடுகள், புறனடை என ஐவகையாகப் பிரித்துத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் கூறியுள்ளார். தலைவன் தலைவி பண்பு நலன்களில் வெளிப்படும் அழுகை என்னும் மெய்ப்பாடு சங்க அக இலக்கியங்களில் வெளிப்படும் விதத்தினை இவ்வாய்வுக் கட்டுரையில் காண்போம். அழுகை எனும் மெய்ப்பாடு இழிவும், இழத்தலும், அசைதலும், வறுமையும் என நான்கிடத்தில் தோன்றும் என்பார் தொல்காப்பியர். கலங்குதல், நெகிழ்தல் ஆகிய தன்மைகளால் கண்களில் ஒளி மழுங்குதலும் ஒளிகுறைதலும் ஏற்பட்டு வாட்டம் தோன்றி கண் கலங்கி கண்ணீர் வெளிப்படும். சங்க இலக்கியங்களில் கண்கள் கலங்குவது, அழுவது போன்றவற்றை குறிப்பிட பசப்பு, பசலை, பசத்தல் ஆகியச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. பசலையானது கண் என்னும் உறுப்புடன் தொடர்பு கொண்டுள்ளதால் தம்மீது அன்பு கொண்டவர்கள் தம்மைவிட்டுப் பிரியும்பொழுது கண்கள் கலங்கி கண்ணீர் வருவதால் பசலை, பசப்பு, பசத்தல் என்ற சொற்கள் அழுகையைக் குறிப்பதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தலைவன் தலைவி இவர்களுக்கிடையே பிரிவு உண்டாகும் போதும், பிரிவின் பின்னும் வெளிப்படும் உணர்வுகளில் அழுகை வெளிப்படுவதை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, புறநானூறு போன்ற சங்க இலக்கியப்பாடல்கள்வழி அறியலாம். சங்க மரபுக்கவிதைகளின் எண்வகை மெய்ப்பாடுகளுடள் அழுகை குறித்ததாக இவ்வாய்வு அமையும்.

**கருச்சொற்கள்:** மெய்ப்பாடு, அழுகை, பசப்பு, பசலை, பசத்தல்

**Abstract**

Sangam literature songs are interpreted with truths that communicate with the mind. Tolkappiyar says that the truth of crying appears in the fourth place as disgrace, loss, agitation, and poverty. Due to agitation and flexion, light dimming, and loss of light occurs in the eyes, swelling occurs and the eyes are agitated and tears are released. In the Sangam literature, the words pasappu, pasalai, pasathal have been used to refer to eyes that are troubled and crying. As pasalai is associated with the organ called eye, the words pasalai, pasap, pasthal are used to refer to crying because the eyes are disturbed, and tears come out when those who love them leave. We can understand the crying in the feelings that emerge between the leader and the leader when there is a separation between them and after the separation, through Sangam literature songs such as Narṟiṇai, Kuṟuntokai, Aiṅkuṟunūṟu, Kalittokai, Puṟanāṉūṟu etc. Pasalai is a disease caused by the Talaivaṉ division to the Talaivi, as is known from the literature. However, in this article, Pasalai is associated with the organ called eye, so the words Pasalai, Pasal, Pasatal are used to refer to crying because the eyes are troubled and tearful when those who love them leave them. This review will be about crying in the numerical truths of traditional Sangha poems.

Keywords: Sangam literature, Talaivaṉ, Talaivi, Pasalai, Pasal, Pasatal

**முன்னுரை**

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படுகின்ற தொல்காப்பியத்திற்கு முந்தையனவாக இலக்கண நூல்கள் பல இருந்திருக்கின்றன. செய்யுள் என்னும் கவிதை வடிவம் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுக்காலத் தொன்மையுடையது. இதனை இலக்கண நூல்களில் செய்யுள் தொடர்பான எழுத்து, சொல், அகம்-புறம் என்னும் பாடுபொருள் குறித்த செய்திகளும் யாப்பு, அணி ஆகியன பற்றிய வரையறைகளும் இடம் பெற்றிருப்பதிலிருந்து அறியலாம்.

இறையனார் களவியல் உரையில் முதுகுருகு, முதுநாரை, களரியாவிரை போன்ற தலைச்சங்க நூல்கள் பற்றியும் கலி, குருகு, வியாழமாலையகவல், வெண்டாளி ஆகிய மறைந்து போன சங்க நூல்களின் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. இடைச் சங்க நூல்களும் கடைச் சங்க நூல்களும் அவற்றுள் அடங்கும். 'மறைந்துபோன தமிழ்நூல்கள்' என மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் இவ்வகை நூல்கள் குறித்து எழுதியுள்ளார்.

மரபு என்னும் சொல், தொன்று தொட்டு வரும் தன்மையுடையது என்பதை உணர்த்தி நிற்கின்றது. இலக்கியங்களில் பாடுபொருளும் உத்திகளும் புதியனவாயினும் மரபு இலக்கணத்தின்படி படைக்கப்படுதலின் இவை மரபுக்கவிதை எனப்படுகின்றன. சங்க இலக்கியம், காப்பியங்கள், நீதி நூல்கள், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், தனிப்பாடல்கள் போன்றவைகள் மரபுக் கவிதைகளால் ஆனவையே ஆகும். சங்க மரபுக் கவிதைகளில் வெளிப்படும் எண்வகை மெய்ப்பாடுகளில் அழுகை எனும் மெய்ப்பாடுப் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

சங்க இலக்கியப் பாடல்கள் மனத்துடன் தொடர்பு கொள்ளும் மெய்ப்பாடுகளுடன் விளங்குகின்றன. மெய்ப்பாடுகளின் வகை, எண்வகை மெய்ப்பாடுகள், ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகள், ஏனைத்திணைக்குரிய மெய்ப்பாடுகள், புறனடை என ஐவகையாகப் பிரித்துத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் கூறியுள்ளார்.

பேராசிரியர், "மெய்ப்பாடென்பது சொற்கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்" (பேராசிரியர் உரை, செய்யுளியல் முதல் நூற்பா) என்றும் நச்சினார்க்கினியர், "மெய்ப்பாடென்றது சொற்கேட்டார்க்குப் பொருள்கட் புலனாதலை" (நச்சினார்க்கினியர் உரை, தொல். பொருள். செய்யுளி.1) என்றும் தண்டியாசிரியர், "மெய்ப்பாடாவது நேராகக் கண்டதுபோலத் தோன்றும் கருத்து" எனவும் விளக்கமளிக்கின்றனர்.

மெய்ப்பாடு என்பது உடலில் தோன்றும் அசைவுகளே ஆகும். மெய்ப்பாட்டின் பொருளை உணர்வதற்கு ஐம்புலன் உணர்வு இன்றியமையாததாகிறது. ஒன்றைப் பற்றி கூறியவுடனேயே அதன்பொருளை மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடாகும்.

மெய்ப்பட முடிப்பது மெய்ப் பாடாகும் (தொல். 204)

எண்வகை இயல்நெறி பிழையாதாகி
முன்னுறக் கிளந்த முடிவினது அதுவே (தொல். 205)

என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடுகள் மெய்ப்பாட்டியலின் முதல் 12 நூற்பாக்களால் கூறப்படுகின்றன. தொல்காப்பியம் உரைக்கும் மெய்ப்பாடுகள் எட்டு. அவை தோன்றும் இடங்கள் என்று ஒவ்வொன்றும் நான்கு வகைகளாகப் பகுக்கப்பட்டு அதாவது 32 மெய்ப்பாடுகள் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில்,

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பா லெட்டாம் மெய்ப்பாடென்ப (தொல்.மெய்.247)

நகை : எள்ளல், இளமை, பேதமை, மடம்

அழுகை : இழிவு, இழவு, அசைவு, வறுமை

இளிவரல் : மூப்பு, பிணி, வருத்தம், மென்மை

மருட்கை : புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்

அச்சம் : அணங்கு, விலங்கு, கள்வர், தந்தை, ஆசிரியர்

பெருமிதம் : கல்வி, தறுகண்மை, புகழ், கொடை

வெகுளி : உறுப்பரை, குடிகோள், அலை, கொலை

உவகை : செல்வம் உடைமை, புலன், புணர்வு, இன்ப விளையாட்டு

இவையாவும் உலகியலில் மிக இயல்பாகத் தோன்றும் மெய்ப்பாடுகளாகக் கருதப்படுகின்றன. தொல்காப்பியம் தவிர பிற இலக்கணங்களிலும் மெய்ப்பாடு குறித்துப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அகப்பொருள் விளக்கத்தில்,

திணையே கைகோள் கூற்றே கேட்போர்
மெய்பாடு எச்சம் பொருள்வகை துறைஎன்று
அப்பால் ஆறிரண்டு அகப்பாட்டுறுப்பே (அகப்பொருள் விளக்கம் 211)

என அகப்பாட்டுறுப்புப் பன்னிரெண்டு என்றும் அதில் மெய்பாடும் ஒன்று என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறையனார் அகப்பொருளில்,

திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு
பயனே கோள் என்று ஆங்கப்பத்தே
அகத்திணையும் உரைத்தலாறே (இறை.அகப்.56)

என்று அகப்பாட்டுறுப்பு பத்து என்கிறது.

தொன்னூல் விளக்கத்தில்,

அவையணி என்ப கடுஞ்சினம் காமம்
வியப்பு அவலம் இழிவு அச்சம் வீரம் நகை என
எண் மெய்ப்பாட்டை உணர்த்தித் தோற்றலே (தொன். விளக்.354)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகப்பாடல்களில் வரும் தலைமை மாந்தர்களிடம் நிகழும் மெய்ப்பாடுகளை விளக்கிச் சொல்வதற்கு அவர்களின் பண்பு நலன்களையும் தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார்.

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வோடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே (தொல். மெய்ப். 35)

திருக்குறளில்,

தலைவியின் மெய்ப்பாடுகளையும் அவை கண்ட தலைவனது கூற்றுக்களையும் கொண்டு தலைவன் தலைவியர் உளநிலை உணர்ச்சிகளைக் கொண்டு வள்ளுவர் குறிப்பறிதல் எனும் அதிகாரத்தைப் படைத்திருக்கிறார் எனலாம்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் (குறள்.706)

தன் அருகே இருக்கும் பொருளைக் காட்டும் பளிங்கினைப் போல் ஒருவரது மனத்தே நிகழ்வதை அவரது முகம் காட்டும்.

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றதுணர் வார்ப் பெறின் (குறள்.708)

ஒருவனுடைய முகம் பார்த்து அவன் மனதிலுள்ளவற்றைக் குறிப்பால் உணரக்கூடியவர் உடனிருந்தால் அவர் முகம் நோக்கி நிற்றல் ஒன்றே அவனுக்கு போதும்.

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின் (குறள்.709)

உள்ளம் நினைப்பதைக் கண்காட்டும்; எதிரில் உள்ளவர் பகைமை கொண்டவரா அல்லது நட்புள்ளம் கொண்டவரா என்பதை அவர் கண்களை நோக்கியே கண்களின் வகைமை அறிந்தவர்களால் கூறமுடியும். என வரும் திருக்குறள்கள் மெய்ப்பாட்டை உணர்த்துகின்றன.

கண்கள் பசக்கும் பொழுது கண்களில் இருந்து கண்ணீர் பெருகுவதைத் திருக்குறள் கூறுகிறது.

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண் (குறள்.1232)

பசலை நிறம் அடைந்து நீர் சொரியும் கண்கள், நாம் விரும்பிய காதலர் நமக்கு அன்பு செய்யாத தன்மையைச் சொல்வன போல் உள்ளன.

**மெய்ப்பாடுகளில் அழுகை**

அழுகை என்பது ஒரு வெளிப்பாடு; மகிழ்ச்சியைப் போல வருத்தம் என்பது ஓர் உணர்ச்சி. மகிழ்ச்சியை வெளிப்படுத்த பல வழிகள் இருப்பது போல வருத்தத்தை வெளிக்காட்ட பல வெளிப்பாடுகள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் அழுகை.

கண்ணீர் விட்டு துன்ப உணர்வை வெளிப்படுத்துதல் தொல்காப்பியத்துள் கூறப்பட்டுள்ள எட்டு வகையான மெய்ப்பாடுகளுள் ஒன்றான அழுகை எனும் மெய்ப்பாடு ஆகும். மகிழ்ச்சியாக இருந்தாலும், மனவருத்தமாக இருந்தாலும் வெளிப்படும் இந்த உணர்வினை வார்த்தைகளற்ற உணர்வின் மொழி என்றும் கூறலாம்.

மனிதன் தன்னைக் கண்டெடுப்பது சோகத்தில்தான். ஆங்கிலக் கவிஞர் பிரான்சிஸ் தாம்சன் ‘கண்ணீரால் கழுவப்பட்ட கண்களுக்குத்தான் புனித தரிசனங்கள் கிடைக்கும்’ என்கிறார். அழுவதால் வலி குறைந்து வருத்தம் தளர்ந்து மன இறுக்கமும் குறைகிறது. மனஅழுத்தத்தை ஏற்படுத்தும் ஹார்மோன்களை அழுகை கரைப்பதால் மனம் இலகுவாகிறது.

ஆன்மிகத்தில்கூட அழுகை குறித்த செய்திகள் நிரம்ப உண்டு. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' உருகி அழுதால் இறைவனைப் அடையலாம் என்று, நம்மை மூன்றாம் திருமுறையில் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ஆற்றுப்படுத்துகிறார்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

’அல்லற்பட்டு ஆற்றாத கண்ணீர்’ என்று திருவள்ளுவர் சொல்வது துன்பத்தின் வெளிப்பாடுதான். கவிக்கோ அப்துல் ரஹ்மான் அவர்களும் 'தட்டாதே திறந்திருக்கிறது' என்ற நூலில் ‘கண்ணீர் உப்பு கலக்காவிட்டால் வாழ்க்கை சுவைக்காது’ எனவே அழுங்கள் அது நல்லது என்று கூறியுள்ளார்.

பிரிவுத்துயரம் அழவைப்பதைப் போலவே சேரும்போதும் அழத்தோன்றுவதும் மரபு. இந்த மெல்லிய உணர்வையும், மகத்தான மகிழ்வையும் கண்ணதாசன் “பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும்போது அழுதால் கொஞ்சம் நிம்மதி” என்று மிக அழகாக கூறியிருப்பார்.

சங்க இலக்கியப் பாடல்கள் மனத்தால் தொடர்புகொள்ளும் மெய்ப்பாடுகளைக் கொண்டவைகளாகும். தலைவன் தலைவி பண்பு நலன்களில் வெளிப்படும் அழுகை என்னும் மெய்ப்பாடு சங்க அக இலக்கியங்களில் வெளிப்படும் விதத்தினைக் காண்போம்.

அழுகை எனும் மெய்ப்பாடு இழிவும், இழத்தலும், அசைதலும், வறுமையும் என நான்கிடத்தில் தோன்றும் என்பார் தொல்காப்பியர்.

இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகைநான்கே (தொல்.மெய். 249)

**இழிவு**

இழிவு என்னும் மெய்ப்பாட்டு நிலைக்களன் பிறரால் இகழப்பட்டு எளியராதலாகிய தாழ்வு நிலையைக் குறிப்பதாக வரும். பொருள் தொலைத்தவர்களுக்கும், பொருள் இல்லாதவர்களுக்கும், இல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் இல்லை என்றும் கூறி வந்தவர்களுக்கும் சிறிதும் பொருள் கொடாதிருத்தல் இளிவானதாகும் என்கிறது இப்பாடல் வரிகள். பிறரிடம் தனக்கு உதவி செய்யும்படி கேட்பது ஒருவரின் தாழ்வு நிலையாகும். இப்பாடலில் உதவி கேட்பவரின் தாழ்வு நிலையையும், உதவி செய்யாமல் இருப்போரின் தாழ்வு நிலையையும் சுட்டிக்காட்டுகிறது.

தொலைவுஆகி, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு (கலி:2:11)
இல் என, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு (கலி:2:75)
இடன்இன்றி, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு (கலி:2:19)

**இழவு**

தாய், தந்தை முதலிய சுற்றத்தாரையும், பொருளையும் இழத்தல் இழவு என்னும் மெய்ப்பாட்டு நிலைக்களனைக் கொண்டது. குற்றமுடையவன் அவனுடைய செல்வங்களை இழப்பான் என்பதை,

தப்பித்தான், பொருளே போல், தமியவே தேயுமால்,
ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான், மற்றுஅவன்
எச்சத்துள் ஆயினும், அஃது எறியாது விடாதே காண்
கேளிர்கள் நெஞ்சு அழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்
தாள் இலான் குடியே போல், தமியவே தேயுமால (கலி:149:5-9)

இப்பாடல் எடுத்துரைக்கிறது.

**அசைவு**

அசைவு என்பது முந்தைய நல்ல நிலை கெட்டு தன்னிலை தாழ்தலை விளக்குகிறது. தலைவியின் பழைய அழகெல்லாம் கெட்டு நிலவின் நிறைவு தேய்வதைப் போல, நாள்தோறும் நிலைகெட்டு தேய்வதை,

தொல் எழில் தொலைவு இவள் துயர் உழப்ப, துறந்து நீ
வல்வினை வயக்குதல் வலித்திமன், வலிப்பளவை
நீள் கதிர் அவிர்மதி நிறைவு போல் நிலையாது
நாளினும் நெகிழ்பு ஓடும் நலன் உடன் நிலையுமே? (கலி:17:5-8)

என்ற பாடல் வரிகளால் அசைவு என்னும் மெய்ப்பாட்டின் மூலம் தெளிவுபடுத்துகிறது.

**வறுமை**

வறுமையைக் கூறுமிடத்து இல்லாமையை குறிப்பதாக வருகிறது. வறுமைக் காலத்தும் தலைவன் தலைவியும் ஒன்றிக்கலந்து பிரியாது வாழும் வாழ்வினை சிறந்த இல்வாழ்க்கையாக குறிப்பிட்டுள்ளது.

இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழைதக்கது உண்டோ? உள நாள்,
ஒரோஒ கை தம்முள் தழீஇ, ஒரோஒகை
ஒன்றன் கூறுஆடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை (கலி:18:7-11)

இதில் வறுமை என்னும் மெய்ப்பாட்டுப்பொருள் அமைந்துள்ளது.

**கண்ணீர்**

கலங்குதல், நெகிழ்தல் ஆகிய தன்மைகளால் கண்களில் ஒளி மழுங்குதலும் ஒளிகுறைதலும் ஏற்பட்டு வாட்டம் தோன்றி கண் கலங்கி கண்ணீர் வெளிப்படும்.

பசப்பு, பசலை, பசத்தல் ஆகியச் சொற்கள் சங்க இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது. இச்சொற்கள் கண்கள் கலங்குவதையும், அழுவதையும் குறிக்கின்றன. பசலையானது கண் என்னும் உறுப்புடன் தொடர்பு கொண்டுள்ளதால் தம்மீது அன்பு கொண்டவர்கள் தம்மைவிட்டுப் பிரியும்பொழுது கண்கள் கலங்கி கண்ணீர் வருவதால் பசலை, பசப்பு, பசத்தல் என்ற சொற்கள் அழுகையைக் குறிப்பதாக சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தலைவன் தலைவி இவர்களுக்கிடையே பிரிவு உண்டாகும் போதும், பிரிவின் பின்னும் வெளிப்படும் உணர்வுகளில் அழுகை வெளிப்படுவதை சங்க இலக்கியப்பாடல்கள்வழி அறியலாம்.

நற்றிணையில்,

சிறுமெல் ஆகம் பெரும்பசப்பு ஊர (358-2)

அடு பால் அன்ன என் பசலை மெய்யே (175-9)

காய்ச்சும் பாலின் மேல் தோன்றும் ஆடையினைப் போலக் கண்களின் மேல் கண்ணீரானது தோன்றுவதாக கூறப்பட்டுள்ளது.

காமம் கொல் இவள் கண் பசந்ததுவே (35-12)

குறுந்தொகையில்,

பசலை ஆர்ந்தன குவளையங் கண்ணே (குறு-13)

ஐங்குறுநூற்றில்,

என் செய்ய பசக்கும் தோழி என் கண்ணே (169)
ஏதிலார்க்குப் பசந்த என் கண்ணே (34)
கொன்றைப் பூவின் பசந்த உண்கண் (50)
ஆய்மலர் உண்கண் பசப்ப (242)
உண்கண் பசப்பது எவன்கொல் அன்னாய் (21)

பசப்பு அனிந்தனவால் மகிழ்ந்த என் கண்ணே (45)

பல்தழ் உண்கண் பசத்தல் மற்று எவனோ (170)

நயந்தோர் உண்கண் பசந்து பனிமல்க (37)

பசந்தனள் பெரிதெனச் சிவந்த கண்ணை (366)

கலித்தொகையில்,

பசக்குவ மன்னோ என் நெய்தல் மலர் அன்ன கண் (142)

பொன்எனப் பசந்த கண்போது எழில்நலம் செல (77)

பல்இதழ் மலர் உண்கண் பசப்ப (45)

அரிமதர் உண்கண் பசப்ப (82)

ஆய் இதழ் உண்கண் பசப்ப (112)

பாடு இன்றி பசந்த கண் பைதல பனிமல்க (16)

அகநானூற்றில்,

ஆய் மலர் உண்கண் பசலை (52)

புறநானூற்றில்,

பூப்போல் உண்கண் பசந்த (96)

சிந்தாமணியில்,

'பனிகொள் மாமதி போல் பசப்பு ஊர யான்'

நிலவினை மேகங்கள் அடிக்கடி மூடி மறைப்பதும் பின்னர் அம் மறைப்பு விலகுவதும் போல பெண் தனது துயரத்தை நினைத்து நினைத்து வருந்தி அழும்போது கண்ணீர் பெருகிக் கண்ணை மறைப்பதும் விலகுவதுமாக உள்ளது என திருத்தக்கத்தேவர் கூரியுள்ளார்.

தமிழ் இலக்கியங்களில் அழுகை, கண்ணீர் ஆகிய பொருளில் பயன்பாட்டில் இருந்த பசப்பு என்ற சொல் கன்னடத்தில் "வடிதல்" என்ற பொது பொருளில் பயன்படுத்தப்படுகிறது. கண்ணில் இருந்து நீர் வடிதலைக் "கண்ணிரு பசத்தே' என்று கூறுவர்.

அடிக்கடி கண்ணீர் விடும் பெண்ணை கிராமப்புரங்களில் இன்றும் பசப்புக்காரி என்ற சொல்லால் பயன்படுத்துவதை அறியலாம். பசலை என்பது தலைவன் பிரிவால் தலைவிக்கு ஏற்படும் நோய் என்பது இலக்கியங்களால் அறியப்படுவது. எனினும் இந்த கட்டுரையில், பசலையானது, கண் என்னும் உறுப்புடன் தொடர்பு கொண்டுள்ளதால் தம்மீது அன்பு கொண்டவர்கள் தம்மைவிட்டுப் பிரியும்பொழுது கண்கள் கலங்கி கண்ணீர் வருவதால்

பசலை, பசப்பு, பசத்தல் என்ற சொற்கள் அழுகையைக் குறிப்பதாக பயன் படுத்தப்பட்டுள்ளன.

## நிறைவுரை

சங்க மரபு கவிதைகளில் வெளிப்படும் மெய்ப்பாடுகளில் “அழுகை” எனும் மெய்ப்பாடு பெற்றுள்ள இடத்தினையும் அதற்கான காரணங்களையும் சங்க இலக்கியங்களில் பசப்பு என்ற சொல் அழுகையை பிரிவினால் வரும் கண்ணீரைக் குறிப்பதையும் சான்றுடன் அறிய முடிகிறது.

கருணை, கண்ணியம், கரிசனம் ஆகியவற்றின் அடையாளம் தான் கண்ணீர். நமது துயரமும், வலியும் நம்மை அழச் செய்வது போல அடுத்தவர் துயரிலும், துன்பத்திலும் நாம் வாட வேண்டும். பொதுவாக இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுபவர்களில் கவிஞர்களே முதலிடம் பெறுவர். 'என் கண்ணீரைத்தான் நீங்கள் கவிதை என்கிறீர்கள்' என்கிறார் கவியரசர் கண்ணதாசன்.

தன்வலி, தன்துயரம், தனதுசோகம், தனது இழப்பு, தனது தோல்விக்காக நாம் அழவேண்டும். அவ்வாறு அழுவது மனதுக்கு இதம் தரும். அது போலவே நாம் அடுத்தவருக்காகவும் கொஞ்சம் அழவேண்டும். அடுத்தவரின் வலி, துயரம், இழப்பு முதலியவையும் நம்மை அழச் செய்யவேண்டும். நாம் நமக்காக அழும்போது நம் மனம் இலேசாகி இதம் பெறும். அதைவிட நாம் அடுத்தவருக்காக அழும்போது மானுடம் மாண்புறும்.

## துணைநூற்பட்டியல்


இராசமாணிக்கனார்.மா., தமிழ்மொழி-இலக்கிய வரலாறு, சங்ககாலம், பூங்கொடி பதிப்பகம், 1963

கனம். ஜி. மெக்கென்ஜி காபன் அய்யர், தொன்னூல் விளக்கம் மூலமும் உரையும், இரண்டாம் பதிப்பு, அர்ச்.சூசையப்பர் அச்சுக்கூடம், 1891.

சோமசுந்தரனார். பொ.வே., ஐங்குறுநூறு, கழகம், 1961

தொல்காப்பியம் பொருளதிகாரம், ச.பவானந்தம் பிள்ளை, 1917.

நமச்சிவாய முதலியார், கா., இறையனார் களவியல் என்னும் இறையனார் அகப்பொருள், சி.ஆர்.என் & சன்ஸ், 1943.

வெள்ளைவாரணன். க., தொல்காப்பியம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1986.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# கவிஞர் பொன்முடியின் மரபு கவிதைகளில் கையாளப்பட்டுள்ள உருவக அணி

# Elements of Metaphor in Traditional Poetry by Poet Ponmudi

மகேஸ்வரன் கலிய பெருமாள்[1], மலர்விழி சின்னையா[2] & செல்வஜோதி இராமலிங்கம்[3]
Mageswaran Kalia Perumal[1], Malarvizhi Sinayah[2] & Selvajothi Ramalingam[3]

[1]Doctoral Researcher, Faculty of Languages and Linguistics, Universiti Malaya.
[2&3]Senior Lecturer, Faculty of Languages and Linguistics. Universiti Malaya
Corresponding Email: valluvan180680@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மரபுகவிதைகள், கற்பனை நயத்துடன் செறிவான கருத்துகளை உணர்ச்சிப்பூர்வமாக வாசகர்களிடத்தில் சேர்க்கின்றன. இருப்பினும், மரபுகவிதைகளில் புதைபொருளைக் கொண்டுவரும் உருவக அணியைக் கருத்துணர்வதில் வாசகர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். ஏனெனில், கவிதையை உய்த்துணர உயர்நிலை சிந்தனைத் திறனைக் கொண்டிருப்பது அவசியம். கவிதையை வாசிப்பவர்கள் இத்திறனை அவசியம் கைவரப் பெற்றிருக்க வேண்டும் (Bujang & Subet, 2021). அவ்வகையில், தெரிவு செய்யப்பட்ட மரபுகவிதைகளில் கையாளப்பட்டிருக்கும் உருவக அணிகளின் பொருளை விளக்குவதும், அவற்றின் புதைபொருளை இன்றைய இளையோர் எவ்வாறு விளங்கிக் கொண்டுள்ளனர் என்பதை விவரிப்பதுமே இக்கட்டுரையின் நோக்கங்களாகும். இக்கட்டுரை கவிஞர் பொன்முடியின் 'பொன்முடி கவிதைகள்' எனும் கவிதைத் தொகுப்பைத் தரவுமூலமாகக் கொண்டு படைக்கப்படும். இந்நூலில் பல்வகை கருப்பொருள்களில் அமைந்த மரபுகவிதைகள் இடம்பெற்றுள்ளன. அக்கவிதைகளில் காணப்படும் உருவக அணிகள், Lakoff, Johnson (1980) என்போரால், பரிந்துரைக்கப்பட்ட உருவகக் கருத்துருக் கோட்பாட்டின் (Conceptual Metaphor Theory) அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படும். வாசகர்கள் மரபுகவிதைகளில் இடம்பெறும் உருவக அணிகளின் புதைபொருளைப் புரிந்துகொள்ளவும், இலக்கிய ஆசிரியர்கள் மரபு கவிதைகளைக் கற்பிக்கும்பொழுது அவற்றின் பொருளை மாணவர்களுக்குத் தெளிவுப்படுத்தவும் இக்கட்டுரை துணைசெய்யும். அதுமட்டுமன்றி, எதிர்காலத்தில் இத்துறையில் ஆய்வை மேற்கொள்ள விழையும் ஆய்வாளர்களுக்கும் இக்கட்டுரை வழிகாட்டும்..

**கருச்சொற்கள்:** உருவக அணிகள், புதைபொருள், மரபு கவிதைகள்,பொன்முடி

**Abstract**

Classical poetry conveys ideas that are rich in imagination and touch the soul of the reader. However, readers have difficulty understanding the metaphorical arrangement that conveys the implied meaning in classical poetry. According to Bujang & Subet (2021) readers must master high level thinking skills (KBAT) in living the classic poetry. Therefore, this article aims to explain the meaning of the metaphors contained in classical poetry by selected Ponmudi poets and test the understanding of the younger generation on the conceptual meanings of metaphors contained in these poems. This article was written based on the Ponmudi Poetry collection entitled 'Ponmudi Poetry' where this study material contains classical poetry with various themes. The metaphors contained in this classic poem will be analyzed based on the Extended Conceptual Metaphorical Theory proposed by koveeses (2020) which is a continuation of the Conceptual Metaphor Theory introduced by Lakoff & Johnson (1980). This article can help readers understand the implicit meaning of metaphors in classical poetry and make it easier for Tamil Literature teachers to convey teaching classical poetry to students effectively. In addition, it is also hoped that the analysis of this study will serve as a guide for future researchers wishing to explore this field and topic.
**Keywords:** Metaphor, Conceptual meaning, Classical poetry, Ponmudi

**முன்னுரை**

எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு
இழுக்கா நடையது யாப்பெனப்படுமே – யாப்பருங்கலம்

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை போன்ற இலக்கண உறுப்புகளால் கட்டப்படுவதுதான் யாப்பு. யாப்பிலக்கணத்திற்கு உட்பட்டு புனையப்படுவதே மரபு கவிதை. சங்க காலந்தொட்டே கற்பனை நயத்துடன் செறிவான கருத்துகளை உணர்ச்சிப்பூர்வமாக வாசகர்களிடத்தில் சேர்ப்பதில் மரபு கவிதைகளின் பங்கு அளப்பரியது என்பதை மறுக்கலாகாது.

பண்டையத் தமிழ் இலக்கியங்களும் காப்பியங்களும் இலக்கண நூல்களும் காவியங்களும் கவிதையாலானவை என்பது உலகறிந்த உண்மை. கவிதைகள் கடல்தாண்டி மலேசியாவிற்குள் குடி புகுந்து ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிறது. மரபு கவிதைகள், கற்பனை நயத்துடன் செறிவான கருத்துகளை உணர்ச்சிப்பூர்வமாக வாசகர்களிடத்தில் சேர்க்கின்றன. இருப்பினும், மரபு கவிதைகளில் புதைப்பொருளைக் கொண்டுவரும் உருவக அணியைக் கருத்துணர்வதில் வாசகர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். ஏனெனில், கவிதையை உய்த்துணர உயர்நிலை சிந்தனைத் திறனைக் கொண்டிருப்பது அவசியம். கவிதையை வாசிப்பவர்கள் இத்திறனை அவசியம் கைவரப் பெற்றிருக்க வேண்டும் (Bujang & Subet, 2021). அவ்வகையில், தெரிவு செய்யப்பட்ட மரபு கவிதைகளில் கையாளப்பட்டிருக்கும் உருவக அணிகளின் பொருளை விளக்குவதும், அவற்றின் புதைப்பொருளை இன்றைய இளையோர் எவ்வாறு விளங்கிக் கொண்டுள்ளனர் என்பதை விவரிப்பதுமே இக்கட்டுரையின் நோக்கங்களாகும்.

**ஆய்வுமுறைமை**

இக்கட்டுரை கவிஞர் பொன்முடியின் ‘பொன்முடி கவிதைகள்’ எனும் கவிதைத் தொகுப்பைத் தரமூலமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. சுப்பிரமணியம் கெங்கப்பர் எனும் இயற்பெயர் கொண்ட பொன்முடி 1966இல் தனது எழுத்துப் பயணத்தைத் தொடங்கியவர். 1987இல் சிறுவர் இலக்கியம் எனும் தொகுப்பை வெளியிட்டவர் அவர், தொடர்ந்து கவிதை 10 சிறு தொகுப்புகளை வெளியிட்டார். 1995இல் அவரது ‘பொன்முடி கவிதைகள்’ எனும் கவிதைத் தொகுப்புக்கு அதிக வரவேற்பு கிட்டியது. இவர், குழந்தை எழுத்தாளர் விருது, கவிநிலவு விருது, சங்கத் தமிழ் ஆசிரியர் விருது, வாழ்நாள் இலக்கியச் சேவையாளர் விருது என பல விருதுகளுக்குச் சொந்தக்காரர். பணி ஓய்வு பெற்ற தலைமையாசிரியரான இவர், மலேசியாவில் தமிழ் மரபு கவிதைகள் செழித்து வளரக் காரணமாயிருந்தார்.

‘பொன்முடி கவிதைகள்’ எனும் இவரது நூலில் பல்வகை கருப்பொருள்களில் அமைந்த மரபு கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அக்கவிதைகளில் காணப்படும் உருவக அணிகள், Lakoff, Johnson (1980) என்போரால், பரிந்துரைக்கப்பட்ட உருவகக் கருத்துருக் கோட்பாட்டின் (Conceptual Metaphor Theory) அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இக்கோட்பாடு மூலப் பரப்பு (source domain), மூல இலக்கு (source target) என இருவகை கருத்துருகளைத் தொடர்புபடுத்தித் துலங்குகிறது. மூலப் பரப்பை

மூல இலக்குக்குள் வரைபடமாக்கிப் பொருத்திப் பார்ப்பதன்வழி உருவகம் உணர்த்தவரும் கருத்துருவைத் தெளிவாகக் கருத்துணர இயலும்.




உருவகம் என்பது ஒரு பொருள் இன்னொரு பொருளாகவே ஆகி நிற்பதாகும். ஏனெனில் உருவகம் உவமானத்தையும் உவமேயத்தையும் வேற்றுமைப்படுத்தாமல் ஒற்றுமைப்படுத்தி கூறும் முறையாகும் (இராமலிங்கம், 2020). மேலும், உருவகம் என்பது நேரடி பொருளல்லாமல் கற்பனையாற்றலைக் கையாண்டு புதைப்பொருளைக் கொண்டு வழங்குவதாகும் (Lokoff & Johnson, 2008).

**பொன்முடியின் மரபுகவிதைகளில் காணப்படும் உருவக அணி**

'பொன்முடி கவிதைகள்' எனும் கவிதை நூலில் உருவக அணி பல இடங்களில் விரவிக் கிடக்கின்றன. காட்டாக ஒரு சில கவிதைகளும் அவற்றுள் இடம்பெற்றுள்ள உருவகங்களுள் சில மட்டுமே இங்கே விளக்கப்பட்டுள்ளன.

மரபு கவிதையின்பால் தீரா மோகம் கொண்டவர்தான் பொன்முடி. 'இவளும் அவளும்' எனும் கவிதையில், யாப்பிலக்கணத்திற்கு உட்பட்டு எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை போன்ற இலக்கண உறுப்புகளால் கட்டப்பட்டுப் புனையப்படும் கவிதையை அழகிய, மங்கல தோற்றமளிக்கும் அம்மையாகவும், யாப்பிலக்கணக் கட்டவிழ்த்து புனையப்படும் புதுக்கவிதையை முழுமையாய், முறையாய் மேலாடை உடுத்திடாத மங்கையாகவும் உருவகப்படுத்துகிறார்.

காட்டு 1:

.....நெகிழும் ஆடை நினைவே இன்றி
மகிழும் அந்த மங்கையைப் பார்த்து
யார், நீ என்றேன்; புதுக்கவி தைநான்
பாரென் அழகைப் பாரென் றாளே
*******
....மங்கல வடிவே மங்கையர்க் கரசி
இம்மா நிலத்தின் எழிலார் படிவே
அம்மா, நீ யார் அடியேற் குரைப்பாய்
என்றேன் அவளும் என்முகம் பார்த்துக்
கரவிலாச் செந்தமிழ்க் கவியே, ஐயா
மரபு கவிதை நானென் றாளே!

\- இவளும் அவளும்

கைவாள் என்பது அன்று முதல் இன்றுவரை ஒருவரைத் தாக்கும் ஆயுதமாகவே இருந்து வருகையில், கவிஞர் தனது எண்ண அலைகளை வாசகரிடத்தில் கொண்டு சென்று தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களது அறியாமையைப் போக்கிடும் நல்லாயுதமாய் அதாவது எழுதுகோலாய் கைவாளை உருவகப்படுத்தியுள்ளார்.

காட்டு 2:

கவிதை எனக்குக்
கைவாள்; எதிர்வரும்
கயமை தன்னை வீழ்த்துவேன்!
- கவிதைக்கை

தன் கை கொண்டு கவிதைக்கு அழகூட்டுவதினாலும் அதன்வழி அறிவூட்டுவதினாலும் இக்கவிதையின் தலைப்பே கவிதைக்கை என உருவகமாக அமைந்துள்ளது.

காட்டு 3:

சங்கப் பலகை தனில்வைத்துச்
சாரம் உண்டா எனவாய்ந்து
தங்கத் தமிழில் இலக்கியங்கள்
தவழச் செய்தார்; அதனாலே
வங்கக் கடல்போல் வளநூ ல்கள்
வகையாய்ப் பெருகி வளர்ந்தனவாம்;
இங்கப் பலகை இன்றில்லை;
எழுத்துக் கொலைக்கும் அளவில்லை!
- சங்கப்பலகை

தங்கமென்பது பழைமை என்றாலும் விலைமதிப்பற்றது; ஆபரணமாகி அழகூட்டுவது; அனைவராலும் அன்றும் இன்றும் விரும்பப்படுவது; என்றும் மதிப்பு குறையாத கனிமம் என்பதாலே இங்குத் தமிழாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. அதே வேளையில் தமிழர்கள் தமிழில் பிழை இழைப்பதைப் பொறுக்க முடியாத கவிஞர், கொலை என்பது உயிர்களை மாய்ப்பது மட்டுமல்ல, தமிழ் எழுத்துகளையும் கொன்று குவிப்பதாகவே சாடுகிறார்.

அதுமட்டுமன்றி, தன் கோபத்தின் வெளிபாடாக தமிழுக்கு ஊனம் விளைவிப்போரைக் கொடுந்தீயர்ளாகச் சித்தரிக்கும் கவிஞர் தமது கவிதையில் வன்மையான வார்த்தைகளைக் கையாளுவதன்வழி, அவர்களது தவற்றை உணர்த்த விரும்புவதையே சுட்டெரிப்பதாய் உருவகப் படுத்துகிறார்.

காட்டு 4:

தீப்பொறியாய் என்பாட்டு
திக்கெட்டும் சென்றுதமிழ்

தீய்க்கின்ற தீயவரைச் சுட்டெரிக்கும்!
- என் பாட்டு

தமிழ்ப்பற்றோடு சமுதாயப்பற்றும் ஒருங்கே கொண்ட கவிஞர், தமிழினத்தவர் படும் அல்லல்களையும் அவர்களின் இயலாமையையும் கண்டு உள்ளங்கலங்குகிறார் என்பதை அவரது கவிதைகள் பறைச்சாற்றுகின்றன. மதுவின்பால் மதிமயங்கி சீரழியும் குடிகாரர்களால், தினம் அனலில் இட்ட புழுவாய்த் துடிக்கும் குடும்பத்தினர் நிலையையே பின்வரும் கவிதையில் நெருப்படி என உருவகப்படுத்துகிறார்.

காட்டு 5:

நெருப்படியில் உன்குடும்பம்
நிலைப்படியில் உன்மானம்
தெருப்படியில் தள்ளாடி நிற்கின்றாய்!
- கருத்தில் வை; தள்ளாதே

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி மனிதனை மனிதனே பாழும் குழிக்குள் தள்ளிப் வருகிறான். இந்த மானிடனின் வஞ்சகப் பேச்சு இரு நாக்கு கொண்டுள்ள நஞ்சுடைய நாகத்தைவிட கொடியது எனும் கவிஞர் மனிதனைப் பற்றி பாட மறுப்பு தெரிக்கிறார்.

காட்டு 6:

தரத்தினில் உயர்வென் பார்கள்
தகுதியில் மேலென் பார்கள்
உரைத்தவர் தம்மைப் பார்த்தால்
ஊர்வன தோற்றுப் போகும்
- மனிதரைப் பாடமாட்டேன்

சுயநலம், பரிவின்மை, பேராசை, பொறாமை, கோபம் போன்ற தீய குணங்களையே மனிதனின் மாண்புகளைச் சிதைக்கும் மாசாகக் கருதுகிறார் கவிஞர். பணம் பந்தியிலே குணம் குப்பையிலே என்பது அவரது கவிதையிலிருந்து புலப்படுகிறது.

காட்டு 7:

மாசே வளர்த்து மாண்பை யழிக்கும்
காசே தானதன் காரண மாகும்
- காசு

போராட்டம் நிறைந்த வாழ்க்கையில் மனிதன் தன் உரிமைகளை உரிமையோடு தட்டிக் கேட்கத் தயங்குவதால் அவர்களை கூவத் தெரியாத குயிலாகக் கோடிகாட்டியதோடு, பேசினாலும் அவனது பேச்சு வன்மையற்றதால்

செவிசாய்க்கப்படுவதில்லை என்பதால், அப்பேச்சு மழுங்கலான வாளாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

காட்டு 8:

கூவத் தெரியாக் குயிலம்மா - இவன்
கூர்மை யிலாத வாளம்மா!
- அவனா இவன்

இந்திய சமுதாய வளார்ச்சியின்பால் மிகுந்த அக்கறை கொண்டு தோட்டத்துண்டாலின்போது குரல் கொடுத்ததோடு கூட்டுறவுச் சங்கத்தை நிறுவி இந்திய சமுகத்தின் நாயகனாக திகழ்ந்த துன் வீ. தி. சம்பந்தன் அவர்கள் திருஞான சம்பந்தராக உருவகப்படுத்தப்பட்டுள்ளார். மனிதன் அவர் சுயநலம் சிறிதுமின்றி செயல் பட்டமையினால் மண்ணிலிருந்து மறைந்தும் மக்கள் மனத்தில் புனிதனாக வாழ்வதனால் இவ்வாறு சுட்டியுள்ளார். மேலும், தன்னுள் உறைந்த ஞானத்தால் பிறரும் பயன் பெற பாடுபட்ட பொதுநலவாதி என்பதனால் கவிஞர் அவ்வாறு உருவகப்படுத்துகிறார்.

காட்டு 9:

நற்றவத்தை சங்கநிதி நாயகரை நல்லமைச்சை
நாட்ட கத்தே
பெற்றிருந்தோம்; திருஞான சம்பந்தத் தூயவரைப்
பெற்றி ழந்தோம்
- நெஞ்சில் நிறைந்தார்

சமுதாய முன்னேற்றத்திற்கும் நாட்டின் மேம்பாட்டிற்கும் விழிப்புணர்வு கொண்ட ஆற்றல் நிறைந்த மாந்தனை உருவாக்கும் அறப்பணியைச் சிரமேற்கொண்டு செயல்படும் ஆசிரியர்கள், பின்வரும் கவிதையில் முக்கண்ணன் அதாவது சிவக்கடவுளாக உருவகப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

முக்கண்ணர் அழித்தல் தொழிலை மேற்கொள்ளும் கடவுளாவார். மாணாக்கர் அகத்திலிருக்கும் இருளைப் போக்குவதோடு தீயவற்றை அழிப்பதனால் இந்த உருவகம் பொருத்தமானதே. மூன்றாவது கண்ணான நெற்றிக்கண், அதாவது அனைத்தையும் தெளிவுபடுத்தும் அறிவுக் கண்ணைத் திறக்கச் செய்யும் ஆசிரியர்களின் உன்னத சேவைக்கான அங்கீகாரம்தான் இந்த உருவகம்.

காட்டு 10:

விண்ணகத் தேவ ருக்கும்
மேலவர் ஆவார்; கல்வி
கண்ணினைத் திறப்ப தால், முக்

கண்ணரை இவர்ஒப் பாரே!
- ஆசிரியம்

**நிறைவுரை**

உருவகம் பொருளையே உவமயமாகச் செய்யும் உருவகச் சிறப்பு பொன்முடி கவிதைகளில் கொட்டிக் கிடக்கின்றன. தொகை உருவகம், விரி உருவகம், கருத்து முதல் உருவகம், பொருள் முதல் உருவகம் என உருவகங்களை சிறப்பாகக் கையாண்டுள்ளார் பொன்முடி. இவர் புனைந்த கவிதைகளின்வழி மொழிப்பற்று, சமுதாய உணர்வு என்பனவற்றோடு கருத்துச் செறிவுக்கும் கவிநயத்துக்கும் பஞ்சமில்லை. வாசகர்கள் மரபு கவிதைகளில் இடம்பெறும் உருவக அணிகளின் புதைப்பொருளைப் புரிந்துகொள்ளவும், இலக்கிய ஆசிரியர்கள் மரபு கவிதைகளைக் கற்பிக்கும்பொழுது அவற்றின் பொருளை மாணவர்களுக்குத் தெளிவுப்படுத்தவும் இக்கட்டுரை துணைசெய்யும். அதுமட்டுமன்றி, எதிர்காலத்தில் இத்துறையில் ஆய்வை மேற்கொள்ள விழையும் ஆய்வாளர்களுக்கும் இக்கட்டுரை வழிகாட்டும்

**துணைநூற்பட்டியல்**


Bujang, G. R., & Subet, M. F. (2021). *Penggabungjalinan pendekatan semantik inkuisitif dengan kemahiran berfikir aras tinggi dalam pengajaran-pembelajaran bahan seni bahasa*. PENDETA, 12(2), 55-66.

Lokoff, G. & Johnson, M (2008). *Metaphors we live by*. University of Chicago Press.

Manonmani, A. & Saraswathi, O. (2020). *Kavithural*. Percetakan Advanco Sdn. Bhd.

Paranthaamanar, A. K. (2007). *Kavinyaraga*. Pari Upset Printers.

Ramalingam, S. (2020). Cognitive Poetic Structure in Thirukkural. *Journal of Valartamil*, 1(2), 111-121.

Ramayah, M. (1996). *Malaysia Tamil Ilakkiya Varalartu Kalanjiyam*. Kavikuyil Achchagam.

Subramaniam, G. (1995). *Ponmudi kavithaikal*. K.M. Printers

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# தமிழ் இலக்கிய விழுமியங்களும் மானிட வாழ்வியலும்

# Tamil Literary values and human life

இரா. பன்னிருகைவடிவேலன்/ R. Pannirukaivadivelan[1]
[1] Associate Professor, Department of Tamil,
Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS)
Corresponding Email: pannirukai.sl@velsuniv.ac.in

**ஆய்வுச்சாரம்**

இலக்கியம் என்பது மிகத் துல்லியமாக வரையறை செய்ய இயலாதது; கருத்துப் பெட்டகமாக விளங்குவது; மனித மனத்திற்கு இன்பம் நல்குவதாய், தக்க வடிவத்தில் அமைவது; படைப்பாளன் தன் உணர்ச்சிக்கும் கருத்துக்கும் வடிவம் கொடுத்து முறைப்படுத்தி வழங்குவது; எழுத்துப்பூர்வமான ஆவணமாகத் திகழ்வது; கற்பனை நயத்தோடு குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டுக் கருவூலத்தையும் சுமந்து வருவது; நாட்டின் மரபுவழிச் செல்வமாகக் கருதப்படுவது; மனித உள்ளுணர்வுகளை அழகுபடுத்தி மொழியால் வெளிக்கொணர்வது; சமுதாயத்தின் ஒட்டுமொத்த அனுபவ வெளிப்பாடு; சமுதாயத்தை மதிப்பிடும் ஓர் அளவுகோல். மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களில் உள்ள வாழ்வியல் விழுமியங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கருச்சொற்கள்:** இலக்கியம், வாழ்வியல் விழுமியங்கள், பண்பாட்டுக் கருவூலம், மரபுவழி

**Abstract**

Literature is Art, Imagination, and Pleasure. Working through the medium of language. It is an essential place for the establishment of language, and the experience and art of capturing the feelings and truths of human life. Assessing people's life values. One can come to the view that the creator proposes a goal for the society and is interpreted as a transcendental statement that expresses the meaning of life without being empty. Literature cannot be defined very precisely. To give pleasure to the human mind, to be in proper form. The creator gives shape to his emotions and ideas. Being a written document. Carrying the cultural treasure of certain people with imagination. Considered as heritage wealth of the country. The aim of this paper is to examine the values of life in Sangam literature based on the above concepts.

**Keywords:** Sangam literature, human, Art, language

**முன்னுரை**

இலக்கியம் என்பது மிகத் துல்லியமாக வரையறை செய்ய இயலாதது; கருத்துப் பெட்டகமாக விளங்குவது; மனித மனத்திற்கு இன்பம் நல்குவதாய், தக்க வடிவத்தில் அமைவது; படைப்பாளன் தன் உணர்ச்சிக்கும் கருத்துக்கும் வடிவம் கொடுத்து முறைப்படுத்தி வழங்குவது; எழுத்துப்பூர்வமான ஆவணமாகத் திகழ்வது; கற்பனை நயத்தோடு குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டுக் கருவூலத்தையும் சுமந்து வருவது; நாட்டின் மரபுவழிச் செல்வமாகக் கருதப்படுவது; மனித உள்ளுணர்வுகளை அழகுபடுத்தி மொழியால் வெளிக்கொணர்வது; சமுதாயத்தின் ஒட்டுமொத்த அனுபவ வெளிப்பாடு; சமுதாயத்தை மதிப்பிடும் ஓர் அளவுகோல் என்பது பெறப்படுகிறது. மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களிலும் நீதி இலக்கியங்களிலும் உள்ள வாழ்வியல் விழுமியங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இலக்கியமும் மனித விழுமியங்களும்**

மனித விழுமியங்களை வளர்ப்பதும், பேணுவதும் இலக்கியம் எனப்படும். இலக்கியம் மனிதனது வாழ்வியலைச் சொல்வதும், புடம் போடுவதும் ஆகும். இலக்கியம் என்பது கலை, கற்பனை, இன்பம் உடையதாகத் திகழ்வது; மொழி எனும் ஊடகத்தினூடே இயங்குவது; மொழி நிலைபெற இன்றியமையா இடம் வகித்தும், மனித வாழ்வின் உணர்வுகளையும் உண்மைகளையும் அனுபவப் பூர்வமாகக் கலை நுட்பத்தோடு எடுத்தியம்புவது; அறச்சிந்தனைகளை வலியுறுத்துவது; மக்களின் வாழ்வியல் விழுமியங்களை மதிப்பிடுவது; நனிநுட்பம் வாய்ந்ததாகவும், இயற்கை அழகைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும் அமைவது; இலக்கியம் என்பது மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டு, உணர்வு சார்ந்து அமைவதால்தான், நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. இலக்கியம் மனித விழுமியங்களைக் கட்டி எழுப்புவதற்காகப் படைக்கப்பட வேண்டும் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

மக்களிடம் கற்று, மக்களுக்கே வழங்கும் மக்கள் இலக்கியம், அதாவது மக்களின் எதார்த்த வாழ்வியலை மக்களின் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் இருந்து கற்று, எதிர்காலச் சந்ததியினருக்கு வாழ்வியலைக் கற்பிக்கும் பாடநூலாக அமைகின்ற இலக்கியம்தான் மக்கள் இலக்கியம் எனக் குறிப்பிடப்படும் தலைசிறந்த இலக்கியக் கூறாகும்.

இலக்கிய வடிவங்கள் நமது மொழியில் வாழ்வியலைக் கற்பிக்கும் ஓர் ஊடக சாதனமாகவே அமைந்துள்ளது. அந்த வகையில் நமது தமிழ்மொழியில் இருந்த இலக்கிய வடிவம் கவிதை என்னும் செய்யுள் உருவமாகவே இருந்தது.

பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடிப்பெற்று வாசித்தாலே பண்டைத் தமிழர் மாண்பு வாழ்வியல் பரிணாமங்களைத் தரிசிக்க முடியும். மனித வாழ்வியலில் பல்வேறு பரிணாமங்களைக் கண்டு கடந்து சென்று கொண்டிருக்கின்றன காலங்களும் நேரங்களும். அதனூடாகப் பல நூற்றாண்டு கடந்து செல்லும் மனித வாழ்வியலில் விழுமியங்களை எதிர்காலச் சந்ததிகள் தரிசிக்கக் கூடியதாக இருக்கும் ஓர் ஊடக வடிவமே இலக்கியம்.

இயற்கையோடு இயைந்து வாழ்கின்ற நீலகிரிப் படகர் இன மக்களின் வாழ்வியல் வழக்காறுகள் அவர்தம் இயற்கைப் புரிதல், வாழ்வியல் விழுமியங்கள், பண்பாடு மற்றும் கலாச்சாரப் பரிணாம நிலை போன்றவற்றிற்கான சிறந்த ஆவணங்களாகும். பஞ்சபூதங்களையும், மரம், கல், ஞாயிறு, நிலவு, பிறை போன்ற பல்வேறு இயற்கைக் கூறுகளையும் வழிபடுகின்ற படகர்கள் காற்றினையும் வணங்குகின்றனர். காற்றினைக் 'காயி' என்று அழைக்கும் இவர்கள், காற்றுச் சார்ந்த பல வாழ்வியல் வழக்காறுகளைக் கட்டமைத்து அதனை இன்றளவும் கடைப்பிடித்து வருகின்றனர். இவ்வாறு இலக்கியங்கள் மனித வாழ்வியல் விழுமியங்களைக் காட்டுவனவாக அமைகின்றன.

**நற்றிணையில் புறவிழுமியங்கள்**

விழுமியம் என்ற சொல்லிற்குத் தமிழ் இலக்கண இலக்கியங்கள் யாவும் பெரும்பான்மையும் உயர்ந்த, சிறந்த, மேலான என்னும் பொருளைத் தருகின்றன. தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி, நற்றாய் ஆகிய மாந்தர்களின் வழி சமூகத்திற்குக் கிடைத்த புறவிழுமியங்கள் விளக்கப்படவுள்ளன. அரசன் ஆட்சி செய்தல், வள்ளலின் கொடைத்திறம், மனித நேயம், அஃறிணை உயிரைத் தன் உயிராகக் கருதுதல், குலம் பார்க்காமை, சமயம், நம்பி வந்தவரைக் கைவிடாதிருத்தல், எடுத்தச் செயலைச் செவ்வனே செய்தல், தேவையற்று உயிர் நீங்குதல் தவறு ஆகிய புறவிழுமியங்களை நற்றினையில் காணமுடிகிறது.

நற்றிணைப் பாடல்கள் அகப்பாடல்களாக இருப்பினும் அவற்றில் புறத்தின் கூறுகளாக மன்னர்கள், வள்ளல்கள், வீரர்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவர்கள் தம் நாட்டு மக்களுக்காக எதிரி நாட்டுடன் போர் புரிந்து பொன், பொருள் எனப் பல பொருள்களைக் கைப்பற்றி வறியவர்களுக்குக் கொடையாகக் கொடுத்துத் தம் நாட்டையும் தம் மக்களையும் செழுமையுடனும் சீரும் சிறப்புடனும் வைத்திருந்தார்கள் என்பதைப் பாடல்களின்வழி அறியமுடிகிறது.

தித்தன் என்னும் சோழ மன்னன் உறையூரை ஆட்சி செய்தான் என்பது "வீரை வேண்மான் வெளியன் தித்தன்" (நற்.58) என்னும் பாடலடி விளக்குவதைப் பார்க்க முடிகிறது. மேலும்,

எழுது எழில் சிதைய அமுத கண்ணே
தேர் வண் சோழர் குடந்தைவாயில்" (நற்.379)

என்ற பாடலடி தலைவியின் கண்களுக்குச் சோழனின் குடைவாயிலில் உள்ள ஊரில் இருக்கின்ற நீல மலரை ஒப்பிட்டுக் காட்டியுள்ளனர். அது மட்டுமன்றி, தலைவியின் கைகள் சிவந்திருத்தலைப் பாண்டிய மன்னனின் பொதியலில் பூத்த காந்தள் மலரைப் போன்று சிவந்தன என,

மாரி அம் கிடங்கின் ஈரிய மலர்ந்த
பெயல் உறு நீலம் போன்றன; விரலே (நற்.379)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. சோழன் ஒலிக்கின்ற மணியையுடைய யானையையும் பசிய பொன்னாலாகிய பூண்களையும் கொண்டவர் என்று "படுமணி யானைப் பசும்பூட் சோழர்" (நற்.227) என்னும் பாடலடி விளக்குகின்றது. இப்பாடல்களின் வழி மன்னர்கள் சங்க காலத்தை ஆண்டு வந்தனர் என்றும் அவர்கள் செல்வச் செழிப்புடன் நாட்டை வளர்த்தும் வந்தார்கள் என்றும் தெரிய வருகிறது.

**சங்க இலக்கியம் காட்டும் வணிக விழுமியங்கள்**

திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு என்பது தமிழில் வழங்கும் ஒரு பழமொழி. பழமொழிகள் ஒவ்வொன்றும் பழமையான மொழிகள் மட்டுமல்ல, அவை ஒவ்வொன்றும் அனுபவ மொழிகள். வாழ்க்கை அனுபவங்களால் ஆனவை. அனுபவங்கள்தான் வாழ்க்கையை அர்த்தப்படுத்துகின்றன. பொருள் நிறைந்ததாய் மாற்றுகின்றன. வாழ்க்கை பொருளால் ஆனது. பொருள் நிறைந்தது. மனித இனக்குழு சமூகமாக வாழ்ந்தபோது தன்னிடமுள்ள பொருளைக் கொடுத்துவிட்டுத் தனக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொண்டான். இவற்றின் வளர்ச்சி பண்டமாற்று வணிகமாகப் பரிணமித்தது. அதுவே பின்னர் நாணயமுறை வணிகமாக வளர்ச்சியடைந்தது. அந்த வணிகத்தைச் செய்வதற்குத்தான், திரைக்கடல்வழி ஓடியிருக்கின்றனர்.

ஒரு நாட்டின் சிறந்த தொழில்களாக உழவுத் தொழிலையும் வணிகத் தொழிலையும் கூறலாம். நாடு செழிப்புடன் இருக்க வேண்டுமானால் இவ்விரண்டு தொழில்களும் செழிப்புற்று இருக்க வேண்டும். செழிப்புற்றிருந்த காரணத்தால்தான் சங்ககாலம், பொற்காலம் என்று சங்க இலக்கியங்கள் போற்றுகின்றன.

மக்கள் உயிர் வாழ்வதற்குரிய இன்றியமையாதவை உணவு. தொழில்களுக்கெல்லாம் உயிர்நாடியானது உழவுத் தொழில். உழுவார் மற்ற தொழிலாளர்களுக்கெல்லாம் அச்சாணி. உலகத்திற்கே உழவன்தான் ஆணி ஆகிறான். பசிவந்திடப் பத்தும் பறந்து போய்விடும். இந்தக் கொடுமையிலிருந்து, உறுபசியிலிருந்து மக்களைக் காப்பாற்றுவது உழவுத் தொழிலே ஆகும். 'பொருபடை தரூஉம் கொற்றமும் உழவர் ஊன்றுகால் மருங்கின் ஈன்றதன் பயனே' எனப் புறநானூறு கூறுவதால் மன்னனது வெற்றிக்கும் புகழுக்கும் உழவர்கள் காரணமாவர். மன்னர்கள் ஏரி, குளம், வாய்க்கால்களை வெட்டி உழவுத் தொழிலை வளப்படுத்தினர். கரிகாலன் காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கினான். குடபுலவியனார் என்னும் சான்றோர்,

நீரின்ற மையா யாக்கை யெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே (புறநானூறு - 77)

என உழவுத் தொழிலின் மேன்மையினையும், அதனைப் பெருக்கும் வழியினையும் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு எடுத்துரைக்கிறார்.

சங்க காலத்தில் உள்ளூர் அளவில் நடைபெற்ற வணிகங்களில் பண்டமாற்றுமுறை வணிகமே பெரும்பான்மையாக நடைபெற்று வந்திருக்கின்றது. இதனை,

கான் உறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்
மான்தசை சொரிந்த வட்டியும் ஆய் மகள்
தயிர் கொடு வந்த தசும்பும் நிறைய
ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகத்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும் (புறநானூறு – 33)

என்கிற புறநானூற்று அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. இப்பாடலில் காட்டில் வாழும் வாழ்க்கையினை உடையவன் வேடன். சினம் மிகுந்த நாயுடன் அவன் வருவான். மான்கறியினை வட்டிலிலே கொண்டு வருவான்.

ஆயர் பாடியிலே இருக்கிற ஆயர் மகள் பானையிலே தயிரைக் கொண்டு வருவாள். அதற்குப் பதிலாக அவர்கள் நெல்லை முகந்து முகந்து அவ்வட்டிலும் பானையும் நிறையுமாறு கொடுப்பார்கள். அவர்களும் அதைப் பெற்று மகிழ்ச்சியோடு செல்வார்கள் என்பதுதான் இந்தப் பாடலின் பொருள். இதன் மூலம் சங்க காலத்தில் இறைச்சியினையும் தயிரையும் கொடுத்து நெல்லினைப் பண்டமாற்றாகப் பெற்றிருப்பதை அறியலாம்.

சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் அயல்நாட்டினரோடு கொண்டிருந்த தொடர்பைப் பட்டினப்பாலை என்னும் பத்துப்பாட்டு இலக்கியம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

மொழி பல பெருகிய பழிதீர்தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம். (பட்டினப். 213-218)

என்னும் பாடல் வரிகளில் இதனை அறியலாம்.

அரிசி, இஞ்சி, தோகை முதலிய தமிழ்ச்சொற்கள் ‘ஈப்ரு’ முதலிய மொழிகளில் இடம் பெற்றிருக்கின்றன. தமிழக வணிகர்கள் மிளகு வியாபாரத்தில் ஈட்டிய பெருஞ்செல்வத்தைப் பற்றியும், ரோமாபுரிக்கும் தமிழகத்திற்கும் உள்ள தொடர்பை ‘பெரிபுளூசு’, ‘பிளினி’ போன்றோர் ஆய்வில் குறிப்பிட்டுள்ளனர்.

பிற நாட்டிலிருந்து பலமொழிகள் பேசக் கூடியவர்களும் தமிழகத்திற்கு வந்து இங்குள்ளவர்களிடம் ஒன்றாகக் கலந்து இனிதாக வாழும் நகரமாகக் காவிரிப்பூம்பட்டினம் விளங்கியிருக்கின்றது. பிறநாட்டிலிருந்து வந்து தமிழகத்தில் வாழ்ந்தவர்களைச் சங்க இலக்கியம் யவனர்கள் என்றும் மிலேச்சர் என்றும் குறிப்பிடுகின்றது. இதனை முல்லைப்பாட்டு என்கிற இலக்கியம் எடுத்துக்காட்டுகின்றது. வணிகம் சிறந்த புகார் நகரத்திலே சிறந்த வணிகர்கள் பலர் வாழ்ந்திருந்தனர். அவர்களின் சிறப்பினை,

கொள்வதூஉம் மிகை கொளாது
பல் பண்டம் பகர்ந்து வீசும்
தொல் கொண்டித் துவன்று இருக்கை (பட்டினப். 210-213)

என்று கருத்தாழமிக்க வரிகளில் பாடியிருக்கிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

வணிகர்கள், நீண்ட நுகத்தடியில் தைத்திருக்கும் நடு ஆணி போல் நடுவு நிலைமையோடு வாழும் நல்நெஞ்சத்தை உடையவர்கள். பழிக்கு அஞ்சி உண்மையே பேசுவார்கள். தம்முடைய பொருளையும், பிறருடைய பொருளையும் ஒரு தன்மையாகவே எண்ணுபவர்கள். பொருளை வாங்குவோரிடம் அளவுக்கு மேல் அதிகமாக வாங்கமாட்டார்கள்.

தாங்கள் கொடுக்கும் பண்டத்தையும் குறைத்துக் கொடுக்காமல் வணிகம் செய்பவர்கள் எனப் பட்டினப்பாலை கூறுவதிலிருந்து அக்கால வணிகர்களின் வணிக விழுமியத்தினை அறிய முடிகின்றது.

**புறநானூறு காட்டும் பல்வேறு விழுமியங்கள்**

பண்டைத் தமிழ்நாட்டில் தமிழ்ப் பெருங்குடி மக்கள் நாகரிகச் சிறப்பிலும், பண்பாட்டு மேன்மையிலும் மிகச் சிறந்து விளங்கினார்கள் என்பதைப் புறநானூற்றினால் அறிய முடிகிறது.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே (புறநானூறு. 183)

எனக் கல்வியின் மேன்மை குறிப்பிடப் பெறுகின்றது. கீழ்க்குலத்தில் பிறந்தவனாக இருந்தாலும் அவன் கல்வி கற்றால் உயர்ந்தவனாகின்றான். இச்செய்தியினை,

வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ள
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட்படுமே (புறநானூறு 183)

எனக் குறிக்கின்றது. புறநானூறு சிறந்த வரலாற்றுச் செய்திகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

சமூக வளர்ச்சிக்கு இல்லற வாழ்க்கையில் நாட்டம் இன்றியமையாகும். துறவறத்தை விட இல்லறம் இனிதெனக் கண்டான் தமிழன். அவன் குழந்தைகளை ஆண் - பெண் பேதம் பார்த்து அன்பு செலுத்தியதில்லை. பால்மணம் மாறாப் பச்சிளங் குழந்தையை அருகில் வைத்தால் இன்பம் வேறு எவ்வுலகிலேதான் கிட்டும்? ஒருவனுக்கு எத்தகைய செல்வம் இருந்தாலும் மக்கட் செல்வம் இல்லாது போனால், இவ்வுலகில் இன்பமும் இல்லை வாழ்க்கையும் இல்லை என எடுத்துரைக்கிறது புறநானூற்றுப் பாடல் ஒன்று.

படைப்புபல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் கிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கல்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைதாம் வாழு நாளே (புறநானூறு - 178)

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே காதலையும் குடும்பப் பிணைப்பையும் ஏற்படுத்த வல்லவை குழந்தைகள். குழந்தையின் பேச்சு மதியை மயக்கச் செய்யும் ஆற்றலுள்ளவை. குழந்தையின் பேச்சில் கோடியின்பம் காண்பர் பெற்றோர். மழலை மொழியிலே மனம் திளைத்தவர் யாழையும் விரும்பமாட்டார்.

யாழொடு கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
கள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை (புறநானூறு - 92)

என்கிறது ஔவையாரின் பாடல் ஒன்று. நல்ல குழந்தைகளைப் பெற வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும்.

தமிழர் தம் பண்பட்ட வாழ்வில் மருத்துவத்துறை இருந்ததையும், துறையில் பெயர் போன சான்றோர்கள் பலர் இருந்தனர் என்பதற்கும் 'மருத்துவன் தாமோதரனார்' என்ற பெயரே சான்றாகத் திகழ்கின்றது. துன்பம் தரத்தக்கவை யாவும் நோய் என்றே குறிப்பிட்டனர்.

நோயினைப் பிணி என்ற பெயராலும் வழங்கினர். 'பசி வந்திடில் பத்தும் பறந்துபோம்' என்பது பழமொழி. நோய்களில் எல்லாம் கொடிய நோயாகப் பசியே முதன்மையாக விளங்குகிறது. பசிப்பிணி மருத்துவன் என்ற பட்டத்தை ஒரு வள்ளல் பெற்றுள்ளான். இவ்வுண்மையைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்,

பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே (புறநானூறு - 173)

எனப் பாணர் கூற்றில் வைத்துச் சிறுகுடி கிழான் பண்ணனைப் பாராட்டியதினின்றும் அறியலாம்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராதி யல்வது நாடு (குறள் - 374)

என்பது வள்ளுவர் வகுத்த இலக்கணமாகும். இவ்வாறு பல்வேறு விழுமியங்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன.

**நிறைவுரை**

தனக்கு எது தேவையோ அதுவே தருமம் என்று சொல்லப்படுகின்ற மனோபாவத்திற்கு வந்து விட்ட இன்றைய தமிழ்த் தலைமுறையினர் தங்களது மூதாதையர்களின் முற்போக்கான பாங்கினை மறந்து விட்டனர். காரணமின்றி முந்தையோர் அறக்கருத்துக்களை வழங்கியதன் தேவையை இன்றைய சூழலில் வாழ்கின்றவர்கள் தங்களது தனிமனித உள்ளத்தின் வழியாக நின்று சிந்திக்கும் பொழுது, தங்களது முன்னோர்களின் ஒவ்வொரு பதிவும் முக்கியமான விழுமியங்கள் என்பது புலப்படவே செய்யும்.

அறத்தினூ உங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறந்தனன் ஊங்கில்லை கேடு (குறள் - 3)

என வள்ளுவம் வழங்கும் அறம் எப்பொழுதும் எல்லாத் தலைமுறைக்கும் புரிந்து கொள்ளும் விதமாகவே படைக்கப்பட்டிருக்கிறது. அறங்கள் பற்றி நாம் சிந்தனை செய்கின்ற தருணங்களில் உள்மனக்கிடக்கையில் புதைந்திருக்கும் சுயநல தருமங்கள் உடைந்தே போகும். உள்ளமே கோயில் என்ற சொற்பதத்திற்கு மூல விதையான ஆரம்பத் தமிழனின் இன்றைய வாரிசுகளின் பாதைகளும் பயணம் செய்யும் தடங்களும் முறையான அறத்தின்வழி நிற்கவேண்டும்.

ஒரு சமூகத்தின் பின்புலம், அதன் கட்டமைப்பு, பழக்க வழக்கங்கள், பண்பாடு ஆகியவை தனி மனித வாழ்வியலை மையப்படுத்தியும், முன்னிறுத்தியும் சுற்றிச் சுழல்கின்றன. அதே சமயத்தில் தனி மனிதனின் ஒழுக்கம் தடம் மாறும்போது ஒட்டு மொத்தச் சமூகத்தின் வாழ்வியல் கேள்விக்குறியாகிறது.

வீரம், விருந்தோம்பல், பொதுவுடமை, கொடை, நீதி, நல்லொழுக்கம் போன்றவற்றினை உலகிற்கே எடுத்துச் சொன்னது தமிழ் இலக்கியம். வாழ்க்கை எப்படி வாழவேண்டும், எப்படி வாழக்கூடாது என்று வாழ்க்கைக்கே இலக்கணம் சொன்னவன், தமிழினைத் தவிர வேறு எந்த மொழியிலும் இல்லை. மனிதன் மனிதனாக வாழ மனிதனால் மனிதனுக்குச் சொன்ன பாடங்கள்தான் தமிழ்ச் சான்றோர் நமக்கு விட்டுச் சென்ற மிகப்பெரிய சொத்தான தமிழ்த்தாயின் மடியில் தவழும் தமிழ் இலக்கியங்கள். இன்றைக்கு இவை கடல் கடந்தும் வாழ்கின்றன என்றால் அவற்றுள் உள்ள வாழ்வியல் சித்தாந்தங்களும், சீரிய சிந்தனைகளுமே காரணங்களாகும். தனி மனித வாழ்வியலையும், ஒழுக்க நெறிகளையும் சமூகத்திற்கு விழுமியங்களாக அடையாளம் காட்டியது நம் இலக்கியங்கள்.

**துணைநூற்பட்டியல்**

சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு
தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.
புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), சென்னை, 1971

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# குறுந்தொகையில் நெஞ்சொடு கிளத்தல் உளவியல் பார்வை

# Kurunthogaiyil Nenjodu Kilaththal A Psychological Perspective

ம. செந்தில்குமார்/ M. Senthilkumar[1]
[1]பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்
Corresponding Email: malaisenthilptp@gmail.com

**ஆய்வுச்சாரம்**

இலக்கியம் வாழ்க்கையின் வெளிப்பாடு. மனித மன எண்ணங்களை மனத்தின் செயல்பாடுகளை மையமாகக் கொண்டது. ஒவ்வொரு எழுத்தாளனின் படைப்புகளும் அவனது அகமன அனுபவங்களின் பிரதிபலிப்பாகும். சங்க இலக்கியங்களில் பல்துறை ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. இவை மனித மனதின் எண்ண ஓட்டங்கள்இ உளச்சிக்கல்கள் பல்வேறு சூழல்களில் வெளிப்படும் மனித நடத்தை மாறுபாடுகள் போன்றவற்றைச் சித்தரிக்கின்றன. பிரிவுத்துயரத்தினால் தலைவன் தனிமையில் தன் நெஞ்சிற்குக் கூறும் நிலை நெஞ்சொடு கிளத்தலாகும். நெஞ்சொடு கிளத்தலில்இ நெஞ்சுக்கு கூறுபவரின் நனவுமனச் செயல்பாடுகளும்இ நனவிலி மன உணர்வுகளுமே ஒன்றுக்கொன்று எதிர்கொள்கின்றன. மும்மனச் செயல்பாடுகளை ஆழ்மனத்தில் உறைந்து கிடக்கும் உணர்வுகளை வெளிக்கொணரும் திறனை உளப்பகுப்பாய்வு அடிப்படையில் உளவியலார் விளக்குவர். குறுந்தொகையில் தலைவன் நெஞ்சொடு கிளத்தலில் வெளிப்படும் தலைவனின் மனச்செயல்பாடுகள் உளப்பகுப்பாய்வு நோக்கில் இங்கு விளக்க இந்த ஆய்வு முற்படுகின்றன.

**கருச்சொற்கள்:** குறுந்தொகை, நெஞ்சோடு கிளத்தல், உளவியல்

**Abstract**

Literature is an expression of life. Human mental thoughts Based on the activities of the mind. Every writer's work reflects his inner experiences. A multidisciplinary study Have been conducted in the sangam literature. These depict the thought processes of the human mind, the mental disorders and the variations in human behaviour manifested in different contexts. Because of the Isolation, the leader tells his heart in solitude that the heart is fluttering. In heartburn, the conscious actions of the heartthrob and the unconscious feelings confront each other. During the robbery, the leader's sexuality is revealed in the statements that come out of the leader's bosom. Immediately the leaders desire to reach the leader is evident. Psychoanalysis explains the ability of triadic activities to bring out feelings that are frozen in the subconscious mind. This article aims to psychoanalyze the mental processes of the leader, which are revealed in the Kurunthogai Thalaivan Nenjodu kilathal.

**Keywords:** Nenjodu kilathal, psychology, id, ego, Super ego

**முன்னுரை**

இலக்கியம் வாழ்க்கையின் வெளிப்பாடு. மனித மன எண்ணங்களை மனத்தின் செயல்பாடுகளை மையமாகக் கொண்டது. ஒவ்வொரு எழுத்தாளனின் படைப்புகளும் அவனது அகமன அனுபவங்களின் பிரதிபலிப்பாகும். சங்க இலக்கியங்களில் பல்துறை ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. இவை மனித மனத்தின் எண்ண ஓட்டங்கள், உளச்சிக்கல்கள் பல்வேறு சூழல்களில் வெளிப்படும் மனித நடத்தை மாறுபாடுகள் போன்றவற்றைச் சித்தரிக்கின்றன. "மனிதனின் அக வாழ்க்கையே இலக்கியத்தின் கருப்பொருளாகிறது" என்கிறார் (சச்சிதானந்தன், ப.199).

பிரிவுத்துயரத்தினால் தலைவன் தனிமையில் தன் நெஞ்சிற்குக் கூறும் நிலை நெஞ்சொடு கிளத்தலாகும். நெஞ்சொடு கிளத்தலில், நெஞ்சுக்குக் கூறுபவரின் நனவுமனச் செயல்பாடுகளும், நனவிலி மன உணர்வுகளுமே ஒன்றுக்கொன்று எதிர்கொள்கின்றன.

தொல்காப்பியர் நெஞ்சொடு கிளத்தல் என்பதை ஒரு கூற்று வகை என்பார். இங்குக் கூறுபவர் மாந்தர், நெஞ்சு கேட்போர் என்ற நிலையில் கேட்கும் பொருள் ஆகும். மொழியும் பொருள் ஆகாது. அகத்திணை மாந்தர்களுள் தலைவன் தலைவி இருவருக்கும் இக்கூற்று உரியது.

பிரிவுத்துயரத்தின் மிகுதியினால் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லும் முறையினை வைத்து, இந்நிலை நெஞ்சிற்குச் சொல்லியது. நெஞ்சினைக் கழறியது, நெஞ்சிற்குக் சொல்லி செலவழுங்கியது. நெஞ்சிற்குச் சொல்லி செலவழுங்குவித்தது என அமையும். அத்தன்மை பிரிவின் காரணமாகவும், பிரிவின் நிமித்தம் காரணமாகவும் அமையும் என நெஞ்சொடு கிளத்தல் என்ற நிலையினைக் கூறலாம்.

களவுக் காலத்தில் தலைவனின் நெஞ்சொடு கிளத்தலில் வரும் கூற்றுக்களில் தலைவனின் பாலுணர்வாற்றலே வெளிப்படுகிறது. உடனே தலைவியை அடையத் துடிக்கும் தலைவனின் விருப்பம் புலப்படுகிறது.

மும்மனச் செயல்பாடுகளை ஆழ்மனத்தில் உறைந்து கிடக்கும் உணர்வுகளை வெளிக்கொணரும் திறனை உளப்பகுப்பாய்வு அடிப்படையில் உளவியலார் விளக்குவர். குறுந்தொகையில் தலைவன் நெஞ்சொடு கிளத்தலில் வெளிப்படும் தலைவனின் மனச்செயல்பாடுகள் உளப்பகுப்பாய்வு நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**நெஞ்சொடு கிளத்தலும் உளவியலும்**

பிரிவுத் துயரத்தினால் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறும் தன்மையாதலின் நெஞ்சொடு கிளத்தல் எனப் பொருள்படும். அகத்திணை மாந்தர்களுள் தலைவன் தலைவி இருவருக்கும் இக்கூற்று உரியது.

பிரிவுத்துயரத்தின் மிகுதியினால் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லும் முறையினை வைத்து, இந்நிலை நெஞ்சிற்குச் சொல்லியது, நெஞ்சினைக் கழறியது, நெஞ்சிற்குச் சொல்க்ச் செலவழுங்கியது, நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்குவித்தது என அமையும். இத்தன்மை பிரிவின் காரணமாகவும் பிரிவின் நிமித்தம் காரணமாகவும் ஏற்படும்.

இலக்கியக் கலை உலகிற்கு, முதன் முதலில் உளப்பகுப்பாய்வை அறிமுகப்படுத்தியவர் 'சிக்மண்ட ஃபிராய்டு' ஆவார். உளப்பகுப்பாய்வுக் கோட்பாடு என்பது ஆழ்மன உணர்வுகளை மனத்துள் புதைந்து கிடக்கும் விருப்பங்களை மும்மனச் செயல்பாடுகளின் வழி வெளிக்கொணரும் முறையாகும்.

ஃபிராய்டு மனச் செயல்பாடுகளை மனத்தின் ஆளுமை நிலையினைப் பண்படா உள்ளம் அல்லது இன்பமனம் (id) தன்முனைப்பு (ego) பண்பட்ட உள்ளம் (மேம்பாட்டுள்ளம்) கொண்ட தன்முனைப்பு (Super ego) என்று மூன்றாகப் பிரிக்கிறார். கேல்வின் எஸ் ஆல் (Calvin S.Hall Gardner lindzey, Theories of personality, P.36)

**தலைவனின் பாலுணர்வாற்றலும் இன்பமனச் செயல்பாடுகளும்**

"சிக்மண்ட ஃபிராய்டு" இட் (id) என்ற பண்படா உள்ளத்தின் தூண்டல் ஆற்றல், லிபிடோ (libido) என்ற பாலுணர்வின் வயப்பட்டது. இந்த இயல்பூக்கம் உள்ளத்தின் ஆற்றலுக்கெல்லாம் தோற்றுவாயாக உள்ளது என்பார்.

இம்மனம் மரபுநிலையில் வந்த இயல்பூக்கங்கள் உந்துதல்கள் முதலியவற்றைக் கொண்டது. பிறப்பிலிருந்து இது இயல்பாக அமைகிறது என்று ஃபிராய்டு குறிப்பிடுகிறார். இது மனிதனின் ஆளுமையைப் புரிந்து கொள்ளமுடியாத ஒரு குழப்பமான பகுதியாகும். அதிர்ச்சியூட்டும் உணர்ச்சியின் உறைவிடம் எத்தகைய அமைப்புமற்ற இன்பநிலை உணர்வுகளுக்கு ஏற்ப, இயல்பூக்கங்களின் தேவைகளுக்கு, நிறைவு தேடுகின்ற ஒரு தூண்டல் ஆற்றல் என்றும் உளவியலார் மனத்தின் இப்பகுதியை விளக்குவர்.

இங்கும் களவுக்காலத்தில் தலைவனின் நெஞ்சொடுகிளத்தலில் வரும் கூற்றுக்களில் தலைவனின் பாலுணர்வாற்றலே வெளிப்படுகிறது. உடனே தலைவியை அடையத்துடிக்கும் தலைவனின் விருப்ப விழைவே புலப்படுகிறது. இங்குத் தோழியிடம் இரந்து நின்ற தலைவன், மறுத்துரைக்கப்பட்டத் தலைவன்,

> வெள் என்பு அணிந்து, பிறர் எள்ளத் தோன்றி,
> ஒருநாள் மருங்கில் பெருநாண் நீங்கி,
> தெருவின் இயலவும் தருவது கொல்லோ -
> கலிழ்கவின் அசைநடைப் பேதை
> மெலிந்திலள், நாம்விடற்கு அமைந்ததூதே (குறுந்.182)

தலைவன் ஊரில் உள்ள பிறர் இகழுமாறு மடலேறுவதாக அமைந்த பாடல் ஆகும். தலைவன் இந்நிலையில் தலைவியின் நலன் பெரிது என்று நெஞ்சை முன்னிலைப்படுத்திக் கூறித் தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துகின்றான்.

'இட்' என்ற பண்படா உள்ளம் இன்ப உணர்வுகளுக்கு நிறைவு தேடுகின்ற தன்மையுடையது. இன்ப இயல்பூக்கங்களுக்கு உடனே நிறைவு அளித்தலே 'இட்டின்' இயல்பாகும்.

இங்கும் களவுக்காலத்தில் தலைவியுடன் கூடி இன்பம் துய்க்க எண்ணும் தலைவனின் பாலுணர்வாற்றலே வெளிப்படுகிறது.

**தன்முனைப்புள்ளம்**

'தன்முனைப்பு' என்பது யதார்த்த மனமே ஆகும். மனிதனின் இயல்பு நிலையில் உள்ள உண்மை நிலையை உணர்த்தி, அவனது பண்படா உள்ளத்து ஆசைகளை நிறைவேற்றி வைப்பது தன்முனைப்பாகும்.

பாலுணர்வால் எழும் தேவைகளை உடனுக்குடன் அடைய வேண்டும் என்று பண்படா உள்ளத்தில் ஆசைகள் எழலாம். அதுபோன்ற உணர்வுகளை ஆசைகளை உடனுக்குடன் அடையவிடாது. அவ்வுணர்வுகள், ஆசைகள் முதலியவற்றைச் சந்தர்ப்பங்களுடன் இணைத்து வாழ்வின் சட்ட திட்டங்களுக்கு ஏற்றவாறு செயல்படுத்துவது தன்முனைப்பாகும்.

பண்படா உள்ளத்திற்கும் மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்பிற்கும் (Super ego) பொறுப்பாளராக இருந்து செயல்படுத்துவது தன்முனைப்பாகும். இங்குத் தலைவனின் பாலுணர்வாற்றலுக்கும் தன்முனைப்பிற்கும் இடையில் போராட்டம் நிகழ்கிறது.

தலைவனின் ஆளுமைத் தன்மை பொருளீட்டுவதுதான். பொருளின்மையால் வரும் இளிவரவு தாங்கிக்கொள்ளாது என்று அவன் மனம் ஒருபுறம் எண்ணுகிறது. எனினும் அவள் மீதுள்ள காதல் உணர்வால் வயப்பட்ட அன்புணர்வு இளிவரவைக் கூட ஏற்றுக்கொள்ளத் தூண்டுகிறது இதனை,

> மருந்து எனின் மருந்தே, வைப்புஎனின் வைப்பே
> அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலை
> பெருந்தோள், நுணுகிய நுசுப்பின்,
> கல்கெழு கானவர் நல்குறு மகளே (குறுந்.71)

தலைவன் செலவு தவிர்த்தலுக்கு நெஞ்சை காரணமாக்குகிறான். எனினும் தலைவியை விட்டுப் பிரிய முடியாது, ஆள்வினை ஆற்றவும் முடியாது கலங்குகிறான். இங்குத் தலைவனின் நனவுமனச் செயல்பாடு வெளிப்படுகிறது. காதலுக்கும் கடமைக்கும் அறிவுக்கும் பாலுணர்வாற்றலுக்கும் போராட்டம் நிகழ்கிறது.

அகப்பாடலில் வரும் தலைவன் தலைவியர் எல்லாம் இளம்பருவத்தினர் ஆவர். இதைக் குறுமகள், மடமகள் என்ற சொற்களால் அறியலாம். இளையோர் பருவ வயதில் கட்டுக்கடங்காத மனவெழுச்சிகளைப் பெற்றிருப்பர் என்று உளவியலார் கூறுவர். இங்கும் இளம் பருவத்தினான தலைவனின் பாலுணர்வாற்றல் கட்டுப்படாத நிலையிலேயே அத்தலைவனின் தன்முனைப்பு வெளிப்பாடு உள்ளது.

ஒரு பக்கம் பொருளீட்டும் ஆர்வம், மறுபக்கம் தலைவியின் நலன்குறித்த இன்பமும் வருத்த, நெஞ்சைக் காரணமாக்கிப் பொருட் செலவைத் தவிர்த்து இல்லத்தில் தங்குகிறான். தலைவனின் பாலுணர்வாற்றலும் இளம் பருவத்து உணர்வும் இணைந்த மனச் செயல்பாடே, தலைவனின் தன்முனைப்பு வெளிப்பாடாக புலப்படுகின்றது. இங்குத் தலைவனின் பொருள்வயிற் பிரிவைக் கட்டுப்படுத்த முனைகிறது தன்முனைப்பு உள்ளம்.

**பண்பட்ட உள்ளம் (மேம்பாட்டுள்ளம்)**

பண்பட்ட உள்ளம் கொண்ட தன்முனைப்பானது பெற்றோர்களாலும், சமூகத்தாலும் எடுத்துரைக்கப்பட்ட அறநெறிகள், சமய மதிப்புகள் அடங்கியப் பகுதியாகும். தன்முனைப்பின் விருப்பங்கள், ஆசைகள் முதலியவை சமூகச் செயல்பாடுகளுக்கு ஏற்றவை தானா என்று தீர்மானித்துச் செயல்பட வைப்பது இவ்வுள்ளமாகும்.

தன்முனைப்பு இன்பத்தை நாடுகிறது. பண்பட்ட உள்ளம் அறநெறியை வற்புறுத்துகிறது. இவ்வாறு தன்முனைப்பின் ஆசைகளை நிறைவேற்றுவதில் இரண்டிற்கும் இடையில் ஒரு போராட்டம் நிகழும்.

முன்னர் குறித்த தொடர்கள் எல்லாம் இப்போராட்ட உணர்வுகளையே சுட்டுகின்றன. ஏனெனில் இம்மூன்று மன உணர்வுகளையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாது. இப்போராட்ட உணர;வுகள் எல்லாம் பண்பட்ட உள்ளம் கொண்ட தன்முனைப்புச் செயல்படாதவாறு அன்புணர்வும் காதல் உணர்வும் கலந்த தன்முனைப்பு வெளிப்பாடு மேலோங்கி நிற்க, தலைவன் செலவைத் தற்காலியமாகத் தவிர்தத நிலையில் இருக்கிறான்.

ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல் எனச்
அம் மா அரிவையும் வருமோ?
எம்மை உய்த்தியோ? உரைத்திசின் நெஞ்சே!
(குறுந்.63)

இப்பாடலில் வினை முடித்தலுக்குக் காரணமே அவள் வயப்பட்ட மனம்தான் என்கிறான்.

இங்கு இன்ப இயல்பூக்கம் கொண்ட தன்முனைப்பிலேயே தன்னை இருத்திவிடாது, பொருளீட்டுதலே தனக்குரிய வினை, இச்செயலை முடித்துவிட்ட மனநிலையைச் சொல்லித் தலைவன் மனநிறைவடைகிறான். தலைவனின் மனம் தலைவியின் உடன் சென்றாலும், பொருளீட்டுதலைத் துணிந்த மனத்தை அதைத் தவிர்த்தல் இழிவு தரும் என்று அவன் அறிவு உறுதிப்படுத்துகிறது.

முன்பு செலவழுங்குவித்த நிலையில் இளிவரலைக் கூடத் தாங்க எண்ணியது அவனுடைய மனம். ஆனால் பொருளீட்டத் துணிந்த நிலையில் அவனது உண்மையான பண்பட்ட உள்ளம் கொண்ட தன்முனைப்பு வெளிப்படுகிறது. பண்பட்ட உள்ளம் இங்குத் தலைவனின் மனச்செயல்பாடுகளில் வாழ்க்கை அறநெறிகளை உணர்த்தி அவனைச் சமநிலைப்படுத்தி, பொருளீட்டும் கடமை உணர்விற்கு இட்டுச் செல்கிறது.

**நிறைவுரை**

ஃபிராய்டு மனச் செயல்பாடுகளை, ஆழ்மன விருப்பங்களை வெளிக்கொணரும் நிலைகளை உளப்பகுப்பாய்வில் விளக்குகிறார். நெஞ்சொடுகிளத்தலில் வரும் தலைவனின் ஆழ்மன விருப்பம் பொருளீட்டுதலே ஆகும். 'வினையே ஆடவர்க்குயிரே' என்பது சங்க இலக்கிய மரபு. இம்மரபின் உணர்வோட்டங்களே நெஞ்சொடுகிளத்தலில் வரும் தலைவனின் மனச் செயல்பாடுகளில் வெளிப்படுகின்றன.

தலைவன் தலைவியிடம் பெறும் இன்பத்தை நினைக்கும் நிலை ‘இட்’ என்ற பாலுணர்வாற்றல் ஆகும். பண்படா உள்ளச் செயல்பாடாகும். தலைவனின் பொருட்பிரிவைக் கட்டுப்படுத்த முனைகிறது தன்முனைப்புள்ளம்.

தலைவனின் பிரிவுத்துயரைக் காரணப்படுத்தி அவளால் பெறும் இன்பத்தில் நாட்டம் செலுத்த முனைகிறது தலைவனின் தன்முனைப்பு. ஆனால் தலைவனின் பண்பட்ட உள்ளம் அவனது வாழ்க்கை மேம்பாடுகளைச் செம்மைப்படுத்தி அறநெறிகளை உணர்த்தி, அவனைப் போராட்ட மன நிலையிலிருந்து விடுவித்து சமநிலைப்படுத்துகிறது.

இவ்வாறு தலைவனின் நெஞ்சொடுகிளத்தலாக வரும் கூற்றுக்களில் எல்லாம் அவனது மும்மனச் செயல்பாடுகளும் அச்செயல்பாடுகளுள் பொருளீட்டுவதுதான் தலைவனின் ஆளுமைத்திறன் என்ற தலைவனது ஆழ்மன விருப்பம் வெளிப்படுகிறது. ஆழ்மன விருப்பத்தை, நெறிப்படுத்திக் கடமையாற்ற வைப்பது பண்பட்ட உள்ளம் (மேம்பாட்டுள்ளம்) கொண்ட தன்முனைப்பாகும். இங்குச் சங்கத் தலைவன் ‘மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்பு’ பெற்றவன் என்பதை உணர முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


சாரதாம்பாள், செ. (2004) *இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்*, ஹரிகரன் பதிப்பகம், 1, தென்றல் நகர், நாகமலை மேற்கு, மதுரை -19.

பகவதி, கு. (1989) *திறனாய்வு அணுகுமுறைகள்*, உலக தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ. அஞ்சல், தரமணி, சென்னை -600113.

வி.நாகராசன், (2004) *குறுந்தொகை மூலமும் உரையும்*, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை -600 098.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சீனி நைனா முகம்மது கவிதைகளில் நன்னெறிப் பண்புகள்

# Moral values in Seeni Naina Muhammad's Poems

மலர்விழி ஜெகநாதன் / Malarvili Jaganathan[1]
கோமதி செல்வராஜ் / Komathy Selvaraj[2]
[1]Teacher, SK Taming Jaya
[2]Teacher, SJK(T) Ladang Holyrood
Corresponding Email: jmalarvili88@gmail.com

**ஆய்வுச்சாரம்**

இவ்வாய்வானது தேன்கூடு கவிதைத் தொகுப்பு நூலில் வெளிப்படும் நன்னெறிப் பண்புகளை அடையாளம் காணும் நோக்கங்களைக் கொண்டுள்ளது. கவிஞர் சீனி நைனா முகமது மலேசியாவில் புகழ்பெற்ற, மரியாதைக்குரிய கவிஞர். பாரம்பரிய கவிதைகளின் உலகில், அவர் தனக்கென ஒரு பெயரை நிறுவினார், மேலும், அவர் வாழ்ந்த சமூகத்தை அவதானித்த ஒர் இலக்கியப் புராணக்கதை. 1958 முதல் 2011 வரை அவர் எழுதிய 200க்கும் மேற்பட்ட செவ்வியல் கவிதைகளை உள்ளடக்கிய தேன்கூடு கவிதைத் தொகுப்பு 2011ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. கவிதைத் தொகுப்பில் உள்ள பல கவிதைகளில் ஒழுக்க விழுமியங்கள் காணப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒர் அம்சத்தில், முந்தைய காலக்கட்டத்தில் தோன்றிய மற்றொரு இலக்கியத்தைப் போன்ற முக்கிய கருத்து, கொள்கை, இலக்கணம், அமைப்புப் போன்றவற்றைக் கொண்ட ஒர் இலக்கியம். ஒப்பீட்டு இலக்கிய ஆய்வுகள், முந்தைய இலக்கியங்களுடன் எந்த ஒற்றுமையும் இல்லாத மற்றும் முற்றிலும் புதிதாக உருவாக்கப்பட்ட இலக்கியங்களைக் கொண்ட இலக்கியங்கள் குறிப்பிட்ட மொழிகளின் இலக்கியக் கொள்கைகளால் புறக்கணிக்கப்பட்டுள்ளன. தேன்கூடு கவிதைத் தொகுப்பு நூலில் உள்ள கவிதைகள் பண்புசார் ஆய்வு, நூலக ஆய்வு அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வு குழந்தைகள், இளைஞர்கள், குடும்ப உறுப்பினர்கள், சமூகத்தினர் ஆகியோரின் சிந்தனைகளை வடிவமைக்க செய்கின்றன. மேலும், இம்மாதிரியான நன்னெறிப் பண்புகள் வாழ்க்கையினைச் செம்மைபடுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

**கருச்சொற்கள்:** தேன்கூடு, மரபு கவிதை, நன்னெறிப் பண்புகள்

**Abstract**

This study aims to identify the ethical characteristics that emerge in the collection of poetry Thenkudu. The poet Seeni Naina Mohammed is a renowned and respectable poet in Malaysia. In the world of classical poems, he established a name for himself and he is a literary legend who observed the society in which he lived. The anthology of poetry Thenkudu was published in the year 2011, which comprises more than 200 classical poems that have been written by him from 1958 to 2011. Moral values are seen in many poems in the collection. A literature which has key concept, principle, grammar, structure, etc. akin to another literature that appeared at an earlier time period, in any one of the above-mentioned aspects. The comparative literature studies have found that, the literature which doesn't have any semblance with the previous literature and having entirely newly created literature has been ignored by the literary principles of that particular language. A qualitative method based on library and text analysis is carried out in this research. The analyzed of moral values can serve as an example and guidance to children, teenagers, family members and the community in general. The implication of these research findings would help to change the mindset of youths regarding moral values and consequently be absorbed into their daily routine.

**Keywords:** Thenkudu, Poems, Moral Values

**முன்னுரை**

மொழி, மக்களின் மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். ஒரு மொழி செம்மாந்த இடத்தைப் பெறுவதும் செழிப்புற்று விளங்குவதும் அம்மொழியைப் பேசும் மக்களை ஒட்டியே அமைந்துள்ளது. அவ்வகையில் உலகில் பல எண்ணிறந்த மொழிகள் தோன்றியதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், இன்று காலப்போக்கில் பல மொழிகள் அழிவின் விளிம்பில் இருக்கின்றன. சிலவே, இன்றளவும் நிலைத்து வாழும் போற்றினைப் பெற்றுள்ளன. அம்மொழிகளுள் தமிழ், சீனம் போன்ற ஒரு சில மொழிகளே பேச்சு வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மொழியும் மொழி வழியான இலக்கியமும் மாந்தனின் செம்மாந்த வாழ்வு நெறிகளுக்கு வழிக்காட்டியாக அமைந்து வருகின்றது.

சிறந்த எண்ணங்களைச் சிறந்த மொழியில் கூறுவது அல்லது எழுதுவதுதான் இலக்கியம். சிறந்த இலக்கியம் என்பது இலக்கை நோக்கி நம்மைக் கொண்டு செல்லும் ஆற்றல் கொண்டது. மனித வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளும் அனுபவத்தை முன்னிறுத்தியே நடைபெறும். ஒவ்வொரு காலச்சூழ்நிலையிலும் மனிதன் இன்பத்தையும் துன்பத்தையும் சேர்ந்தே அனுபவிக்கின்றான். தன்னுடைய வாழ்நாளில் இன்பத்தை மட்டும் நுகரும் மனிதன் சில நேரங்களில் தீயவைக்கும் அடிமையாகிறான். அப்பொழுது அவனைத் திருத்த வேண்டியுள்ளது. அதற்காக எழுதப்பட்டதுதான் அறநூல்கள். அறநூல்கள் அறத்தை வலியுறுத்தி மனிதனை நல்வழிப்பாதையில் கொண்டு செல்ல உதவுகின்றன. மனிதச் சமுதாயம் நல்லன்புடன் வாழ வேண்டுமாயின் அங்குச் சான்றோர்களும் அறநூல்களும் தேவைப்படுகின்றன.

அவ்வகையில், புலம்பெயர்ந்த தமிழரான இறையருட்கவிஞர் செ. சீனி நைனா முகம்மது அவர்கள் பல்வேறு வகையில் தமிழ் இலக்கியத்தை மலேசிய மண்ணில் வாழவும் வளரவும் வழிவகுத்துள்ளார். இவர் மரபுவழி வந்த இலக்கிய இலக்கண அறிவுடையவர். மலேசியத் திருநாட்டின் மதிப்புறு கவிஞர். மரபு கவிதை உலகில் தனக்கென ஓரிடத்தை நிலை நிறுத்திக்கொண்ட இவர், தான்வாழும் சமூகத்தை உற்று நோக்கிய ஒரு படைப்பாளியாவார். 1958 முதல் 2011ஆம் ஆண்டு வரை இவர் எழுதிய 200க்கும் மேற்பட்ட மரபு கவிதைகள் உள்ளடக்கிய 'தேன்கூடு' எனும் கவிதைத் தொகுப்பு 2011ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பல கவிதைகளில் நன்னெறிப் பண்புகள் காணப்படுகின்றது.

**ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு**

இவ்வாய்வுக்கான தரவுகள் ‘தேன்கூடு’ எனும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள சில கவிதைகளில் நன்னெறிப் பண்புகளைக் குறித்துப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**விடாமுயற்சி**

இறையருட் கவிஞர் ஐயா சீனி நைனா முகம்மது அவர்கள் இந்த நாட்டில் நம்மோடு தொல்காப்பியராகவும் தொல்காப்பியமாகவும் வாழ்ந்த மாபெரும் தமிழறிஞர். பெரும்பாலும் கவிஞர் கட்டுரைகள், சிறுகதைகள், வானொலி நாடகங்கள், கவிதைகளை எழுதியுள்ளார். எதுவும் முடியும் என்ற கவிதையின் தலைப்பிலேயே நம்மால் கவிதையின் கருப்பொருளைக் கணிக்க இயலும். அவ்வகையில், இக்கவிதையின் கருப்பொருளானது விடாமுயற்சி என்பதே ஆகும். இக்கவிதையில் நாம் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணம் கொண்டு அதற்கு நாம் முனைப்போடு செயல்பட வேண்டும் என்பது வலியுறத்தப்படுகிறது. இக்கவிதையில் கிடைக்கப்பெறும் நன்னெறிப் பண்பானது யாதெனில் நாம் நம் வாழ்க்கையில் துவண்டுவிடக்கூடாது என்பது;

துவளும் மணந்தானே எதிரி – அதைத்
தூக்கி எறிவாயடா!
துணியும் வரைதானே துயரம் – நீ
துள்ளி எழுவாயடா!

என்ற வரியில் புலப்படுகிறது. இதற்குச் சான்றாக, தெய்வப்புலவர்

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். (குறள் 611)

எனும் திருக்குறளில் நம்மால் முடியுமா என்று மனத்தளர்ச்சி அடையாமல், முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாக அமையும் என்று மொழிந்துள்ளார். அடுத்ததாக, வாழ்க்கையில் கடினமான உழைப்பு மிக அவசியம் எனும் நன்னெறிப்பண்பு வெளிப்படுகிறது. எடுத்துக்காட்டாக;

உடலை வளைக்காத எவனும் – இங்கு
உலவும் பிணந்தானடா!
உழைக்கத் தயங்காத கையில் – இந்த
உலகம் சிறுபந்தடா!

எனும் வரிகளில் நாம் ஒரு காரியத்தை எண்ணுவது பெரிதல்ல. அதைச் செயல்படுத்தி அதற்கேற்ப உழைக்க வேண்டும். உழைப்பிற்குப் பலன் நிச்சயம் கிடைக்கும். எந்தவொரு செயலும் உழைப்பினால்தான் நிறைவு பெறுகிறது.

சங்க இலக்கியப்பாடல்களில் மனித மனங்களின் பண்புநலன்களாலும் உணர்வுகளாலும் இணைத்துப் பின்னப்பட்ட இலக்கியமாகும். சங்க இலக்கியத்தை ஆய்வு செய்த அறிஞர்களின் கூற்றுகளின் வழியாக உளத்தியல் இலக்கியம் என்று கூறலாம். இவ்விலக்கியத்தை அணுகுமுறை வகைகளில் உளத்தியல் அணுகுமுறையும் (Psychological Approach) ஒருவகையைச் சார்ந்தது. சங்கப் பாடல்கள் அனைத்தும் மனித மனங்களின் ஒட்டுமொத்தமான உணர்வுகளின் வெளிப்பாடுகளையும் முதன்மையாகக் கொண்டவை. ஆதலால் இக்கருத்துகளின் வழியாகக் குறுந்தொகைப் பாடல்களில் கபிலரின் உளத்தியல் அணுகுமுறையை இங்கு ஆராயலாம். ஐந்திணைப் பாடல்களில் குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாடுவதில் புலமைப்பெற்றவர் கபிலர்.

இவர் குறுந்தொகையில் இருபத்தெட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். தலைவன் கூற்றாக ஐந்து பாடல்களையும், தலைவி கூற்றாகப் பதினைந்து பாடல்களையும், தோழி கூற்றாக ஐந்து பாடல்களையும் பாடியுள்ளார். இவர் பாடியுள்ள பாடல்கள் அனைத்தும் குறிஞ்சி நிலமக்களின் காதல் ஒழுகலாறுகளை எடுத்துரைப்பதாக உள்ளன. இப்பாடல்களில் உளத்தியல் அணுகுமுறையில் அமைந்துள்ள பாங்கினை இங்கு விளக்க முயலுகிறது .

**கடமையுணர்வு**

இன்றைய காலத்தில் பிள்ளைகள் பெற்றோரின் அன்பின்பால் கொண்டுள்ள ஏக்கத்தையும் பெற்றோரின் பொறுப்பின்மையையும் அடிப்படையாகக் கொண்டு 'யாரேனும் சொல்லுங்களேன்' என்ற கவிதை இயற்றப்பட்டது. அதாவது அக்குழைந்தையின் ஏக்கங்களையும் எதிப்பார்ப்பையும் யாரேனும் அதன் பெற்றோரிடம் கூறுங்களேன் என்ற கருத்தை வெளிப்படுத்தும் விதமாகக் கவிதைக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இக்கவிதையில் கவிஞர் இக்காலப் பெற்றோரின் நிலையை அழகாக எடுத்துரைக்கிறார். இக்கவிதையில் சுட்டிக்காட்டப்படும் நன்னெறிப் பண்பானது நாம் ஒவ்வொருவரும் நமது கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும். கடமை என்று கூறும் பொழுது நமது நினைவில் வருவது நம் பணியின்பால் கொண்ட கடமையாகும். ஆனால், ஒவ்வொரு உறவுகளின்பாலும் நமக்குப் பல கடமைகள் இருக்கின்றன.

இதில் முக்கிய கடமையாகக் கருதப்படுவது நாம் பெற்றோரின் மேல் கொண்டுள்ள கடமை மற்றும் பிள்ளைகளின் மேல் கொண்டுள்ளக் கடமையாகும் (மெர்வின், 1996). இவ்விரு கடமைகளையும் ஒரு மனிதன் செய்யவில்லை என்றால் அவன் எந்த அறம் செய்தும் பயனில்லை. இக்கவிதை வரியில் பெற்றோர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யாதது எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக;

காலைமுதல் இரவுவரை காணாமல் நானமுழும்
கண்ணீரை மிஞ்சியதா கார்வீடு காசு பணம்

என்ற வரிகளில் பெற்றோரின் அன்புக்காக ஏங்கி தவிர்க்கும் குழந்தையின் கண்ணீரைவிட கார், வீடு, பணம் பெரிதா என்று குழந்தை வினவுகிறது. இஃது இன்றைய சூழலை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. குழந்தையின் வளர்ச்சிக்குப் பெற்றோரின் அன்பு மிக அவசியமாகும். அவ்வகையான அன்பைப் பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளுக்கு முழுமனதுடன் வழங்க வேண்டும். இதை எடுத்துரைக்கும் வகையில்;

அந்த வானுக்கு இரண்டு தீபங்கள் அது
சூரியன் சந்திரனே
என் வாழ்வுக்கு இரண்டு தீபங்கள்
என் தாயோடு தந்தையரே

என்ற வைரமுத்துவின் பாடல் குழந்தைக்குப் பெற்றோரின் அன்பு எவ்வளவு முக்கியம் என்பதை எடுத்துரைக்கிறது. இக்கவிதையில் தென்படும் மற்றுமொரு கருத்தானது பொதுநலமாகச் சிந்திக்காமல் இருப்பது. பெற்றோர்கள் இருவரும் பணிப்புரிவதற்குப் பல

காரணங்கள் இருந்தாலும் அவர்களின் பிள்ளைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். ஏனெனில், ஒரு குழந்தை வளரும் பொழுது அதற்குப் பெற்றோரின் அன்பு மிக முக்கியமாகும். குறிப்பாக அன்னையின் அன்பு (நடேசன், 2018).

**பொறுப்புணர்வு**

'உனக்கேது ஓய்வு' எனும் கவிதையைச் சற்று ஆராய்ந்து பார்க்கையில் பொறுப்புணர்வு, மொழிப்பற்று, நேர்மை ஆகிய நன்னெறிப் பண்புகளை மெய்யுணர முடிகிறது.

> நீ ஓய்ந்திருக்க நானெங்கே கண்டேன்!
> காய்கதிரின் வெயிலினையும் கடுமழையின் பெயலினையும்
> கருதாமல் பணிபுரிவாய் எங்கும்

எனும் கவிதை வரிகளின் வாயிலாக ஓய்வின்றி நேரம் காலம் கருதாமல் தனது கடமையை ஆற்ற வேண்டுமென்று கூறப்படுகிறது. 'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே' என்று பகவத்கீதைச் சொல்லப்பட்டுள்ளது. (சுகி சிவம், 2013) இக்கவிதையிலோ, ஆசிரியர் இராமலிங்கம் எந்தவொரு பலனை எதிர்பாராமல் நேரம் காலம் பாராமல் தனது கடமையைச் செய்ததைக் கவிஞர் அவர்கள் தெளிவுறுத்தியுள்ளார். ஏனெனில், கடமை உணர்ச்சியே நமது நேர்மையான வாழ்வின் சூத்திரமாக விளங்குகிறது. எனவே, காலம் கடந்து வருந்தாமல் இப்போதே நமது கடமைகளைச் செயல்படுத்துவது நனிச்சிறப்பாகும் என்பது அடியேனின் பணிவான கருத்தாகும்.

**நேர்மை**

அடுத்ததாக, நேர்மை என்ற நன்னெறிப் பண்பானது,

> கடமையிலே ஏமாற்றிக் காசுறைக்குக் கைநீட்டும்
> கள்ளர்களைக் காணுகின்ற வேளை – நீ
> கண்களினால் வீசிடுவாய் வாளை!

எனும் கவிதை வரிகளின் மூலம் நாம் நமது கடமையைச் செய்கையில் எந்தவொரு ஊழலுமின்றி நேர்மையாகச் செயலாற்ற வேண்டுமென்று மெய்ப்பிக்கின்றது. ஏனெனில், நேர்மை ஒரு சிறந்த கொள்கை. அதை எத்தகைய சூழ்நிலையிலும் விட்டுவிடாமல் இருப்பது மாபெரும் வெற்றியைத் தரும். (ஜெயந்தி, 2008) இதனை மெய்ப்பிக்கும் வகையில் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் செய்ய வேண்டிய கடமை இருக்கிறது; அதனை நேர்மையுடன் செய்து முடிப்பது வெற்றிக்கு விருந்தாக அமையும் என்பதில் எந்தவொரு ஐயமில்லை.

**தாய்மொழிப்பற்று**

ஐயா சீனி நைனா முகமது அவர்கள் இயற்றிய 'தேன்கூடு' எனும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற 'நிலைபெற நீ வாழியவே!' கவிதையானது 'தமிழ்த்தாய் வாழ்த்து' எனும்

கருப்பொருளை மையமாய் வைத்து எழுதப்பட்டது. இக்கவிதையில் தென்படும் நன்னெறிப்பண்புகளில் முதன்மை வகிக்கின்றது 'தாய்மொழிப்பற்று'. ஒரு மனிதன் தனது தாய்மொழியின் மீது பற்றுக் கொண்டிருக்க வேண்டுமெனில் முதலில் அவன் அம்மொழியின் தனித்துவத்தையும் சிறப்பு அம்சங்களையும் உள்ளுனர்ந்திருக்க வேண்டும். இக்கவிதையில் வரும்,

'தனிப்பெருமை கொண்டவளே'

என்று தமிழைப் பாடிப் புகழும் வரி தமிழின் சிறப்பை நன்கு உணர்த்துகிறது. இத்தொடர் தமிழ் மற்ற மொழிகளுக்கு இல்லாத பல தனிச் சிறப்புகளையும் அவற்றின் விளைவாக உலகில் தனிப்பெருமையையும் கொண்டிருப்பதைக் குறிக்கிறது. மொழியறிஞர் தேவநேயப் பாவானார் உலகில் பல மொழிகள் இருந்தாலும் அவற்றுள் தொன்மை, முன்மை, இளமை, வலிமை, செம்மை, பெருமை, திருமை எனப் பல்வகைச் சிறப்புகளைத் தமிழ் ஒருங்கே உடையது என்று ஆணித்தரமாகச் சொல்கிறார். ஆகவே, ஒவ்வொரு தமிழரும் தனது தாய்மொழியின் சிறப்பை நன்குணர்ந்து மொழியாளுமைப்பெற்று விளங்க வேண்டும் என்பதைக் கவிஞர் உணர்த்துகிறார்.

மடமையினைக் கொன்றொத்தும் உரிமைகளை
வென்றெடுத்தும்
மலைசியத்தில் இனமுயர்தல் வேண்டும் – என்று
மனங்கிடந்து துடித்திருப்பாய் யாண்டும்!

எனும் கவிதை வரிகளின் வாயிலாக மொழிப்பற்று எனும் நன்னெறிப் பண்பின் வழியாக நமது இனத்தை உயர்ந்த நிலையை அடைய செய்வதற்கு நமது மனம் ஏக்கம் கொள்ள வேண்டுமென்று உணர முடிகிறது. அவ்வகையில், மொழிப்பற்று இல்லாதவர்களிடம் தேசப்பற்று இருக்காது என்று தந்தை பெரியார் நமது மனத்தில் பதியமிட்டுள்ளதைச் சற்று நினைவில் கொள்வோம். (சுகி சிவம், 2013) எனவே, தமிழர்களுக்குத் தாய்மொழி மீது பற்றுப் பெருக வேண்டும் என்பது அடியேனின் கருத்தாகும்.

**நிறைவுரை**

இவ்வாய்வானது புலம்பெயர்ந்த தமிழரான இறையருட்கவிஞர் செ. சீனி நைனா முகம்மது அவர்களால் இயற்றப்பட்ட 'தேன்கூடு' எனும் கவிதைத் தொகுப்பில் சில நன்னெறிப் பண்புகளை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வாளர், இந்த ஆய்வில் 'தேன்கூடு' கவிதையில் காணப்பட்ட நன்னெறிப் பண்புகளான விடாமுயற்சி, கடமையுணர்வு, பொறுப்புணர்வு, நேர்மை, தாய்மொழிப்பற்றைக் கொண்டு ஆய்வை மேற்கொள்ளப்பட்டுள்ளார். இம்மாதிரியான நன்னெறிப் பண்புகளைக் கட்டாயமாகப் பள்ளி மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும் மற்றும் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியவையாகும்.

**துணைநூற்பட்டியல்**

சீனி நைனா முகமது, செ. (2014). *தேன்கூடு.* பூலாவ் பினாங்கு; உங்கள்குரல் எண்டர்பிரைசு.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பறாளை விநாயகர் பள்ளுவில் இலக்கணம்

# Rhetorical Grammar in Paralai Vinayakar Pallu

ரஜிதா அரிச்சந்திரன்/ Rajitha Arichandiran[1]
[1]Cultural development officer
Divisional Secretariat, Jaffna
Corresponding Email: aricharajitha19@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழத்திலக்கிய வரலாற்றில் ஒல்லாந்தர் காலத்தெழுந்த பள்ளுப் பிரபநதங்களுள் முக்கியமானதும் நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்டதுமான பறாளை விநாயகர் பள்ளானது பறாளை வாழ் ஐங்கரனை தலைவராக கொண்டு மருத நிலங்களில் வேலையாட்களாக இருந்த பள்ளர்களின் வாழ்க்கை முறையை பாடுபொருளாக கொண்டு இயற்றப்பட்டது. இவ்விலக்கியம் யாப்பிலக்கணம்,அணியிலக்கணம் பிசகாத பாடல்களை அள்ளித்தந்துள்ளது. பாடலுக்களிற்கு அழகு சேர்க்கும் வகையில் அணிஇலக்கணத்தின் சொல்லணி பொருளணி ஆகியவற்றில் பொருளணிகளில் உவமை அணி,உருவக அணி ,தற்குறிப்பேற்ற அணிகளை கையாண்டு பாடல்களை மெருகேற்றியுள்ளமை சிறப்பாகும். அத்துடன் சொல்லணிகளான எதுகை ,மோனை போன்றவற்றினையும் சிறப்பாக இணைத்து பாடல்களை ஆக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து யாப்பிலக்கணத்தில் பா, பாவினங்கள் ,இசைப்பாடல்களை கையாண்டு செய்யுள்கள் படைக்கப்பட்டுள்ளது. பா வில் சிந்தியல்,நேரிசை வெண்பாக்களும் கலிப்பாவும் பாவினங்களில் விருத்தம், தாழிசை என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இசைப்பா வடிவமான சிந்துப்பாவும் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேற்குறிக்கப்பட்டுள்ள அணி யாப்பு இலக்கணங்களுக்கூடாக கடவுள் வாழ்த்து, நாட்டு நகர வர்ணணை, பள்ளியர் தோற்றம், பள்ளன்தோற்றம், வாழ்க்கை முறை, பண்ணையார் தோற்றம், ஊடல், கூடல், சக்களத்திச்சண்டை, இன்னஓரன்ன பலவும் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.இவ்வாய்வின் ஊடாக ஈழத்தில் தமிழிலக்கணத்தின் யாப்பிலக்கணம்,அணியிலக்கத்தின் பயன்பாடு குறித்தும் பள்ளுஎன்ற சிற்றிலக்கியத்தின் உருவமைப்பு குறித்தும் இந்த ஆய்வினூடாக ஆய்ந்து அறியக்கூடியதாக உள்ளது.

**கருச்சொற்கள்:** பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, யாப்பிலக்கணம், அணியிலக்கணம்

**Abstract**

Paralai Vinahyaka Pallu that was composed by a poet called Scholar Sinnathamby of Nallur during Dutch period, is one of the important literatures in the literary history of Ealam. It makes Lord Ainkaran worshipped in the village of Paralai as the hero and means the way of life of Pallar community working in agricultural lands. It gives plenty of lyrics with impeccable yapilakkanam and Aniyilakkanam. Yappilakkanam songs have been created using pa and musical songs. It is noteworthy that sindhial, straight venpas and kalippa have been used in the pa, virutham and talisai, and Sindhuppa, an musical form, has also, The above - mentioned team is a great greeter, city commentary, pallan appearance, pallar committee lifestyle, farm appearance,are recognised.

**Keywords:** Pallu, Paralaivinayakar Pallu, Prosodical, Rhetorical Grammar

**முன்னுரை**

தமிழிலக்கிய வரலாற்றில் மன்னனும் மக்களும் செல்வச்செழிப்புடன் வாழ்ந்த காலங்களில் காவியங்கள் பல தோன்றி தமிழுக்கு அணிசேர்த்தன. வேற்றுமன்னர் படையெடுப்புகளுடன் வளங்குன்றிய வேளையில் சமயவழிப்பட்ட சிற்றிலக்கியங்கள் பெருவாரியாக தோற்றம் பெற்றன. இதனைப் பாரதியார் "காலத்திற் கேற்ற வகைகள் அவ்வ காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்" எனக் கூறியுள்ளார்.அவற்றில் நிலப்பிரபுத்துவ சமுதாய அடிப்படை நிலையை விளக்கும் பள்ளு இலக்கியம் கோயில் சார்ந்த சூழலைத் தமது களமாகக் கொண்டமைந்து. கி.பி பதினாறாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதமாற்றம் அமோகமாக நிகழ்ந்த காலப்பகுதியில் அடித்தட்டு மக்களாகிய மள்ளர் அல்லது பள்ளர் என்ற இனக்குழுவினரும் மதம் மாறவும் நிலவுடைமை சமுதாய கட்டமைப்பிலிருந்து விலகவும் தலைப்பட்டவேளை .இவ்விதமான சிந்தனையினை அவர்களிடம் உடைத்து அவர்களை நிலவுடைமையின் கீழ் வைத்திருக்க அவர்களைப் பாடுபொருள் ஆக்கி பாடப்பட்டதே பள்ளிலக்கியமாகும்.அந்தவகையில் ஈழத்திலக்கிய வரலாற்றுக்காலங்களில் ஒல்லாந்தர் காலத்தில் பறாளை விநாயகர் பள்ளு தோற்றம் பெற்றது. இது நல்லூர் சட்டநாதர் வீதியில் வாழ்ந்த புலவர் வில்வராசர் மகனான நல்லூர் சின்னத்தம்பி புலவர் அவர்களால் சுழிபுரம் பறாளையில் வீற்றிருக்கும் கண்ணைக்கோதி காக்கைப் பிள்ளையாரைப் பாட்டுடைத் தலைவராய்க் கொண்டு பறாளை வயல் நிலங்களில் வேலை செய்த மள்ளர் அல்லது பள்ளர் இன மக்களின் வாழ்வியல்சார் பிரச்சனைகளைச் சிருங்கார ரசம் மிக்கதாகவும், பள்ளிலக்கண முறை தவறாதும் பாடப்பட்டுள்ளது. இந்த பள்ளிலக்கியத்தில் பாடலை அமைக்கும் போது புலவர்கரால் கையாளப்பட்ட யாப்பிலக்கணம் பாடலுக்கு அழகைத் தரும் அணியிலக்கணங்களுளையும் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பறாளை விநாயகர் பள்ளின் அமைப்பு**

முத்தமிழையும் தன்னகத்தே கொண்டு படைக்கப்பட்ட பறாளை விநாயகர் பள்ளு கடவுள் வாழ்த்து, பள்ளியர் தோற்றம், பள்ளன் வருகை, நாட்டு வளங்கூறல், குயில் கூவுதல், மழைவேண்டல், ஆண்டையை வணங்கல், விதைவகை கேட்டல், மழை கேட்டல், ஆற்றின் வரவு, பண்ணைத்தலைவன் வரவு, பள்ளியர் முறையீடு, இளையாளை வெருட்டல், பள்ளன் வெளிப்படல், தொழுவில் மாட்டல், பள்ளி புலம்பல், முத்தபள்ளி அடிசில் கொண்டுவரல், பள்ளன் மன்னிப்பு கேட்டல், பள்ளிமறுத்தல், அவன் சூழுறல், பள்ளனைமீட்க வேண்டி முத்த பள்ளி பண்ணையிடம் வேண்டல், விதை காளை : மேல் காளை பாய்தல், பள்ளிகள் புலம்பல், பள்ளன் எழல், பண்ணைத்தலைவருக்கு அறிவித்தல், நாற்றுநடல், விளைந்த பிறகு செப்பஞ்செய்தல், நெல் அளித்தல், முத்த பள்ளி முறையீடு பள்ளிகள் ஒருவருக்கொருவர் ஏசல், ஆகிய பகுதிகளைத் தன்னகத்தே கொண்டு இவற்றினூடாக பறாளைப் பதியில் வீற்றிருக்கும் விநாயகர் புகழையும் அடித்தட்டு மக்களின் வாழ்வியல் நிலையினையும் பள்ளிலக்கணம் சற்றும் பிசகாத வகையில் எடுத்தியம்புகிறது.

**பறாளை விநாயகர் பள்ளுவில் யாப்பிலக்கணம்**

தமிழின் ஐந்திலக்கணங்களில் யாப்பிலக்கணமும் ஒன்றாகும். “எழுத்து, சீர், அடி, எனும் அமைப்பில் குறித்த பொருள் நிறையுமாறு அமைத்தல் யாப்பாகும்'' என அகவுதல், துள்ளுதல், செப்பல், தூங்கல் ஆகிய ஓசைகளை வழங்கவல்லதாக அமைந்துள்ளது யாப்பிலக்கணம். அந்தவகையில் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா,என நான்கு வகைப்படும். இவற்றுடன் பாவினங்களாக விருத்தம், தாழிசை அமைகின்றன. மேற்குறிப்பிட்ட பாக்களில் நேரிசை வெண்பா இன்னிசை வெண்பா, விருத்தம், கலிப்பா ஆகிய யாப்புக்களில் அமைந்த பாடல்களும் சிந்திசைப்பாவால் அமைந்த பாடல்களாகவும் அமைந்துள்ளன. அந்தவகையில் வெண்பவானது செப்பலோசையில் மாச்சீர், விளச்சீர், காய்ச்சீரில் அமைந்து இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளையால் மிகவும் நேர்த்தியாக அமைந்த பாவாகும். வெண்பாவை வன்பா என்றும் அழைப்பார்கள் இது நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா, குறள் வெண்பா ஆகிய வகைகளைத் தன்னகத்தே கொண்டது. இதில் நேரிசை வெண்பா வடிவில் அமைந்த பாடல்கள் பறாளை விநாயகர் பள்ளுவில் அமைந்தள்ளன. காப்புப்பாடலாகிய,

“தொல்லுலகம் போற்றுஞ் சுழிபுரம்வா வைக்கின்றேன்
பல்வளஞ்சேர் பள்ளினிசை பாடலே_ வில்வழங்கு .....”

நேரிசை வெண்பாவிற்குரிய வெண்சீர் வெண்டளை இயற்சீர் வெண்டளை கலந்து இரண்டாவது அடியில் தனிச்சொல் பெற்றுப் பொருத்தமான எதுகையுடன் அமைந்துள்ளது. அடுத்து இன்னிசை வெண்பா பாடலும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. வெண்பா வடிவம் கடவுளைப்பாடுமிடங்களில் மட்டுமே பயன் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து கட்டளைக்கலித்துறை என்னும் பாவினத்தில் அமைந்த பாடல்களும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பாவினம் கலித்துறை வகையைச் சேர்ந்தது. தொடக்கம் நேரசையில் தோன்றினால் ஒற்றெழுத்துகளைத் தவிர்த்துஎண்ணும்போது பதினாறு எழுத்துகள் வருமாறும்; நிரையிசையில் தொடங்கினால் பதினேழு சொற்கள் வருமாறும் அமையும் ஒவ்வொரு அடியிலும் ஐந்து சீர்களைக் கொண்டதாகவும் நான்கு அடிகளைக் கொண்டும் மா:விளம்:காய் வாய்ப்பாட்டைப் பெற்றும் ஈற்றில் ஏகாரம் பெற்றும் முடிவதாகவும் அமையும். விளங்காய்ச் சீர் வராது. இந்த பாவினமும் மிக குறைவாகவே அமைந்துள்ளது. உதாரணமாகத் தலைவன் பொருள் வயிற் பிரிகையில் தலைவியின் துன்பத்தைத் தோழியின் கூற்றாய்க் கூறியுள்ளார்.

“சங்கத்தை ஏந்தும் பரஞ்சோதி நாதர் சயிலமின்னார்
புங்கத்தை வாய்த்த மணிநீலப் பார்வை பொலியுமுத்து
.....” ப.வி.ப 105

அடுத்து கொச்சகம். இது கலிப்பா வகைகளுள் ஒன்று கலிப்பாவின் உறுப்புகள் முறைமாறியும் கூடியும் குறைந்தும் வருகின்றபோது அது கொச்சகம் ஆகின்றது. தரவு ஒன்றோ இரண்டே வந்தும் தாழிசை சிலவே பலதோ வந்தும் தரவு தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம்,ஆகிய உறுப்புகள் தம்முள் மயங்கியும் வெண்பாவினோடும் ஆசிரியத்துடனும் மயங்கி வந்து துள்ளலோசையுடன் கலித்தளையால்

இணைக்கப்படும் பாவாகும். மழை கேட்டல் பகுதியில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் கொச்சகப்பாடலாகவே அமைந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக,

"இருநிலத்து வேதியரும் ஏருழுவே ளாளர்களும்
பரிவினுடன் கடல்வருண பகவானைக் கண்டிறைஞ்ச்சி
விரிதிரைநீர் வளம்பெருக மேவுமுயிர்ப் பயிர்தழையத்
தருமமொடு தரைவிளங்கத் தந்தருளீர் மழையையெனறார்"

ப.வி.ப 64 பாடலைக் கூறலாம்.

தொடர்ந்து , விருத்தப் பாவினம். இது அறுசீர் விருத்தம், எழுசீர் விருத்தம்,எண்சீர் விருத்தம் எனும் வகைகளாக அமையும். இங்கு எழுசீர்விருத்தம் எண்சீர் விருத்தங்கள் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. எழுசீர்விருத்தம் முதலடி நான்கு சீராகவும் இரண்டாம் அடி மூன்று சீர்களாகவும் அமையும்; இதில் முதற்சீரும் ஐந்தாம் சீரும் மோனையால் ஒன்றியும் முதற்சீரும் எட்டாம் சீரும் எதுகையால் ஒன்றியும் அமையும். அடுத்து எண்சீர் விருத்தம் இது முதன் சீரும் ஐந்தாவது சீரும் மோனையாலும்; முதற்சீரும் ஒன்பதாவது சீரும் எதுகையாலும் ஒன்றி வரும். இவ்வாறான பாடல்கள் பறாளை விநாயகர் பள்ளுவில் மூத்தபள்ளி தோன்றல், இளைய பள்ளி தோன்றல், பள்ளன் தோன்றல், பள்ளியர் வரலாறு, நாட்டு நகர வளம் கூறல் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பாடல்கள் விருத்தப்பாவினத்திலேயே உள்ளன. உதாரணமாக,

கோட்டு வாரிச் நான்முகன் பேணிய
தும்பி மாமுக அம்புலி தாங்கிய ....."

என்ற சிவகாமி அம்மை வாழ்த்துப் பாடலை குறிப்பிடலாம். இவை சிந்துப் பாடல்கள்; மிகவும் எளிய பாடல்கள் சத்தம் அமைந்து கேட்போர் இன்புறும் வகையில் அமையும். ஏனைய பா மற்றும் பாவினம் பாடல்களை விட பறாளை விநாயகர் பள்ளுவில் அதிகமான பாடல்கள் அமைந்திருப்பது சிந்து இனமாகவே என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகைப் பாடல்கள் நாட்டார் மெட்டைச் சார்ந்தவை. இதை சமனிலை சிந்து வியனிலைச்சிந்து எனப்பிரிக்கலாம். சமனிலை சிந்து சமமான அடிகளால் அமையும் வியனிலை சிந்து அவ்வாறமையாது. இங்கு நாட்டு வளம் கூறல், குலமுறை கூறல், பண்ணைக்காரன் வருகை, ஆற்றின் வரவு, முகூர்த்தங்கேட்டல் எனப்பல பகுதிகள் சிந்துப்பாவாகவே அமைந்துள்ளன. உதாரணமாக,

பைப்ப ணிப்பகு வாய்ப்பட்ட திங்களிற்
பாரு மோதக் கடற்கரை தோறு
மிப்பி வாயிலின் முத்த முக்கிய
வீழ மண்டல நாடெங்கள் நாடே.

ப.வி.ப 16 என்ற பாடலை கூறலாம். மேற்போந்த வகையில் யாப்பிலகணத்தால் அமைந்த அற்புதமான பாடல்களைத் தன்னகத்தே கொண்டதாகப் பறாளை விநாயகர் பள்ளு அமைகின்றது.

**அணியிலக்கணம்**

பெண்ணுக்கு ஆபரணங்கள் அழகைச் சேர்ப்பதைப் போலப் பாடலுக்கு அணியிலக்கணம் அழகை சேர்க்கின்றது. அந்தவகையில் அணிகளைச் சொல்லணி, பொருளணி என இரண்டாக வகுக்கலாம் என்று இலக்கண நூல்கள் கூறுகின்றன. சொல்லணி என்பது எதுகை, மோனையினைக் குறிப்பதாகவும் பொருளணி என்பது உவமை, தற்குறிப்பேற்றம் முதலான அணிகளைக் குறிப்பதாயுள்ளது. அந்தவகையில் பறாளை விநாயகர் பள்ளுவில் அணியிலக்கணத்தின் இருவகையும், சிறப்பாக அமைக்கப்பட்ட அழகிய பாடல்கள் தமிழுக்கு அழகை சேர்க்கும் வகையில் சின்னதம்பிப் புலவரால் உருவாக்கப் பட்டுள்ளன.

பறாளை விநாயகர் பள்ளிலக்கியம் யாப்பு முறைக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளதால் இங்கு எதுகை மோனை என்பன இயல்பாகவே அமைந்துவந்துள்ளது. உதாரணமாக,

“கருமயி லாட குயிலினம் விடக்
கவியின மோடக் கரடிபுல்வாய்
பொருபுலி யாளித் திரள்மரை சாரற்.....”

ப.வி.ப 70 என்ற பாடலில் முதற்சீரும் ஐந்தாவது சீரும் மோனையாலும் முதற்சீரும் எட்டாவது சீரும் எதுகையாலும் இணைந்து பாடலுக்கு அழகைக் கொடுக்கிறது. அடுத்து, பொருளணி நோக்குகையில், தெரிந்த பொருளைக் கொண்டு தெரியாத பொருளை விளக்கி பாடுவோருக்கு மனத்தில் பதிய வைக்கும் வகையில் உவமை அணியினை இலக்கியம் முழுதும் விதைத்துள்ளார் என்றே குறிப்பிட வேண்டும். அந்த அளவிற்கு இங்கு உவமையின் பயன்பாடு உள்ளது. பள்ளியரின் அங்கங்கள் குறித்த வருணனை, நாட்டு நகர வளம், பள்ளனின் வருணனை, நாற்றுநடல் போன்ற இடங்களில் அழகிய உவமைகள் அழகாகப் பின்னப்பட்ட உள்ளன. உதாரணமாக,

“கண்ண கன்ற வரைதலைச் செம்மணிக்
காந்தி தூயநந் தாவிளக் கோர் பால்” ப.வி.ப 8

என்ற பாடலடியில் மலைப்பகுதிகளில் ஒளிவீசும் மாணிக்க இரத்தினங்கள் தூண்டா விளக்கும்போது ஒளிரும் என்கிறார். இதைவிட பள்ளியர் தோற்றத்தில் பள்ளியின் மார்பகத்தை மலைக்குன்று போன்றதெனவும் “குத்து மலைக்குவடு.. பவி.ப 1 கோங்கிளம் புதிய முகை ..”அதாவது மொட்டுப் போன்றதென்றும் “கோட்டு வருடிக் கொங்கை பெருக்கும் “யானைக் கொம்பு போன்ற மார்பகம் என்றும் இடையினை உடுக்குப் போன்றது “துடி நேரிடை” எனவும் வருணித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து, நாட்டு வளம் குறித்துப் கூறுகையில் தற்குறிப்பேற்ற அணியினை கையாண்டு இயற்கை நிகழ்வுகளில் தன் கருத்தை ஏற்றி; மிக அழகாய்ப் பாடியுள்ளார் சின்னத்தம்பிப்புலவர்.

“தாற்று வாழை யிலைவென்று மாகத்
தரணி மேலால வட்ட மசை...”

அதாவது வாழை இலைகள் விரிந்தும் அகன்றும் இருப்பது இயற்கை. இதனைப் புலவர் பூமிக்குக் குடை பிடிப்பதாகக் கூறுகின்றார். தொடர்ச்சியாக,

"...காயடி யோதையை கண்டே வயற்
சேற்றை மீன்குதித் தறஉமஈன் மட்டும்
சேர்வது.."

நெற்கதிர்களை அடித்து நெல்களை உதிர்க்கும் சத்தத்தைக் கேட்ட வயற்சேறுகளில் உள்ள மீன்கள் துள்ளுவதை, அவை ஆகாயத்தில் கார்த்திகை நட்சத்திரம் உள்ள இடம் வரை செல்லும் என இயற்கை நிகழ்வில் தன்கருத்துக்களை ஏற்றி அழகாகப் பாடியுள்ளார்.

**நிறைவுரை**

மேற்குறிப்பிட்ட வகையில் யாப்பிலக்கணமும் அணியிலக்கணமும் விரவப்பெற்று அழகாகப் படைக்கப்பட்டு அடிநிலை மக்களின் வாழ்வியலைச் சிறப்பாக எடுத்தியம்பும், காலத்தால் அழியாத கலங்கரை விளக்கமாக பறாளை விநாயகர் பள்ளு அமைந்துள்ளது என்பதில் எந்த ஐயமும் இல்லை.

**துணைநூற்பட்டியல்**


சின்னத்தம்பிப்புலவர் (2016)பறாளை விநாயகர் பள்ளு பதிப்பு பிரதேச செயலகம் சங்கானை

கலாநிதி துரை மனோகரன் (1999) பள்ளு இலக்கியமும் பாமரர் வாழ்வியலும் வெளியீடு இந்துப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.

முனைவர் ய. மணிகண்டன் (2001) தமிழில் யாப்பிலக்கண வளர்ச்சி விழிகள் பதிப்பகம்

முனைவர் தெ.ஞானசேகரன்(206) பள்ளு இலக்கியம் பாரதிக்கு வெளியே பதிப்பு. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# புறநானூறு காட்டும் ஆட்சி நெறிகள்

# Rules of Governance Shown in Purananuru

கௌசல்யா லட்சுமி ஜெய்சங்கர்/ Kawselya Lechumy Jaishangkar[1]
[1]Undergraduate Student, Sultan Idris Education University
Corresponding Email: kawselyakayal@gmail.com

**ஆய்வுச்சாரம்**

160 புலவர்களின் பாடல்கள் அடங்கியுள்ள சங்க இலக்கியமான புறநானூற்றில் அடங்கியுள்ள ஆட்சி நெறிகளை ஆராய்வதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும். சங்கக்காலத்தில் வாழ்ந்த மன்னர்களிடையே காணப்பட்ட பண்புகளையும் அவர்களது புகழையும் உள்ளடக்கி பாடப்பட்ட 400 பாடல்களுல் ஆய்வாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 பாடல்களை மையப்படுத்தியே இந்த ஆய்வு அமையும். அவ்வகையில், சங்கக்கால மன்னர்களிடையே காணப்பட்ட 3 ஆட்சி நெறிகள் பண்புசார் அடிப்படையில் இந்த ஆய்வில் விளக்கப்படும்.

**கருச்சொற்கள்:** புறநானூறு, ஆட்சி, நெறிகள்

**Abstract**

The purpose of this research paper is to examine the political principles contained in Purananuru, a Sanga literature consisting of 160 poet's songs. This study will focus on 3 songs selected by the researcher out of 400 songs that were sung including the characteristics found among the kings who lived in the Sangam period and their fame. In this way, 3 political principles observed among Sangam kings will be explained in this study using qualitative analysis method.

**Keywords:** Governance, Purananuru, Sangam Period

## முன்னுரை

சங்க இலக்கியங்களை அகம், புறம் என இருவகையில் பிரிக்கலாம். காதலைப் பற்றிப் பாடும் பாடல்களை அகம் என்றும், காதலைத் தவிர்த்துப் பிற செய்திகளைப் பாடும் பாடல்களைப் புறம் என்றும் கூறுவர். புறப்பாடல்களானது அகப்பாடல்களைப் போல பெரும்பாலும் கற்பனையாகப் பாடப்பட்டதல்ல. மாறாகச், சங்க கால வரலாற்றை உள்ளடக்கிய பொருட்டே புற இலக்கியப் பாடகள் பாடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மலையமான் திருமுடிக்காரியின் சிறு குழந்தைகளைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் யானையின் காலில் இட்டு மிதிக்கச் செய்ய முற்பட்டபோது கோவூர்கிழார் கூறியதால், அக்குழந்தைகள் காப்பாற்றப்பட்டனர் என்ற செய்தியைப் புற இலக்கியப் பாடல்களில் காணலாம். இதன்வழி, சங்க கால வரலாற்றைத் தொகுப்பதற்குச், சங்கப் புறப்பாடல்கள் ஓரளவுக்குத் துணை நிற்கின்றன என்பதை அறியலாம்.

அவ்வகையில், இம்மாதிரியான புறவாழ்க்கையைப் பற்றிக் கூறும் நானூறு செய்யுள்களைக் கொண்டமைந்த நூலானது புறநானூறாகும். புறநானூற்றிலுள்ள சில பாடல்கள், குறிப்பாக இரண்டாம் பாடலானது தொல்காப்பியத்திற்கும் முந்தைய காலத்திற்குரியதாக இருத்தல் வேண்டும் என்பதாகக் கருத்து உள்ளது (நசீர் அலி,பக்கம்17). அதோடு, புறநானூற்றில், பாடல் எண் 267, 268 ஆகியவை கிடைக்கவில்லை என்றும், 266ஆம் பாடலுக்குப் பின்னர் வரும் பாடல்கள் சிலவற்றில் அடிகளும், சீர்களும் சிதைந்துள்ளன என்பதாகவும் வரலாற்றுக் குறிப்பில் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியப்பா என்னும் மரபுகவிதை வகையைச் சேர்ந்த எல்லா புறநானூற்றுப் பாடலின் இறுதியிலும் அப்பாடலின் திணை, துறை பற்றிய இலக்கணக் குறிப்புகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வீரம், கொடை, ஒழுக்கம், கல்வி முதலியவை பற்றி கூறப்பட்டுள்ள புறநானூற்றில் காணப்படும் ஆட்சி நெறிகளை மையப்படுத்தியே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் நோக்கமானது, புறநானூற்றில் காணப்படும் ஆட்சி நெறிகளை ஆராய்வதாகும். மேலும், இவ்வாய்வு நூலக ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நூலக ஆய்வினை மேற்கொள்வதற்குத் தேவையான தகவல்களும் தரவுகளும் அக இலக்கியத்தை மையப்படுத்திய ஆய்வேடுகள், கட்டுரைகள், நூல்களின் மூலம் திரட்டுப்பட்டன. எடுத்துக்காட்டாக, 2020இல் எழுத்தாளர் இரணியன் எழுதிய ‘புறநானூறு காட்டும் தமிழர் அறம்’ எனும் கட்டுரையில், சங்க காலத் தமிழர்கள் கடைப்பிடித்த அறநெறிகள் விளக்கப்பட்டுள்ளன. அதுபோல, புறநானூற்றை மையப்படுத்திய ஆய்வேடுகள், கட்டுரைகள், நூல்களின் வழி போதுமான தகவல்களும் தரவுகளும் திரட்டப்பட்ட பிறகு, பண்புசார் முறையைப் பயன்படுத்தி இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது.

## ஆய்வு நெறிமுறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**தரவுப் பகுப்பாய்வு**

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான பாடல்களுள் ஒரு மன்னன் எவ்வாறு நல்நெறிகளோடு ஆட்சியாற்ற வேண்டுமென்பதை எடுத்துரைக்கும் பொருட்டுப் பாடப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக, பாண்டிய நாட்டில் பிறந்த அந்தணரான கபிலரால் எழுதப்பட்ட புறநானூற்றின் 8ஆம் பாடலில், ஒரு மன்னன் தன்னுடைய சுயநலத்தினை மையமாகக் கொண்டு இயங்குதல் நல்லாட்சி ஆகாது எனும் கருத்துப் புலப்படுகிறது.

“வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ
திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப
ஒடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை

யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பி னானும
பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே”,

எனும் இப்பாடலானது சேரலாதனைப் பற்றி கபிலர் வஞ்சப்புகழ்ச்சி செய்யும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது. இப்பாட்டில் கபிலர், ‘வீங்கு செலல் மண்டிலமே! நீ பகற்பொழுதை உனதாக்கிக் கொள்வாய்! திங்களைக் கண்டு புறமுதுகிட்டு ஓடுகிறாய்! மாறி மாறி வருகிறாய்! மாலையில் மலைமுகட்டில் மறைந்து ஒளிகின்றாய்! நீ பகல் பொழுதில் மட்டும்தான் உன் கிரணங்களைப் பரப்பித் தோன்றுவாய்! இத்தனை குறைகளை உன்னிடம் வைத்துள்ள நீ சேரலாதனுக்கு ஒப்பு எனக்கொள்வது எப்படி? இந்த வையகத்தில் உள்ள அரசர்கள் எல்லோரும் தன் சொல்லுக்குப் பணிந்து நடந்துக்கொள்ள வேண்டும் எனக் கருதி, எல்லா அரசர்களும் சமம் என்னும் பொதுச்சொல்லைப் பொறுக்காமல், பொருளைக் குறைவில்லாது வளங்கும் வள்ளல் தன்மை உடைய சேரலாதனுக்கு நீ எவ்வாறு ஒப்பாவாய்? இஃது உனக்கு ஆகாது’ என்று சூரியனைப் பழிப்பது போல சேரலாதனை வஞ்சப்புகழ் பாடுகிறார். இதன்வழி, தம்முடைய சுயநலத்திற்காக அல்லாது மக்களின் நன்மையை மட்டுமே கருத்தில் கொண்டு கொடை செய்யும் மன்னர்களின் ஆட்சியே நெறியே சிறந்தது எனும் கருத்து புலப்படுகிறது.

தொடர்ந்து, தொண்டி என்னும் ஊரை கி. பி. 200 - 225 காலக் கட்டத்தில் ஆட்சி புரிந்ததாக வரலாற்றில் கூறப்படும் சேர மன்னனை மையப்படுத்திப் பாடப்பட்ட ‘சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை’ எனும் 20ஆம் புறநானூற்றுப் பாடலிலும் ஆட்சி நெறிகள் தொடர்பான செய்திகள் உள்ளன. இதனை அப்பாடலில் இடம்பெற்றுள்ள,

“இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமும், என்றாங்
கவையளந் தறியினு மளத்தற் கரியை

அறிவு மீரமும் பெருங்க ணோட்டமும்
சோறுபடுக்குந் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார்நின் னிழல்வாழ் வோரே
திருவி லல்லது கொலைவில் லறியார்

அம்புதுஞ்சுங் கடியரணால்
அறந்துஞ்சுஞ் செங்கோலையே
புதுப்புள் வரினும் புழம்புட் போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை
அனையை யாகன் மாறே
மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே”,

ஆகிய வரிகளின் வழி புலவர் உணர்த்தும் கருத்தினைக் கொண்டு உறுதிப்படுத்த முடியும். பெரிய கடலின் ஆழம், அகன்ற இவ்வுலகத்துப் பரப்பு, வானத்தில் காற்றுச் செல்லும் திசை மற்றும் வடிவமில்லா நிலைபெற்ற ஆகாயம் என்று சொல்லப்படுபவற்றை அளந்து, அறிந்து கொள்ள முடியும் என்றாலும், அரசனது அறிவும், அன்பு கொண்ட ஈர நெஞ்சமும், பரந்துபட்ட கண்ணோட்டமும் இவ்வளவுதான் என்று வரையறை செய்து அளக்க முடியாத அரியவன் என அரசரின் இயல்பை எடுத்துரைக்கிறது இப்பாடல். அதோடு, சேர அரசரின் ஆட்சிக் குடையின் நிழலில் வாழ்வோர் சோறு சமைக்கும் நெருப்பின் வெம்மையும், செஞ்ஞாயிற்றின் வெம்மையும் அல்லாது வேறு வெம்மை அறியார் என்றும், அம்புகளுக்கு வேலையில்லாது அமைதி கொள்ளும் காவலையுடைய அரணுடன், அறமும் நிலைக்கும் செங்கோலையுடையவர் சேர மன்னன் என்ற தகவல்கள் அவ்வரிகளில் கூறப்பட்டுள்ளன. இதன்மூலம் அளவுகடந்த கொடையுள்ளம், கருணைக்குணம் இருப்பதோடு, அமைதியை விரும்பும் மனநிலை உள்ள அரசனால் மட்டுமே மக்களிடையே நல்லாட்சியை மேற்கொள்ள முடியும் என்பது தெளிவாகிறது.

மேலும், குறுங்கோழியூர் கிழார் எனும் புலவரால் எழுதப்பட்ட புறநானூற்று 22ஆம் பாடலான ‘சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை’ எனும் பாடலிலும் நல்லாட்சி நெறிகள் தொடர்பான தகவல்கள் உள்ளன. அப்பாடலில், ஓர் அரசன் தன் நாட்டில் வளம் பெருவதற்கும் ஆட்சி பரவலுக்கும் உண்டான முயற்சியை எவ்வித வெறுப்பும், சினமும் இன்றி வேற்று நாட்டிற்குப் படையெடுத்துப் படையோடு சென்று தன்னுடைய நாட்டில் வளம் பெருகும்படி செய்து, சோம்பலின்றி ஆட்சி செய்வதே நெறியாகும் என்பதை,

“தினிது கண்டிசிற் பெரும முனிவிலை
வேறுபுலத் திறுக்குந் தானையொடு
சோறுபட நடத்திநீ துஞ்சாய் மாறே”,

எனும் வரிகளின் மூலம் காண முடிகிறது. மக்களின் நலனுக்காகவும் நாட்டின் வளத்திற்காகவும் தம்மாலான முயற்சிகளைக் கைவிடாது மேற்கொள்வதும், தன்னுடைய பணியைச் சோம்பலின்றித் தொடர்ந்து செய்து வருவதுமே நல்லாட்சிக்கு வித்திடும் என்பது இவ்வரிகளின் மூலம் புலப்படுகிறது. அதோடு, அப்பாடலில் இடம்பெற்றுள்ள

“வேந்துதந்த பணிதிறையாற்
சேர்ந்தவர் கடும்பார்த்தும்
ஓங்குகொல்லியோ ரடுபொருந”,

ஆகிய வரிகளின் வழி நல்லியல்பும் ஈகைத்திறனும் கூட சங்க கால மன்னர்களிடையே காணப்பட்ட நல்ல ஆட்சி நெறிகள் என்பதை அறியலாம்.

## நிறைவுரை

புறநானூற்றில் சங்க கால மன்னர்களிடையே காணப்பட்ட சிறந்த ஆட்சி நெறிகளைப் பிரதிபலிக்கும் பாடல்கள் இன்னும் பல உள்ளன. ஒரு சில பாடல்களுள் நெறி தவறி ஆட்சியை மேற்கொள்ளும் அரசர்களை இடித்துரைக்கும் பொருட்டும் புலவர்களால் புறநானூற்றில் பாடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, அரசவாகையில் பிறரை நோகச் செய்யாத பண்பு, ஆட்சியை விரிவுபடுத்துதல், நாட்டுமக்கள் அச்சமின்றி வாழ்தல், நாட்டில் விழா, வீரம், பகைவர் அச்சம், பகைவர் திறை தருதல், வேள்வி செய்தல் முதலான செய்திகளும் புறநானூற்றில் மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன. பழந்தமிழ்ச் சான்றோர் தொகுத்துப் பேணிய தமிழ்ச் செல்வங்களுள், புறநானூற்றுத் தொகைநூல் ஒப்பற்ற ஒளிர்மணிக் கோவை ஆகும் (புலியூர்க் கேசிகன்,1958). அவ்வகையில், பல அரிய கருத்துகளையும் வரலாற்றுச் செய்திகளையும் உள்ளடக்கியுள்ள தமிழ்ச் செல்வங்களுள் ஒன்றான புறநானூறானது போற்றதற்குரியதாகும்.

## துணைநூற்பட்டியல்


Nazir Ali, (2016). “The Purananuru and the Tamil Concept of Valour”, Bharatiya Pragna: An Interdisciplinary Journal of Indian Studies. (Vol.1&pp.30). www.indianstudies.net/v1n3

இரணியன், (2020). “புறநானூறு காட்டும் தமிழர் அறம்”. சிந்தனையாளன் – பொங்கல் மலர். https://www.keetru.com/index.php/2010-06-24-04-33-44/sinthanaiyalan-pongal-malar-2020/39982-2020-04-01-05-27-42

சங்க கால இனக்குழு சமுதாயமும், அரசு உருவாக்கமும் (2004), பெ.மாதையன், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

புறநானூறு மூலமும் உரையும் (2010), சாரதா பதிப்பகம், சென்னை.

ஜானகிராமன், நா. (2020). “புறநானூற்றுப் பாடல்களில் அறநெறிகள், வாழ்வியல் கூறுகள்”. திண்ணை வாரப்பத்திரிக்கை. https://puthu.thinnai.com/archives/40804

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# தமிழ்த்திரையிசைப் பாடல்களில் மரபிலக்கணக் கூறுகளும் கவித்துவமும்

# An Investigation into Tamil Cinema Songs on Poetic Values and Grammar

குமரன் வேலு இராமசாமி / Kumaranvelu Ramasamy[1]
[1]Programme Management Consultant, Mastura International College, Rawang
Corresponding Email: rkumaravalu@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

புகழ்பெற்ற திரைப்படப் பாடல் வரிகளில் காணப்படும் மரபுகவிதையின் கூறுகளையும் கவித்துவத்தையும் அடையாளம் காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். 1940 முதல் 2023 வரை வெளிவந்த திரைப்படப் பாடல்களில் ஒவ்வொரு 20 ஆண்டுக் கால இடைவெளியில் புகழ்பெற்ற 5 பாடல்களை மட்டும் ஆய்வுக்கான கால அளவு கருதி இணையம், முகநூல், வலையொளி வழி அடையாளம் காணப்பட்டு மொத்தம் 20 பாடல்கள் ஆய்வுக்குத் தேர்வு செய்யப்பட்டன. இந்த 20 பாடல்களில் காணப்படும் கவித்துவம், மரபிலக்கணக் கூறுகள் அடையாளம் காணப்பட்டன. கவிதை, கவித்துவம், மரபிலக்கணக் கூறுகள் குறித்த தெரிவல்கள் அனைத்தும் அச்சு ஊடகங்களிலும் இணைய ஊடகங்களிலும் வெளிவந்த நூலாய்வின் வழியாகவே பெறப்பட்டன. சாதாரண மக்களின் மனத்தினில் எப்போதும் நின்று அவர்களின் விருப்பப் பாடலாக விளங்கும் சில திரைப்படப் பாடல் வரிகளில் காதல், அன்பு, பாசம், ஏமாற்றம், கவலை, பிரிவுத் துயரம், வீரம், பற்று, தோல்வி என மனிதமன உணர்வுகளோடு ஒன்றிப்போகும் அளவுக்கு அந்தப் பாடல்களில் நிறைந்துள்ள கருத்துக்கள் சிறந்த சொல்லாட்சி, கற்பனை, உவமை, உருவகம், சிலேடை மூலம் சந்தத்தோடும் ராகத்தோடும் வெளிபடுத்தப்படுவதால் திரைப்படப்பாடல்கள் சாதாரண மக்களின் நினைவுகளில் நிலைக்கின்றன என்பதை இந்த ஆய்வு கண்டறிகிறது. பல்லாயிரக்கணக்கான பாடல்களில் எல்லாப் பாடலையும் மக்கள் நினைவில் கொள்வதில்லை. மேலும், திரைப்படப்பாடல்களில் மரபு பாக்களின் தாக்கம் அமைவதற்குப் பெரும்பாலான கவிஞர்கள் பெற்ற மரபிலக்கணப் பயிற்சியும் ஒரு காரணம். எனவே, காலங்கள் மாறினாலும் திரைப்பாடல்களில் மரபு பாக்களின் தாக்கம் இல்லாமல் இருக்காது. கவித்துவத்தின் தேவையும் குறையாது என்பதை இந்த ஆய்வு புலப்படுத்துகிறது. மேலும் பள்ளிக் குழந்தைகளுக்கும் மரபிலக்கணம் கற்பிக்கப்பட வேண்டுமாயின் கருத்துள்ள மரபு சாயல் உடைய திரைப்பாடல்களைத் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தலாம். மொழிமீது ஈர்ப்பு அதிகரிப்பதோடு மாணவர்கள் கவித்துவ இன்பத்தையும் அனுபவிக்க முடியும்.

**கருச்சொற்கள்:** கவிதை, கவித்துவம், சொல்லாட்சி, திரைப்பாடல்

**Abstract**

The purpose of this study is to identify elements of conventional poetry and poetics found in popular film lyrics. Among the film songs released from 1940 to 2023, only 5 famous songs were identified in every 20-year interval, and a total of 20 songs were selected for the study. The poetic and grammatic elements found in these 20 songs were identified. Information on poetry, poetics and classical grammar elements were all obtained through literature review in print media and online media. There are some songs that always stand in the minds of common people and become their favourite songs. The lyrics of the movie songs are so much united with the human feelings like romance, love, affection, disappointment, anxiety, separation grief, heroism, attachment, failure and etc. The ideas contained in the songs are excellent rhetoric, imagination and allegory while the metaphor is expressed through the pun with rhythm and rhymes. This shows that film songs remain in the memories of common people due to these factors. Though tens of thousands of songs are released people don't tend to remember every song but the lyrics with good melody lingers in their minds. The influence of traditional poems on film songs is just inevitable. One of the reasons for this is the traditional poem writing training that most of the film song writers received. Times may have changed but the influence of traditional poems in cinema songs still remain. This study shows that the need for traditional poetry does not diminish even in cinema lyrics. The traditional poetry grammar should be taught to school children and Tamil-language cinema songs with a traditional poetry touch can be used in teaching and learning. This initiative will increase students' interest in language learning and can also help enjoy poetic pleasure.

**Keywords:** Kurunthokai, Kabilar, Psychological, approach

## முன்னுரை

திரையிசைப்பாடல்கள் ஒலிக்காத வீடுகளே இல்லை எனும் அளவுக்கு இதுவரை எந்த வகை இலக்கியமும் செய்யாத சாதனையைத் திரையிசைப் பாடல்கள் புரிந்திருகின்றன என்கின்றார் பாலகணேசன்(2020). இன்று மக்களின் செல்வாக்கைப் பெற்றிருக்கும் திரைப்படப் பாடல்கள் அவர்களைக் கவர்ந்திழுக்க காரணமாவது என்ன? இசையா? அல்லது பாடல் வரிகளா? பாடல் வரிகள் இன்றி வெறும் இசை மட்டுமே அல்லது இசையின்றிப் பாடல் வரிகள் மட்டுமே அத்தகைய ஈர்ப்பை மக்களிடம் ஏற்படுத்துமா? திரைப்படப் பாடல்களின் ஈர்ப்புக்கும் புகழுக்கும் இசையும் ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் பாடல் வரிகளின் பங்களிப்புக் குறித்துதான் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. தமிழ்த் திரைப்படப் பாடல் வரிகளில் உள்ள அந்த மொழிக் கூறுகள் என்ன என்பதையும் அவை ஏன் கவித்துவம் மிக்கதாய்ச் சிலாகிக்கப்படுகின்றன என்பதற்கான காரணங்களையும் ஆய்வுகள் வெளிக்கொண்டு வரவேண்டும்.

## ஆய்வுச் சிக்கல்

பல்லாயிரக்கணக்கான தமிழ்த்திரையிசைப் பாடல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. தொடக்கக் காலத்தில் அவை பெரும்பாலும் மரபுகவிதை சாயலில் அமைத்திருந்தன. திரைப்படப் பாடல்கள் மரபுபாக்களைச் சார்ந்து எழுதப்பட வேண்டிய கட்டுப்பாடுகள் இன்று இல்லை. மக்களின் இரசனையும் மாறிக்கொண்டே வந்துள்ளது. பாடல்களில் இலைமறைகாயாக உவமை நயத்தோடு காதலை வெளிப்படுத்திய பாடல்கள் பிறகு கொஞ்சம் விரசத்தோடு காதலை வெளிப்படுத்தும் நிலைக்கு வந்துவிட்டன. எனினும், சில பாடல்கள் தொடர்ந்து எல்லாராலும் விரும்பப்படும் பாடலாக இருந்து வந்துள்ளன. அப்படி என்னதான் அப்பாடல்களில் உள்ளன? அப்பாடல் வரிகளில் உள்ள வசீகரிக்கும் தன்மை என்ன? எதனால் அவை மக்களால் விரும்பப்படுகின்றன என்பது குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ்த் திரையிசைப் பாடல்களைப் பற்றி செய்த ஆய்வுகள் பெரும்பாலும் பாடல்களில் காணப்படும் மொழியணி குறித்த ஆய்வுகளாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக, இரவிச்சந்திரன் & அமுதா (2021), ஆய்வு திரைப்படப் பாடலில் மொழியணி குறித்ததாக இருக்கிறது. பாமா பெரியசாமி (2018) ஆய்வு மாணவர்க்குக் கவிதை கற்பிக்கத் திரையிசைப்பாடலில் உள்ள பொதுவான கவிதைகூறுகளான பாடுபொருள், பொருள்நயம், ஒசை நயம்,சொல்நயம், அணிச்சிறப்பு பாடல் வரிகளில் உள்ள கவிதை கூறுகளுக்கும் கவித்துவத்துக்கும் உள்ள தொடர்பை அவை ஆய்வு செய்யவில்லை.

## ஆய்வு எல்லை

பாடகரின் குரல் வளம், இசை, இலக்கிய நயம், தலைமுறை சூழல் (genre, இன்று இருக்கிற நவீன ஹிப் போப், ராக், ரெகே), பாட்டின் வகை (எ.கா, கருநாடக இசைப்பாட்டு, குத்துப்பாட்டு) போன்ற காரணிகள் இந்த ஆய்வில் கருத்தில் கொள்ளப்படவில்லை.

**ஆய்வு நோக்கம்**

மக்களால் அதிகம் விரும்பிக் கேட்கப்படும் திரைப்படப் பாடல் வரிளில் அடங்கியுள்ள தன்மைகள் என்ன அவற்றுக்கும் மரபுகவிதையின் தன்மைக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை ஆய்ந்தறிவதே இந்த ஆய்வின் பொது நோக்கமாகும்.

i. மக்களால் அதிகம் விரும்பப்பட்ட தமிழ்த்திரையிசைப் பாடல் வரிகளில் காணப்படும் மரபுகவிதைக்கான கூறுகளைக் கண்டறிவது.
ii. மக்களால் அதிகம் விரும்பி ரசிக்கப்பட்ட தமிழ்த்திரையிசைப் பாடல் வரிகளில் காணப்படும் கவித்துவத்தைக் கண்டறிவது.
iii. மக்களின் ரசனைக்கும் பாடல்களின் கவித்துவத்துக்கும் இடையில் உள்ள தொடர்பை விளக்குவது.

**ஆய்வு முக்கியத்துவம்**

திரைப்படத் தொழில் வணிக நோக்குடையது என்றாலும் மக்களை அதிகம் வசீகரிக்கக் கூடியதாக இருக்கிறது, மக்களின் இரசனை மாறி வரும் சூழலில், வெற்றிகரமான பாடல்களில் உள்ள அம்சங்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டியவை. எனவே, திரைப்படப் பாடல்கள் தொடர்ந்து மக்கள் விரும்பும் கலை, பொழுது போக்கு வடிவமாக நிலைக்கவும் அவை கற்பிக்கப்படும் கலையாக மாறவும் ஆய்வுகள் இன்றியமையாதவை ஆகின்றன.

**ஆய்வு எல்லை**

பாடகரின் குரல் வளம், இசை, இலக்கிய நயம், தலைமுறை சூழல் (genre, இன்று இருக்கிற நவீன ஹிப் போப், ராக், ரெகே), பாட்டின் வகை (எ.கா, கருநாடக இசைப்பாட்டு, குத்துப்பாட்டு) போன்ற காரணிகள் இந்த ஆய்வில் கருத்தில் கொள்ளப்படவில்லை.

**ஆய்வு நோக்கம்**

மக்களால் அதிகம் விரும்பிக் கேட்கப்படும் திரைப்படப் பாடல் வரிளில் அடங்கியுள்ள தன்மைகள் என்ன அவற்றுக்கும் மரபுகவிதையின் தன்மைக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை ஆய்ந்தறிவதே இந்த ஆய்வின் பொது நோக்கமாகும்.

i. மக்களால் அதிகம் விரும்பப்பட்ட தமிழ்த்திரையிசைப் பாடல் வரிகளில் காணப்படும் மரபுகவிதைக்கான கூறுகளைக் கண்டறிவது.
ii. மக்களால் அதிகம் விரும்பி ரசிக்கப்பட்ட தமிழ்த்திரையிசைப் பாடல் வரிகளில் காணப்படும் கவித்துவத்தைக் கண்டறிவது.
iii. மக்களின் ரசனைக்கும் பாடல்களின் கவித்துவத்துக்கும் இடையில் உள்ள தொடர்பை விளக்குவது.

**ஆய்வு முக்கியத்துவம்**

திரைப்படத் தொழில் வணிக நோக்குடையது என்றாலும் மக்களை அதிகம் வசீகரிகக் கூடியதாக இருக்கிறது, மக்களின் இரசனை மாறி வரும் சூழலில், வெற்றிகரமான பாடல்களில் உள்ள அம்சங்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டியவை. எனவே, திரைப்படப் பாடல்கள் தொடர்ந்து மக்கள் விரும்பும் கலை, பொழுது போக்கு வடிவமாக நிலைக்கவும் அவை கற்பிக்கப்படும் கலையாக மாறவும் ஆய்வுகள் இன்றியமையாதவை ஆகின்றன.

**ஆய்வு முக்கியத்துவம்**

திரைப்படத் தொழில் வணிக நோக்குடையது என்றாலும் மக்களை அதிகம் வசீகரிகக் கூடியதாக இருக்கிறது, மக்களின் இரசனை மாறி வரும் சூழலில், வெற்றிகரமான பாடல்களில் உள்ள அம்சங்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டியவை. எனவே, திரைப்படப் பாடல்கள் தொடர்ந்து மக்கள் விரும்பும் கலை, பொழுது போக்கு வடிவமாக நிலைக்கவும் அவை கற்பிக்கப்படும் கலையாக மாறவும் ஆய்வுகள் இன்றியமையாதவை ஆகின்றன.

**மரபுகவிதையின் கூறுகளும் கவித்துவமும்**

**மரபுகவிதையின் அடிப்படை கூறுகள்**

மரபுகவிதைகள் சந்தம் (rhythm), தொடை (rhyme) என இரண்டு வடிவக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டவை எனவே ஒரு காலத்தில் அவை பாடவும் பட்டிருக்க வேண்டும் என்கிறார் சிவகுமார் (tamil.vu). எனினும், இவையிரண்டும் கவிதையின் புறநிலை என்றும் கவிதையை வாய்விட்டுப் படிக்கும் போதும் காதால் கேட்கும்போதும் ஓசையின்பம் கொடுக்கும் எனப் பச்சைப்பாலன்(2013) கருத்தைக் எடுத்துக்காட்டுகிறார் பாமா(2018). கவிதையைப் படித்துச் சுவைக்கும்போது வரிகளில் காணப்படும் பாடுபொருளும், சொல்நயமும் பொருட்சிறப்பும் அணிச்சிறப்பும் மனத்திற்கும் அறிவுக்கும் இன்பம் நல்குவதால் அஃது அகநிலையாகும்(பச்சைபாலன்,2013). கவிதையின் அகநிலையில் பாடுபொருள், பொருள்நயம், சொல்நயம், அணிச்சிறப்பு ஆகியவை உள்ளன. புறநிலையில் சந்தமும் தொடையும் ஓசை நயத்தைத் தருகின்றன. அவை காதுக்கு இன்பம் அளிப்பவை.

**அட்டவணை 1: மரபுகவிதையின் கூறுகள்**

| புறநிலை | அகநிலை |
|---|---|
| காதுக்கு ஓசை யின்பம் தருபவை<br>அ. சந்தம்<br>செப்பல் ஓசை (வெண்பா), அகவல் ஓசை (ஆசிரியப்பா), துள்ளல் ஓசை (கலிப்பா), தூங்கல் ஓசை (வஞ்சிப்பா), வாய்பாடு<br><br>ஆ.தொடை: | மனத்திற்கும் அறிவுக்கும் இன்பம் தருபவை<br>அ. பாடுபொருள்<br>ஆ. பொருள்நயம்<br>இ. சொல்நயம்<br>ஈ. அணிச்சிறப்பு<br>- உவமை |

| | |
|---|---|
| எ.கா எதுகை, மோனை, இயைபு, முரண், அந்தாதி, அளபெடை | - உருவகம் |

கவிதைக்குப் புறநிலை தேவையில்லை என்பர் புதுக்கவிதை, வசனக்கவிதை படைப்பாளர்கள் (விசால்ராஜா, 2020; எம்.யுவன், 2001). அவர்களைக் கடிந்த எழுத்தாளர் புதுமைப்பித்தன் (அனுமந்தன், 2013) யாப்பு கவிதைக்கு உருவம், அது விலங்கல்ல என்றும், அது கவிஞனின் வேகத்தின் நிலையை வடித்துக் காட்டும் என்றார். எனினும் யாப்பிலக்கண விதிகளின்படி வார்த்தைகளைக் கோத்து அமைத்திட்டால் மட்டும் ஒரு படைப்பு கவிதையாகி விடாதும் என்பார் புதுமைப்பித்தன். எனவே, யாப்பு எனும் இலக்கணக் காட்டுமானம் கவிதைக்குத் தேவை அல்லது தேவையில்லை என்று விவாதித்தாலும் கவிதைக்கு அது மட்டும் போதுமானதல்ல என்பது தெளிவு. கவிதைக்குக் கவித்துவம் என்ற ஒன்றும் தேவைப்படுகிறது.

**கவித்துவம்**

கவித்துவம் என்றால் இன்னது என்ற ஆணித்தரமான முன் விளக்கம் தராமலே விமர்சகர்களும் கவிஞர்களும் கவிதை வரிகளில் உள்ள கவித்துவம் குறித்துக் கருத்து தெரிவிக்கின்றனர் எ.கா. இங்கோ, (2023); விசால்ராஜா(2020); எம்.யுவன்(2001). எனினும் கவித்துவம் குறித்துக் கவிஞர்கள் கொடுக்கும் விளக்கங்கள் பெரும்பாலும் கவிதையின் அகநிலையையே சுட்டுகின்றன. ஆ.ஆலிஸ்(tamil.vu) கூறும் கவிதை மொழியும் கவிதையின் அகநிலையைக் குறிக்கிறது. கவிதை மொழியின் கூறுகளாகச் சொல்லாட்சி, உவமை, உருவகம் தரும் வர்ணனைகள், தொடர் அமைப்பு போன்றவை சரியாக அமையுமெனில் கவிதைகள் வெற்றிப் பெற்று ரசிக்கத்தக்கவையாகப் போற்றப்படும்.

**அட்டவணை 2: கவித்துவத்தின் வெளிப்பாடுகள்**

| **கவித்துவத்தின் வெளிப்பாடுகள்** | **நூல் சான்று** |
|---|---|
| கவிஞரின் புலமைத்திறம், கற்பனை, உணர்ச்சி, அதை வாசகனுக்குக் கடத்தும் உத்தி, வாசகன் மனமும் அறிவும் அடையும் இன்ப நிலை, ஒரு துணுக்குறும் கணம் | இளங்கோ (2023)<br><br>அபிலாஷ் (2014) |
| கவிஞர் பயன்படுத்தும் கவிதை மொழி<br>• சொல்லாட்சி, உவமை, உருவகம், வர்ணனை, தொடரமைப்பு<br>• சிலேடை | ஆலிஸ் (tamil.vu)<br><br>ஜெயந்தன் (2009) |
| புதிய சொற்கள், சொற்சேர்க்கைகள், புதிய சொல் வழக்குகள் | ஆசை (2014) |
| தன் சொல்லமுடியாமையை மொழியில் எட்டுவது | விசால் ராஜா (2020) |

| | |
|---|---|
| சொற்சுருக்கம், கருத்துச் செறிவு | பாமா பெரியசாமி (2018) |

**திரையிசைப்பாடல்களில் மரபிலக்கணக் கூறுகளும் கவித்துவமும்**

கவிதையின் வெகுமக்கள் உருவம்தான் திரைப்படப்பாடல்கள் என்கின்றார் விசால்ராஜா(2020). திரைப்பட பாடல்கள் கூட எளிதாக்கப்பட்ட ஒருவகை மரபுகவிதை வடிவம் எனும் கருத்தும் உள்ளது. திரைப்படப் பாடல்கள் சில புதுக்கவிதை நடையில் புனையப்பட்டிருந்தாலும் அப்பாடல்கள் உள்ளும் மரபு பாக்களின் தாக்கம் குறிப்பாக ஆசிரியப்பாவின் தாக்கம் இருப்பதாக ஜெயமோகன் (2014) கூறுகின்றார்.

மக்களைக் கவர்ந்த திரையிசைப்பாடல்களில் கவித்துவம் இருப்பதாகவும் அந்தப் பாடலின் வரிகள் தங்கள் மனத்தைக் கவர்வதாகவும் சில விமர்சகர்கள் கருத்திடுகின்றனர். காட்டாக 'தள்ளிப்போகாதே' திரைப்படத்தில் பாடலாசிரியர் தாமரை எழுதிய பாடலில் கலாபம் போலாடும் கனவினில் வரியும் (சுரேஸ் கண்ணன், 2017 ) என புதிய சொற்களையும், பாடலாசிரியர் வைரமுத்துவின் 'ஒரு பொய்யாவது சொல் கண்ணே உன் காதலன் நான்தான் என்று' (கிரிதரன், 2018) என்ற பாடல் வரிகள் புதிய முறையில் காதலை சொல்வதால் கவித்துவம் மிக்கது என்கின்றனர். ஆனால் கவித்துவத்தின் வெளிப்பாடாய் பாடல் வரிகளைக் காட்டினாலும் அந்த வரிகளில் ஒளிந்துள்ள கவித்துவத்துக்கான கூறுகளை அவர்கள் சுட்டவில்லை.

**ஆய்வு செய்முறை**

இணையத்தளம்(website), விக்கிப்பீடியா(wikipedia), முகநூல்(facebook), வலையொளி(youtube), வலைத்தளம் (blogspot) வழி மக்களின் விருப்பத்துக்குரிய, பட்டி தொட்டியெல்லாம் ஒலித்த தமிழ் திரைப்படப் பாடல்கள் எவை என முதலில் அடையாளம் காணப்பட்டது. 1940 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை வெளிவந்த தமிழ்த் திரைப்படப் பாடல்களில் மக்களால் அதிகம் விரும்பிக்கேட்கப்பட்ட பாடல்கள் நூற்றுக்கணக்கானவை. எனினும் 1940 ஆம் ஆண்டு முதல் 1960வரை வெளிவந்த பாடல்கள் ஐந்து, 1960-1980, 1980-2000, 2000-2023 என ஒவ்வொரு கால இடைவெளிகும் சம நிகரைக் கொடுத்து ஐந்து பாடல்கள் என மொத்தம் 20 பாடல்கள் தேர்வு செய்யப்பட்டன. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் குறைந்தது ஒரு பாடல் துள்ளல் ஓசையுள்ள குத்துப்பாடல், மெல்லிசையில் ஒலிக்கும் காதல் பாடல், சமூகத் தத்துவப் பாடல், சோகப் பாடல், பக்திப்பாடல் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இருபது பாடலாசிரியர்கள் புனைந்த பாடல்கள் தேர்வு செய்யப்பட்டன. அவர்களில் மரபுகவிதை நன்கு அறிந்தவரும் மரபுகவிதையுடன் உரைப்பா அல்லது புதுக்கவிதையும் எழுதும் பாடலாசிரியரும் அடங்குவர்.

மரபுகவிதை என்றால் என்ன, கவித்துவம் என்றால் என்ன, மரபுகவிதை கூறுகள் என்ன என்பதை நூலக ஆய்வின் வழியாக அறிந்துகொண்டு உருவாக்கப்பட்ட சட்டகம் ஒன்று ஆய்வுக்களமாக விளங்கியது.

தமிழ்த்திரையிசைப் பாடல் வரிகளில் காணப்படும் கவித்துவமும், நயமும், மரபிலக்கணக் கூறுகளும் இந்தச் சட்டகத்தின் துணையோடு ஆய்வு செய்யப்பட்டன. கட்டுரையின் அளவைப் பாதிக்கும் என்பதால் குறைவான பாடல்களே சான்றுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

**ஆய்வு முடிவுகள்**

**அட்டவணை 3: 1940 முதல் 2023 வரை தமிழ்த் திரைப்படங்களில் வெளிவந்த புகழ்பெற்ற 20 பாடல்களும் இயற்றியவர்களும் பாடு பொருளும் மரபிலக்கணக் கூறுகளும் கவித்துவமும்**

| ஆண்டு/ எண் | புகழ்பெற்ற திரைப்படபாடலின் தலைப்பு | பாடலாசிரியர் | மரபிலக்கணக் கூறுகள் | கவித்துவம் |
|---|---|---|---|---|
| 1948<br>1 | மாயாபிரபஞ்சமடி<br>தங்கமே தங்கம்<br>மதிமயங்கி<br>கலங்கிடாதே<br>தங்கமே தங்கம் | பாபநாசம் சிவன் | அடி எதுகை,<br>சீர்மோனை | உருவகம்<br>உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |
| 1952<br>2 | தேசம் ஞானம்<br>கல்வி<br>ஈசன் பூசை<br>யெல்லாம் | உடுமலை<br>நாராயணகவி | அடி எதுகை | உருவகம், முரண் |
| 1957<br>3 | விண்ணோடும்<br>முகிலோடும்<br>விளையாடும்<br>வெண்ணிலவே | எம்.கே.<br>ஆத்மநாதன் | அடி எதுகை,<br>சீர் மோனை | உருவகம்<br>உவமை |
| 1958<br>4 | இன்று போய்<br>நாளை வாராய் | மருதகாசி | அடி மோனை,<br>சீனர் மோனை,<br>அடி எதுகை,<br>முரண், இயைபு | இலக்கிய நயம்,<br>உணர்ச்சி |
| 1958<br>5 | தூங்காதே தம்பி<br>தூங்காதே | பட்டுக்கோட்டை<br>கல்யாண<br>சுந்தரம் | அடி எதுகை,<br>சீர் மோனை,<br>இயைபு | உவமை, உருவகம்<br>உணர்ச்சி |
| 1961<br>6 | ஆண்டவன்<br>ஒருவன்<br>இருக்கிறான்<br>அவன்அன்பு<br>மனங்களில்<br>சிரிகின்றான் | எம்.கே<br>ஆத்மநாதன் | அடி மோனை,<br>இயைபு | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |

| | | | | |
|---|---|---|---|---|
| 1966<br>7 | காகித ஓடம்<br>கடலை மீது | கலைஞர்<br>கருணாநிதி | சீர் மோனை | உவமை, உணர்ச்சி |
| 1966<br>8 | மலரும் வான்<br>நிலவும் சிந்தும்<br>அழகெல்லாம் உன்<br>எழில்வண்ணமே | கு.மா.<br>பாலசுப்பிரமணிய | இயைபு, அடி மோனை | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |
| 1967<br>9 | வேட்டையாடு<br>விளையாடு<br>விருப்பம்போல<br>உறவாடு | ஆலங்குடி<br>சோமு | சீர் மோனை,<br>இயைபு | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |
| 1976<br>10 | கங்கை<br>நதியோரம்<br>ராமன் நடந்தான் | புலமைப்பித்தன் | அடி மோனை,<br>இயைபு | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |
| 1978<br>11 | வசந்தக் காலக்<br>கோலங்கள்<br>வானில் விழுந்த<br>கோடுகள் | கண்ணதாசன் | அடிமோனை,<br>இயைபு | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |
| 1985<br>12 | வண்ணம் கொண்ட<br>வெண்ணிலவே | வைரமுத்து | சீர் மோனை,<br>அடி எதுகை<br>இயைபு | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |
| 1992<br>13 | அம்மா<br>வென்றழைக்காத<br>உயிரில்லையே | வாலி | அடி மோனை,<br>இயைபு அடி<br>எதுகை | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |
| 1997<br>14 | காதலா காதலா<br>காதலின் சாதலா | மேத்தா | சீர்மோனை,<br>இயைபு | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |
| 2001<br>15 | வாடி வாடி<br>நாட்டுக்கட்டை<br>வசமா வந்து<br>மாட்டிக்கிட்ட | அறிவுமதி | அடி மோனை,<br>இயைபு | உருவகம்,<br>உவமை,<br>உணர்ச்சி, முரண் |
| 2004<br>16 | ஒவ்வொரு<br>பூக்களுமே<br>சொல்கிறதே | பா.விஜய் | இயைபு | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |
| 2013<br>17 | ஆனந்த யாழை<br>மீட்டுகிறாய் அடி<br>நெஞ்சில் வண்ணம்<br>தீட்டுகிறாய் | நா.முத்துக்குமார் | அடி மோனை,<br>இயைபு | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |
| 2019<br>18 | எள்ளுவய<br>பூக்கலியே<br>ஏரெடுத்தும்<br>பார்க்கலியே | யுக பாரதி | அடி மோனை,<br>இயைபு | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |

| | | | | |
|---|---|---|---|---|
| 2022<br>19 | மல்லிப்பூ வச்சு<br>வச்சு வாடுதே | தாமரை | சீர் மோனை,<br>இயைபு | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |
| 2022<br>20 | மைனரு வேட்டி<br>கட்டி - மச்சினி<br>மனசுல அம்பை<br>விட்டான் | முத்தண்ணன் | அடி மோனை,<br>இயைபு | உருவகம்,<br>உவமை, உணர்ச்சி |

**நிறைவுரை**

திரைப்படப் பாடல்களை மனப்பாடமாகச் சிலர் பாடுவதற்கு அவர்களின் நினைவாற்றல் மட்டுமே காரணம் என்பதற்கில்லை. பாடல் வரிகளில் உள்ள பொருண்மையும் ஓசைநயமும் உணர்ச்சியும் உள்ளத்தின் நிலைமைக்கேற்ற இசையின் இனிமையும் மூளையின் கவனக்குவிவு, நினைவாற்றல் பகுதிகளைத் தூண்டி விட்டு அப்பாடலை எளிதாக நினைவில் பதிக்க உதவுகின்றன.

மொழியியல் ரீதியாகத் தமிழ்த் திரைப்பாடல் வரிகளில் மரபிலக்கணக் கூறுகளான சந்தமும் தொடையும் அமைந்து கவித்துவமும் இருப்பதால் அவை எளிதாக மனப்பாடம் செய்யப்படுகின்றன. செறிவான சமூகக் கருத்துக்கள் கவித்துவத்தோடு பாட்டில் வருவதால் மனப்பாடம் செய்வதற்கு எளிதாக இருக்கிறது. எனவே, காலங்கள் மாறினாலும் திரைப்பாடல்களில் மரபு பாக்களின் தாக்கம் இல்லாமல் இருக்காது. கவித்துவத்தின் தேவையும் குறையாது என்பதை இந்த ஆய்வு புலப்படுத்துகிறது. மேலும் பள்ளிக் குழந்தைகளுக்கும் மரபிலக்கணம் கற்பிக்கப்பட வேண்டும். கருத்துள்ள திரைப்பாடல்களைத் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தினால் மொழி மீது ஈர்ப்பு அதிகரிக்கும்.

**துணைநூற்பட்டியல்**


Pachaibalan, N. (2013). Exams (தேர்வுக்களம்). Malaysia: Percetakan Sri Maju Publications.

Shahram Heschmat (2019), 6 reasons why we enjoy listening to sad music. https://www.psychologytoday.com/intl/blog/science-choice/201905/6

அபிலாஷ் (2014): திரையிசைப் பாடல்களில் கவித்துவம் (2) – வைரமுத்து http://thiruttusavi.blogspot.com/2015/06/2.html 12 மார்ச்சு 2023

அனுமந்தன், என்.ஆர். (2013). புதுமைப்பித்தன் கவிதைகள்- ஒரு சமகாலப் பார்வை. சொல்வனம் இதழ் 293. https://solvanam.com/2013/03/23. 18 மார்ச்சு 2023

ஆசை (2014). பிரமிளின் கவித்துவம் https://www.hindutamil.in/news/literature/2362-.html. 23 மார்ச் 2023

ஆலிஸ், ஆ. (tamil.vu). கவிமொழி. https://www.tamilvu.org/ta/courses-degree-a051-a0514-html-a051442-10100 10 ஏப்ரல் 2023

இரவீந்திரன், வெ. (2017). கவித்துவம் என்றால் என்ன ? மணிவாசகர் பதிப்பகம்: சென்னை-108.

இளங்கோ, நா. (2006). தொல்காப்பிய கவிதையியல் நோக்கில் பண்ணத்தி. https://www.google.com/url?sa=t&source=web&rct=j&url=https://ejournal.um.edu.my/index.php/tamilperaivu/article/download 12 மார்ச்சு 2023

ஏழை மக்களின் இலக்கியம் சினிமா பாடல்கள்தான் https://m.dinamalar.com/detail.p hp?id=1052128 12 மார்ச்சு 2023

கவிதை https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%88 20 மார்ச்சு 2023

கவிதை பற்றி எம் யுவன் - ஜெயமோகன் உரையாடல் (1,2,3) https://groups.google.com/g/panbudan/c/anH9qP1tgQI/m/7YLXrH8mDocJ 12 மார்ச்சு2023

கவிதையின் இலக்கணம் -நன்னூல் (2019). http://interestingtamilpoems.blogspot.com/2019/12/blog-post_.html?m=1 14 மார்ச்சு /2023

சியாமளா தேவி, மா. (2016). தொல்காப்பியமும் புதுக்கவிதையும். https://www.vallamai.com/?p=73877 20 மார்ச்சு 2023

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் https://www.tamilvu.org/courses/degree/p203/p2031/html/p2031551.htm 12/3/2023

பாமா பெரியசாமி. (2018). கவிதை கற்பித்தலை எளிதுப்படுத்தும் தமிழ்த் திரையிசைப் பாடல்கள். மூவாலிம் சமூக அறிவியல் மற்றும் மனிதவியல் ஆய்விதழ், 2(4), 302-314.

பாலகணேசன் (2020). திரைப்பட பாடல்களில் அணிநயம் http://anthakakavi.blogspot.com/2020/06/blog-post.html 12 மார்ச் 2023

மரபுகவிதையின் முன்னோடி யார்? மரபுகவிதையின் கூறுகள் எவை? http://gopalakrishnanksah.blogspot.com/2012/07/btm-3108.html?m=1 12 மார்ச்சு 2023

ஜெயந்தன், ஆர்.சி (2009). நவீன கவிதைக்காரகளுக்கு தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒருபோதும் இடம் கிடைக்காது. கவியரசு நா.காமராசனுடன் ஒரு நேர்காணல். https://www.tamilauthors.com/10/1.html 20 மார்ச்சு2023

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# விண்ணமுதம் மரபுகவிதைத் தொகுப்பு நூலில் தொகைநிலைத்தொடர்: ஓர் ஆய்வு

# Study On ţogainilaţţoder Found in Vinnamudam Traditional Poetry Collection

புனித்தாம்பிகை செல்வராஜு/ Punithambigai Selvaraju[1]
[1]B.Ed, Sultan Idris Education University
Corresponding Email: punithaselvaraju98@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

விண்ணமுதம் மரபுகவிதைத் தொகுப்பு நூலில் தொகைநிலைத் தொடரை ஆராய்தல் என்பதே இவ்வாய்வின் தலைப்பாகும். இலக்கியத்தில் இலக்கணப் பயன்பாடு சரியாகக் கையாளப்படாவிட்டால் பொருள் சிதைவும் கருத்துச் சிதைவும் ஏற்படும். குறிப்பாக, தொகைநிலைத் தொடர் தன்னகத்தே தொக்கி வரும். அதனை விரித்துத் தொகாநிலையாகப் படித்தால் பொருள் புரியும். தொகைநிலைத்தொடர் என அடையாளங்காண இயலாமைக் கவிதையை வாசிக்கும் போது ஏற்படும். இதனால், கூறவரும் கருத்தைப் புரிந்து கொள்வதில் சிரமம் ஏற்படும். இச்சிக்கலை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வின் நோக்கம் அமைந்துள்ளது. இவ்வாய்வின் நோக்கமானது, விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் உள்ள மரபுகவிதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள தொகைநிலைத் தொடர்களை அடையாளங்கண்டு அதனை வகைப்படுத்தி, அதன் பயன்பாட்டை விளக்குதல் ஆகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்தம் 101 கவிதைகளைக் கொண்ட இக்கவிதைத் தொகுப்பு நூலிலிருந்து மொழி, குமுகாயம், இயற்கை, உறவுகள், இறை, காதல் என ஆறு கருப்பொருள்களின் அடிப்படையில் அமைந்த கவிதைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. சேகரித்த தரவுகள் யாவும் நூலாய்வின் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளன. மேலும், இணையக் கட்டுரைகள், வழிகாட்டி நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவையும் இவ்வாய்வுக்கு வழிகாட்டியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மரபுகவிதையில், இலக்கணக் கூற்றான தொகைநிலைத் தொடரின் சரியான பயன்பாட்டின் அவசியத்தை விளக்கவும் வருங்காலத்தில் மேற்கோள் ஆய்வாகவும் இந்த ஆய்வு அமையும்.

**கருச்சொற்கள்:** மரபுகவிதை, இலக்கணம், தொகைநிலைத் தொடர், கருத்துப் பிழை

**Abstract**

This study entitled the usage of ţogainilaţţoder found in vinnamudam traditional poetry collection. The inability to identify ţogainilaţţoder occurs when reading a poem. If grammatical usage is not handled correctly in literature, distortion of meaning can occur. The objectives of this study are based on this problem which is identified earlier. The aim of this study is to identify and classify the ţogainilaţţoder used in traditional poems in vinnamudam poetry collection and explain its use. This study has been carried out in qualitative approach. Poems based on six themes such as language, community, nature, relationships, religion, and love have been analysed from this collection of 101 poems. All the data included in the study were collected based on the objective of the study. All the collected data are categorized and analysed based on text analysis method. Also, internet articles, books and research papers have also been used as a guide for this review. At the end of this study, a total of 51 ţogainilaţţoder words were identified and explained. This study will serve as a future citation study to illustrate the need for correct use of the grammatical prepositional phrase in traditional poetry.

**Keywords:** traditional Poetry, Grammar, ţogainilaţţoder, vinnamudam

**முன்னுரை**

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்' என நன்னூல் குறிப்பிடுகிறது. மொழி வளர இலக்கியம் வளருகிறது. வளர்ந்து வரும் இலக்கியங்களைச் சீர்ப்படுத்த இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. மனிதனின் உள்ளத்து உணர்ச்சியை நயம்படச் சொல்லும் முறைமையாக மரபுகவிதை எனும் இலக்கிய வடிவம் விளங்குகிறது. நயம்படக் கூறுவது மட்டுமன்றிப் பொருள்படவும் கூறவே இலக்கியத்தில் இலக்கணப் பயன்பாடு அவசியமாகிறது. கூறவரும் கருத்தைச் சுருக்கமாகவும் அதே சமயத்தில் செறிவுடனும் கூறும்போது, யாதேனும் மறைந்து வந்தால் அதனைத் தொகை என இலக்கணம் சுட்டுகிறது. சொற்கள் மொழியில் பயன்படும்போது ஒன்றை ஒன்று தொடர்ந்து நின்று பொருள்தருகின்றன. இவ்வாறு ஒன்றை ஒன்று தொடர்ந்து வரும்போது கருத்துப் புரிதலில் மாற்றம் நிகழும். இலக்கியத்தில் இலக்கணப் பயன்பாடு குறிப்பாகத் தொகைநிலை, தொகாநிலைத் தொடரைச் சரியாகக் கையாளப்படாவிட்டால் பொருள் சிதைவும் கருத்துச் சிதைவும் ஏற்படும். தொகைநிலைத்தொடரைப் பற்றித் தொல்காப்பியம் விளக்குகிறது. தொல்காப்பியம் தொகைநிலைத்தொடர் மொழிக்கெனத் தனியாக இலக்கணம் கூறவில்லை. எனினும் அதன் வகைகள் வேற்றுமைத்தொகை, உவமத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஆறுவகைத்தொகையாகும். (தமிழண்ணல், 2009)

'வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்று
அவ்வாறு என்ப தொகைமொழி நிலையே'
(த.உ.தொல். 895)

'பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு'
மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்'
(நன்னூல். 361)

பெயர்ச் சொல்லோடு வினைச் சொல்லும் பெயர்ச் சொல்லும் சேரும் தொடரில் இடையில் வேற்றுமை உருபுகளோ, வினைப் பண்போ, உவமை முதலியவற்றின் உருபுகளோ மறைந்து (தொக்கி) நிற்குமானால் அது தொகைநிலைத் தொடர் எனப்படும். இதனைத் தொகை என்றும் சுருக்கமாகக் கூறுவர். இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது, 'வினைச் சொல்லோடு வினைச் சொல் சேர்ந்து தொகைநிலைத் தொடர் அமைவதில்லை' என்று நன்னூல் விளக்குகிறது. (துரை, 2015)

**ஆய்வு நெறிமுறை**

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆவணப் பகுப்பாய்வு எனும் அணுகுமுறையின் வழி தரவு சேகரிப்பிற்காக விண்ணமுதம் கவிதைத் தொகுப்பு நூல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ்வாய்வில் தொகைநிலைத்தொடர்களின் வகைகளை

விளக்க வடிவ அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. மொழி, குமுகாயம், இயற்கை, உறவுகள், இறை, காதல் என ஆறு கருப்பொருளுக்கான கவிதைகள் இந்நூலிலிருந்து ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. உருபும் பயனும் உடன்தொக்க தொகை, பண்புத்தொகை, அன்மொழித்தொகை, வினைத்தொகை என்பவை கவிதைகளில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**ஆய்வுத் தரவுப் பகுப்பாய்வு**

**விண்ணமுதம் கவிதைத் தொகுப்பு நூலில் காணப்படும் தொகைநிலைத்தொடர்ச் சொற்கள்**

இக்கவிதைத் தொகுப்பு நூலில் அதிகம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையே காணப்பட்டுள்ளன. மொத்தம் ஒன்பது உருபும் பயனும் உடன் தொக்க தொகைகள் கண்டறியப்பட்டன. தொகைநிலைத்தொடரை அதன் வகைக்கேற்ப இருக்கும் விதிகளின் அடிப்படையில் வலிமிகுந்தும், மெலிமிகுந்தும் மிகாமலும் எழுத வேண்டும். உருபும் பயனும், உடன் தொக்கத்தொகையாக இருந்தால் அதில் இருக்கும் வேற்றுமை உருபின் அடிப்படையிலேயே அதன் விதிகள் மாறுபடும். சில விதி விலக்குகளும் இவற்றில் உள்ளடங்கும்.

| தொகைநிலைத்தொடர் | விரி | வேற்றுமை உருபு | பக்கம் |
|---|---|---|---|
| மலர்ச்சோலை | மலர்களை உடையச் சோலை | ஐ- இரண்டாம் வேற்றுமை உருபு | 29 |
| பொற்சிலை | பொன்னால் செய்யப்பட்ட சிலை | ஆல்- மூன்றாம் வேற்றுமை உருபு | 59 |
| கற்சிலை | கல்லால் ஆன சிலை/ கல்லால் செய்யப்பட்ட சிலை | ஆல்- மூன்றாம் வேற்றுமை உருபு | 58 |
| மலைச்சரக்கு | மலையிலிருந்து எடுக்கப்படும் சரக்கு | இருந்து- ஐந்தாம் வேற்றுமை உருபு | 8 |
| விண்ணமுது | விண்ணலிருந்து கிடைக்கும் அமுது | இருந்து- ஐந்தாம் வேற்றுமை உருபு | 36 |
| வான்மழை | வானிலிருந்து பெய்யும் மழை | இருந்து- ஐந்தாம் வேற்றுமை உருபு | 30 |
| மலைத்தேன் | மலையிலிருந்து எடுக்கப்படும் தேன் | இருந்து- ஐந்தாம் வேற்றுமை உருபு | 11 |
| கழனிக்கயல் | கழனியில் வாழும் மீன் | இல்- ஏழாம் வேற்றுமை உருபு | 53 |
| விண்மீன் | விண்ணில் இருக்கும் மீன் | இல்- ஏழாம் வேற்றுமை உருபு | 61 |

மேற்காணும் அட்டவணையின் அடிப்படையில், விண்ணமுதம் கவிதைத் தொகுப்பு நூலில் ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் இரண்டாம் சொல் பெயராய் இருப்பின் வலிமிகும். அதற்கேற்ப மலைச்சரக்கு எனும் சொல் வலிமிகுந்து எழுதப்பட்டுள்ளது. இதில், மலர்ச்சோலை என்பது மலர்கள்+ஐ உடைய சோலை

என்று விரித்துப் படிக்க வேண்டும். இரண்டாம் வேற்றுமை மட்டும் தொக்கியிருந்தால் மலர்சோலை என்றுதான் எழுத வேண்டும். மலர்ச்சோலை என்று எழுத வேண்டிய இடங்களில் மலர்சோலை என்று எழுதும்போது கூறவரும் கருத்து மாறும். இதனால் பொருட்பிழையும் ஏற்படும். இங்கே வலிமிகுந்திருப்பதால் இச்சொல் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகும். வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள் அனைத்திற்கும் கட்டாயம் வலிமிகும். மேலும், மூன்றாம் வேற்றுமைத் தொகையில் வலிமிகா என்ற விதிக்கேற்ப கற்சிலை, பொற்சிலை என்ற சொற்கள் திரிந்து புணர்ந்துள்ளன. இவற்றில் வலிமிகவில்லை. இறுதியாக, ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகையில் வலிமிகும் (சீனி நைனா, 2004). அதற்கேற்ப, கழனிக்கயல் எனும் சொல் வலிமிகுந்து எழுதப்பட்டுள்ளது. கழனியில் வாழும் மீன் என்று பொருட்படும். விண்மீன் எனும் சொல்லில் வலிமிக வாய்ப்பில்லை. அதனால், இயல்பாய் அமைந்துள்ளது.

**வினைத்தொகை**

காலம் புலப்படும்படியாக இரு சொற்கள் தொக்கி நிற்பது வினைத்தொகையாகும். காலத்தைக் காட்டும் உறுப்புகள் மறைந்து முக்காலத்திற்கும் பொதுவாய் நிற்பது வினைத்தொகை. காலத்தைக் காட்டுகின்ற இடைநிலையும் விகுதியும் மறைந்து நிற்க வினைப்பகுதி மட்டும் பெயரைத் தொடர்ந்துவரின் (பெயரெச்சம்) அது வினைத்தொகை ஆகும். (விஜயலெட்சுமி, 2020) முக்காலம் காட்டும் சொற்களே வினைத்தொகை. இதனையே காலம் கரந்த பெயரெச்சம் என்று இலக்கண நூல்கள் சுட்டுகின்றன.

| | |
|---|---|
| வளர்முரசம் | சுடுசாதம் |
| விளைநிலம் | பொழிபால் |

வினைத்தொகையில் வலிமிகாது என்பது இலக்கண விதி. இந்த இலக்கண விதியின் அடிப்படையில் இக்கவிதைத் தொகுப்பு நூலில் வினைத்தொகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அன்மொழித்தொகை**

இக்கவிதைத் தொகுப்பு நூலில் கண்மணி, பூங்கொடி, பைங்கிளி, பொற்றொடி என மொத்தம் 4 அன்மொழித் தொகைநிலைத்தொடர்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவையாவும் அன்மொழித் தொகையாக இருப்பினும் அவற்றின் தொகைக்குரிய விதிப்படியே மிகும் அல்லது மிகாது. இதில் பைங்கிளி எனும் தொகை பண்புத் தொகை அடியாகப் பிறந்தது. பைம்மை+கிளி ஆகிய இருசொற்களாள் ஆனப் பண்புத்தொகை. இத்தொகைச் சொல் கிளியையும் குறிக்கும் பெண்ணையும் குறிக்கும். கிளியைக் குறித்தல் அது பண்புத்தொகை. பெண்ணைக் குறித்தால் அன்மொழித் தொகை. மற்றவை வேற்றுமைத் தொகை அடியாகப் பிறந்தது. கண்மணி என்பது கண்ணின் + மணி ஆகும். இது ஐந்தாம் வேற்றுமை உருபு ஏற்று வந்துள்ள தொகை. இருப்பினும், இக்கவிதைத் தொகுப்பில் கண்மணி என்னும் சொல் பெண்ணைக் குறிக்க வந்துள்ளதால் அன்மொழித் தொகையாக விளங்குக்கிறது. அன்மொழித் தொகை ஏனைய தொகையின் அடிப்படையில் அமையும். தொடரின் புறத்தே அல்லாத சில சொற்கள் மறைந்து வரும்(தமிழண்ணல், 1984) பூங்கொடி என்பது பூவை ஏந்தும் அல்லது பூவை உடைய கொடி. இது இரண்டாம் வேற்றுமை உருபான ஐ

அடிப்படையில் அமைந்துள்ளது. பூங்கொடி என கவிதையில் பெண்ணைக் குறிக்கவே பயன்பட்டுள்ளது. வேற்றுமைத் தொகை புறத்தே பிறந்த அன்மொழித் தொகையிது. பொற்றொடி என்பது பொன்னால் ஆகிய தொடியினை உடையவள். மூன்றாம் வேற்றுமைத் தொகைப் புறத்தே பிறந்த அன்மொழியாகும்.

**தொகைநிலைத் தொடர்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவதின் அவசியம்**

தொகைநிலைத்தொடரைப் பிரித்தெழுதாமல் அதனை ஒரே சொல்லாகக் கொண்டு, ஒரே சொல்லாகவே எழுதவேண்டும். நீண்டதொடர்மொழிகளை எளிமைப்படுத்தும்பொருட்டு, பிரித்துப்பிரித்தெழுதத் தொடங்கிவிட்டோம். அதனால், இலக்கணத்திற்கும் நாம் எழுதும் உரைநடைக்கும் மிகுந்த வேறுபாடு தோன்றுகிறது. தொடர்மொழிகளைச் சரியான முறையில் அமைத்தெழுதாவிட்டால் மொழியின் நடை மாறுவதோடு இலக்கணப்பிழையும் நேரும். பொருட்பிழையும் நேரும். (துரை, 2015) 'தாய்தந்தை அழைக்கவேண்டும்' என்பதும், 'தாய் தந்தை அழைக்கவேண்டும்' என்பதும் ஒரே பொருளைத் தரக்கூடியனவாவென்று ஒரு வினாவெழுகிறது. தாய்தந்தை என்ற சொல் உம்மைத் தொகையாகும். அதனையே தாய் தந்தை அழைக்கவேண்டும் என்று பிரித்தெழுதுகையில் தாய், தந்தையை அழைக்க வேண்டும் எனப் பொருள் மாற்றம் ஏற்படுகிறது.

'தாய் தந்தை சேர்ந்ததோர் சொல்லே- அதைத்
தாய் மற்றும் தந்தையாப் பிரித்ததேன் சொல்லு'.
(சீனி நைனா முகம்மது, 2005)

ஆகவே, தொகைநிலைத்தொடர்களை அறிந்து சரியாகப் புணர்ந்து எழுதாமைக் கவிதையில் பொருட்பிழையை ஏற்படுத்தும்.

தமிழ்மொழி என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும். தமிழாகிய மொழி என்பதே இதன் விரி. தமிழ் எனும் சிறப்புப் பெயரும் மொழி எனும் பொதுப்பெயரும் அமைந்துள்ளது. இதனைச் சேர்த்தேயெழுத வேண்டும். பிரித்து எழுதக் கூடாது.

மேலும், தொகைநிலைத்தொடரில் மெலிமிகுதல், வலிமிகுதல், எதுவும் மிகாமை என்ற விதிகளின் அடிப்படையிலே கவிதையில் அதனைக் கையாள வேண்டும். விண்ணமுதம் கவிதைத் தொகுப்பு நூலில் இவை சரியாகப் பயன்படுத்துள்ளமை தெளிவாகிறது. சான்றாக, 'தாய்ப்பற்று' எனும் தொடர் உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகும். உயர்திணைப் பெயர்களின் பின்னால் வலிமிகாது என்பது விதி. இச்சொல்லில் தாய் என்பது உயர்திணையாக இருந்தால் வலிமிகுந்திருக்காது. ஆனால் வலிமிகுந்து எழுதியிருப்பதற்குக் காரணம் இவை தாய்மைப் பற்று என்ற பொருளில் பண்படிச் சொற்களாக வந்தனவே. வலிமிகாமல் எழுதியிருந்தால் கவிதையில் வேறு பொருட்பட்டிருக்கும். இதுபோல் உயர்திணைச் சொற்கள் பண்பைச் சுட்டும் பெயரடையாக வரும் இடங்களில் வலி மிகுகிறது. (சீனி நைனா, உங்கள் குரல், 2002).

'தாய்பற்று' என்று எழுதியிருந்தால் தாயும் பற்றும் என்று பொருட்படும்.

தொடர்ந்து, வலிமிகுந்து எழுதப்பட்டிருப்பதெல்லாம் தொகைநிலைத் தொடர் எனக் கருத இயலாது. அதனை விரித்துப் பார்க்கையில் பல வழிகளில் பொருள் வழங்கும். காட்டாக, மலைத்தேன் என்பது மலையிலிருந்து எடுக்கப்படும் தேன் என்றொரு பொருள் வழங்கும். வியப்பினால் மலைத்து நிற்றல் என்றும் பொருட்படும். வாக்கியத்தில் பொருத்திப் பார்த்தும் பொருளறிய வேண்டும். இது போன்ற சிக்கலால் கவிதையில் கருத்துப்பிழை ஏற்படும். சான்றாக,

‘மலைத்தேன் போலே தமிழ்மொழித்தேன்
மாண்பைக் காக்க யான்மலைத்தேன்’
(விண்ணமுதம்: பக்:8)

எனும் கவிதை வரிகளில் எழுத்தாளர் ‘மலைத்தேன்’ எனும் சொற்றொடரை இரு இடங்களில் வெவ்வேறு பொருள்பட அமைத்துள்ளார். தொகைநிலைத்தொடர் என அறியாது கவிதையை வாசிக்கையில் இரு இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்லை ‘வியந்தேன்’ எனும் பொருளில் புரிந்து கொள்ள நேரிடும். இலக்கணம் அறியாதவர்கள் முறையான இலக்கியத்தைப் படைத்திடவோ தமிழறிஞர்களால் உருவாக்கப்பட்ட இலக்கியத்தை விளக்கிடவோ பல சிரமத்தை எதிர்நோக்குவர் என்பது திண்ணம் (மனோன்மணி, 2017).

இறுதியாக, தொகைநிலைத்தொடர்ச் சொற்களை முறையாக அறிந்து பயன்படுத்தவில்லையெனில் மொழிபெயர்ப்பில் சிக்கல் ஏற்படும். உள்ளம் கவர்கள்வன் எனும் தொடர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோது ‘the stealer of heart’ என நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டதால் மூல மொழியில் கூறப்பட்டிருக்கும் கருத்தும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோது மாறுபடுகிறது. உள்ளங்கவர் கள்வன் எனும் தொகைநிலைத் தொடரிலிருக்கும் கவர் என்ற சொல் மொழியெயர்ப்பில் இடம்பெறவில்லை. அதனால் மூல மொழியின் கவிதையில் இருக்கும் நயமும் பொருள் ஆழமும் மொழிபெயர்ப்பில் வெளிப்படவில்லை. (இராஜேஸ்வரி, 1992)

**நிறைவுரை**

விண்ணமுதம் கவிதைத் தொகுப்பு நூலில் மொத்தம் 10 வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையும் நான்கு வினைத்தொகை தொடர்களும் எட்டுப் பண்புத்தொகைத் தொடர்களும் நான்கு அன்மொழித்தொகையும் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், தொகைநிலைத்தொடரைச் சரியாக அறிந்து பயன்படுத்துவதன் அவசியமும் ஆராயப்பட்டுள்ளது. சரியான இலக்கணப் பயன்பாடின்மை கருத்துப் பிழையை விளைவிக்கும் என்பது திண்ணம்.

**துணைநூற்பட்டியல்**

இராஜேஸ்வரி. (1992), மொழிபெயர்ப்பியல் ஆய்வு, செல்லையா பதிப்பகம், மதுரை
சரண் சுக்லாம், ஆ,. (2021), விண்ணமுதம், சரண் சுக்லாம் ஆத்மலிங்கம், பேரா.
சீனி நைனா முகம்மது,செ., (2014), தேன்கூடு, உங்கள் குரல் எண்டர்பிரைசு, பினாங்கு.
சீனி நைனா முகம்மது,செ.,(2015),நல்ல தமிழ் இலக்கணம், உங்கள் குரல் எண்டர்பிரைசு, பினாங்கு.

சீனி நைனா முகம்மது,செ., (2002), உங்கள் குரல்(ஆகசுட்டு மாத இதழ்), உங்கள் குரல் எண்டர்பிரைசு, பினாங்கு.

சீனி நைனா முகம்மது,செ., (2004), உங்கள் குரல்(சனவரி மாத இதழ்), உங்கள் குரல் எண்டர்பிரைசு, பினாங்கு.

தமிழண்ணல் (2009),2ம் பதி. தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், சிந்தாமணி பதிப்பகம், மதுரை.

Aran International e-Journal of Tamil Research | அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ். (n.d.). Www.aranejournal.com. Retrieved April 30, 2023, from https://www.aranejournal.com/article/5895#

Kalaiselvam, S., & Sankareswari, B. (2021). பள்ளி மாணவர்களுக்கு இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் இடர்பாடுகள். Journal of Valartamil, 2(1), 103-116. https://doi.org/10.37134/jvt.vol2.1.8.2021

says, M. ram. (2015, December 28). நக்கீரநோக்கில் நற்றமிழ்ப்புணர்ச்சியிலக்கணம். வல்லமை. https://www.vallamai.com/?p=65055&cpage=1

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சங்கப்பாக்களில் தொல்தமிழரின் திருமண முறைகள்

# Caṅkappākkaḷil Toltamiḻariṉ Tiruma ṇa Muṟaikaḷ

து. ஜானகி/ T. Janaki[1]
[1]உதவிப் பேராசிரியர், முனைவர், அயல்நாட்டுத் தமிழர் புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
Corresponding Email: drjanakiiits@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கிய மரபுச் செய்யுட்கள் அனைத்தும் தொல் தமிழரின் வாழ்வியலை மிக ஆழமாக விவரிக்கின்றன. தமிழர் வாழ்வியல் அறத்துடன் கூடிய காதலும் வீரமும் நிறைந்ததாகும். காதல் கொண்ட களவு வாழ்க்கையைக் கற்பு வாழ்க்கையாக மாற்றத் திருமணம் என்னும் சடங்கை நிகழ்த்தினர். திருமணம் பெற்றோர் ஒப்புதலுடனும் பெற்றோர் ஒப்புதல் இன்றியும் நடந்தன. அதேபோல் பெண்ணிற்கு ஆண் பொருள் கொடுத்துத் திருமணம் செய்துகொண்ட மரபும் இருந்திருக்கிறது என்னும் பதிவுகள் இலக்கியங்களில் உண்டு. நல் நேரம் காலம் பார்த்துத் திருமணத்தை நடத்தினர். திருமணத்தில் பந்தல் அமைத்தல், ஊர் முதுபெண்டிர் கூடி நீராட்டுதல், உணவு வழங்குதல், ஊரார் தலைவன் தலைவியை வாழ்த்துதல் போன்ற பல்வேறு சடங்குமுறைகள் நிகழ்த்தப்பட்டன. இவ்வாறு தமிழர் தம் மொழிக்கு மட்டுமின்றி மரபு மீறாமல் வாழும் தம் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தனர்.

**கருச்சொற்கள்:** அகம் - களவு, கற்பு, தொல் தமிழர் திருமண முறைகள், வகைகள், சடங்குகள்

**Abstract**

All Cangam Literature Traditional poems are describing the life of ancient Tamils in great depth. Tamils' life virtue is full of romantic and heroism. They performed the ritual of marriage to change the life of love into a life of chastity. Marriages took place with and without parental consent. There is also a tradition in the literature where a man gives a woman a gift and gets married. They got married at the right time and space. Various rituals were performed at the wedding, such as setting up a Pandal, bathing to bride the village mudupendir, offering food, greeting the bride by the village leaders. In this way, the Tamils created the grammar not only for the language but also for the life Style they lead without breaking the traditions.

**Keywords:** Tamils Marriage, Types, Times and space and Rituals

**முன்னுரை**

சங்ககாலச் செய்யுள்கள் அனைத்துமே வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாக்களால் ஆன மரபுக் கவிதைகளாகும். இக்கவிதைகள்/ செய்யுட்கள் அனைத்தும் தொல்தமிழர் வாழ்வியலை விளக்குவதாகும். தமிழ்ச்சமூகத்தின் இரு கண்களாகக் கருதப்படும் அகம், புறம் என்னும் கருத்துக்களையே மையமாகக் கொண்டு பல சங்கப் புலவர்களால் பாக்கள்/ செய்யுட்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. இப்பாக்கள்/ செய்யுட்கள் அனைத்தும் அறம் சார்ந்த வாழ்வியலை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டவை என்பது புலனாகிறது. புலவர்கள் அக வாழ்க்கையைக் களவு, கற்பு என இரு பிரிவாகப் பிரித்துப் பாக்கள் புனைந்துள்ளனர். களவு வாழ்வில் திளைத்த தலைவன் தலைவி இருவரும் சேர்ந்து இல்லறம் என்னும் கற்பு வாழ்க்கைக்குச் செல்ல இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் என்னும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

திருமணம் என்பது இருவர் இணையும் வாழ்க்கையை முறைப்படுத்தும் முறை என்பதை விட இருவர் வாழ்க்கை இணைப்புக்கு உலகம் உடன்படும் முறை என்பதே பொருந்தும் என்கிறார் மு. வரதராசன்.

**திருமணத் தோற்றம்**

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப
(தொல்.1091)

என்னும் நூற்பா தமிழ்ச் சமூகத்தில் திருமணம் என்னும் கருத்தாக்கம் நிகழ்ந்ததற்குரிய காரணத்தைக் குறிப்பிடுகிறார். வரைதல், கரணம் என்னும் சொற்கள் திருமணம் என்னும் சொற்களுக்கு இணைச் சொற்களாகக் கருதப்படுகின்றன. இவ்வாறு தமிழர்கள் தொன்மைக்காலத்திலேயே பெற்றோர் மற்றும் உறவினர் ஒப்புதலுடன் ஒரு முறையான இல்வாழ்க்கையினை வாழ்ந்திருக்கின்றனர் என்பதனை விளக்கிக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**திருமண நாள், நேரம் குறித்தல்**

மனித வாழ்வின் வளமைக் குறியீடாக விளங்கும் திருமணச் சடங்கு நன்நாளில் நிகழ்ந்திட வேண்டும் என்னும் எண்ணம் பழந்தமிழர்களிடம் இருந்ததைப் பல சங்கப் பாக்கள் உணர்த்துகின்றன.

களையிரு ளகன்ற கவின் பெறு காலைக்
கோள்கா நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென (அகம். 86.5-7)

புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
சகடமண்டிய துகள் தீர் கூட்டத்துக் (அகம். 136.3-5)

என்னும் பாடலடிகள் வாயிலாகத் திங்களாகிய சந்திரன் தன் துணையாகிய ரோகிணி என்னும் விண்மீனைக் கூடிச் சேர்ந்த நல்ல காலை திருமணத்திற்கு உகந்த காலமாகக் கருதப்பட்டமை அறிய முடிகின்றது. இரவிலும் அதிகாலையிலும் திருமணம் நடந்துள்ளது. இதனை மங்கல ஓரை என சோதிடக் குறிப்புகள் கூறுகின்றன.

**திருமண நீராட்டுச் சடங்கு**

மணம் செய்வதற்கு முன்பாக மணத்திற்குரிய பெண்ணை மங்கல நீராட்டுவது வழக்கமாகும். இவ்வழக்கம் பண்டையக் காலம்தொட்டே இருந்து வருவது அறியமுடிகின்றது.

வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று
..... வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ
நீர்ரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பி நெல்லொடு தயங்க (அகம்.136.8-9)

**திருமணப் பந்தல் அலங்காரம்**

தொல்காப்பியர் கூற்றை மெய்பிக்கும் வண்ணம் தமிழர் திருமணச் சடங்குகளை அகநாநூற்றுப் பாடல்கள் விளக்குகின்றன. வரிசையாய்க் கால்களை உடைய குளிந்த பெரிய பந்தரின் கீழ் மணல் பந்தலைச் சுற்றிலும் பரப்பப்பட்டிருந்தது. பந்தலைச் சுற்றிலும் மலர்மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மனை விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

..... நிரை கால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனை விளக்குறுத்து மாலை தொடரி (அகம். 86.2-4) என்றும்

..... நின்னை அகன்கண்
வரைப்பின் மணல்தாழப் பெய்து திரைப்பில்
வதுவையும் ஈங்கே அயர்ப அதுவேயாம் என்றும்
அல்கலுஞ் சூழ்ந்த வினை (கலி.115.18-21)

எனச் சங்கப்பாக்கள் பந்தல் அலங்கார பற்றிக் கூறுகின்றன.

**திருமணச் சடங்கில் தாலி (இழையணி)**

மானிடவியல் நோக்கில் திருமணம் என்ற சடங்கின் பொருட்டு நிலைமாற்றுத் தன்மையைப் புலப்படுத்துவது தாலி கட்டும் சடங்கு ஆகும். இச்சடங்கு திருமணம் ஆன பெண்ணிற்கும்

திருமணம் ஆகாப் பெண்ணிற்கும் ஓர் அடையாளக் குறியீடாக இன்றும் அமைகிறது. இச்சடங்கு இயல்பு நிலையில் இருக்கும் பெண்ணை மீவியல்பு நிலையில் அடையாளப்படுத்துகிறது. இதனை மானிடவியல் * அறிஞர் விக்டர்டர்னரின் கோட்பாடு காட்டுகிறது. மேலும், இதனை வான்கென்ன **நிலைமாற்றம்** என்று குறிப்பிடுவர். தாலிகட்டும் சடங்கு என்பது திருமணச் சடங்கில் ஒரு குறியீடு சார்ந்த கருத்தியலை முன்வைக்கிறது. இச்சடங்கு குறித்து சங்க இலக்கியத்தில் இல்லை என்று ஒருசில ஆய்வறிஞர் மொழிவர்.

மழைப்பட் டன்ன மணன்மலி பந்தர்
இழையணி சிறப்பின் பெயர்வியர்ப்பு ஆற்றி (அகம்.136:16-17)

சென்னைப் பல்கலைக்கழக பேரகராதியில் இழையணி பொருள்:

இழையணி – “இழை, நூல்,நூலிழை,ஆபரணம்,மாதரணிவடம்”

எனக்கூறுகிறது.

தமிழ்-தமிழ் அகராதி:

இழையணி – “துகிழ், ஆபரணம்,நேரிழை,முற்றிழை,நூலிழை”

எனக்கூறுகிறது.

**மணமுழவுச் சடங்கு**

தற்போதைய திருமணச் சடங்குகள் தாலிகட்டும் நிகழ்வு நடக்கையில் மணமுழவு இயக்குவதென்பது சமூகத்தில் மரபாக இருந்து வருகிறது. இச்செயல் தொடக்ககாலச் சமூகத்திலிருந்தே நிலவி வருகிறதென்பதைச் சங்க இலக்கியம் முன் வைக்கிறது. *பறைப்படப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு (குறுந்.15:1)* என்ற பாடல்வழி திருமணத்தின் போது பறையும், சங்கும் இயக்கப்பட்டமையை கூறுகிறது. மணவினையின் பொருட்டு வழிபாடு நிகழ்த்தப்பட்டு மங்கலமுரசு (முழவு) ஒலித்தமையை, *கடிநகர் புனைந்து கடவுட் பேணிப் படுமண முழவொடு பருஊப்பணை இமிழ (அகம்.136:6-7)* என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

**உணவு முறைகள்**

உளுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த பொங்கலோடு விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை
பெருஞ் சோற்று அமலை நிற்ப
(அகநா.86)

இறைச்சியுடன் கூட்டியாக்கிய நெய் மிகுந்த வெண்சோற்றைத் திருமணத்திற்கு வந்தவர்கள் உண்டனர் என அகநாநூறு

மைப்பு அறப் புழுக்கின் நெய்க் கனி வெண்சோறு

(அகநா.136)

என விளக்குகிறது.

**திருமணச் சடங்கு முறைகள்**

சந்திரனை உரோகினி கூடிய நல்லோரையில் முதிய மங்கல மகளீர் மணமகளை நீராட்டுதற்குரிய நீரை முகந்து தர, மக்களைப் பெற்ற மங்கல மகளீர் நால்வர் கூடிநின்று "கற்பினின்றும் வழுவாது நன்றாய பல பேறுகளை யும் தந்து நின்னை எய்திய கணவனை விரும்பிப் பேணும் விருப்பத்தை உடையை ஆகுக" என்று வாழ்த்தி, அந்நீரில் நெல்லையும் மஞ்சளையும் கலந்து மணமகளை நீராட்டினர் (அகநா.86).

திங்கள் உரோகினியுடன் கூடிய நல்லோரையில் மணமனை அழகு செய்யப்பட்டது. கடவுள் வழிபாடு நடைபெற்றது. மண முழவுடன் பெரிய முரசம் ஒலித்தது. வாழ்வரசிகள் மணமகளுக்கு மணநீராட்டினர். அடுத்ததாக, வாகை இலையை அருகின் கழங்கிடத்துள்ள அரும்புடன் சேரக் கட்டிய வெள்ளிய நூலைச் சூட்டி மணமக்களைத் தூய உடையால் பொலியச் செய்தனர்.

இங்ஙனம் மங்கல மகளிர் மணமகளை நீராட்டுவது அக்காலத்தில் மிகச் சிறந்த சடங்காகக் கருதப்பட்டது. பிற திருமணச் சடங்கு முறைப் பற்றி அகநாநூறு (அகநா.136) விளக்குகிறது. மணமகள் பல அணிகளை அணிந்திருந்தாள். மேகம் ஒலித்தது போல மண ஒலி ஒலித்தது. உறவினர் அனைவரும் கூடி மணமகளை மண மகனுக்கு மனைவியாகத் தந்தனர்.

இவ்விரண்டு திருமணங்களிலும் ஆரியச் சார்புடையது எதுவும் இல்லை. எரி வளர்த்தல் இல்லை. தீ வலம் வருதல் இல்லை. தட்சிணைப் பெற புரோகிதன் இல்லை. இவை முற்றும் தமிழர்க்கே உரிய திருமண முறைகளாகும்.

**திருமணக் கொடை**

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குறி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே

(தொல்.கற்.1)

எனத் தொல்காப்பியர் கற்பு வாழ்க்கையில் திருமணம் என்பது ஒரு முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகின்றது. திருமணம் நடைபெறும் பொழுது ஆண்கள் கொடை கொடுத்துப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் இருந்துள்ளது படிப்படியாக மாறி இன்று திருமணத்திற்குச் சமூகத்தில் பெண் கொடை கொடுக்கவேண்டிய சூழல்

உருவாகியுள்ளது. பெரியோர் பெண்கேட்டுப் போதல், பெண்மறுத்தல் இவ்வாறு பெண் ஆண் திருமண களவு கற்பு வாழ்க்கை ஒரு வரன்முறைக்குள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதனைப் பழந்தமிழ் இலக்கியங்கள் இலக்கணங்கள் வழியாக மிக விரிவாகக் காணலாம்.

**உறவுச்சடங்கு**

திருமணச்சடங்கின் பொருட்டு இருவேறுபட்ட பாலினரும் சமூகரீதியாக இணைந்து கணவன், மனைவி என்ற உறவு நிலையை அடைந்தனர். இவ்விருவரையும் சமூகத்தில் ஏற்கும் பொருட்டு இல்லற வாழ்வில் இணைய திருமணச்சடங்கு முடிந்த அன்றிரவே ஓர் அறையில் சடங்கு ரீதியாக கூட்டுவிக்கின்றனர். இதனை, பாலுறவின் அடித்தளத்தில் கட்டப்பெறும் திருமணக் கட்டுப்பாட்டிற்கான காரணங்களை,

1. இனப்பெருக்கத்திற்காக, 2. உயிரின இயக்கத்தை இடையறாது தொடர்ந்து வாழ்விக்கச் செய்வதற்காக, 3. அன்பு வெளிப்பாட்டிற்குரியதாக என்று திறனாய்வாளர் கூறுவது குறிப்பிடத்தக்கது (சு.முத்து இலக்குமி 1992:243). இத்தகு சடங்கை,

> கரணத்தின் அமைந்து முடிந்த காலை
> நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும் (தொல்.1092)

என்று தொல்காப்பிய நூற்பாவும்,

> குரவரிற் புணர்ச்சி வாயிலிற் கூட்டமென்
> றிருவகைத் தாகுங் கற்பிற் புணர்ச்சி (அ.பொ.வி.56)

என்று நம்பி அகப்பொருள் நூற்பாவும் குறிப்பிடுகிறது.

**சிலம்புகழீஇச் சடங்கு**

சிலம்பு என்னும் அணி சங்ககால மகளிர் அணியும் அணிமணிகளுள் ஒன்றாகும். இவ்வணி சங்ககாலத்தில் மகளிர்க்கு சிறுபருவத்திலேயே அணியப்பட்டமைக்கு

> சீர் கெழு வியன் நகர்ச் சிலம்பு நக இயலி (அகநானூறு - 219)

என்ற பாடல் சான்று பகர்கிறது. இதன் பொருட்டு பாலுண் பருவத்துச் சிலம்பு இடும் வழக்கம் இருந்தது என்பதை அறியலாம் என்பர் ந.சுப்புரெட்டியார் (1981:218). இவ்வாறு அணியப்பட்ட சிலம்பு *திருமணத்திற்கு மாலை யணிய விலைதந்தான் மாதர்நின் கால் சிலம்பு கழற்றுவான் சால அதிரலங் கண்ணி நீ அன்பனெற் கன்டன்* (பரி.20:79-81)

**இருதார மணம்**

இருதாரமணம் குறித்த வெளிப்பாடு தொடக்ககாலச் சமூகத்தில் இருதார மணவழக்கம் என்பது ஆண்வழிச் சமூகத்தின் பொருட்டுத் தோற்றம் பெற்றமையை,

பின்முறை ஆக்கியபெரும் பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பாடாயினும்
மின்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினும்
(தொல்.1118)

என்ற நூற்பா வழி தொல்காப்பிய குறிப்பிடுகிறார். இத்தகு மணம் முதல் மனைவிக்கு குழந்தைப்பேறு வாய்க்கப் பெறாத சூழலில் ஏற்பட்டமையைக் காட்டுகிறது. தொல்காப்பியம் பலதார மணக்குடும்பத்தைக் காட்டுகிறது. 'தொன்முறை மனைவி' என முதல் மனைவியும், 'பின்முறை வதுவை' என இரண்டாம் மனைவியும் சுட்டப் பெறுகின்றனர். மகப்பேறு வேண்டி இரண்டாம் மனைவியை மணந்து வாழும் நிலை சங்ககாலத்தில் 'பலதார மணக்குடும்பம்' (Polygynous Family) ஏற்படக் காரணமாக இருந்துள்ளது. அதனாலேயே இது 'மகப்பேறு மணம்' என்று கருதப்பெற்றது. முதல் மனைவிக்குக் குழந்தை இல்லாவிட்டால் தனது தகுதிக்கேற்ற மற்றொரு பெண்ணை மகப்பேற்றிற்காக இன்னொரு திருமணம் செய்வதை முதல் மனைவி மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டதைத் தொல்காப்பியம் (பொருள்.172,கற்.31-33), ஐங்குறுநூறு வழி அறியமுடிகிறது (பக்தவத்சலபாரதி 2014:362).

**திருமண வகைகள்**

பண்டைத் தமிழர் வாழ்வில் திருமணம் என்பது மரபுசார் சடங்கியல் ஆகும். மனமொத்த தலைவனையும் தலைவியையும் கூட்டுவிக்கின்ற (இணைத்து வைக்கின்ற) ஒரு சடங்காகும். இச்சடங்கு சங்ககால இனக்குழுச் சமூகம் தொடங்கி இக்காலச் சமூகம் வரை பல்வேறு நிலைப்பாடுகளில் இயங்கி வருகின்றன.

1. மரபுசார் மணம் - திருமணம் குறித்த கருத்தாக்கத்தை நம் முன்னோர்கள் வகுத்த வழி அனைவரும் அறியும் பொருட்டு நிகழ்த்துவது ஒருவகை மரபு. ஒரு சடங்கிற்குள் கட்டமைத்து நிகழ்த்துவது. இதையே தொல்காப்பிம் கற்பு மணம் என்கிறது. கற்பெனப்படுவது கரணமோடு புணர (தொல்.1088), அறத்தோடு நிற்றல் வழி நிகழ்த்தப்படுவது.

கற்பெனப்படுவது களவின் வழித்தே என இறையனார் அகப்பொருள் நூற்பா நவில்கின்றது. பரிசம் / உறுதிசெய்தல், தாலி கட்டும் மணச்சடங்கு, முதல் நாள் நிகழ்வு என்னும் நிகழ்வுகள் மரபு மணத்தின் சிறப்புகளாகும்.

2. உடன்போக்கு மணம் – களவு வெளிப்பட்டுத் திருமணம் நடப்பது. மணமக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து காதலர்களாகி மணம் புரிய எண்ணும் போது பெற்றோர் சம்மதிக்காத நிலையில் மணமக்கள் இருவரும் வெளியில் சென்று திருமணம் செய்துகொள்ளுதல். கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே (தொல்.1089)
3. மடல் மணம் – தலைவியைத் திருமணம் செய்யப் பெற்றோர் மற்றும் தலைவியின் ஒப்புதல் பெறுவதற்காக மடல் ஏறி ஒப்புதல் பெற முயலுதல் எனத் திருமணத்தை வகைப்படுத்தலாம்.

தொடக்ககாலத் திருமணத்தை இருநிலைக்குள் அடக்குவர் தொல்காப்பியர். உடன்போக்கின் மாற்றுநிலை மடல் மணம். மடல்மா ஊர்ந்து மாலை சூடி (நற்.337) மடலேறுவதால் தலைவனுக்கு ஏற்பட்ட நிலைமாற்றம் கண்டு தலைவியின் பெற்றோர் அஞ்சி தலைவனுக்குத் தலைவியைக் கொடுத்தமை மடல் மணம் ஆகும்.

வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று
ஆயிரண்டென்ப வரைதல் ஆறே (தொல்.1086)

என்ற நூற்பா திருமணத்திற்கான அணுகுமுறையை முன்வைக்கின்றது.

**தமிழர் தனித்துவம்**

தமிழர் திருமணமுறை தனித்துவமானது என்பதை அறிய வடவர் திருமண முறையை அறியவேண்டியது அவசியம். வடவர் திருமணமுறையை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என எட்டு வகையாகக் கூறுகின்றனர். இவர்களின் மணமுறையில் மனத்தால் ஒன்றுபட்டு மணம் நிகழ்ந்தமையை அறியமுடியவில்லை. ஆனால், தமிழர்களுக்கு மணம் என்பது தாமே மனத்தால் ஒன்றுபட்டும் அல்லது பெற்றோர் பொருட்டு மனம் ஒன்றுபட்டும் மணம் செய்யும் மரபுமுறை இருந்ததைத் தொல்காப்பியம் காட்டுகின்றது. வடவர் திருமணமுறை ஆனை முன்னிறுத்திய திருமணமாகவும் தமிழர் திருமணமுறை பெண்ணை முன்னிறுத்தும் முறையாக உள்ளது. மன்றல் (கலி.141) என்ற சொல்லிற்கு மன்றின் கண்ணே தன்னை உள்ளுவித்தவள் என்று உரை கூறுவார் பொ.வே. சோமசுந்தரனார். வதுவை, கரணம், மன்றல், மணம் என்னும் சொற்கள் பல சங்கப் பாக்களில் இடம்பெற்றுள்ளன.

சங்ககாலத் திருமணச் சடங்கு என்பது இனக்குழுச் சமூகத்தின் தொடக்கநிலையைப் பிரதிபலிக்கிறது. இஃது அக்கால மக்களின் ஒழுங்குமுறையை முன் வைக்கிறது. இச்சடங்கு காலப்போக்கில் பல மாற்றங்களைக் கண்டு இன்று பல்வேறுபட்ட சமூக விதிகளுக்குக் கட்டுண்டு நிகழ்கிறது. ஆனாலும் தொடக்ககால வாழ்வியல் நெறிகளின் எச்சங்களை மையமிட்டு நிகழ்கின்றன.

சங்க இலக்கியப் பரப்பில் திருமணச் சடங்கு குறித்த நிகழ்வுகளைப் பண்பாட்டு மானிடவியல் புரிதலில் அணுகும் போது தொடக்ககாலச் சமூகப் பண்பாடு வெளிப்படுகிறது. ஆணும், பெண்ணும் தொடக்க காலத்தில் வரன்முறையற்றுக் கூடியமையால் அக்காலச் சமூகத்தில் பொய்யும் வழுவும் மிகுதி ஆயின. இவற்றை நெறிப்படுத்தும் நோக்கில் திருமணச் சடங்கு தோற்றம் பெற்றுள்ளது. இச்சடங்கின் வழி ஆண், பெண் என்ற எதிரெதிர் பாலினத்தர் கணவன் மனைவி என்ற புதியதொரு உறவுமுறையில் சமூக ஏற்பைப் பெற்றுள்ளனர். ஆரியரின் எண்வகை மணத்துள் கந்தருவ மணமே தமிழர் மரபையொட்டி அமைந்துள்ளது. இருப்பினும் அங்கு தமிழர்க்குரிய தனிமரபு வெளிக் கொணரப்படுகிறது.

சங்க இலக்கியத்துள் நிகழும் திருமணச் சடங்கு மூன்றுவித இயங்கு தளங்களில் அமைகிறது. மரபுசார் திருமணத்தின் வழி பண்டையச் சமூகத்தின் ஒழுங்கு முறையைக் காணமுடிகிறது. இதன்வழி பரிசச் சடங்குக் குறித்த நிலையும் அதன் மாறுபட்டத்

தன்மையையும் வெளிப்படுகிறது. பண்டைக் காலத்திலே திருமணச் சடங்கின் பொருட்டு பொருத்தம் பார்த்தல் மரபு இருந்தமையைக் காண்கிறோம்.

மணச்சடங்கு என்ற கருத்தாக்கத்தில் மகளிர்க்கு நிலை மாற்றத்தை உணர்த்தும் நீராட்டுச்சடங்கு, கூந்தலில் மலர் சூட்டல், தாலி(இழை) அணிதல் ஆகியவை நிகழ்த்தப் படுகின்றன. இவ்வகையில் தாலி குறித்த கருத்தாக்கம் சங்ககாலத்தில் வெளிப்பட மொழியாவிடினும், குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தாலி (இழையணி) அணிந்த வழக்கம் சங்ககாலத்தில் உண்டு. திருமணம் நிகழ்பொழுது தேர்தல், மணநிகழ்வின் அடையாளக் குறியீடு ஆகியவற்றில் சங்ககாலச் சமூக நுட்பங்கள் அமைந்துள்ளன. திருமணத்தின் பொருட்டு வழங்கப்பட்ட விருந்துண் மரபில் அக்காலச் சமூகக் கருத்தாக்கம் புலப்படுகிறது.

தொடக்ககால வரன்முறையற்ற புணர்ச்சியைச் சடங்கு ரீதியாக வரன்முறைப்படுத்தி அதன் பொருட்டு மனித இனத்தின் வளமையை முன்னிறுத்தியமையைப் புணர்ச்சிச் சடங்கின்வழி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. உடன்போக்கு மணம் அக்காலத்தில் இருந்த சமூக சுதந்திரத்தையும் இவ்வகை மணம் அன்று சடங்கு ரீதியாக சமூக ஏற்புப் பெற்றமையும் காணமுடிகிறது. கற்பு மணத்திற்குரிய சிலம்புகழீஇ வழக்கம் கொள்முறை மணத்தில் எங்கும் இடம்பெறாது. உடன்போக்கு மணத்திலே முழுபிரதிபலிப்பைக் காட்டியுள்ளது. இதன் பொருட்டு மகளிரின் இருவித அடையாளக் குறியீடுகள் வெளிக் கொணரப்பட்டுள்ளன. இச்சடங்கு சங்ககாலச் சமூகத்திற்குரிய தனி ஒரு மரபாகும்.

இவ்வாறு தமிழரின் தனித்த மரபாகத் திருமணச்சடங்குகள் உள்ளன என்பதனை நம் சங்கப் பாக்கள் வழி அறியமுடிகின்றது. மரபுகள் என்றென்றும் மறக்கப்படாமல் போற்றிப் பாதுகாப்பதுடன் மரபு மீறாமல் நாமும் அத்தகைய சடங்குகளைப் பின்பற்றி வாழ்தல் மரபு காக்கும் முறையாகும்.

**துணைநூற்பட்டியல்**


குறுந்தொகை மூலமும் உரையும், சாமிநாதையர், உ.வே. (உ.ஆ.). 2000, சென்னை: டாக்டர் உ.வே.சாமி. நாதையர் நூல்நிலையம்.

குறுந்தொகை விளக்கம், இராகவையங்கார், இரா.(உஆ). 1993. அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

குறுந்தொகை, அறவேந்தன், இரா. 2016., சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

குறுந்தொகை, சோமசுந்தரனார், பொ.வே. (உஆ.). 1965. சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழகம்.

சங்ககாலச் சடங்குகள், ஞானேஸ்வரன். செ., , உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 2021

சோமசுந்தரனார், பொ.வே. (இ.ஆ.). 1962. நற்றிணை, நானூறு, சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

பத்துப்பாட்டு மூலமும் உரையும், சோமசுந்தரனார், பொ.வே. (உஆ.). 1966., சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், சாமிநாதையர், உ.வே. (தொ.ஆ). 1961. தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.

பரிபாடல் மூலமும் உரையும், சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.). 1964. சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

புறநானூறு மூலமும் உரையும், சாமிநாதையர், உ.வே. (தொ.ஆ.), 1963. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# மரபு கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

# Feminist Thoughts in Traditional Poetry

தினகரி இலாசரஸ்/ Dinaggary Lazarus[1]
[1]Teacher, SK MARIAN CONVENT
Corresponding Email: dinaggary21@gmail.com

**ஆய்வுச்சாரம்**

கவிதை காலத்தால் முந்தியது. பல்வேறு இலக்கிய நூல்களாக இருபது நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தழைத்து விளங்கும் சிறப்புடையது. பாடுபொருளும் உத்திகளும் புதியனவாயினும் மரபு இலக்கணத்தின்படி படைக்கப்படுதலின் இவை மரபு கவிதை. இம்மரபு கவிதைகளில் பெண்கள் அடிமைப்பட்டுப் படிப்பறிவு இல்லாமல் துன்பப்படுவதை இம்மரபு கவிதைகளின் வழி அறியலாம். அக்காலத்தில் உள்ள சமுதாய மூடநம்பிக்கைகள், குழந்தை திருமணம் ஆகியவை கவிதைகளில் புனையப்பட்டுள்ளது. பெண்களுக்குச் சம உரிமை இல்லை என்றால் இச்சமுதாயம் முன்னேற்றம் அடையாது. மரபு கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கருச்சொற்கள்:** மரபு கவிதைகள், பெண் கல்வி, பெண்ணியம் சிந்தனைகள்

**Abstract**

Traditional poetry predates the era. It has the distinction of surviving for more than twenty centuries as various literary texts. Although the lyrics and techniques are new, these are traditional poems composed according to traditional grammar. In these traditional poems, we can see that women are enslaved and suffering without education. The social superstitions of that time and child marriage are fabricated in the poems. If women do not have equal rights, society will not progress. The purpose of this article is to explore the feminist ideas in traditional poetry.

**Keywords:** Traditional poetry, women education, feminist ideas

## முன்னுரை

ஒரு பெண்ணின் நிலை அவள் சார்ந்துள்ள சமுதாயத்தின் நிலையைப் பிரதிபலிக்கும். ஒரு சமுதாய முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாய் இருப்பது பெண் இனம் தான். இன்றைய உலகில் பெருகிவரும் கருத்தோட்டங்களில் பெண்ணியமும் ஒன்று. பெண்களை அழுத்தி வைத்திருக்கும் சமூகக் கட்டுப்பாடுகளும் கருத்துப் போக்கும் மாறவேண்டும் என்னும் எண்ணத்தோடு பேசுவதும் எழுதுவதும் போராடுவதும் பெண்ணியக் கொள்கைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மூடநம்பிக்கைகள், சாதி வேறுபாடுகள், புதிய உலகம், தீண்டாமை, பொது உடமைச் சிந்தனை எனப் பல சமூகச் சிக்கல்களுக்குக் குரல் கொடுத்துள்ளது இம்மரபு கவிதை. மகாகவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன் பெண்களுக்காகவும் தன் பேனாவை இயக்கி இருக்கிறார்கள் என்பதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

## பெண்மையைப் போற்றுதல்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இந்தியாவின் விடிவெள்ளியாகத் தோன்றியவர். விடுதலை உணர்வையும், விழிப்புணர்வையும் மக்களிடையே பரவச் செய்த மகான். இன்றைய பெண்களின் சிந்தனைகளைப் பாரதியார் பல ஆண்டுகளுக்கு முன்பே தம் படைப்புகளில் அழுத்தமாகவும் ஆழமாகவும் கூறியுள்ளார். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், பெண் விடுதலை, பெண்கள் விடுதலைக் கும்மி, புதுமைப்பெண், பெண்மை என்னும் நான்கு கவிதைகளில் பெண்ணியம் தொடர்பான எத்தனையோ முற்போக்கான சிந்தனைகளை அவர் வெளியிட்டுள்ளார். பெண் என்பவள் 'பேசும் தெய்வம்' என்பதை வலியுறுத்து முகமாக அன்னை காளியை ஆயிரம் இடங்களில் சுட்டுகிறார். அதுமட்டுமல்லாமல் புதுமைப்பெண், பெண்மை விடுதலைக்கும்மி போன்ற பல்வேறு தலைப்புகளில் பெண்மையைப் போற்றியுள்ளார். பாரதி, மனைவியையும் தாயையும் மதிக்க வேண்டும் என்னும் கருத்தை,

> "மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமன்றால்
> மனையாளும் தெய்வமன்றோ மதிகெட்டீரே
> தாயைப் போல பிள்ளையென்று முன்னோர்
> வாக்கின் படி பெண்மை அடிமையுற்றால்
> மக்களெல்லாம் அடிமையுறல் வியப்பன்றோ"

என்று விளக்குகிறார். இதன் மூலம் ஒருவர் பண்பும், ஆத்மீகமும் மற்றவர்களால் உருவாகின்றன என்ற கருத்தை உணர்த்தியுள்ளார்.

## பெண் விடுதலை

பெண் விடுதலை பற்றிப்பேசும் போது அடிமை வாழ்வு வாழ்ந்த பெண்களின் அவல நிலையை எண்ணி வருந்துகிறார். படிப்பறிவு இல்லாத நிலை திருமண வாழ்வின் அவலநிலை சமுதாய உரிமை ஆகியவற்றைப் பற்றியும் கூறியிருக்கிறார். கல்வி கற்க முடியாத நிலையையும் விருப்பமில்லாத் திருமண வாழ்வையும் நினைத்துக் குமுறும் முண்டாசு கவிஞர்,

“ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று
எண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்”

என்பதனையும், பெண் தன்னை விடப் படிப்பில் சிறந்தவளாக ஆளுமைமிக்க பெண்ணாக இருப்பதைக் கண்டு குமுறும் ஆண்களுக்காகவே எழுதப்பட்ட வரியாக அமைந்துள்ளது.

“மேலைநாடுகளில் பெண் ஒருவனால் மனைவியாகப் பார்க்கப்படுகிறாள்; கிழக்கில் அவள் எப்பொழுதும் தாயாகவே போற்றப்படுகிறாள். இந்தியாவில் பெண் என்பவள் நம் கண்களுக்குத் தரிசனம் தரும் தெய்வம். அவள் தன் முழு வாழ்க்கையையும் தாய்மைக்கே அர்ப்பணிக்கிறாள்” என்பார் சுவாமி விவேகானந்தர். ஆனால் இத்தகு பெருமைமிக்க பெண்ணியம் சமூகத்தில் படும் இன்னல்கள் மிகப்பலவாகும். மலையில் விளையும் சந்தனம் மார்பில் பூசி மகிழ்பவர்களுக்கே குளிர்ச்சியைக் கொடுக்கும்; கடலில் விளையும் முத்து அணிந்து மகிழ்பவர்களுக்கே அழகினைக் கொடுக்கும்; யாழிலிருந்து எழும் இசையானது கேட்டு மகிழ்பவர்களுக்கே இனிமையைத் தரும். அதுபோலவே பெண்ணும் பிறந்த வீட்டிற்குப் பயன்படமாட்டாள் என்றும், முத்தும் சந்தனமும் போன்று பெண்ணும் ஒரு நுகர்பொருள் என்கிற ஆதிக்கச் சிந்தனையின் ஆணிவேர் அறுபடாத காலத்திலேயே,

“பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ
மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை”
என்று ஆவேசமாயக் கேட்டும்,
“பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே”

என்றும் அறுதியிட்டுக் கூறியவர் புரட்சிக் கவிஞரே. பெண்களை நமது சுயநலத்திற்காக அடக்க அடக்க நாம் அடிமைகளாகத்தான் போய்விடுவோம்; நாம் எழுச்சி பெற முடியாது. நல்ல குடும்பம் அமைந்து அதன்பின்னர் பிறக்கும் பிள்ளைகளும் பெருமையுடன் சிறந்துவிளங்க வேண்டுமானால் முதலில் பெண்ணடிமை தீர வேண்டும் என்கிறார்.

தொடர்ந்து, தமிழகத்தில் கணவனை இழந்த பெண்டிர் கைம்மை மகளிர் என அழைக்கப்பட்டனர். எப்பொழுதும் ஒரு பெண்ணின் கணவன் இறந்தபிறகு அந்த விதவை கூந்தலைக் களைந்துவிடவேண்டும். இது அவளை உருக்குலைப்பதற்காக மட்டுமன்று, வேறு ஆணுடன் மறுமணம் பற்றிச் சிந்திக்காமல் இருக்கவுமாகும். மேலும் ஆதிநாட்களில் விதவைகள் விழாக்களில் பங்கு கொள்ளக் கூடாது. பாரதிதாசன் கைம்பெண் விடுதலைப் போராட்டத்தை இரண்டு நிலையில் தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். ஒன்று தமிழ்ச் சமுதாயத்தை நோக்கிய அறைகூவல், மற்றது கைம்பெண்களுக்கான அறைகூவல்.

ஒரு பெண் கணவனை இழந்து துன்புற்ற நிலையில் அவளது மனநிலையைக் குறித்து சமுதாயத்தில் யாரும் அக்கறை கொள்வதில்லை; கவலைப்படுவதுமில்லை. மாறாக அவளை ‘அடிமைப் பெண்’ என்ற கதிக்கு ஆளாக்கிவிடுகின்றனர். அதனைக் கவிஞர் இப்படிப் பாடுகின்றார்:

கூண்டிற் கிளி வளர்ப்பார் இல்லத்தில்
குக்கல் வளர்த்திடுவார்,
வேண்டியது தருவார்; அவற்றின்
விருப்பத்தை யறிந்தே!
மாண்டவன் மாண்டபின்னர் அவனின்
மனைவியின் உள்ளத்தை
ஆண்டையர் காண்பதில்லை ஐயகோ,
அடிமைப் பெண்கதியே!

(கைம்மைக் கொடுமை)

வீட்டில் வளர்க்கும் பறவைகளுக்கும் பிராணிகளுக்கும் அவற்றின் தேவையறிந்து வேண்டியதைத் தரும் மனிதன், மாந்த வர்க்க கைம்பெண் மனமறிந்து செயல்படாதது கொடுமையன்றோ. அவளை அடிமையாக்காதீர் என்று சமுதாயத்தை வேண்டி மனம் பதைக்கின்றார் கவிஞர். கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வதற்குத் தடையாக அமைவது சமுதாயத்தில் நிலவும் அறியாமையே காரணம் என்பது பாவேந்தரின் வாதம். சமுதாயத்தில் நிலவும் சாத்திரம், சம்பிரதாயம் போன்றவையே பெண்களின் அவல நிலைக்கான காரணம் என்பதை,

காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட
கைம்மையைத் தூக்கா தீர் ஒரு
கட்டழகன் திருந் தோளினைச் சேர்ந்திடச்
சாத்திரம் பார்க்கா தீர்!

(கைம்மைப் பழி)

என்று சமுதாயத்திற்கு அறிவு புகட்டுகிறார்.

**பெண்கல்வி**

பெண்கள் நாட்டின் கண்கள் என்பர். ஒரு நாடு வளமாகவும் செழிப்பாகவும் அமைதியாகவும் இருக்க அந்நாட்டின் சமுதாயம் வளர்ச்சி அடைந்த சமுதாயமாக மாற வேண்டும். பல குடும்பங்களின் முன்னேற்றமே ஒரு சமுதாயம் வளர்ச்சியடைந்த சமுதாயமாக உருவெடுக்க வித்திடுகிறது. ஒரு குடும்ப முன்னேற்றத்திற்கு அக்குடும்பத்தில் தாயாக, தமக்கையாக, மனைவியாக, மருமகளாகப் பல பரிணாமங்களில் பங்களிக்கும் பெண்ணே அடித்தளமாகிறாள். ஒரு நாட்டையே உருவாக்குகிற சக்தி பெண்களுக்கு இருந்தாலும், அச்சக்தியை அவர்களுக்கும் வழங்குவதற்குத் தேவை கல்வி. கல்வியின் அவசியத்தை அனைவரும் கேட்கும்படி,

‘எளிமையினால் ஒரு தமிழன் கல்வி இல்லையென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிட வேண்டும்!’

(தமிழ் வளர்ச்சி, க:1, வ:6-7)

எனப் பாவேந்தர் பாடினார். அதோடு இல்லாமல், பெண் கல்வி முக்கியத்துவத்தை விளக்கக் குடும்ப விளக்கு என்ற நூலையும், இருண்ட வீடு என்ற நூலையையும் எழுதினார். குடும்ப விளக்கு பெண் கல்விச் சிறப்பையும் இருண்ட வீடு பெண் கல்வி அற்ற நிலையையும் புலப்படுத்துவனாய் அமைகின்றன.

வினையே ஆடவர்க்கு உயிரே; வாள்நுதல் மனையுறை
மகளிர்க்கு ஆடவர் உயிர்

(குறுந்தொகை, பாடல்:135, வ:1-2)

என்று பெண்களுக்கு அவர்களின் வீட்டையே உறைவிடமாக்கி, உலகமாக்கிய சமுதாயத்தின் கருத்துக்கு எதிராகப் புறப்பட்டவர் பாரதிதாசன்.

கல்வியில் லாத பெண்கள்
களர் நிலம்; அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை!

(குடும்ப விளக்கு பகுதி:2, க:223, வ:859-862)

கல்வி இல்லாப் பெண்களை நுண்ணுயிர்களின் எண்ணிக்கையும், அவற்றின் செயல் திறனும் குறைந்து காணப்படும் களர் நிலத்திற்கு உவமையாக்கிப் பாடியுள்ளார். தாயினது அறிவுரைக்கு ஈடே இல்லை. இங்கே ஒரு தாய் தன் மகளுக்குத் தலைவாரிப் பூச்சூடுவதோடு மட்டுமில்லாமல் கல்வியும் கற்க சொல்கிறாள். பாடசாலைக்குச் சென்று கல்வி கல், கல்வியை எங்கும் விலை கொடுத்து வாங்க முடியாது என்று அன்னையாகப் பாரதிதாசன் பாடியுள்ளார்.

## நிறைவுரை

மரபு கவிதைகளில் காணப்படும் பெண்ணியச் சிந்தனையானது, தமிழினப் பெண்களின் மீதான ஒடுக்கு முறைகளை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவற்றிலிருந்து அவர்கள் விடுதலை பெறும் வழிமுறைகளையும் சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது. ஆண்களுக்கு நிகரான சமவுரிமையைக் கோருகிற மிதவாதப் பெண்ணியச் சிந்தனை (பஞ்சாங்கம், 2011) கவிஞரின் படைப்பில் காணப்படுகின்றது. சமுதாயத்தில் நடக்கும் பெண் கொடுமைகளைக் கடிந்து மக்களின் மனத்தில் புரட்சி உணர்ச்சியை மரபு கவிதையின் எழுப்பினர் கவிஞர்கள். ஆண் போல் பெண்ணும் குடும்பக் கடமைகளையும் ஆற்ற வேண்டும் என்ற சீர்திருத்தச் சிந்தனைக்குக் குரல் கொடுத்தவர் மகாகவி பாரதியும் பாவேந்தர் பாரதிதாசனும் ஆவர். பெண்ணியத்தை வெட்டிப் பேச்சாய் நினைக்காமல் நாட்டின் விடுதலையாய் நினைவுறுத்துகிறது இம்மரபு கவிதைகள். கவிஞர்கள் மறைந்த பின்பும் அவர்களின் படைப்புகள் பெண்ணியத்தைப் பேசிக் கொண்டுதான் இருக்கின்றன.

## துணைநூற்பட்டியல்


கண்ணதாசன் (2001). *பாரதியார் கவிதைகள்*, பாரதி பதிப்பகம், சென்னை.
பஞ்சாங்கம்.க, (2000). *மகாகவி பாரதியாரின் பெண்ணியக் கட்டுரைகள்*, பாரதி அன்பர்கள், புதுச்சேரி.
பஞ்சாங்கம்.க, (2011). *இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்*, அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்.
பாரதிதாசன் கவிதைகள், (1999). *நான்கு தொகுதிகள் (முழுவதும்).* கங்கை புத்தக நிலையம்.
ஜெயபாரதி.யு, (2007). *வாழ்வியல் அறங்கள்*, சிலம்பில் பெண்ணியம்' கலைஞன் பதிப்பகம், சென்னை.
மருதநாயகம், ப. *சங்க இலக்கிய ஆய்வு* தெ. பொ. மீயும் மேல அறிஞரும், ப. 108.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# தகவல் தொடர்புதுறையில் சங்கத் தமிழரின் பங்களிப்பு

# Contribution of *Sanga Tamizhar* in the field of communication

மு. கேசவமூர்த்தி / M. Kesavmoorthy[1]
[1]முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்நாடு
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச்சாரம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் தகவல் தொடர்புத்துறையில் சங்கத் தமிழர்களின் பங்களிப்பை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, தகவல் தொடர்புத் துறையில் சங்கத் தமிழர்களின் பங்களிப்பை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு பண்டை இலக்கியங்களில் தமிழரின் கல்வி முறைகளை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** தகவல் தொடர்புத்துறை, சங்கம், தமிழர், பங்களிப்பு

**Abstract**

The major objective of the research is to explore the contribution of Tamil in the field of communication. This research is designed in a qualitative approach. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the contribution of Tamil in the field of communication. The research claims to be the first such attempt to do a study regarding contribution of Tamil in the field of communication.

**Keywords:** Contribution, Tamil, Communication

## முன்னுரை

உலகிலேயே பன்னெடுங்காலத்திற்கும் முன்னதாகவே நுண்ணறிவுத்திறன் கொண்டு பல்வகையான துறைகளிலும் ஓங்கிச் சிறந்த புகழ்பெற்றவர்கள் தமிழர்களே ஆவார்கள். அவ்வகையில் அவர்களது தகவல் தொடர்புகலையில் அத்துறையின் வளர்நிலைச் சூழல்களை எவ்வகையில் பயன் கொண்டனர் என்பதான குறிப்புகளை உற்றுணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது..

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## தகவல் தொடர்பியல்

மனிதன் ஒரு சமூக விலங்கு. எனவே ஒருவரை ஒருவர் சார்ந்து வாழும் வாழ்வியல் முறையில் உணர்வுகளைப் பரிமாறிக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. தொடர்பியல் என்ற சொல்லிற்கு ~பொதுமையாக்குதல்| என்று பொருள் கூறுகின்றார். தம்முடைய எண்ணம், கருத்து, உணர்ச்சி, திறமை என அனைத்தையும் ஒருவர் மற்றவருக்கு அல்லது அனைத்தையும் ஒருவர் மற்றவருக்கு அல்லது பொதுவாக அனைவருக்கும்; பகிர்ந்துகொள்ள எண்ணுதல் என்பதான நிலையில் இந்தத் தகவல்தொடர்பு அவசியமாகின்றது. இது குறியீடு. மொழி, எண்வடிவம், வரைபடம் என ஏதேனும் ஒன்றாகி அமையலாம்.

இன்று நாம் அறிவியல் உலகில் வாழுகின்றோம். உலகம் முழுவதும் நம் கையில் என்ற நிலைப்பாடு வந்துள்ளது. கருவறை முதல் கல்லறை வரை இன்று அறிவியல் ஆக்கிரமிப்பு. தகவல்தொடர்பு இன்று வாழவே முடியாது என்பதான நிலைப்பாடு. தகவல்தொடர்பு என்பது ஏதோ அஞ்சல்துறை ஊடகத்துறை என்பவர்களைக் கடந்து ஒவ்வொரு மனிதர்களில் செயல்படுத்தப்படுகிறது. இன்னும் கூறினால் மனிதர்கள் மட்டுமல்ல ஒவ்வொருவரும் தகவல்தொடர்பில் நம்முடன் இணைந்துள்ளமையை நாம் அறிவோம். ஒளி, ஒலி, விலங்கு, பறவை, மயில் (கடிதம்) தூது எனப் பலவகையில் இந்தத் தகவல்தொடர்பு விரிவடைகின்றது. மேலும் செப்பேடுகள், கல்வெட்டுகள், ஓவியங்கள், இலக்கியங்கள் அனைத்தும் தகவல்தொடர்பு சாதனங்களே ஆகும்.

இதுவகையில் பயன்பட்ட பொருள்களை

இயம்புகின்ற காலத்த எகினம்
மயில் கிள்ளை நயந்த குயில்
பயம்பெறு மேகம் பூனை பாங்கி
பேதை நெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்துமே
துதுரைக்கு வாங்கும் தொடை

என்ற பாடல் காட்டுகின்றது.

இவற்றைக் கடந்து பூக்கள், செடிகொடிகள், முதலியனவற்றின் பூத்தல், காய்த்தல், காய்தல் இவைகளும் செய்தி தொடர்பான குறியீடு, பெண்களில் பயன்படுத்தப்பட்டமையினை அறிய முடிகிறது.

போர்க்காலத்தில் வீரர்கள் சூடிய பூக்களின் (வெட்சி, வஞ்சி, தும்பை, வாகை) மூலம் போர்க்கால செயல்கள் உணர்த்தப்பட்டன. அகத்தில் முல்லை மலர் கற்பின் அடையாளமாகச் சுட்டப்பட்டது.

பி.என்.மாலன் இந்தியாவில் தகவல்தொடர்பு பற்றிக் கூறும்பொழுது பொதுமக்களுக்குச் செய்திகள் முரசறைந்தோ, பொதுக்கூட்டங்களில் வாய் மொழியாகவோ பரப்பப்பட்டன. பயிற்சியளிக்கப்பட்ட புறாக்கோடு, குதிரை வீரர்கள், பாதைகளில் செல்வோர், முரசறைவோர், கோட்டையிலிருந்து தகவல்களை மற்றோர் இடத்திற்குக்குக் கொண்டு செல்வோம். துன்பநிலை, அவசரநிலைத் தகவல்களை அனுப்பி வைக்கவும் பயன்படுத்தப்பட்டனர் என்று குறிப்பிடுகின்றார்.

தகவல் தொடர்பில் மூன்று நிலைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவற்றில் இடம்பெறுவது மனத்துடன் பேசுவது, தனக்கே உணர்த்துவது,

முட்டாச்சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிரும் கூந்தல் வயங்கிளை சூழிய
வாரேன் நெஞ்சே
(பட்டினப்பாலை – 218 – 221)

என்ற அடிகளில் ஒரு தலைவனின் உயர் அன்பின் உணர்வு பதியமாகின்றது.

இரண்டாவது மற்றவர்க்கு உணர்த்துவது. முதல்நிலை மனத்துடன் பேசுவது. இரண்டாம் நிலையில்,

இம்மை மாறி மறுமையாகினும்
நீயாகிய என் கணவன்
யாமாகிய நின் நெஞ்சு நேர்பரனே
(குறுந்தொகை)

என்ற தலைவியின் மனவுணர்வைத் தலைவனுக்கு உணர்த்தும் பாங்கு.

**தகவல் தொடர்பின் உச்சம்**

மூன்றாம் நிலைதான் பெரும்பான்மை தேவையானவையாகும். இதில் ஊருக்குச் சொல்லுதல், உலகிற்குக் கூறுதல், உற்றார்க்குக் கூறுதல் என பலவகையில் செய்திகள் அமையும். ஔவையின் புறப்பாடல்கள் இங்கு நல்ல சான்றாக அமையும்.

இவ்வே பலீயணிந்து மாலை சூட்டிக்
கடியிடை வியனை ஒவ்வே
(புறம் 95)

என்ற பாடலின் மூலம் தன் தலைவனின் வீரத்தினைத் தெளிவுபடுத்த நயம்பட உணர்கின்றார்.

தலைவன் மட்டுமல்ல தங்கள் ஊரின் ஆண்மக்கள் பெரும் வீரர்களே என்பதனை

களம்புகல் ஓம்புமின் தெவ்வீர்
போலிதிர்ந்து எம்முரம் உளன் ஒரு பெருநன்
(புறம் 87)

என்ற பாடலடிகளில் அதனையும் எடுத்துரைக்கின்றபோது ஒட்டுமொத்த ஊராரின் வீரத்தினை உணர்த்துகின்றார்.

**வணிகர்கள்**

தகவல்தொடர்புத் துறையில் முக்கிய செய்தியைப் பரப்புநர்களாகவும், ஊடகமாகவும், இடைத்தரகர்களாகவும் வணிகர்களே சங்ககாலத்தில் வாழ்ந்துள்ளனர் என்பதனை நாம் உணர முடிகின்றது. மன்னர்களின் தொடர்புக்குரிய செயல்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்றாலும் வணிகர்கள் மிகுதியான நிலையில் இருந்ததனால் உலகம் முழுவதும் அவர்கள் பயணம் செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டனர். இதன்மூலம்தான் மிகுதியான தகவல் பரிமாற்றங்களும் பரவலான மக்கள் சமுதாயத்தின் செயல்பாடுகளின் ஆதிக்கமும் வளர்ந்தன. அவ்வகையில் அந்த வணிகர் தம் செயல்பாட்டினை,

நீர்இல் அத்தத்து ஆர் இடைமடுத்த
கொடுங்கோல் உமணர், பகடு தெழி தெள;வினி
நெடும்பெருங் குன்றத்து இமிழ் கொள் இயம்பும் - (அகம் - 17)

என்ற பாடலடிகளில் கல் என்பதான அச்சத்தினை ஏற்படுத்தும் பாதையில் கடுமையான சூழல்களில் வணிகர்கள் நீர்வளம் இல்லாது வறண்ட பாலை நிலத்தின் பாதைகளில் தங்கள் வண்டிமாடுகளை மிரட்டிச் செலுத்தும் ஓசையானது கேட்கும். இத்தகைய பாதைகளையும், கடலையும் கடந்து சென்று வணிகம் செய்துள்ளனர். இதனால் பல்வேறு செய்திகள் பண்டங்களோடு பரிமாறப்பட்டன என்பதனை நாம் அறிய முடிகின்றது.

தமிழகம் மற்றும் அயலகங்களுக்கிடையிலான உறவுநிலை வளர்ச்சி இதனால் உருவாகின்றது. தமிழகத்தினைக் கடந்த வங்காள விரிகுடாவிற்கு அப்பால் அமைந்த தீவுகள், இந்தியத் தீவுகள், இந்தோனேஷியத் தீவுகள் என்று சுட்டப்படும் பகுதிகள் சங்ககாலத்தில் சாவக நாடு என்று அழைத்தனர். தமிழ்நாட்டிலிருந்தும், வட இந்தியாவிலிருந்தும் நம் பழந்தமிழர்கள் சாவகம் சென்று வணிகம் செய்தனர்.

ஒரு பாடல் செய்தியில் புதிதாகத் திருமணம் செய்த தலைவன் வணிகம்பொருட்டுப் பிரிகிறான். தலைவி கவலை கொள்கிறாள். தோழி ஆற்றுவிக்கின்றாள். இங்கு மூன்று

வகையில் தகவல் பரிமாற்றம் நிகழ்கின்றது. தலைவியின் மனவுணர்வு, தோழியின் ஆறுதல் உரை மற்றும் அவளது உற்றறிவு, வணிகம் வழி தலைவன் பெறும் அறிவு இவற்றை உணர்த்தும் பாடல் அடிகளாக,

கோடுயர் திணிமணல் அகன்றுரை நீ கான்
மாட வொள்ளொரி மங்கறிற் தொய்ய
ஆள்வினை பிரித்த காதலர் தூள்பல
கழியா காமமே யறிபடா அகல் வருவர் - (அகம் 255)

தரைவழியாகவும், கடல் வழியாகவும் கலிங்கப்பட்டினம், பாடலிபுரம், பர்மா, கடாரம், ராவகம், முதலான இடங்களில் பலவகையில் சிறப்பாகத் தம் வணிகம் செய்தனர் என்பதன் சான்றாக, இன்றும் இலங்கை அனுராதபுரத்தில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுகள் தமிழர்கள் சென்று செய்த வணிகம் குறித்தக் கல்வெட்டு பிராமி எழுத்தில் இன்றும் கிடைத்துள்ளமை தகவல் தொடர்பின் ஆவணங்கள் பெறுமு; முக்கிய இடத்தினை நமக்கு உணர்த்துகின்றன மற்றும் பல தகவல்கள் இந்த வணிகத்தின் மூலமான ஆளுமையை உணர்த்துகின்றன.

இராமாபுரியில் இறக்குமதியாகும் தமிழ்நாட்டின் சரக்குகளின் அளவு ஆண்டுதோறும் 6,00,000 பவுன் மதிப்புள்ள ரோமபுரித் தங்கம் தமிழரின் கைக்கு மாறியது. இத்தனை பெரிய தொகையின் வரவால் நம் நாட்டின் செல்வம் வளர்ந்து, அங்கே வடிந்தது கண்டு ரோமாபுரி மக்களில் சிலர், இந்த வணிக முறையை வெகுவாகக் கண்டித்தனர் என்ற செய்தியினை, கே.கே. பிள்ளை அவர்கள் தமது தமிழக வரலாறும் பண்பாடும் நூலில் பதிவு செய்துள்ளனர்.

அவ்வாறே, தென்னிந்தியாவின் விலை உயர்ந்த பொருள்களாக சங்கு, வைரம், மணிகள், முத்து, பொன் அணிகள் இவைக் குறிப்பிட்டு மௌரியப் பேரரசின் சாணக்கியம் தமிழர்களின் வணிகச் சிறப்பைப் புகழ்ந்துள்ளமையை தென்னிந்திய வரலாறு நூல் மூலம் நீலண்ட சாஸ்திரியார் எடுத்துரைக்கிறார்.

**பிற செய்திகளின் பதிவுகள்**

மன்னரின் ஆட்முறையினையுடைய அந்தக் காலச் சூழலில் மக்களின் சிறப்பான ஆட்சியினைச் செய்தான் என்பதனைப் பதிவுச் செய்யும் வகையில்,

மழை வேண்டும் புலத்து மாரி நிற்ப
நோ யொடு பசியிகந்து ஓரி இப்
பூத்தன்று பெரும நீ காத்த நாடே - (பதிற்-13)

என்ற பாடல் அடிகளில் நல்ல மழை, அதனால் நாட்டில் நோயில்லை. பசியும் இல்லை. செல்வம் பெருகியது என்ற செய்தியினை மன்னருக்குக் கூறுவதான இப்பகுதியின் மூலம் பல தலைவர்களுக்கு வழிகாட்டுதலும் உள்ளது.

முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்|| - (குறள் - 388)

என்ற குறட்பா கூறும் அறம் உணர்த்தப்படுகிறது இரண்டாயிரம் ஆண்டு கடந்தும்.

## நிறைவுரை

பற்பல செய்திகளின் முறையில் முக்கிய இடம் உள்ளது. இது அகத்திலும் பயன்பட்டது. புறத்திலும் தேவைப்பட்டது. ஓவியங்கள், கட்டிடங்கள், கல்வெட்டுகள், இன்றும் பல்வகையான செய்திகளைப் பறைசாற்றுகின்றன. நட்பின் உயர்வில் கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் எவ்வகையில் நட்புடையவர்களாயினர் என்பது இன்றும் வியப்புலகின் உச்சமான சிந்தனையாகும். தகவல்தொடர்பு இன்றையச் காலச்சூழலில் அது மிகவும் எளிதாகியது. ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாகவே தமிழர்தம் அறிவு நுட்பத்தால் பல்துறை வித்தகர்களானதைப் போன்று தகவல் தொடர்பிலும் சிறந்து விளங்கியமை வியக்கத்தகு செய்தியாகும்.

## துணைநூற்பட்டியல்


இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.

மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை

விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.

திருவாசகம் விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.

சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு

தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.

புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), சென்னை, 1971

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்புக் கவிதைகளில் காணப்படும் வாழ்வியல் விழுமியங்கள்

# The values of life found in the Kavithai Pozhil Poetry Collection

சரவணன் இராமச்சந்திரன் / Saravanan Ramachindran[1] நீலாவதி சாமிக்கண்ணு / Neelavathi Samykanu[2] மோகனதாஸ் இராமசாமி / Mohanadass Ramasamy[3]
[1] Master Research Scholar, Universiti Malaya
Corresponding Email: svanan7578@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியம் காலக் கண்ணாடி என்பர். இலக்கியத்தின் வாயிலாகவே நாம் நமது முன்னோரின் அகபுற வாழ்வியலைக் கற்றுணர முடிகிறது. அகபுற வாழ்வியல் விழுமியங்கள் நிறைந்தவை நம் இலக்கியங்கள். அகபுற வாழ்வியல் விழுமியங்களை இலக்குகளாக எடுத்தோதி அவற்றின்வழி நம் வாழ்வைச் செப்பனிட்டு நல்வழி காட்டும் அறிவுப் பெட்டகம் நம் இலக்கியங்கள். இத்தகு தொன்மை இலக்கியங்களின் வடிவமே கவிதையில் அமைந்தன என்பது நமக்கு மட்டும் பெருமை சேர்க்கும் ஒன்றாகும். தொன்மைத் தமிழ் இலக்கியங்கள் யாவும் செய்யுள் வடிவிலேயே நமக்குக் கிடைக்கப் பெற்றன. ஐரோப்பியரின் வருகைக்குப் பிறகு, உரைநடை அறிமுகம் கண்டு பெரும் வளர்ச்சி பெற்றபோதும் கவிதை தனக்கெனத் தனியிடம் பெற்று வளர்ச்சி கண்டு வந்ததை மறுக்கவியலாது. எத்தனை மொழிநடை வந்தாலும் தமிழ்மொழியின் கவிதை நடைக்கு ஒப்புநிகராக முடியாதென்பது தமிழுக்குக் கிடைத்த பேறு. தமிழ்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்த நம் முன்னோர் மொழியையும் சமயத்தையும் பண்பாட்டையும் தங்களோடு அடையாளங்களாகவும் அணிகலன்களாகவும் கொண்டொழுகினர். அவ்வகையில், மொழியின் உச்சமான மரபு கவிதையை மலைநாட்டில் விதைக்க மறக்கவில்லை. மலேசியக் கல்வி அமைச்சு, தமிழ் இலக்கியப் பாடத்தில் நாவல், நாடகத்தோடு மரபு கவிதையையும் ஒரு பிரிவாக இணைத்துள்ளது இதற்குத் தக்க சான்றாகும். இலக்கியப் பாடம் தொடங்கிய 1956ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை இலக்கியப் பாடத்தின் மூன்று பிரிவுகளுள் மாற்றமில்லை. அவ்வகையில் 2020ஆம் ஆண்டு தொடங்கிய இலக்கியப் பாடத்திட்டத்தில் வாடா மலர், நாவலாகவும் பிசிராந்தையார், நாடகமாகவும் கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்பு, கவிதையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஆய்வுக்கு மூன்று நோக்கங்கள் வரையறுக்கப்பட்டன. அவையாவன; கவிதைப் பொழில் கவிதைகளில் காணப்படும் வாழ்வியல் விழுமியங்களை அடையாளங் காணல், கவிதைப் பொழில் கவிதைகளில் அடையாளங் கண்ட வாழ்வியல் விழுமியங்களை ஆராய்தல், கவிதைப் பொழில் கவிதைகளில் வெளிப்படும் வாழ்வியல் விழுமியங்களை வாழ்க்கையோடு தொடர்புபடுத்துதல் ஆகும். இவ்வாய்வு கவிதைத் தொகுப்பான கவிதைப் பொழில் கவிதைகளில் காணப்படும் வாழ்வியல் விழுமியங்கள் மாணவராக்கத்திற்கும் மாந்தராக்கத்திற்கும் எவ்வாறு துணைநிற்கின்றன என்பது குறித்து ஆராய்கிறது.

**கருச்சொற்கள்:** கவிதை, வாழ்வியல் விழுமியங்கள், படிப்பினை, மாணவராக்கம், மாந்தராக்கம்

**Abstract**

Literature is called the mirror of time. It is only through literature that we are able to learn the inner life of our forefathers. Our literature is full of internal values. Our literature is a repository of knowledge that takes the values of inner life as goals and guides our lives through them. It is a matter of pride for us alone that the form of such ancient literature is embodied in poetry. All the ancient Tamil literature was available to us in the form of poems. There is no denying the fact that after the arrival of Europeans, the introduction of prose and the great development of poetry has developed in its own right, and it is a privilege for Tamil that no matter how many languages there may be, the poetic style of the Tamil language cannot be compared to the style of poetry of the Tamil language! Our forefathers, who migrated from Tamil Nadu, took language, religion and culture with them as symbols and ornaments. The supreme tradition of the language has not forgotten to sow poetry in Malaya. This is evidenced by the fact that the Malaysian Ministry of Education has included traditional poetry as a section of Tamil literature along with novels and dramas. From 1956, when the literature lesson began, to the present day, there has been no change in the three sections of the literature course. In 2020, Vaada Malar (வாடா மலர்) as novel, Pisiranthaiyar (பிசிராந்தையார்), as drama, and Kavithai Pozhil Poetry Collection (கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்பு) as poems were selected as the texts. Three objectives were defined for the study. They are; Identifying the values of life found in poems in poetry, exploring the values of life found in poems in poetry, relating life values expressed in poems to life in poetry. This study is to explore the life values found in poems towards studentization and humanization.

**Keywords:** Poetry, Values of life, Lessons, Studentization, Humanization

**முன்னுரை**

மலேசியத் திருநாட்டில் தமிழ் இலக்கியம் பாடத்திற்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு. ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் ஆங்கில இலக்கியத்திற்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. 1956ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட ராசாக் கல்விக் கொள்கை, மலாய், சீனம், தமிழ் இலக்கியப் பாடங்களுக்கு முன்னுரிமை வழங்கியது (Zahari et al., 2020). அன்று தொட்டு இன்றுவரை இலக்கியப் பாடம் படிவம் ஐந்து அரசாங்கத் தேர்வில் ஒரு விருப்பப் பாடமாக இடம் பெற்று வருகின்றது. ஏறத்தாழ ஒவ்வோர் ஆண்டும் 3000 மாணவர் தமிழ் இலக்கியப் பாடத்தைத் தேர்வுப் பாடமாக எடுத்து வருகின்றனர்.

1956ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ் இலக்கியப் பாடத்தில் மூன்று பிரிவுகள் உருவாக்கப்பட்டன. அவை; நாவல், நாடகம், கவிதைத் தொகுப்பு. இவற்றுள் கவிதைத் தொகுப்புக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் அனைத்தும் மரபு கவிதைகளாகவே இன்றுவரை தொடர்கின்றன என்பது மரபு கவிதைக்கு நாம் கொடுத்துள்ள மிகப் பெரிய அங்கீகாரம் ஆகும். கவிதைத் தொகுப்புகளுள் தேர்ந்தெடுக்கப்பட்ட மரபு கவிதைகள் உள்நாட்டு, தமிழ்நாட்டுக் கவிஞர்களால் பாடப் பெற்றவையாகும். 2020ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கே.எஸ்.எஸ்.எம் பாடத்திட்டத்தில் தமிழ் இலக்கியத்திற்கான தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் முதல்முறையாக கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவால் தயாரிக்கப்பட்டது. அதற்கு முன்னர், மலேசியத் தேர்வு வாரியமே அனைத்துப் பொறுப்பையும் ஏற்றது குறிப்பிடத்தக்கது (Kiramany et al., 2022).

2020ஆம் ஆண்டுமுதல் எஸ்பிஎம் தேர்வுப் பாடங்களுள் தமிழ் இலக்கியப் பாடத்தின் நூல்களாக, **வாடா மலர் (முனைவர் மு.வரதராசன்)** நாவலாகவும் **பிசிராந்தையார் (பாவேந்தர் பாரதிதாசன்)** நாடகமாகவும் **கவிதைப் பொழில்** கவிதைத் தொகுப்பாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்பில் 12 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. 12 கவிதைகளுள் 6 கவிதைகளை நம்நாட்டுக் கவிஞர்களும் மேலும் 6 கவிதைகளைத் தமிழ்நாட்டுக் கவிஞர்களும் பாடியுள்ளனர். கவிதைத் தலைப்பும் கவிஞர் பெயரும் கீழ்க்காணும் பட்டியலில் வழங்கப்பட்டுள்ளன.

| எண் | கவிதைத் தலைப்பு | கவிஞர் |
|---|---|---|
| 1. | காலம் பறக்குதடா | கரு. திருவரசு |
| 2. | நாளை நமதே | காசிதாசன் |
| 3. | சஞ்சிக்கூலி | காரைக்கிழார் |
| 4. | ஞான வழி | பொன்முடி |
| 5. | காலை அழகு | வாணிதாசன் |
| 6. | சூரியன் வருவது யாராலே? | நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை |
| 7. | மடமை மூடிய இருட்டு | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் |
| 8. | வாழ்க்கையே ஒரு திருவிழா | த. கோவிந்தன் |
| 9. | மயில் | சுரதா |
| 10. | காவியமும் ஓவியமும் | முரசு நெடுமாறன் |

| | | |
|---|---|---|
| 11. | காடு | பாதாசன் |
| 12. | பெண்கள் விடுதலைக் கும்மி | சி. சுப்ரமணிய பாரதி |

**(கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்பு, 2020)**

இப்பன்னிரு கவிதைகளும் ஓசைநயத்தாலும், அணிநயத்தாலும், பொருள்நயத்தாலும், சொல்நயத்தாலும் தனிச்சிறப்புகளைப் பெற்றொளிர்ந்து படிப்போர் மனத்தை ஈர்க்கச் செய்கின்றன. இக்கட்டுரையில் கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் காணப்படும் படிப்பினைகள் வாழ்வியல் விழுமியங்களாக ஆராயப் படுகின்றன.

**ஆய்வுப் பின்னணி**

இலக்கை எடுத்தியம்பவே இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. வாழ்வியல் இலக்குகளை மாந்தரின் உள்ளத்தில் விதைத்து, நல்வழியை விளைப்பன இலக்கியங்கள் ஆகும். அவ்வகையில், கவிதைகளும் பல்வேறு பாடுபொருள்களையோ மையக்கருத்துகளையோ அடிப்படையாகக் கொண்டு வாழ்வியலுக்குத் தேவையான விழுமியங்களை விதைக்கவல்லன. மாகவி பாரதி, கவிதை குறித்துப் பாடுங்கால்,

“பாட்டுத் திறத்தாலே – இவ்வையகத்தைப்
பாலித்திட வேணும்!”

(பாரதியார் கவிதைகள், 2012)

என்கிறார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களோ கவிதை இலக்குக் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

“உள்ளத் துள்ளது கவிதை – இன்பம்
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
தெளிந்து ரைப்பது கவிதை!

(மலரும் மாலையும், 2012)

நன்னூலாசிரியர் பவணநந்திமுனிவரோ உடலுக்கும் கவிதைக்கும் ஒப்புமை காட்டிக் கவிதை இன்னதென்று விளக்குகிறார்.

“பல்வகைத் தாதுவின்
உயிர்க்(கு) உடல்போல், பல
சொல்லால் பொருட்(கு) இட
னாக உணர்வின்
வல்லோர் அணிபெறச்
செய்வன செய்யுள்”

(நன்னூல், நூற்பா 268)

உள்ளத்திலுள்ளவற்றை உணர்ச்சி பொங்கத் தெள்ளத் தெளிந்த சொற்களால் எடுத்துரைப்பதுதான் கவிதையாகும் (சுப்புரெட்டியார், 1988). ஆக மொத்தத்தில், கவிதை என்பது ஓரிலக்கை எடுத்தோத கவிஞர்கள் கையாளும் இலக்கியம் எனலாம்.

அவ்வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரு கவிதைகளும் பல கருப்பொருள்களைக் கொண்டு சிறந்து விளங்குகின்றன. கருப்பொருள்களின் அடிப்படையில் அவை மாந்த வாழ்வியலின் உய்வுக்குத் தேவையான வாழ்வியல் விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றன.

**ஆய்வு நோக்கம்**

பன்னிரு கவிதைகளுள் காணப்படும் வாழ்வியல் விழுமியங்களைக் கண்டறிந்து ஆய்வுக்குட்படுத்து மூன்று நோக்கங்கள் வரையறுக்கப்பட்டன. அவை;

i. கவிதைப் பொழில் கவிதைகளில் காணப்படும் வாழ்வியல் விழுமியங்களை அடையாளங் காணல்.
ii. கவிதைப் பொழில் கவிதைகளில் அடையாளங் கண்ட வாழ்வியல் விழுமியங்களை ஆராய்தல்.
iii. கவிதைப் பொழில் கவிதைகளில் வெளிப்படும் வாழ்வியல் விழுமியங்களை வாழ்க்கையோடு தொடர்புபடுத்துதல்.

**ஆய்வு வினா**

வரையறுக்கப்பட்ட நோக்கங்களை அடைய மூன்று ஆய்வு வினா உருவாக்கப்பட்டன. அவை;

i. கவிதைப் பொழில் கவிதைகளில் காணப்படும் வாழ்வியல் விழுமியங்கள் யாவை?
ii. கவிதைப் பொழில் கவிதைகளில் வாழ்வியல் விழுமியங்கள் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன?
iii. கவிதைப் பொழில் கவிதைகளில் வெளிப்படும் வாழ்வியல் விழுமியங்கள் எவ்வாறு வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன?

**கண்டடைவு (வாழ்வியல் விழுமியங்கள்)**

செந்தமிழ் அகராதி விழுமியம் என்பதற்கு, *'மேலான பொருள், சிறந்தது, உயர்ந்தது'* என்ற பொருளை வழங்கியுள்ளது. வாழ்வியல் விழுமியங்கள் என்பது மனிதர்களால் வாழ்வியலில் கடைப்பிடிக்கப்படும் முக்கியமான கொள்கைகள் அல்லது நம்பிக்கைகள் எனலாம். அவை தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் முடிவுகள், செயல்கள் மற்றும் உறவுகளில் வழிகாட்டும் அடிப்படை இலட்சியங்கள். மனித விழுமியங்கள் கலாச்சார, சமூக, வரலாற்றுச் சூழல்களால் மட்டுமல்ல, தனிப்பட்ட அனுபவங்கள், நம்பிக்கைகள், உலகக் கண்ணோட்டங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்விழுமியங்கள் நேர்முறையான பண்புகளுடனும் நடைமுறைகளுடனும் தொடர்புடையவை. மேன்மைமிகு வாழ்வியல் நெறிமுறைகளையும் கட்டமைப்பையும் வடிவமைப்பதில் வாழ்வியல் விழுமியங்கள் முக்கியக் பங்கு வகிக்கின்றன.

ஒட்டுமொத்தமாக, மனித விழுமியங்கள் பற்றிய ஆய்வு என்பது தத்துவம், உளவியல், சமூகவியல், மானுடவியல் மற்றும் பிற துறைகளிலிருந்து பெறப்பட்டவையாக விளங்குகின்றன (Sassenberg, K., & Woltin, K. 2022).

ந. சுப்புரெட்டியார் கவிதையையும் அதன் இலக்கையும் இணைத்து, அஃது எடுத்தோதும் கருத்தும், இலக்குமே விழுமியம் எனும் வரையறையை நிறுவுகிறார். கவிதை உணர்த்தும் கருத்துகளே வாழ்வியல் விழுமியங்களாகப் படிப்போர்க்கு அமைகின்றன. *'வாழ்க்கையிலும் மனிதப் பண்பிலும் உள்ள பொதுத்தன்மையை எடுத்துக் கூறுவதே கவிதையின் நோக்கமாகும். 'யாம்பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்ற உயர்ந்த குறிக்கோள் கவிதைத் துறையில் எளிதாக நிறைவேறுகின்றது. கவிஞனின் மனத்தில் தோன்றிய அனுபவமே கவிதையாக முகிழ்கின்றது; வடிவம் கொள்ளுகின்றது. கவிதையைப் படிக்கும் நாமும் அக்கவிஞன் பெற்ற அனுபவத்தையே பெற்று விட்டால், கவிதையும் உணர்த்த வேண்டியவற்றை உணர்த்திவிடும் நிலையை அடைந்து விடுகின்றது.'* (சுப்புரெட்டியார் - பாட்டுத் திறன், 1988)

இனித் தொடர்ந்து ஒவ்வொரு கவிதையும் எத்தகைய வாழ்வியல் விழுமியங்களை உணர்த்துகின்றன என்பதை ஆராயலாம்.

**காலம் பறக்குதடா**

வண்ணக் கவிஞர் கரு. திருவரசு அவர்கள் புனைந்த கவிதை 'காலம் பறக்குதடா'. சமுதாயம் என்கின்ற பாடுபொருளில் தமிழர் முன்னேற்றம் எனும் மையக்கருவை முன்னிறுத்தி இக்கவிதை புனையப்பட்டுள்ளது. உலகப் போக்கிற்கு ஏற்பத் தமிழர்கள் தங்கள் வாழ்வைச் சீரமைக்க முனைந்தால் மட்டுமே வாழ்க்கையில் வளர்ச்சி உண்டு எனும் வாழ்வியல் விழுமியத்தை மையப்படுத்தி இக்கவிதை வடிக்கப்பட்டுள்ளது. தமிழரிடையே பல்வகைமை ஆற்றல்களும் திறன்களும் இருந்த போதும், அவற்றை முறைப்படுத்தி முன்னேறப் பழம்பெருமைகளைப் பேசுவதை விடவேண்டும் என்றும் தமிழர்கள் தங்களிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார் கவிஞர் அவர்கள்.

'ஒன்றிச் செயல்புரிந்தால் – நாம்
உச்சிக் குயர்வோமென
ஒன்றி முறைவகுப்பாய்! – சின்னாள்
சென்று நிலையறிந்தால்
என்றும் இருந்ததுபோல் – இருப்பாய்
ஏதும் செயல்புரியாய்!
என்றிங் குயர்வதடா! – தமிழா
எண்ணிச் செயல்தொடடா!

என ஒற்றுமை உணர்வே தமிழர்களை மேலோங்கச் செய்யும், மாறாகச் செயல்பட்டால் எப்போது இங்கு உயர்வது? என வினா எழுப்புகிறார். ஒன்றிச் செயல்படுதல் ஒன்றே

இனமீட்சிக்கு வழிவகுக்கும். காலங் காலமாகத் தமிழர்கள் தங்களுக்குள் ஒற்றுமை இழந்து வருவதால் எதிர்காலம் இருளாகி வருவதை உணர்ந்த கவிஞர், ஒற்றுமையைப் பேணிக் காத்தலின் அவசியத்தை வாழ்வியல் விழுமியமாய் விட்டுச் செல்கிறார்.

**நாளை நமதே**

கவிஞர் காசிதாசன் கைவண்ணத்தில் மலர்ந்த கவிதை 'நாளை நமதே'. வாழ்க்கை எனும் பாடுபொருளில் தமிழர் தம் சிறப்புகளை அறிந்தால் எதிர்காலம் சிறக்கும் என்ற மையக்கருவை முன்வைத்துப் புனையப்பட்டுள்ளது. இக்கவிதையில் இயற்கையைப் போற்றுவதோடு அந்த இயற்கை அழியாமல் காப்பது நமது கடமையாகும் என்ற விழுமியத்தைச் சொல்லியிருப்பார். மேலும், நாட்டின் மேம்பாட்டிற்குப் பாடாற்றிய நம் முன்னோர்களின் ஈகத்தையும் வரலாற்றையும் அறிதல் அவசியம் என்பதையும் வலியுறுத்தி இருப்பார்.

முத்து மணித்திரள் மூழ்கி எடுத்தவர்
முன்னுரை வாழ்வெனக் கொட்டுங்கடி
முத்திரை யிட்டவர் மூத்த குடியினர்
முத்தமிழ் என்றே கொட்டுங்கடி!

நாளை வருங்காலம் நம்மவர்க்கே என்று
நம்தமிழ்ப் பெண்களே கொட்டுங்கடி
வேளை வருமென்று வீணில் உறங்காமல்
வீறுகொண்டே கும்மி கொட்டுங்கடி!

என, இந்த நாட்டில் நமக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறதென்று நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். உலக முன்னேற்றத்திற்கு ஏற்பத் தமிழர்கள் தங்கள் வாழ்வைச் சீரமைத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தை, 'எவ்வ துறிவது உலகம்' என்னும் வான்புகழ் வள்ளுவரின் குறள்மொழியைச் சார்ந்து நமக்கான வாழ்வியல் விழுமியமாகச் சேர்ப்பித்துள்ளார் கவிஞர்.

**சஞ்சிக் கூலி**

கவிஞர் காரைக்கிழாரின் சஞ்சிக் கூலி எனும் கவிதை, கவிச்சுடரைப்போல் புகழ்பெற்ற ஒரு கவிதை. தோட்டப்புறத் தமிழர்களின் அவலம் எனும் மையக்கருவைக் கொண்டு புனையப்பட்ட கவிதையாகத் திகழ்கிறது. ஆங்கிலேயர்கள் நம்மைச் சஞ்சிக்கூலிகளாய்த் தமிழ்நாட்டிலிருந்து மலாயாவிற்குக் கொண்டு வந்த கதையையே சொல்லிச் சொல்லித் தலைமுறையின் வளர்ச்சியில் கவனம் செலுத்தாமல் போய்விட்டோம் என்ற செய்தியைச் சொல்லும் கவிதையாக வார்க்கப்பட்டுள்ளது. சேமிப்புப் பழக்கத்தின் அவசியம், மாற்றுச் சிந்தனை இல்லாமை, அறியாமையைப் போக்கிக் கொள்ளும் நிலையின்மை, தங்கள் உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் முனைப்பின்மை எனக் காலந்தோறும் தொடர்கின்ற இடர்களைத் தம் கவிதையில் தமிழர்களுக்கான அறைகூவலாய் விடுத்திடுக்கிறார் கவிஞர்.

‘தேடிய பணத்தில் ஓடிய செலவைத்
திடமாய்க் கொஞ்சம் சேமித் திருந்தால்
வாடிய நாளே வாய்த்திருக் காது
மற்றவர் போல நின்றி ருப்பாய்! – வெறும்
மழுங்க னாகவா இன்றி ருப்பாய்?’

எனும் வரிகளின் வாயிலாகக் குடும்ப முன்னேற்றத்திற்கும் இனத்தின் முன்னேற்றத்திற்கும் பொருளியல் பலம் இன்றியமையாதது எனும் பொருளியல் விழுமியத்தை வலியுறுத்துகிறார். சேமிப்பு ஒன்றே வளமான எதிர்காலம் அமையத் துணைசெய்யும் என்பதையும் நிலைநிறுத்துகிறார்.

**ஞானவழி**

கவிஞர் பொன்முடி அவர்களின் சிந்தையில் உதித்த கவிதை ஞானவழி. அறிவு எனும் பாடுபொருளில் உயர்ந்தோர் வழி நிற்றல் எனும் மையக்கருவின் அடிப்படையில் புனையப்பட்ட கவிதையாகும்.

‘ஞானவழி சென்றே நாளும்
இயல்பிலாச் செயல்க ளாற்றிப்
போனவழி நெறியென் கின்றாய்;
பொய்க்கு;மெய் வண்ணம் பூசி

ஊனவிழிக் குயர்வு சேர்ப்பாய்;
உனக்கொன்று சொல்வேன், நல்லோர்
ஞானவழி நிற்பாய், நெஞ்சே
நல்லுப தேசம் இஃதே!’

என்று, நெஞ்சுக்குச் சொல்வதாக ஞானவழியை உபதேசிக்கிறார். உயர்ந்தோர் வழிநிற்றல் வாழ்வியல் விழுமியங்களுள் ஒன்றாகத் திருவள்ளுவரும் கூறுகிறார். ‘பெரியாரைத் துணைகோடல்’ (அதிகாரம் 45) எனும் ஓரதிகாரமே இதற்குச் சான்றாக அமையும்.

‘பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்’ (குறள் 450)

என்ற குறள் பெரியாரைத் துணைகோடல் அதிகாரத்தின் இறுதிக் குறளாக அமைகிறது. இக்குறள்வழி திருவள்ளுவர், ‘நல்லவராகிய பெரியாரின் தொடர்பைக் கைவிடுதல் பலருடைய பகையைத் தேடிக்கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமை உடையதாகும்,’ எனப் பகர்கின்றார். இதே கருத்தைக் கவிஞரும் உயர்ந்தோர் வழி நின்று ஞானவழியைப் பின்பற்றினால் வாழ்வு முழுமை அடையும் என்றும் பற்று நீங்கி வாழல் நிம்மதியான

வாழ்க்கைக்கு வழிகோலும் என்றும் உணர்த்துகிறார். பற்றறுத்தலும் இறைவன் திருவடியைப் பற்றி வாழ்தலும் தமிழர் வாழ்வியல் விழுமியத்தின் உச்சம். படைப்பின் இலக்கும் அதுதானே.

‘நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே’
(சிவபுராணம், திருவாசகம்)

வீடுபேற்றை நோக்கிய இவ்வுலக வாழ்வில் ‘எண்குணத்தான் தாளைப்’ பற்றுதற்குத் துணைசெய்வார் உயர்ந்தோர் தானே. ஆதலால்தான் ஞானவழியில் உயர்ந்தோர் வழிநிற்றலை நெஞ்சுக்குச் சொல்லி அதை ஆற்றுப்படுத்துகிறார் கவிஞர் பொன்முடி.

**காலை அழகு**

தமிழ்நாட்டுக் கவிஞர், கவிஞரேறு வாணிதாசன் அவர்களால் புனையப்பட்ட கவிதை ‘காலை அழகு’. இயற்கை எனும் பாடுபொருளில் காலைப் பொழுதின் அழகு என்ற மையக்கருவின் அடிப்படையில் எழுந்த கவிதை இது. இயற்கையோடு இயைந்து வாழும் முறையே தமிழர் வாழ்வியல் முறையெனும் விழுமியத்தை உணர்த்தும் இயற்கைக் கவிதை. இயற்கையை அழகாகப் படம்பிடித்துக் காட்டும் கவிதை. வெள்ளி முனைப்பினிலும், புள்ளின ஓசையிலும், காலைப் பிறப்பினிலும், சோலைக் கலகலப்பிலும், சேவல் அழைப்பினிலும், தாமரை மொட்டினிலும், பெண்கள் குளிர்முகத்தினிலும் என எங்கும் அழகைப் பார்த்துப் பரவசப்படுகிறார் கவிஞர். இயற்கையை அதன் தன்மையிலேயே பார்ப்பதென்பது ஓர் அரிய கலை. இக்கலையானது இயற்கையை நேசிக்கத் தூண்டுவதோடு அதன் அவசியத்தையும் நமக்கு உணர்த்தும். இயற்கையோடு இயைந்த வாழ்வமைந்த காலத்தில் மாந்த வாழ்வு மகிழ்வுற்றிருந்தது. மாந்தன் இயற்கைக்கு அரணாகவும், இயற்கை மாந்தனுக்கு அரணாகவும் இருந்ததை வரலாறு நமக்குணர்த்தியுள்ளது. இந்நிலை இன்று அருகி வருவது வேதனைக்குரியதாகும். மாந்தனின் தன்னலப் போக்கும் பேராசையும் இயற்கையை அழிவுக்கு இட்டுச் செல்கின்றது. இயற்கையின் அழிவு, மாந்த இனத்திற்கே அழிவு எனும் உண்மையை நாம் உணர்ந்து இயற்கையை அடுத்த தலைமுறைக்கு நலமிகுந்ததாகவும் வளமிகுந்ததாகவும் விட்டுச் செல்வதைக் கடமையாகக் கொள்ளல் வேண்டுமென்ற விழுமியத்தை இக்கவிதை வழி நம்மனத்தில் பதித்துச் செல்கின்றார் கவிஞர்.

**சூரியன் வருவது யாராலே?**

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் கைவண்ணத்தில் மலர்ந்த கவிதை ‘சூரியன் வருவது யாராலே?’ இறை நம்பிக்கை பாடுபொருளில், இறையாற்றலைப் போற்றிடுவோம் எனும் மையக்கருவில் விளைந்த கவிதை இது. சமய நல்லிணக்கத்தைக் கற்பிக்கும் கவிதையாகப் படைக்கப்பட்டுள்ளது. இயற்கையைப் போற்றல் வேண்டும், இயற்கையை இயக்கும் இறைமையைப் போற்றல் வேண்டும் என்ற விழுமியத்தைப் பகரும் கவிதையாகும். இறைவனை அவரவர் சமயக் கற்றலின்வழி அறியலாம் என்பதையும் எந்த மதக் கடவுளும் உயர்ந்தவரே என்பதையும் ஆறுகள் பலவாக இருப்பினும் அவை அடையும்

கடலொன்றே எனும் உயரிய சமய நல்லிணக்கதை விதைக்கும் சிறந்த கவிதைகளுள் ஒன்றாக இன்றுவரை விளங்குகிறது இக்கவிதை.

‘அல்லா வென்பார் சிலபேர்கள்;
அரன்அரி யென்பார் சிலபேர்கள்;
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை யென்பார்கள்;
சொல்லால் விளங்கா ‘நிர்வாணம்’
என்றும் சிலபேர் சொல்வார்கள்;
எல்லா மிப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே!

அந்தப் பொருளை நாம்நினைந்தே
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்
எந்தப் படியார் எவரதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போமதை வணங்கிடுவோம்;
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்!’

சமயங்களால் சதிராடும் மாந்தர்க்குச் சாட்டையடி இந்தக் கவிதை. பிரிவினைகளையும் பிணக்குகளையும் மறந்து அவரவர் மதக் கோட்பாட்டின்வழி பிறர் மதத்தை, நம்பிக்கையைத் தூற்றாமல் வாழ்தலே இறைவனைத் தொழுவாரின் உண்மை உள்ளம் என்பதைப் படம்பிடித்துக் காட்டும் கவிதையாகச் சமயநெறி விழுமியத்தை எடுத்தோதுகிறது.

**மடமை மூடிய இருட்டு**

‘மாட்டுவண்டி புகாத ஊரிலும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாட்டுவண்டி செல்லும்’ என்பர். மக்கள் கவிஞர், பட்டாளிக் கவிஞர் எனும் பெருமையுடைய கவிஞர் பட்டுக்கோட்டையார். அறியாமை எனும் பாடுபொருளில் சமுதாயத்தில் சிலரின் பண்பற்ற போக்கு எனும் மையக்கருவை முன்வைத்து, அவர் சிந்தையொளியில் உதித்த கவிதை ‘மடமை மூடிய இருட்டு’ ஆகும்.

‘குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும்
குருட்டு உலகமடா – இது
கொள்ளை யடிப்பதில் வல்லமை காட்டும்
திருட்டு உலகமடா – தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
திருந்த மருந்து சொல்லடா (குறுக்கு)

எனப் பிறரை ஏமாற்றி வாழும் மாந்தர்நிலையைச் சாடி இவர் வடித்திருக்கும் பாடல் இன்றும் மாந்தரின் ஏமாற்றம் அடைந்த மாந்தரின் மனத்திற்கு அருமருந்தாய் அமைந்து வருகின்றது. நற்சிந்தனை, சண்டைச் சச்சரவுகளைத் தவிர்த்தல், அடுத்தவரை முன்னேற்ற வழிகாட்டுதல், எளியவர்களை ஆதாரித்தல், உழைத்து வாழ வேண்டும் என்ற சிந்தனைகளைக் கவியாக்கிப் பாடலாகத் தந்து நம்வாழ்வு உய்ய வழியமைத்திருக்கிறார் கவிஞர் அவர்கள்.

‘அன்பு படர்ந்த கொம்பினிலே ஒரு
அகந்தைக் குரங்கு தாவும் – அதன்
அழகைக் குலைக்க மேவும்
கொம்பு ஒடிந்து கொடியும் குலைந்து
குரங்கும் விழுந்து சாகும் – சிலர்
குணமும் இதுபோல் குறுகிப் போகும்
கிறுக்கு உலகமடா – தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
திருந்த மருந்து சொல்லடா (குறுக்கு)’

என்ற வரிகள் இன்றும் நமக்கான வாழ்வியல் விழுமியமாய்க் கண்முன்னே பரந்து விரிந்து நிற்கின்றது.

**வாழ்க்கையே ஒரு திருவிழா**

தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞர் த. கோவேந்தன் கைவண்ணத்தில் மலர்ந்த கவிதை ‘வாழ்க்கையே ஒரு திருவிழா’ வாழ்க்கை எனும் பாடுபொருளில் அன்பு எனும் மையக்கருவில் மலர்ந்த கவிதையாகத் திகழ்கிறது. வாழ்க்கையின் அடித்தளமே அன்பில்தான் அமைகிறது. உலகமே அன்பைப் போற்றி மகிழ்கிறது. ‘அன்பே சிவம்’ என்றும், ‘அன்புடையார் எல்லார் தமக்குரியர்’ என்றும் இலக்கியங்களும் அனைத்து மதங்களும் அன்பைக் கொண்டாடி, மாந்தரை அன்புநெறியைப் பின்பற்றி வாழச் சொல்கின்றன (Bardazzi, 2023). அன்புநெறி பட்டோர் வாழ்க்கை எந்தச் சூழ்நிலையிலும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அன்பின்வழியே மக்களை இணைத்திட முடியும். அன்பொழுக வாழ்வதால் இன்பமொழுக வாழலாம் எனும் ஆழ்ந்த அன்புடைமையைப் போற்றிப் பாடுவதோடு அதன்பால் நம்மைச் சேர்க்கிறார் கவிஞர்.

‘நம்மைச் சுற்றிலும் அழகொளி
ஞாயிறு ஒண்கதிர் நேருறச்
செம்மை அன்பையே பொழிந்திடும்
சேர்ந்து வந்திடும் ஊரெலாம்

நாள்பொழு தெலாம்அன் புறவுதான்
நலமும் வலுவும் தந்திடும்;
நாள்பொழு தெலாம்உன் அன்புயிர்
கணந்தொறும் வாழ உதவுமே!’

**மயில்**

உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் கற்பனைத் தேரில் கவிநயம் புரிந்த கவிதை மயிலாகும். உயிரினங்கள் எனும் பாடுபொருளில் மயிலின் அழகும் இயல்பும் எனும் மையக்கருவை அடிப்படையாகக் கொண்டு அழகிய கவிதையாய்ப் படைத்திருக்கிறார் கவிஞர்.

‘நீட்டுயர் மேடையில் நாட்டிய மாடிக்
காட்டும் பறவையே கலவை மயிலே
தொங்கும் தோகையில் வகைநிலை காண்கிறேன்
வண்ணத் தோகையில் வகைநிலை காண்கிறேன்
விரிக்கும் தோகையில் விரிநிலை காண்கிறேன்!’

என மயிலின் அழகும் இயல்பும் ததும்பும் வண்ணம் கவிதை நடமிடுகிறது. மயிலினம் அழியாமல் பாதுகாத்தல் அவசியம், தமிழர் வாழ்வியல் கூறுகளை அறிந்து நடைமுறைப்படுத்துவது, ஒரு செயலை ஆராய்ந்து செய்ய வேண்டும், செந்தமிழைப் போற்றுவது நமது கடமை எனும் உயிரிய சிந்தனையோடு தமிழியச் சிந்தனைகளையும் நமக்களித்துக் கவிதை யாத்துள்ளார் கவிஞர்.

**காவியமும் ஓவியமும்**

பாப்பா பாவலர் முரசு நெடுமாறன் அவர்கள் படைப்புணர்வு எனும் பாடுபொருளில் குழந்தையின் கலையுணர்வைப் போற்றுதல் எனும் மையக் கருவில் புனையப்பட்ட கவிதை காவியமும் ஓவியமும். ‘எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை (பெற்றோர்) வளர்ப்பினிலே’ என்ற புலமைப்பித்தன் வரிகளுக்கு வலுச்சேர்க்கும் வண்ணம் அமைந்தது இக்கவிதை. இயல்பிலேயே குழந்தைகள் கலையுணர்வும் அறிவாற்றலும் நிறைந்தவர்களே (Del Giudice & Haltigan, 2023). பிள்ளைகளின் கலையுணர்வைக் கட்டுப்படுத்துவது அவர்களின் ஆர்வத்தை மழுங்கச் செய்வதோடு அவர்களைத் தாழ்வு மனப்பான்மை நிறைந்தவர்களாக உருமாற்றுகிறது. மாறாக, பிள்ளைகளின் ஆற்றலை வளர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் போது அப்பிள்ளைகளின் தன்னம்பிக்கையும் மேலோங்குவதைக் காண முடிகிறது. பிள்ளைகளின் கலைப்படைப்புகளை மதிக்கக்கூடிய மனப்பக்குவத்தைப் பெற்றோர்கள் கொண்டிருத்தல் அவசியம் எனும் குழந்தை வளர்ப்பு முறையின் அவசியத்தையும் உணர்த்துகிறார். குழந்தையின் உளவியலை அறிந்து செயல்படுவதன் வழி சிறந்த தலைமுறையை உருவாக்க இயலும் என்ற கருத்தையும் மசீரான் முன்வைக்கிறார் (Masiran, 2022) ‘அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ்’ (குறள் 64 : மக்கட்பேறு) என்ற திருவள்ளுவர் கூற்றுக்கும், குழந்தைகளின் கலைப்படைப்புக்கு நிகரான ஒன்று உலகிலில்லை எனும் பாப்பா பாவலரின் கூற்றும் ஒப்புநோக்கத் தக்கதாய் உள்ளது.

‘எந்தக் கலைஞனும் எழுதிட முடியா
ஓவியக் காட்சிகள் ஒளிர்ந்தன சுவரில்!
அடுப்புக் கரியுடன் அருமை மகன்தான்
ஆங்கே அருங்கலை மணிபோல்
தேங்கும் மகிழ்ச்சி சிறக்கநின் றனனே!’

**காடு**

மணிக்கவிஞர் பாதாசன் அவர்களின் கைவண்ணத்தில் மலர்ந்த கவிதை காடு. காட்டின் வளம் எனும் பாடுபொருளில் காடு காட்டும் வாழ்வியல் எனும் மையக் கருத்தை முன்னிறுத்திப் பாடிய கவிதையாகப் பூத்திருக்கிறது. காடுகள் அழிந்தால், மாந்த இனம் அழியும். காடுகளே நமக்கான உயிர்வளியை அளிக்கின்றன. காடுகளே கனிவகைகளையும் காய்கறி, கிழங்கு வகைகளையும் அரிய மருந்துகளையும் நமக்களிக்கும் இயற்கைக் கொடை, காட்டைப் போற்றிப் பாதுகாத்தல் ஒன்றே மாந்த இனத்தின் பெருங்கடமை ஆகும் (Ab Rahman, 2022). மேலும், காடுகள் சார்ந்த விழிப்புணர்வும் வேண்டும் என்ற விழுமியத்தை நமக்களிக்கிறார் கவிஞர்.

‘காட்டிலுள்ள நன்மரங்கள் வீடாய் மாறும்
கனிகளெலாம் நமக்குணவாய்ச் சுவைகொ டுக்கும்!
பாட்டிசைக்க நமக்கெல்லாம் கற்றுத் தந்த
பறவைவருந் தும்தம்மின் கூட்டில் வாழ்ந்து
ஆட்டத்தை மயில்பாம்பு மானின் கூட்டம்
அவற்றிடம்நாம் கற்றோமே; எண்ணிப் பார்த்தால்
காட்டிலுள்ள ஒவ்வொன்றும் பயனை நல்க
நாட்டிலுள்ள நாம்யார்க்கும் பயனற் றோமே!’

இக்கவிதைவழி, காடு அனைத்துயிருக்கும் பயனளிப்பதுபோல், நாமும் அனைத்துயிருக்கும் பயனளிக்கும் வாழ்க்கை வாழ வேண்டுமென்ற வாழ்வியல் விழுமியத்தை விதைக்கிறார். ‘யாம்பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்’ என்பதுபோல் நாம் மட்டும் நன்மையடையாது நம்மால் மற்றவரும் நன்மையடையச் செயலாற்ற வேண்டுமென்கிறார்.

**பெண்கள் விடுதலைக் கும்மி**

மாகவி பாரதியாரின் கைவண்ணத்தில் பெண்ணுரிமை எனும் பாடுபொருளில் பெண் விடுதலை எனும் மையக்கருவில் பிறந்த கவிதை ‘பெண்கள் விடுதலைக் கும்மி’. பெண்கள் நாட்டின் கண்கள், பெண்ணுரிமை, பெண் விடுதலை எனப் பல பாடுபொருளில் பெண்ணடிமை விலங்கைத் தகர்த்தெறியும் போர்வாளாய்க் கவிதை யாத்தவர் மாகவி. வையகத்தின் பேதமையைப் போக்கிட வேண்டுமென்றால் பெண்களுக்கு அறிவொளி ஏற்றுதல் ஒன்றே அதற்கான வழி என்று நம்பிக்கையை விதைத்ததோடு அதற்கான செயலிலும் இறங்க வேண்டுமென்று பறைசாற்றினார்.

‘ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமைஎன்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.’

ஆண்களுக்குச் சிறுவயதிலிருந்தே பெண்களைப் போற்றும் நெறிகளைக் கற்றுத் தருதல் அவசியமென்றும் கற்புநிலை இருபாலருக்கும் பொதுவென்றும் வலியுறுத்துகிறார். பெண்கள் ஆண்களுக்கு நிகராகச் சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்பதை;

‘பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கேபெண்
இளைப்பில்லை காண்என்று கும்மியடி!’

என்ற வரிகள்வழி நமக்குணர்த்துகிறார். பெண்களைப் போற்றும் இனமே உலகில் உயர்ந்த இனமாகக் கருதப்படும். அத்தகைய இனமாகவே தமிழினம் இருந்து வந்துள்ளமை ஈண்டு உணரத்தக்கது. சங்கக் காலந்தொட்டே பெண்களுக்கான உரிமையையும் உயரிய இடத்தையும் நாம் வழங்கியே வந்திருக்கிறோம். இலக்கியத்தில் பெண்பாற் புலவர்கள் அதிகம் கொண்டவர் நாம்தாம். இயற்கையையும் பெண்ணாகவே பார்த்தவர்களும் நாம்தாம். இடையிலே ஏற்பட்ட சருக்கல்கள் பெண்ணுரிமையைப் பறித்திருக்கிறது. அதை மீட்டுருவாக்க எழுந்த கவிதையாகவே இது விளங்குகிறது. பெண்மையைப் போற்றுவோம் என்னும் வாழ்வியல் விழுமியத்தை இக்கவிதை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது.

**நிறைவுரை**

கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள பன்னிரு கவிதைகளும் அவற்றுக்கெனத் தனித்தனிச் சிறப்புகளையும் வாழ்வியல் விழுமியங்களையும் கொண்டிலங்குகின்றன. படிவம் நான்கு, ஐந்து மாணவர்களின் கற்றல் திறன்களுக்கேற்ப இக்கவிதைகள் வடிவமைக்கப் பட்டுள்ளன எனும் கருத்தினை ஆசிரியர்கள் கொண்டுள்ளனர். ஒவ்வொரு கவிதையும் பற்பல படிப்பினைகளை வலியுறுத்தினாலும், வாழ்வியல் விழுமியங்கள் எனும் நோக்கில் அப்படிப்பினைகளைத் தொகுத்தே இக்கட்டுரையில் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியப் பாடத்தின் நோக்கங்களாக ஆறு நோக்கம் வரையறுக்கப்பட்டுள்ளன. அவையாவன;

1. இலக்கிய வகைகளையும் கூறுகளையும் அறிந்து விவரித்தல்
2. இலக்கியப் படைப்புகளையும் படைப்பாளர்களையும் பற்றி விவரித்தல்
3. இலக்கியப் படைப்புகளை வாசித்துப் புரிந்துகொள்வதோடு அவற்றைப் பகுப்பாய்வும் செய்தல்
4. இலக்கியப் படைப்புகளின் முருகுணர்ச்சியை உய்த்துணர்ந்து விவரித்தல்
5. இலக்கியப் படைப்புகளைத் திறாய்வு செய்து அவற்றை விளக்குதல்
6. இலக்கியப் படைப்புகளிலுள்ள உயரிய பண்புகளை நலம் பாராட்டுதல்

(மலேசியத் தேர்வு வாரியம், 2020)

வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்கேற்பத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளும் மாணவர்களுக்கு உயரிய பண்புகளின் நலம் பாராட்டுவதோடு அவற்றை வாழ்வியல் விழுமியங்களாகக் கொண்டு வாழ்வாங்கு வாழவும் வழியமைக்கின்றன.

## துணைநூற்பட்டியல்


Ab Rahman, N. (2022). Wacana Budaya dan Seni dalam Puisi Melayu Moden oleh Penyair Negeri Kelantan. Malay Literature, 35(1), 83-108.

Bardazzi, M. (2023). Everything I Did I Did for Happiness. Slant Books.

Del Giudice, M., & Haltigan, J. D. (2023). A new look at the relations between attachment and intelligence. Developmental Review, 67, 101054.

Kiramany, I., Ponniah, K., & Jaiseelan, S. (2022). TEACHERS'PERCEPTIONS TOWARDS THE LITERARY TEXTS USED IN TAMIL LITERATURE SUBJECT IN 2021 IN COMPARISON TO THE TEXTS USED IN 2016. Journal of Positive School Psychology, 25-35.

Masiran, R. (2022). A Review of Parenting in A Multicultural Country: The Malaysian Experience. Parenting-Challenges of Child Rearing in a Changing Society.

Zahari, M. A. M., Amirul, A. A., Yaakub, R., & Sarudin, A. (2020). KEWAJARAN PENGGUNAAN PRODUKSI TEATER DALAM PEMBELAJARAN GENRE DRAMA MELALUI MATA PELAJARAN KESUSASTERAAN MELAYU KOMUNIKATIF: APPROPRIATENESS OF THE USE OF GENRE DRAMA THEATER IN LEARNING TOWARDS COMMUNICATIVE MALAY LITERATURE SUBJECT. Jurnal Gendang Alam (GA), 10.

Sassenberg, K., & Woltin, K. (2022). The role of values in social identity change. Current Opinion in Psychology, 43, 113-118. doi: 10.1016/j.copsyc.2022.01.018

Harpaz-Rotem, I., & Leiderman, S. (2021). The value of empathy: Examining the relations between empathy, values, and well-being. Journal of Positive Psychology, 16(6), 775-786. doi: 10.1080/17439760.2020.1861152

Roccas, S., & Sagiv, L. (2020). Value change and stability across the life span: A review and some theoretical considerations. Personality and Social Psychology Review, 24(4), 381-401. doi: 10.1177/1088868319867817

அ.கி. பரந்தாமனார், 2007. கவிஞராக, பாரி நிலையம், சென்னை.

கவிதைப் பொழில், 2020. (முரசு நெடுமாறன், தொகுப்பாசிரியர்), உமா பதிப்பகம், கோலாலம்பூர்.

சுப்புரெட்டியார். ந, 1983. கவிதை பயிற்றும் முறை, பாரி நிலையம், சென்னை.

சுப்புரெட்டியார். ந, 1988. பாட்டுத் திறன், ஸ்டார் பிரசுரம், சென்னை.

மலேசியத் தேர்வு வாரியம், 2020. மலேசியக் கல்வி அமைச்சு.

வரதராசன். மு, 1972. தமிழ் இலக்கிய வரலாறு, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., சென்னை.

வரதராசன். மு, 1949. திருக்குறள் தெளிவுரை, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., சென்னை.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# மழலையர் சொல்வளம் பெருக்கும் மரபு கவிதைகள்

# Classical Poems that Enhance Children's Vocabulary

இஷாந்தினி தமிழரசன்/ Hishanthini Thamilarasan[1]
சர்வேந்திரன் சந்தர்/ Sarveinthirran Chandar[2]
மலர்விழி சின்னையா/ Malarvizhi Sinayah[3]

[1&2]Undergraduate Student, Faculty of Languages and Linguistics, Universiti Malaya, Malaysia
[3]Senior Lecturer, Faculty of Languages and Linguistics, Universiti Malaya, Malaysia
Corresponding Email: hishathamil@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மழலையர் பொதுவாக, பலமுறை கேட்டு அறிந்த சொற்களையே பேசுவர். உச்சரிக்கச் சுலபமான சொற்களையே மழலையர் கற்க முயல்வதால், இத்தகைய சொற்களே அவர்களின் பேச்சில் இடம்பெறக் காணலாம். குறிப்பாக, மழலையரின் மொழி வளர்ச்சி, மழலையர் பாடல்களின் (rhymes) வழி அதாவது பேச்சு ஒலிப்புகளில் இரட்டிப்புச் சொற்களைப் பயன்படுத்தும் பொழுது வளர்ச்சியடைகிறது (Andrews & Baker, 2019). அவ்வகையில், மரபு கவிதை அதாவது யாப்பிலக்கணத்தோடு அமையப்பெறும் கவிதைகள் மழலையரின் சொல்வளத்தைப் பெருக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன எனலாம். எனவே, மரபு கவிதை வடிவில் அமைந்த மழலையர் பாடல்களில் எத்தகைய சொல்லாட்சி இடம்பெற்றுள்ளன என்பதை அறிவது அவசியமாகும். ஆகவே, இக்கட்டுரை மழலையரின் சொல்வளம் பெருக்கும் மரபு கவிதைகள் எனும் தலைப்பில் படைக்கப்படுகிறது. மரபு கவிதைகளில் இடம்பெற்றுள்ள, சொல்வளத்தைப் பெருக்கக்கூடிய கூறுகளை அடையாளம் காணுதலும், அவற்றை விவரித்தலும் இக்கட்டுரையின் நோக்கங்கள் ஆகும். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் 'சிரிக்கும் பூக்கள்' எனும் மரபு கவிதை நூல் இக்கட்டுரையின் தரவுமூலமாகும். ஆழ் செயல்முறைக் கோட்பாட்டின் (processing depth theory) துணையுடன், பண்புசார் முறைமையில் இவ்வாய்வின் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. மழலையர் புரிந்துகொள்ளும் வகையில், எளிய சொற்களையும் மழலையரின் சொல்வளத்தைப் பெருக்கும் உத்திகளையும் பயன்படுத்தி, இக்காலப் படைப்பாளர்களும் மழலையருக்குரிய மரபுக் கவிதைகளைப் படைத்திட இக்கட்டுரை துணைசெய்யும்.

**கருச்சொற்கள்:** அழ. வள்ளியப்பா, ஆழ் செயல்முறை, சொல்வளம், மரபுக் கவிதைகள், மழலையர்

**Abstract**

Children generally speak the words they have learned by listening repeatedly. As children learn to speak easily pronounceable words, these words can be observed in their speech. Specifically, children's language development occurs through the use of repetitive words in nursery rhymes, which contributes to the growth of their language skills (Andrews & Baker, 2019). As such, classical poems that are composed in accordance with poetic grammar have a significant role in enriching children's vocabulary. Therefore, it is essential to understand the word choice found in nursery rhymes that are structured in the form of classical poems. So, this paper is presented with the title "Classical Poems that Enhance Children's Vocabulary". Identifying and describing the vocabulary-enhancing elements found in classical poems are the aims of this paper. The collection of poems titled "Sirikkum Puukkal" (Smiling Flowers) by the child poet Azha. Valliyappa serves as the data source for this article. The data of this study was analysed based on the Processing Depth Theory. This article will help contemporary authors to create rhymes for children in the form of classical poems, by using simple words that children can understand and also strategies to increase their vocabulary.

**Keywords:** Azha. Valliyappa, Processing Depth Theory, Vocabullary, Classical Poems, Children

## முன்னுரை

மழலையர் பெரும்பாலும் சிறு வயதிலிருந்து கவனிக்கும், தம் பெற்றோர்களின் செய்கைகளைப் பின்பற்றுகின்றனர். குறிப்பாக, தங்களிடம் தொடர்புகொள்ளும் பெற்றோர்களின் சொற்களையும் முகப்பாவனைகளையும் கவனிக்கும் மழலையர், அவ்வப்போது அவற்றைப் பின்பற்றவும் முனைகிறார்கள். மழலையர் பொதுவாக, பலமுறை கேட்டு அறிந்த சொற்களையே பேசுவர். உச்சரிக்கச் சுலபமான சொற்களையே மழலையர் கற்க முயல்வதால், இத்தகைய சொற்களே அவர்களின் பேச்சில் இடம்பெறக் காணலாம்.

மழலையின் சொல்வளம் என்பது, சராசரியாகப் பதினைந்து மாதங்களில் பத்து சொற்களையும், பதினெட்டு அல்லது பத்தொன்பது மாதங்களில் ஐம்பது சொற்களையும் கொண்டிருக்கும் (Hauser, Chomsky & Fitch, 2002). குறிப்பாக, மழலையரின் மொழி வளர்ச்சி, மழலையர் பாடல்களின் (rhymes) வழி அதாவது இரட்டிப்புச் சொற்களைப் பயன்படுத்தும் பொழுது வளர்ச்சியடைகிறது (Andrews & Baker, 2019). அவ்வகையில், மரபு கவிதை அதாவது யாப்புபிலக்கணத்தோடு அமையப்பெறும் கவிதைகள் மழலையரின் சொல்வளத்தைப் பெருக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன எனலாம். எனவே, மரபு கவிதை வடிவில் அமைந்த மழலையர் பாடல்களில் எத்தகைய சொல்லாட்சி இடம்பெற்றுள்ளது என்பதை அறிவது அவசியமாகும். ஆகவே, இக்கட்டுரை மழலையரின் சொல்வளம் பெருக்கும் மரபு கவிதைகள் எனும் தலைப்பில் படைக்கப்படுகிறது. மரபு கவிதைகளில் இடம்பெற்றுள்ள, சொல்வளத்தைப் பெருக்கக்கூடிய கூறுகளை அடையாளம் காணுதலும், அவற்றை விவரித்தலும் இக்கட்டுரையின் நோக்கங்கள் ஆகும்.

## ஆய்வுமுறைமை

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் ‘சிரிக்கும் பூக்கள்’ எனும் மரபு கவிதை நூல் இக்கட்டுரையின் தரவுமூலமாகும். இந்நூலில், முதல் ஐந்து பகுதிகளில் 73 பாடல்கள், கதைப்பாடல்களில் 23 பாடல்கள், வேடிக்கைப் பாடல்களில் 11 பாடல்கள் என மொத்தம் 109 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. Craik, Lockhart (1972) இருவரும் அறிமுகப்படுத்திய ஆழ் செயல்முறைக் கோட்பாட்டின் (processing depth theory) துணையுடன், பண்புசார் முறைமையில் இவ்வாய்வின் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

ஒரு மழலை எவ்வளவு அடுக்கமாகவும் தொடர்ந்தும் ஒரு செயலைச் செய்கின்றதோ அவ்வளவு எளிதாக அச்செயல் அம்மழலையின் நினைவில் பதிகின்றது (Nelson,1977). அது போலவே ஒரு சொல்லை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதாலும், வெவ்வேறு சூழலிலும் பொருளிலும் பயன்படுத்துவதாலும், அச்சொல் ஒரு மழலையின் நீண்ட கால நினைவில் (long-term memory) பதிந்து, நிலைபெற்று அம்மழலையின் சொல்வளமாக மாறும் வாய்ப்புள்ளது. இதனைத்தான் Craik, Lockhart (1972) ஆகியோரின் ஆழ் செயல்முறைக் கோட்பாடு (processing depth theory) வலியுறுத்துகிறது.

ஒரு சொல்லின் பொருண்மையைப் புரிந்துகொள்ளும் நோக்கில் அச்சொல்லை மீண்டும் மீண்டும் உச்சரித்து, ஆழ்நிலையில் அதனை நினைவில் பதியச் செய்யலாம் என்பதே ஆழ் செயல்முறைக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்து. இக்கோட்பாடு, அமைப்பியல்

செயல்முறை (structural processing), ஒலியனியல் செயல்முறை (phonemic processing), பொருண்மையியல் செயல்முறை (sementic processing) எனும் மூன்று செயல்முறைகளை வலியுறுத்துகிறது (Craik & Lockhart, 1972). இவற்றுள் ஒலியனியல் செயல்முறை அடிப்படையில் மட்டுமே அழ. வள்ளியப்பாவின் கவிதைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஒலியனியல் செயல்முறை என்பது ஒலிப்புமுறை அடிப்படையில் ஒரு சொல்லை நினைவில் வைத்துகொள்வதாகும். ஒலிப்புமுறையில் ஒற்றுமையோ தொடர்போ உடைய சந்தச் சொற்கள், இணைமொழி, அடுக்குத்தொடர் போன்றவை இதில் அடங்கும்.

**மழலையர் சொல்வளம் பெருக்கும் அழ. வள்ளியப்பாவின் கவிதைகள்**

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் பாடல்கள் அமைப்பாலும் கருப்பொருளாலும் மரபைப் பின்பற்றி அமைந்திருப்பதால், அவரை மரபு கவிஞரென ஏற்கலாம். அழ வள்ளியப்பாவின் பாடல்கள், குழந்தைகளுக்காக இயற்றப்பட்டவை என்பதால், அவை குழந்தைகளுக்கு எளிதில் புரியும் வழக்குச் சொற்களையும் அவர்கள் அன்றாட வாழ்வில் செய்யக்கூடிய அல்லது பார்க்கக் கூடிய செயல்களையோ செய்திகளையோ உள்ளடக்கியிருக்கும். மேலும், ஒரே சொல்லோ அல்லது ஓசை நயம் பெற்ற சந்தச் சொற்களோ இவரது பாடல்கலில் விரவிக் கிடக்கக் காணலாம். பக்க எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு இவ்வாய்வில் சிரிக்கும் பூக்கள் கவிதைத் தொகுப்பின் முதல், மூன்று பகுதிகள் மட்டும் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

**சந்தச் சொற்கள்**

சொற்களிலுள்ள ஒலிக்கூறுகள் அதாவது அல்லது ஒலிப்புமுறை ஒரே தாள அளவுக்குப் பொருந்த அமைவதே சந்தமாகும். இரண்டு சொற்களைச் சந்தச் சொற்கள் என்று கூற வேண்டும் என்றால் அவற்றின் எழுத்துகள் அதே வரிசையில் அளவாலும் ஓசையாலும் ஒத்திருத்தல் வேண்டும். பொதுவாக, சொற்களில் உள்ள உயிர்களும் உயிர் மெய்களும் குறிலுக்குக் குறில், நெடிலுக்கு நெடில் என்னும் முறையில் அமைந்திருக்கும். மெய்யெழுத்தாயின் ஒரே இனத்தைச் சேர்ந்தவையாக அதாவது வல்லினத்துக்கு வல்லினம், மெல்லினத்துக்கு மெல்லினம், இடையினத்துக்கு இடையினம் என அமையப் பெறும். மெய்யெழுத்தை அடுத்துவரும் உயிர்மெய் எழுத்துகள் இரு சொற்களிலும் ஒரே இனமாக அமைதல் சந்தச் சொல்லுக்கு அவசியம் (நெடுமாறன், 2015). இக்கட்டுரையில் முதல் எழுத்து மாறி, தொடரும் எழுத்துகள் ஒன்றி வருவன சந்தச் சொற்களாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டன. மூன்று பகுதிகளிலும் மொத்தம் 40 கவிதைகள் உள்ளன. அவற்றுள் 14 கவிதைகளில் முதல் எழுத்து மாறி வருவதாகவும் அடுத்து வருகின்ற எழுத்துகள் ஒன்றி வருவதாகவும் உள்ள சந்தச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

| தரவுக் குறியீடு | கவிதை |
|---|---|
| பகுதி 1, பாடல் 13, வரி 1-4 | **தங்கம், சிங்கம்** இரண்டும் அந்தத்<br>தாய்க்கு நல்ல பிள்ளை.<br>தாய்க்கு நல்ல பிள்ளை – இதில் |

| | |
|---|---|
| | சற்றும் ஐயம் இல்லை |
| பகுதி 2, பாடல் 17, வரி 2 - 4 | மலை மேலே ஏறி நீ<br>வருவாய் என்றே எண்ணினோம்.<br>மல்லி கைப்பூக் கொண்டுநீ<br>தருவாய் என்றும் பாடினோம். |
| பகுதி 3, பாடல் 30, வரி 2 - 4 | அன்னம் எனக்கே<br>ஊட்டிய கை.<br>அன்பாய்த் தொட்டில்<br>ஆட்டிய கை. |

தங்கமும் சிங்கமும் எனும் கவிதையில் தங்கம் த குறில்; ங் மெல்லினமெய்; க – குறில் (வல்லினம்); ம் -மெல்லினமெய் மற்றும் சிங்கம் சி குறில்; ங் மெல்லினமெய் ; க – குறில் (வல்லினம்); ம் -மெல்லினமெய் ஆகிய இரண்டு சொற்களிலும் மெல்லின மெய்க்குப் பின் வல்லின உயிர்மெய்யே வந்துள்ளது. ஒலிகள் மீண்டும் ஒரே தாள அளவில் வருவதால் இவ்வகையான சொற்களை மழலையர் சுலபமாகக் கற்கின்றனர் எனலாம். மழலையர் பேச்சைப் புரிந்துகொள்ளவும், பேசக் கற்றுக்கொள்ளவும் சந்த நயங்களையே சார்ந்திருக்கின்றனர் என்கிறார்கள் (Morgan & Demuth, 2014).

**இணைமொழி**

ஒரு கருத்தைத் தெளிவாக முன்னிறுத்த, இரு வேறுபட்ட சொற்கள் ஒன்று சேர்ந்து வருதலே இணைமொழி எனப்படும். பொதுவாக இவ்விரு சொற்களும் ஓசை ஒன்றி இருக்கும். இணைமொழியின் வழி சொல்ல வேண்டிய கருத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தலாம். இவை பெரும்பாலும் ஒரு பொருள் குறித்தனவாயும் எதிர்ப்பொருள் உணர்த்துவனவாயும் அமையும். அதேபோல் ஒன்று மட்டும் பொருளுடையதாக அமைந்து ஒத்த ஓசை தரும் இணைமொழிகளும் காணப்படுகின்றன (நெடுமாறன், 2015). அழ. வள்ளியப்பா சிரிக்கும் பூக்கள் கவிதைத் தொகுப்பில் பகுதி ஒன்று, இரண்டு, மூன்றில் 12% இணைமொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இணைமொழி மழலையரின் சொல்வளத்தைப் பெருக்கினாலும் அதனைப் புரிந்து கொள்ள சிரமம் ஏற்படலாம் என்பதனால் கவிஞர் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் இதனைப் பயன்படுத்தியுள்ளார் எனலாம். ஆனால், இணைமொழியைக் கொண்டு பல சொற்களில் விளக்க வேண்டிய ஒரு பொருளை ஒரே சொற்றொடரில் விளக்குவதால், மழலையர் இவற்றை எளிதாகக் கற்றுக் கொள்கின்றனர்.

| **தரவுக் குறியீடு** | **கவிதை** |
|---|---|
| பகுதி 3, பாடல் 37, வரி 1-4 | **கறுப்பு வெள்ளை** இரண்டு நிறமும்<br>கலந்திருக்கும் எங்கள் பசு.<br>காலை மாலை இரண்டு வேளை<br>பாலைத் தரும் எங்கள் பசு |
| பகுதி 1, பாடல் 16 , வரி 1 -3 | எழுதி வைத்த தாள்களை<br>இங்கும் அங்கும் இறைத்தவன்<br>யார், யார், யார் ? |

| | |
|---|---|
| பகுதி 2, பாடல் 25 , வரி 1 -4 | கோட்டை முன்னால் கம்பம் ஒன்றில்<br>கொடி பறக்குது<br>கூவம் ஆறு குறுக்கும் நெடுக்கும்<br>வளைந்து செல்லுது |

கறுப்பு வெள்ளை எனும் கவிதையில் கறுப்பு வெள்ளை, காலை மாலை ஆகிய இணைமொழிகள் காணப்படுகின்றன. மழலையர் தங்கள் உரையாடலிலும் வாக்கியங்களிலும் இணைமொழிகளைப் பயன்படுத்த இத்தகைய மரபு கவிதைகள் துணைபுரிகின்றன. இதனால், மழலையர் தங்களின் சொல் வளத்தை விரிவுப்படுத்துவதோடு கற்ற சொற்களைச் சூழலுக்கு ஏற்ப பயன்படுத்தவும் முற்படுகின்றனர்.

**அடுக்குத் தொடர்**

ஒரு பொருளைத் தெளிவுபடுத்தவும் அழகுபடுத்தவும் பயன்படுத்தப்படுவது அடுக்குத்தொடராகும். ஒரு சொல் அடுக்கி அடுக்கி வந்தாலும் தனித் தனிச் சொல்லாகப் பிரிந்து வந்தாலும் பொருள் தருமாயின் அஃது அடுக்குத்தொடர் எனப்படும். அடுக்குத்தொடரில் உவகை, வெகுளி, அச்சம், விரைவு, அவலம், அசைநிலை முதலான பொருள்களை உணர்த்தலாம் (நெடுமாறன், 2015).

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒருசொல்
இரண்டு மூன்று நான்கு எல்லைமுறை அடுக்கும்
(நன்னூல்:395)

அசைநிலை, பொருள் நிலை, இசைநிலை ஆகிய அடுக்குத் தொடர்களுக்கு ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு வரையில் சொற்கள் அடுக்கிக்கொண்டே வந்தால் அஃது அடுக்குத் தொடராகும் என நன்னூலில் கூறப்பட்டுள்ளது. அழ. வள்ளியப்பா மரபு கவிதைத் தொகுப்பின் முதல் மூன்று பகுதிகளில், மொத்தம் 17 கவிதைகளில் அடுக்குத் தொடரின் பயன்பாடு கண்டறியப்பட்டது.

| தரவுக் குறியீடு | கவிதை |
|---|---|
| பகுதி 1, பாடல் 1 , வரி 1-4 | சின்னச்சின்னக் குழந்தையம்மா<br>எங்கள் பாலமுருகன்-புன்<br>சிரிப்புக்காட்டி மயக்கிடுவான்<br>எங்கள் பாலமுருகன் |
| பகுதி 2, பாடல் 19 , வரி 1 -4 | கையில் எடுத்து<br>வாயில் வைத்துக்<br>கடிக்கக் கடிக்க<br>இனிக்கும் பழம். |
| பகுதி 3, பாடல் 34 , வரி 1 -4 | எண்ணம், வாக்கு, செய்கையிலே<br>இனிமை இருந்தால் வாழ்க்கையிலே,<br>இன்பம், இன்பம், இன்பம்தான்.<br>இல்லா விட்டால் துன்பம்தான் ! |

சுட்டப்பட்டுள்ள கவிதை வரிகளில் சொற்கள் தொடர்ந்து அடுக்கிகொண்டு வருகிறன்றன. பொதுவாக, ஒரு செயலை மறுபடி மறுபடி செய்தால், அது மழலையரின் மனத்தில் ஆழமாகப் பதியும். அதுபோலவே, ஒரு சொல்லையோ சொற்றொடரையோ மீண்டும் மீண்டும் பார்த்துக்கொண்டோ கேட்டுக்கொண்டோ இருந்தால், அச்சொல் சுலபமாகக் மழலையரின் மனத்தில் பதிவதோடு, அவர்கள் நிறைய சொற்களையும் கற்பர் (Barletta, Blamberger, Brosius, Buchholz, Haselstein & Warstat, 2019).

**ஓசை நயம்**

குழந்தைக் கவிதைகள் குறிப்பாக, அழ. வள்ளியப்பாவின் 'சிரிக்கும் பூக்கள்' கவிதைத் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகள் ஓசைநயத்தையும் பொருளையும் முதன்மையாகக்கொண்டு இயற்றப்பட்டுள்ளன. பொதுவாக மரபுக் கவிதைகள் இலக்கணத்திற்குக் கட்டுப்பட்டவையாகும். சொற்களில் ஓசை ஒழுங்கில் வைத்துக் கட்டுவதையே யாப்பு என்போம். தாளம், ஓசை நயம் என்பதெல்லாம் யாப்பில் அடங்கும் (நெடுமாறன், 2015).

| தரவுக் குறியீடு | கவிதை |
|---|---|
| பகுதி 1, பாடல் 10, வரி 1-4 | **அண்ணாமலை அண்ணாமலை**<br>என்ன சொன்னானாம்?<br>ஆனை முதுகில் ஏறிச்செல்ல<br>ஆசை என்றானாம்! |
| பகுதி 2, பாடல் 20 , வரி 1 -4 | பென்சில் சீவ உதவிடும்<br>பெரிய பழத்தை நறுக்கிடும்<br>மரத்துப் பட்டை சீவிடும்<br>வாழை இலையை அறுத்திடும் |
| பகுதி 3, பாடல் 33 , வரி 1 -4 | தாய்சொல்லித் தந்த மொழி.<br>தாலாட்டில் கேட்ட மொழி.<br>சந்திரனை அழைத்த மொழி.<br>சாய்ந்தாடிக் கற்ற மொழி. |

என்ற அழ. வள்ளியப்பாவின் 'அண்ணாமலையின் ஆசை' எனும் கவிதை மழலையரை எளிதில் கவரும் தன்மை உடையதாக உள்ளது. Lawson-Adams, Dickinson, Donner (2022) ஆகியோரின் கருத்துப்படி, மழலையர் படத்தின் வழி மட்டும் இல்லாமல், ஓசைநயம் கொண்ட பாடல்களின் வழியேயும் மனத்தில் பதியும் வகையில் கற்கின்றனர். அவ்வகையில் அழ. வள்ளியப்பாவின் இக்கவிதைத் தொகுப்பில் பகுப்பாய்வு செய்த 40 கவிதைகளுமே ஓசை நயத்தைக் கொண்டு அமையப்பெற்றுள்ளன. சொல்வளத்தைப் பெருக்க மழலையர்களுக்கு உகந்த வழி ஓசை நயமாகும். ஓசையோடும் நயத்தோடும் கற்கப்படும் செயல்கள் மழலையரின் மனத்தில் ஆழமாகப் பதியும் என்பதை உணர்ந்து அழ வள்ளியப்பா சிரிக்கும் பூக்கள் கவிதைத் தொகுப்பில் உள்ள அனைத்து கவிதைகளையும் ஓசை நயத்தோடு எழுதியுள்ளார் என்பது புலப்படுகிறது.

## நிறைவுரை

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் 'சிரிக்கும் பூக்கள்' எனும் மரபு கவிதைத் தொகுப்பு நூலில் மழலையர் சொல்வளம் பெருக்கும் கூறுகளுடன் அமைந்த கவிதகளைக் காண முடிகின்றது. சந்தம், இணைமொழி, அடுக்குத் தொடர், ஓசை நயம் ஆகிய கூறுகளைக் கொண்டு கவிஞர் அழ. வள்ளியப்பா, மழலையருக்கு ஏற்ற பாடல்களை மரபைப் பின்பற்றி இயற்றியுள்ளார். குழந்தைகளுக்காக எழுதியதால், தம் கவிப் புலமையை அடக்கி, குழந்தையாகவே மாறி, குழந்தைகளின் இயல்புகளை உணர்ந்து அவர்கள் இரசிக்கும்படியான கவிதைகளை அவர் படைத்துள்ளார். அவர் கவிதைகளில் சொற்கள் எளிதாக இருப்பதோடு, அவை தொடர்ந்து பல முறை ஒரே வடிவில் வருவதால், குழந்தைகள் தங்களின் ஆழ் மனத்தில் அவற்றைச் சுலபமாகப் பதிய வைப்பதோடு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் அதிகமான சொற்களைக் கற்கின்றனர்.

## துணைநூற்பட்டியல்


Andrews, J. F., & Baker, S. (2019). ASL Nursery Rhymes. Sign Language Studies, 20(1), 5-40.

Barletta, V., Blamberger, G., Brosius, C., Buchholz, M. B., Gil, I. C., Haselstein, U., ... & Warstat, M. (2019). Repetition, recurrence, returns: how cultural renewal works. Rowman & Littlefield.

Craik, F. I., & Lockhart, R. S. (1972). Levels of processing: A framework for memory research. Journal of verbal learning and verbal behavior, 11(6), 671-684.

Hauser, M. D., Chomsky, N., Fitch, W. T. (2002). The faculty of language: What it is, who has it, and how did it evolve? Science, 298, 1569-1579.

Lawson-Adams, J., Dickinson, D. K., & Donner, J. K. (2022). Sing it or speak it? The effects of sung and rhythmically spoken songs on preschool children's word learning. Early Childhood Research Quarterly, 58, 87-102.

Morgan, J. L. and Demuth, K. (2014). Signal to syntax: Bootstrapping from speech to grammar in early acquisition. Psychology Press.

Mundorf, A. M., Uitvlugt, M. G., & Healey, M. K. (2022). Does depth of processing affect temporal contiguity? Psychonomic Bulletin & Review, 1-11.

Nelson, T. O. (1977). Repetition and depth of processing. Journal of verbal learning and verbal Behavior, 16(2), 151-171.

Song, Y. (2020). Simile and Metaphor Interpretation in Children. English Language Teaching, 13(4), 91-103.

அழ. வள்ளியப்பா. (1991). சிரிக்கும் பூக்கள் (Vol. 2). மட்ராஸ்: குழந்தை புத்தக நிலையம்.

முரசு. நெடுமாறன். (2015). கவிதைத் தொகுப்பு. உமா பதிப்பகம்.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# மரபு பாக்களில் 'வாழ்வியல் இலக்கணம்'

# Ethics in Ancient Poems

எல்ல. கிருஷ்ணமூர்த்தி/ Ella Krishnamurthy[1]
[1]M.B.A, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இந்தியா
Corresponding Email: ekrishnamurthy@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் எவ்வளவுதான் அறிவியல் கண்டுபிடிப்புகளால் முன்னேறிச் சென்றாலும் தம்முடைய அறிவாற்றலால் இயற்கையை மாற்றவியலாது என்பது உண்மை. பல்லாயிரம் ஆண்டுகளாக இவ்வுலகம் பல மாற்றங்களை அடைந்து வந்தாலும் சில முக்கிய மரபினை அறிந்தோ அறியாமலோ அப்படியே கடைபிடித்து வருகிறது. உலகில் வாழும் தாவரம், விலங்கினம், மனிதன் அனைத்திற்குமான வறையரைகொண்டு வாழ்வதே சிறப்பாகும். பண்டைய கால இலக்கிய நூல்கள் படைக்க வழிகாட்டியாக இருந்த பல்வேறு இலக்கண நூல்கள் எவ்வாறு இருந்து வருகின்றன என்பதையும் உலகிலுள்ள உயிரினம் மற்றும் பல்லின மக்கள் தத்தம் கடமைகளை செறிவாக செய்ய வேண்டும் என்பதையும் ஒப்புமையோடு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தற்கால அதிநவீன மனிதன் கூடுமானவரை தொன்றுதொட்டு இருந்துவரும் மரபினை மாற்றியோ பிளந்தோ புதுவகை தாவரங்களையும் உயிரினங்களையும் உணவிற்காகவும் பிறவற்றிகாகவும் உருவாக்க முயற்சி எடுக்கும்போது பல்வேறு பக்க விளைவுகளையும் சந்திக்கிறான். அவற்றுள் உலக மக்கள் வாழ தேவையான அடிப்படை ஆற்றல்களை இயற்கை நமக்கு வழங்கியிருந்தாலும் அந்த ஆற்றலை மனிதன் பிற ஆற்றலாக மாற்றும்போது வரும் இன்னல்களை மறந்துவிட முடியாது. இலக்கியம் படைக்கும் முறையை எப்படி தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் விவரிக்கின்றனவோ, அவ்வாறே இலக்கிய நூல்களில் குறிப்பாக நீதிநூல்கள் மனிதன் கடைபிடிக்க வேண்டிய அனைத்து வாழ்நாள் இலக்கணங்களையும் கூறியுள்ளதால் அவற்றை பின்பற்றி வாழும் மனிதனே நிறைவான வாழ்க்கையை வாழ்கிறான் என்பது உண்மை. வாழ்ந்து மறைந்த பின்னும் பலரால் போற்றக்கூடிய பெருவாழ்வை பெற்றுள்ளான் என்பதை வரலாறுகள் விளக்குகின்றன. சிறுவயது முதல் வாழ்நாள் முழுவதும் கடைபிடிக்க வேண்டியவற்றை குறளடி, சிந்தடி, அளவடி, கழிநெடிலடி என படிப்படியாக உருவெடுத்து அதிகபட்சமாக ஓரடிக்கு 192 சீர்களோடு மொத்தம் 4 அடிகளே கொண்ட வள்ளலார் இயற்றிய திருவடிப்புகழ்ச்சி போல் நிறைவாக வாழ மரபென்னும் இலக்கணம் இன்றியமையாததாகும்.

**கருச்சொற்கள்:** மரபுப் பா, வாழ்வியல், இலக்கணம்

**Abstract**

This article explains with analogy how the various grammar books that were a guide for the creation of ancient literary texts and how the world's creatures and diverse people should perform their respective duties intensively. As modern man attempts to modify or cross-breed as much as he can to create new types of plants and organisms for food and other purposes, he faces various side effects. Although nature has provided us with the basic energies necessary for the people of the world to live among them, we cannot forget the hardships that come when man converts that energy into other energy. As the grammar books like Tolkappiyam and Nannul describe the method of creating literature, similarly in the literary books, especially the books of scriptures, it is true that the person who lives by following them lives a fulfilling ethic life. Histories show that even after his death he had a long life that was admired by many. Otherwise, if we don't stop the wild flood by building banks and dams, the fresh water from hills and mountain and rain falls will mix into the sea and be wasted. Similarly, the literature created for entertainment and temporary diversion will be easily and quickly forgotten by the people. Traditional way of writing and living is essential for everyone to live a complete life like an unique poem which contains single stanza Tiruvadipupkazhchi composed by Vallalar with a maximum of 192 words (seers) per line with a total of 4 lines which are to be followed from childhood and throughout life as couplets, sonnets, etc., (in Tamil Kuraladi - 2 lines, Sinthadi – 3 lines, Alavadi – 4 lines, Ghazinediladi – 5 lines onwards).

**Keywords:** traditional poem, grammar, lifestyle

**முன்னுரை**

மனிதன் எவ்வளவுதான் அறிவியல் கண்டுபிடிப்புகளால் முன்னேறிச் சென்றாலும் தம்முடைய அறிவாற்றலால் இயற்கையை மாற்றவியலாது என்பது உண்மை. பல்லாயிரம் ஆண்டுகளாக இவ்வுலகம் பல மாற்றங்களை அடைந்து வந்தாலும் சில முக்கிய மரபினை அறிந்தோ அறியாமலோ அப்படியே கடைபிடித்து வருகிறது. உலகில் வாழும் தாவரம், விலங்கினம், மனிதன் அனைத்திற்குமான வறையரைகொண்டு வாழ்வதே சிறப்பாகும்.

பண்டைய கால இலக்கிய நூல்கள் யாவும் செய்யுள் வகையில் யாப்பிலக்கணத்தில் படைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு படைக்க வழிகாட்டியாகப் பல்வேறு இலக்கண நூல்கள் இருந்துள்ளன. அவற்றுள் தொல்காப்பியம் மற்றும் நன்னூல் குறிப்பிடத்தக்கவையாகும். அதேபோல் உலகிலுள்ள உயிரினம் மற்றும் பல்லின மக்கள் தத்தம் கடமைகளை எவ்வாறு செறிவாகச் செய்ய வேண்டும் என்பதை சங்கால நீதிநூல்கள் காட்டுகின்றன. செறிவான இலக்கியத்தை இலக்கண நூல்களைப் போல் மனிதயினம் தம்வாழ்நாளில் செழிப்புற்று வாழ கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் இலக்கணத்தை ஓர் ஒப்புமையோடு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மரபு**

மரபு என்பது உடலிலும், உணர்விலும், அறிவிலும், சமுதாயத்திலும், மொழியிலும் நிலைத்துள்ள ஒன்று. அது பூக்கும் செடிமுதல், காய்த்து பழுத்து தன்னகத்தே விதையைத் தாங்கி, அதன்வழி தோன்றும் இனத்தில் ஊறி செழித்தோங்கும். அத்தகைய மரபு சமீப காலமாகச் சற்று உணர்வற்ற நிலையில் மாறிவருவதைக் காணும்போது பெரும் ஆபத்தைக் கொடுக்கும் ஒன்றாகத் தான் நினைக்கத் தோன்றுகிறது.

உலகில் சிலவேளைகளில் இயற்கைக்குப் புறம்பாக நிகழ்த்திக் காட்டுவதுண்டு. அதிகப்படியான பயிற்சியின் மூலம் வாழ்வில் சிலவற்றை சிலகாலம் அதாவது சில மணித்துளிகள் நிகழ்த்துவது மாயையாகத் தோன்றலாம். ஆனால், பெரும்பாலானவை எவ்வாறு கடைபிடித்து வருகிறது என்பதே மரபாகும்.

**உலக உயிரின வகைகள்**

அக்கால மனிதன் முன்பே கூடுமானவரை தம்முடைய அறிவாற்றல் மூலம் பலவற்றைப் புரிந்துகொண்டும் தெரிந்துகொண்டும் ஆராய்ந்துகொண்டும் தான் வருகிறான். ஆனால், முதன்முறையாகத் தொல்காப்பியம் அறிவானது கீழ்கண்டவாறு காட்டுகிறது

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனோடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே
(தொல். பொருளதிகாரம் நூற்பா 571)

ஓரறிவு என்பது உடலால் அறிவது. அதாவது தொடு அறிவு. இரண்டறிவென்பது தொடு அறிவு மற்றும் நாவால் அறியப்படும் சுவை அறிவு. மூன்றறிவென்பது தொடு அறிவு, சுவை அறிவு மற்றும் மூக்கால் அறியப்படும் சுவாச அறிவு. நான்கறிவென்பது தொடு அறிவு, சுவை அறிவு, சுவாச அறிவு மற்றும் கண்ணால் அறியப்படும் பார்வை அறிவு. ஐந்தறிவென்பது தொடு அறிவு, சுவை அறிவு, சுவாச அறிவு, பார்வை அறிவு மற்றும் காதால் அறியப்படும் கேட்டல் அறிவு. மனதையும் சேர்த்து ஆறறிவென்கிறார். 3000 வருடங்களுக்கு முன் இந்த ஆராய்ச்சி என்பது சாதாரணமல்ல.

தொல்காப்பியம் இலக்கணம் என்ற அடையாளத்துக்கு மேல் அறிவியலையும் ஆராய்ந்திருக்கிறது.

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
(தொல். பொருளதிகாரம் நூற்பா 577)

மேலும், மனிதன் ஆறறிவு கொண்டவன் என்று அறிவுறுத்தியதோடு மனிதனுக்கு ஒத்த வெறு சில விலங்குகளும் உள்ளன.

ஒருசார் விலங்கும் உளவென மொழிப
(தொல். பொருளதிகாரம் நூற்பா 578)

இதன்பொருள், மனிதர்களைப் போலவே ஆறறிவு கொண்ட விலங்குகள், பறவைகளும் சில உண்டு. யானை, குரங்கு, கிளி போன்றவைகளுக்கு ஆறறிவு என்று குறிப்பிடுகிறார்.

ஆனால், தற்கால அதிநவீன மனிதன் கூடுமானவரை தொன்றுதொட்டு இருந்துவரும் மரபினை மாற்றியோ பிளந்தோ புதுவகை தாவரங்களையும் உயிரினங்களையும் உணவிற்காகவும் பிறவற்றிகாகவும் உருவாக்க முயற்சி எடுக்கும்போது பல்வேறு பக்க விளைவுகளையும் சந்திக்கிறான். அவற்றுள் உலக மக்கள் வாழ தேவையான அடிப்படை ஆற்றல்களை இயற்கை நமக்கு வழங்கியிருந்தாலும் அந்த ஆற்றலை மனிதன் பிற ஆற்றலாக மாற்றும்போது வரும் இன்னல்களை மறந்துவிட முடியாது.

அவ்வாறே தமிழ்மொழியிலும் பல்வேறு புதுமைகளைச் செய்வதாகக் கூறிகொண்ட சிலர் பிறமொழி நடைகளையும் தமிழோடு இடையிடையே புகுத்தி வந்திருப்பதை காணமுடிகிறது. மணிப்பிரவாள நடை என்றதொரு முறையே இதற்கு சான்றாகும். அதுவே, இக்காலத்தில் பிறமொழிக் கலப்பை மிகவும் எளிதாக மரபுதனை மறந்து இலக்கியப் படைப்புகளாக வருகின்றன என்பது இன்று நாம் காணும் விளைவுகளின் தொடக்கம் தான்.

இன்றளவில் பல்வேறு படைப்புகளில் பிறமொழி சொல்லிற்கேற்ப தமிழ் எழுத்துகளை எழுதுவதும் அதிநவீன கணினி பயன்பாட்டில் ஆங்கில எழுத்துவழி தமிழ்ச்சொற்களைக் கையாள்வதும் சற்று புரையோடிவிட்ட பக்கவிளைவென்றால் மிகையல்ல.

**அளவொடு கற்றுணர**

இலக்கியம் படைக்கும் முறையை எப்படி தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் விவரிக்கின்றனவோ, அவ்வாறே இலக்கிய நூல்களில் குறிப்பாக நீதிநூல்கள் மனிதன் கடைபிடிக்க வேண்டிய அனைத்து வாழ்நாள் இலக்கணங்களையும் கூறியுள்ளதால் அவற்றை பின்பற்றி வாழும் மனிதனே நிறைவான வாழ்க்கையை வாழ்கிறான் என்பது உண்மை. வாழ்ந்து மறைந்த பின்னும் பலரால் போற்றக்கூடிய பெருவாழ்வை பெற்றுள்ளான் என்பதை வரலாறுகள் விளக்குகின்றன.

வாழ்வியல் நெறிமுறைகளைச் சிறுவயது முதலே கற்றுணரவும் அதன் கடைபிடிக்கும் வகையையும் மிகவும் எளிதாக அமைந்துள்ளதைப் பார்ப்போம். செய்யுளில் யாப்பிலக்கண கணக்குப்படி குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என வகைப்படுத்தலாம்.

குறளடி – இருசீர்களைக் கொண்டது; சிந்தடி முச்சீர்களைக் கொண்டது; அளவடி நான்கு சீர்களைக் கொண்டது, நெடிலடி – ஐந்து சீர்களைக் கொண்டது கழிநெடிலடி- ஐந்திற்கும் மேற்பட்ட சீர்களைக் கொண்டது.

ஆத்திச்சூடியில் வரும் 109 அடிகளும் குறளடி. எடுத்துக்காட்டாக,

அறம்செய விரும்பு
(ஆத்திச்சூடி 1)
ஓரஞ் சொல்லேல்
(ஆத்திச்சூடி 109)

அடுத்து, சிந்தடி என்பது மூன்று சீர்களைக் கொண்டு இயங்கும் அடி, அளவடியின் நான்கு சீரில் ஒன்று சிந்தி(குறைந்து), மூன்று சீரில் இயங்குவதால் இதன் பெயர் சிந்தடி எனப்பெற்றது. இதனை முச்சீர் அடி என்றும் கூறுவர்.

திருக்குறளில் வரும் இரண்டாம் அடிவயானது சிந்தடியாகும். எடுத்துக்காட்டாக,

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று
(திருக்குறள், அதிகாரம் 2 வான் சிறப்பு, குறள் 11)

மேலும், ஆசாரக் கோவை எனும் நூலில் உணவு உண்ணும் போது கடைபிடிக்க வேண்டியவற்றை குறிப்பிடும் சிந்தியல் வெண்பா பின்வருமாறு. இதில் ஈற்றடி சிந்தடியாகும்.

காலில்நீர் நீங்காமை உண்டிடுக; பள்ளியும்
ஈரம் புலராமை ஏறற்க என்பதே
பேரறி வாளர் துணிவு
(ஆசாரக் கோவை 19)

அளவடி என்பது நான்கு சீர்களைக் கொண்டு இயங்கும் அடி, கொன்றை வேந்தனில் வரும் அடிவயானது அளவடியாகும். எடுத்துக்காட்டாக,

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
(கொன்றை வேந்தன் 1)

ஓதாதார்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்
(கொன்றை வேந்தன் 91)

மேலும், முதுரை நல்வழி நூல்கள் முறையே 30 மற்றும் 40 வெண்பாக்களால் அமைக்கப்பெற்றவை. ஒவ்வொரு பாடல்களும் முதல் மூன்று அடிகள் அளவடிகளாலும் ஈற்றடி சிந்தடியாலும் ஆனவை.

நெடிலடி - ஐந்து சீர்களைக் கொண்டது. எடுத்துக்காட்டாக,

தனம்தரும், கல்விதரும், ஒருநாளும் தளர்வு அறியா
மனம்தரும், தெய்வவடிவும் தரும்,நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம்தரும், நல்லனஎல்லாம் தரும்,அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள், அபிராமி கடைக்கண்களே.
(அபிராமி அந்தாதி 69)

கழிநெடிலடி – அறுசீர், எழுசீர், எண்சீர், பன்னிருசீர், பதினான்கு சீர் என பல சீர்களைக் கொண்டது. இதன் தொடர்ந்து, அதிகபட்சமாக 192 சீர்கள் கொண்ட பாக்களைப் புலவர்கள் ஞானிகள் இயற்றியுள்ளதைத் தமிழுலகம் நன்கறியும்.

சிறுஅளவில் உள்ள சீர்கள் கொண்ட பாக்களை இயற்றுவதால் சிறுவர்கள் மிகவும் எளிதாக அத்தகைய பாடல்களைப் பயிலவும் வாழ்நாளில் பயன்படுத்தவும் முடியும் என்பது திண்ணம். சீர்கள் எண்ணிக்கை கூடுவதை போல் வளர்ந்து வரும் இளம்வயதினர் முதல் பெரியவர்கள் வரை முறையாகப் பயன்று வந்தால் அவர்களுடைய திறனும் ஆற்றலும் கூடும்.

அதிகபட்சமாக ஓரடிக்கு 192 சீர்களோடு மொத்தம் 4 அடிகளே கொண்ட வள்ளலார் இயற்றிய திருவடிப்புகழ்ச்சி போல் நிறைவாக வாழ மரபென்னும் இலக்கணம் இன்றியமையாததாகும்

இலக்கியம் படைக்க எப்படி இலக்கண நூல்கள் வழிகாட்டுகின்றனவோ அவ்வாறே மனிதன் வாழ்நாளில் மேலும் பலவற்றை தம்முடைய ஆற்றலுக்கேற்ப வாழ்வியல் இலக்கணத்தோடு வாழ்தல் அவசியம்.

இந்த உலகம் ஐந்து வகை பூதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பது உன்மை. இது இயற்கை அறிவு, வான் பற்றிய அறிவு இருந்தால்தான் இந்தப் பாகுபாடுகளைப் பிரிக்க முடியும். தொல்காப்பியர் கீழ்காணும் நூற்பாவில் விளக்குகிறார்.

நிலம் தீ நீர் வளி விசும்பு ஐந்தும்
கலந்த மயக்கம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்
(தொல். பொருளதிகாரம் நூற்பா 635)

வளி – காற்று; விசும்பு – வானம்; உலகம் என்பது இந்த ஐந்தும் கலந்தது என்கிறது இந்த நூற்பா. இது விஞ்ஞானத்தின் உச்சம் என்று தோன்றுகிறது. உலகில் மற்ற

இடங்களில் மனித நாகரிகம் தழைக்கத் தொடங்கிய தருணத்தில் அறிவியலின் உச்சத்தில் வாழ்ந்தது தமிழினத்தை எண்ணி பெருமைபடுவது ஆகும்.

தொல்காப்பியர் தம்முடைய தொல்காப்பியம் என்னும் இலக்கணநூலில் உள்ள எழுத்ததிகாரத்தில் 'பிறப்பியல்' எனும் தலைப்பின்கீழ் ஒலிகளுக்கான பிறப்பு இலக்கணம் கூறுகிறார். இவர் கூறும் பிறப்பு இலக்கணத்தை இன்றைய மொழியியலார் பெரிதும் போற்றுகின்றனர். இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படையில் ஒலிகளின் பிறப்பை ஆராய்ந்து பார்க்கும்போது தொல்காப்பியர் பல நூற்றாண்டுகளுக்கு முன் பிறப்பியலில் சொன்ன கருத்துகள் பெரும்பாலும் ஒத்துப் போகின்றன.

உந்தி முதலா முந்து வளி தோன்றி,
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ,
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புஉற்று அமைய நெறிப்பட நாடி,
எல்லா எழுத்தும் சொல்லுங் காலை
பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல
திறப்படத் தெரியும் காட்சி யான
(தொல். எழுத்திகாரம் நூற்பா 83)

என்ற நூற்பாவில் ஒலிகளின் பொதுப்பிறப்பு இலக்கணம் கூறுகிறார் தொல்காப்பியர்.

இந்நூற்பாவிற்கு உரை கூறவந்த நச்சினார்க்கினியர் எனும் உரையாசிரியர், "தமிழெழுத்து எல்லாவற்றிற்கும் பிறப்பினது தோற்றரவைக் கூறுமிடத்து, கொப்பூழ் அடியாகத் தோன்றி முந்துகின்ற உதானன் என்னுங் காற்றுத் தலையின்கண்ணும் மிடற்றின்கண்ணும் நெஞ்சின்கண்ணும் நிலைபெற்றுப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் என்ற ஐந்துடனே, அக்காற்று நின்ற தலையும் மிடறும் நெஞ்சுங் கூட எட்டாகிய முறைமையையுடைய தன்மையோடு கூடிய உறுப்புகளோடு ஒன்றுற்று இங்ஙனம் அமைதலானே, அவ்வெழுத்துகளது தோற்றரவு வேறுவேறு புலப்பட வழங்குதலை உடைய" என்று கூறுகிறார்.

கொப்பூழ் அடியில் உதானன் என்ற காற்றுத் தோன்றி வருகின்றது என்பது இன்றைய அறிவியல் ஆராய்ச்சிக்கு மாறானது. நெஞ்சில் உள்ள சுவாசப்பையில் இருந்தே காற்றுப் புறப்படும். அக்காற்று மிடற்றின் ஊடாகச் சென்று வாய்க்கு அல்லது வாய்க்கும் மூக்குக்கும் வருகின்றது என இன்றைய மொழியியலார் கொள்வர். இக்காற்றுத் தலைக்கும் செல்கின்றது எனக் கூறும் தொல்காப்பியர், தலை என்று கூறியிருப்பது எதைப் பற்றி எனத் தெரியவில்லை. ஆனால், தலைக்கு இக்காற்றுச் செல்வதில்லை என்கின்றனர் இக்கால மொழியியலார்.

### எழுத்தின் ஒலி பிறப்பு

எழுத்துகள் பிறப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவை ஒலியணுக்கள். உயிர் தங்கியுள்ள உடம்பின் உள்ளே எழுகின்ற காற்றானது, மார்பு, கழுத்து, தலை, மூக்கு

ஆகியவற்றைப் பொருந்தி, உதடு, நாக்கு, பல், மேல்வாய் ஆகிய இவ்வுறுப்புகளின் முயற்சியால் வெவ்வேறு ஒலிகளாகப் பிறக்கின்றன. எழுத்துகளின் பிறப்பை இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

எழுத்துகள் தோன்றுகின்ற மார்பு, கழுத்து, தலை, மூக்கு முதலானவற்றை இடப்பிறப்பு எனவும் உதடு, நாக்கு, பல், மேல்வாய்(அண்ணம்) முதலான உறுப்புகளின் தொழில் வேறுபாட்டினால் ஒலிப்பதனை முயற்சிப் பிறப்பு எனவும் வழங்குவர்.

உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும் முதல் எழுத்துகள் எனப்படும். மெய்யெழுத்துகளை ஒலிக்கும்பொழுது வேறுபட்ட மூன்று ஒலிகளை நாம் கேட்கலாம். அவை வல்லின ஒலி, மெல்லின ஒலி, இடையின ஒலி ஆகியன. அவ்வொலிகள் வேறுபடுவதற்குக் காரணம், அவை பிறக்கும் இடங்கள் வேறுபடுவனவேயாகும்.

எழுத்துகளின் பிறப்பினை, நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் கூறியதைப் போலவே, மொழியியல் அறிஞர் ஒலிநூலுள் அடக்குவர். ஒலி எழுவதற்குக் காரணமான காற்று, நிலைபெறும் இடங்களைக் காற்றறைகள் எனவும், ஒலி எழுவதற்குத் துணைசெய்யும் உறுப்புகளை ஒலிப்பு முனைகள் எனவும் கூறுவர்.

**முதலெழுத்துகளின் பிறப்பிடம்**

உயிரெழுத்துகள் பன்னிரண்டும் இடையின எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன. (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ மற்றும் ய, ர, ல, வ, ழ, ள).

மெல்லின எழுத்துகள் ஆறும் (ங,ஞ,ண,ந,ம,ன) மூக்கினை இடமாகக் கொண்டு பிறக்கின்றன. வல்லின எழுத்துக்கள் ஆறும் (க,ச,ட,த,ப,ற) மார்பினை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

**உயிரெழுத்துகளின் பிறப்பிடம்**

அ, ஆ - ஆகிய இவ்விரண்டு உயிர்களும் வாயைத் திறந்து ஒலிப்பதனால் பிறக்கின்றன. அவற்றுள்,

முயற்சியுள் அஆ அங்காப்புடைய
(நன்னூல் -76)

(அங்காப்பு - வாயைத் திறத்தல்)

இ, ஈ, எ, ஏ, ஐ -ஆகிய ஐந்து எழுத்துகளும் வாயைத் திறப்பதோடு மேல்வாய்ப் பல்லை, நா விளிம்பு தொடுவதால் பிறக்கின்றன.

இ, ஈ, எ, ஏ, ஐ அங்காப்போடு
அண்பல் முதல்நா விளிம்புற வருமே
(நன்னூல் - 77)

உ, ஊ, ஒ, ஓ, ஔ -ஆகிய ஐந்து எழுத்துகளும் உதடுகளைக் குவித்து ஒலிப்பதனால் பிறக்கின்றன.

உ, ஊ, ஒ, ஓ, ஔ இதழ் குவிவே

(நன்னூல்-78)

**மூச்சுக் காற்றின் அளவு**

மூச்சு இழுத்தல் அடக்குதல் வெளிவிடுதல் என மூச்சுக்காற்றை முறைப்படுத்தி இழுக்க அடக்க செலவிட

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் அறுபத்து நாலதில் கும்பகம்
ஊறுதல் முப்பத்து ரெண்டதில் ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சகம் ஆமே

(திருமந்திரம், பாடல் எண் 568)

இப்பாடலில் பூரகம் (மூச்சை இழுத்தல்), கும்பகம் (மூச்சை அடக்கல்), மற்றும் இரேசகம் (மூச்சை வெளிவிடுதல்) ஆகியன குறித்தும், ஒவ்வொரு படியின் கால அளவை குறித்தும், எந்த நாசியினூடாக என்பது குறித்தும் விளக்கியுள்ளார் திருமூலர் முனிவர்.

**பாக்கள் பாடும் ஓசை**

பழந்தமிழ்ப் புலவர்கள் ஓசை வேறுபாடு கொண்டே 'பா' வேறுபாடு கண்டனர். செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை எனச் செய்யுளோசை நான்கு வகைப்படும்.

செப்பலோசை - இருவர் உரையாடுவது போன்ற ஓசை.
அகவலோசை - ஒருவர் பேசுதல் (சொற்பொழிவாற்றுதல்) போன்ற ஓசை.
துள்ளலோசை - அலைகளைப் போல ஏற்ற இறக்கமாய் வருவது போன்ற ஓசை,
தூங்கலோசை - சீர்தோறும் துள்ளாது தூங்கி வரும் ஓசை, தாழ்ந்தே வரும்.
வெண்பா - செப்பலோசை உடையது.
ஆசிரியப்பா - அகவலோசை உடையது.
கலிப்பா - துள்ளலோசை உடையது.
வஞ்சிப்பா - தூங்கலோசை உடையது.

**கட்டொழுங்கு**

மனிதன் தன் சிந்தனையில் தோன்றும் கவியாற்றலை ஒழுங்குபடுத்தி பாக்கள் இயற்ற வேண்டும். இல்லையேல், காட்டாற்று வெள்ளத்தைக் கரைகள் கட்டி அணைகள் கட்டி தடுக்காமல் விட்டால் நன்னீரானது பயனற்று கடலில் கலந்து வீணாகுமோ அதேபோல், பொழுதுபோக்கிற்காகவும் தற்காலிக துள்ளலுக்காவும் படைக்கப்படும் இலக்கியங்கள் விரைந்து மக்களால் மறக்கப்பட்டுவிடும்.

பதினெண்கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான பெருவாயின் முள்ளியார் இயற்றிய ஆசாரக்கோவை என்னும் நூலில் வரும் பல பாக்கள் ஒரு மனிதன் தம் வாழ்நாளில் அன்றாட

பழக்க வழக்கங்களில் எவற்றையெல்லாம் எவ்வாறு கடைபிடிக்க வேண்டும் என்பதை விவரித்து கூறுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆசாரம் தவறாதவர் அடையும் நன்மைகளாகப் பின்வரும் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோயின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப, என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்.
(ஆசாரக்கோவை, பாடல் எண் 2)

பிறப்பு, நெடுவாழ்க்கை, செல்வம், வனப்பு, நிலக்கிழமை, மீக்கூற்றம், கல்வி, நோயின்மை இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும் ஒழுக்கம் பிழையாதவர்.

அதேபோல் அதிகாலை எழுந்ததும் செய்ய வேண்டியவை என பின்வரும் பாடலில் காட்டுகிறார்.

வைகறை யாமம் துயிலெழுந்து தான் செய்யும்,
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்,
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே,
முந்தையோர் கண்ட முறை.
(ஆசாரக்கோவை, பாடல் எண் 4)

பிரம்ம முகூர்த்தம் என்று சொல்லப்படுகிற வைகறைப் பொழுதாகிய அதிகாலையில் எழவேண்டும்; எழுந்தவுடன் அன்று செய்யவேண்டிய நற்செயல்களையும், ஒப்பற்ற பொருளான இறைவனையும் மனதில் நினைத்து, தியானிக்க வேண்டும்; பிறகு, பெற்றோரை விழுந்து வணங்கி நாளைத் தொடங்கவேண்டும் என்பதே நம்முன்னோர்கள் (மேன்மை அடைவதற்கு தங்கள் அனுபவத்தில் கண்டு) சொல்லிய சிறந்த வாழ்க்கைமுறை ஆகும்.

செய்யக்கூடாதன சில என பின்வரும் பாடலில் காட்டுகிறார்.

நீருள் நிழற்புரிந்து நோக்கார் நிலமிராக்
கீரார் இராமரமும் சேரார் இடரெனினும்
நீர்தொடா தெண்ணெய் உரையார் உரைத்தபின்
நீர்தொடார் நோக்கார் புலை.
(ஆசாரக்கோவை, பாடல் எண் 13)

தண்ணீரிலே தம் நிழலைக் காணக்கூடாது; சும்மா அமர்ந்திருந்து நிலத்தைக் கீறக்கூடாது; இரவில் மரத்தின் அடியில் தங்கக்கூடாது; குளிக்காமல் தலைக்கு எண்ணெய் தேய்க்கக் கூடாது; எண்ணெய்க்குளியல் செய்வதற்காக எண்ணெய் தேய்த்த பின், குளிக்காமல் பிறரைப் பார்க்கக்கூடாது.

சிறுவயது முதல் வாழ்நாள் முழுவதும் கடைபிடிக்க வேண்டியவற்றை குறளடி, சிந்தடி, அளவடி, கழிநெடிலடி என படிப்படியாக உருவெடுத்து அதிகபட்சமாக ஓரடிக்கு 192 சீர்களோடு மொத்தம் 4 அடிகளே கொண்ட வள்ளலார் இயற்றிய திருவடிப்புகழ்ச்சி போல் நிறைவாக வாழ மரபென்னும் இலக்கணம் இன்றியமையாததாகும்.

பரசிவம்சின்மயம் பூரணம்
பரமானு பவவிலாசம்
தரமிகும் சர்வசா திட்டான
சங்குலவு நற்பூம்பதம்
மரபுறு மதாதீத வெளிநடுவி
கருணை யுந்தந்துவழ்விக்குமொண்மைப்பதம்
இரவுறும் பகலடிய
பதமழிவி லின்புதவு கின்றபதமே
(திருவருட்பா முதல் திருமுறை, திருவடிப்புகழ்ச்சி)

மரணமிலாப் பெருவாழ்வு என்னும் உன்னத நிலையடைந்த பெருமை வெகுசிலரையே சாரும்.

## நிறைவுரை

ஒரு சிறந்த வீட்டினை கட்டி முடிக்க பலவகை பொருள்களைப் பயன்படுத்தி சிறப்புற அழகுற அமைக்கின்றோமோ அவ்வாறே இந்த மனித உடலிலும் பல்வேறு வகையான உறுப்புகளைச் சிறுசிறு செல்களாலான கூட்டமைப்புகள் சேர்ந்து மிகவும் நேர்த்தியாக இயக்குகின்றன.

எழுத்து, அசை சீர், தளை, அடி தளை, தொடை என அறுவகை செய்யுள்களால் கட்டப்படும் பாக்கள் காலத்தால் அழியாது நிற்கும் தன்மையுடையன என்பதற்கு நம்முடைய பண்டையத் தமிழிலக்கிய நூல்களே சான்றாகும். எனவே, மரபு தவறாது பாக்களை இயற்றி மாண்புடன் இயற்றுவோம் என உறுதியெடுப்போம். பின்வரும் தலைமுறையினரும் அவற்றை கடைபிடிக்க நம்மால் இயன்றதைச் செய்வோம்.

## துணைநூற்பட்டியல்


Kanakaraj, S. (2016). The Tamil Classic TOLKAPPIYAM: Its Antiquity and Universal Appeal. Indian Literature, 60(1 (291)), 184–191. http://www.jstor.org/stable/44478927

அருந்தவராஜா, க., மங்களரூபி, & சிவகுமார். (2016). திருக்குறள்-திருக்குர்ஆன் வகுத்துள்ள அறநீதிக்கோட்பாடுகள் சமூகவரலாற்று நோக்கில் ஒப்பியல் ஆய்வு.

அருள்நந்தி தம்பிரான். (1951). திருமந்திரம். திருமகள் பதிப்பகம்; தமிழ்நாடு.

இராமசுப்ரமணியம், ஏ. (2009). பதினெண் கீழ்க்கணக்குத் தொகுதி 1, செல்லப்பா பதிப்பகம், மதுரை.

சொக்கலிங்கம், சு. (2003). ஆசாரக்கோவை, வானதி பதிப்பகம், சென்னை.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# ஷேக்ஸ்பியரின் சோனெட்ஸ்லும் கலித்தோகையிலும் காணப்படும் உவமைகளின் ஒப்பீடு

# The Comparison of Simile Found in Shakespeare's Sonnets and Kalithogai

இராகேஷ் இராஜ் வின்சென்ட் / Rakesh Raj Vincent[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication (FBK), Sultan Idris Education University, Malaysia
Corresponding Email: rakeshrajvincent@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இந்த கட்டுரை "ஷேக்ஸ்பியரின் சோனெட்ஸ்லும் கலித்தோகையிலும் காணப்படும் உவமைகளின் ஒப்பீடு" எனும் தலைப்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வு முக்கியமாக இலக்கியக் கூறுகளை ஒப்பிடுவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வு இலக்கியக் கூறுகளின் ஒப்பீடு, சோனெட்டுகளும் கலித்தொகையும் என்ற இரண்டு வகையான வெவ்வேறு கவிதை வகைகளுக்கு இடையே உள்ள ஒற்றுமையையும் முக்கியமாகக் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வின் கருப்பொருள் காதல் ஆகும். இவ்வாய்வு ஒப்பீடு வெளிப்பாடுகள், உணர்வுகள், பிரிவினைகள், தியாகங்கள் போன்ற பல அம்சங்களை முன்னிலைப்படுத்தும். இவ்வாய்வின் முக்கிய நோக்கமானது கவிதைகள் மூலம் வெவ்வேறு சூழ்நிலைகளில் Simile என்ற தனிமத்தின் வெவ்வேறு பயன்பாட்டை ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்வதாகும். இந்த ஆய்வில் இரண்டு வகையான உருவகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கருச்சொற்கள்:** சோனெட்ஸ், கலித்தோகை, உவமை

**Abstract**

This article is titled as "The Comparison of Similes found in Shakespeare's Sonnets and Kalithogai". This article is mainly focus on the comparison of literature element, simile among two type of different poem categories, which are Sonnets and Kalithogai. The theme of this article will be driven by the theme of love. The comparison will highlight on many aspects such as expressions, feelings, separations, and sacrifices. The main objective of this article is to compare and analyse the different usage of the element Simile in different situations through poems. Researcher used two types of similes throughout this research.

**Keywords:** Simile, Sonnet, Kalithogai

## Introduction

There are many types of poems in this world where we can divide and categorise it but to name a few which are Haiku, Sonnet, Free verse and Acrostic poems. All these types of poems are from English language or to be more specific it can be said English poems. When we look into Tamil language poems there are many poems and to name a few; Akaval, Kalippa, Paripatal, Pannatti, Venpa, Kalithogai and Viruttam. The researcher chose Kalithogai and Sonnets as the main elements of this study. The usage of language between today's poems and the poem during old days would be the biggest difference and would be the huge change in the poetry world. One of the main backbones of poem is definitely literary elements. Literary elements are the one that give soul to any poem regardless of language use.

This research will mainly focus on the comparison of the literary element which is Simile. Simile is a symbol that always used to compare between human and object, human and beauty and human and nature. Ancient poems always use beautiful words and adjectives when it comes to comparison to make the poem beautiful and the words shine like a diamond in the poem. For example, "Her beautiful eyes stared me like a sharp knife". Based on this phrase, we can know that the word "like" is used as comparison to compare a woman's eyes and a sharp knife.

This research will merely focus on love poems and the words that used as comparison in the poems. Shakespeare's sonnets and Kalithogai poems would be the main source of comparison which will be the main two subjects of this research. There are five types of similes in total but the researcher only used two types of similes in this research, which are similes formed by comparing nouns with as and like and similes formed by adjectives.

## Research Objectives

This research is driven by one objective which is:

i. To find out the different usage of symbol simile in both Shakespeare's Sonnets and Kalithogai.

## Literature Review

### Sonnet

According to an Encyclopaedia Britannica (2023), sonnet is a fixed verse form of Italian Origin that consisting of 14 lines and iambics rhyming according to a prescribed scheme. The sonnet is unique among poetic forms in Western literature in that it has retained its

appeal for major poets for five centuries. The form seems to have originated in the 13th century among the Sicilian school of court poets, who were influenced by the love poetry of Provençal troubadours. The sonnet was introduced to England, along with other Italian verse forms, by Sir Thomas Wyatt and Henry Howard, earl of Surrey, in the 16th century. The new forms precipitated the great Elizabethan flowering of lyric poetry, and the period marks the peak of the sonnet's English popularity. In the course of adapting the Italian form to a language less rich in rhymes, the Elizabethans gradually arrived at the distinctive English sonnet, which is composed of three quatrains, each having an independent rhyme scheme, and is ended with a rhymed couplet.

## Shakespeare's Sonnet

According to Qayumova (2023), in sonnet when describing the image of a woman, Shakespeare showed her pure heart through his poem where one of the sample verses from one of his sonnets is "Love is a cure for all pains; sometimes it brings joy to its owner, sometimes it tears hearts like a dagger. Even bitter things become sweet because of love". In sonnets, it is important that the thought is concise and the image is compact, clear, and formally created within a certain pattern. The theme of each sonnet does not repeat each other and is uniquely charming. The themes of love and romance pervade the works of the English writer who lived and created in the 16th century, whether large or small in size, particularly the main part of his sonnets.

## *Kalithogai*

According Bagushia Begum (2022), Kalithogai which is one of the Sangam books describes the moral thoughts and the ideas of the modes of life which give benefit to life. The marriage of Tamils signifies the moral character of a combination of two minds. Kalithogai also conveys a lot of information about the economy in terms of the fact that it is important for life.

## Methodology

This study is conducted using Comparative study where the researcher compared the element of Simile found in both Sonnets and Kalithogai in terms the usage of Simile in different manner and styles in both the poems.

**Findings And Discussions**

**Analysis 1**
**Sonnet 130**
**William Shakespeare**

My mistress' eyes are nothing like the sun;
Coral is far morered, than her lips red:
If snow be white, why then her breasts are dun;
If hairs be wires, black wires grow on her head.
I have seen roses damasked, red and white,
But no such roses see I in her cheeks;
And in some perfumes is there more delight
Than in the breath that from my mistress reeks.
I love to hear her speak, yet well I know
That music hath a far more pleasing sound:
I grant I never saw a goddess go,
My mistress, when she walks, treads on the ground:
And yet by heaven, I think my love as rare,
As any she belied with false compare.

Explanation:

This poem is mainly ventures into how Shakespeare describes the beauty of his mistress and how well he symbolizes his true adoration for the mistress and her looks. The speaker loves a lady with whom he can share his heart. There is no need to have a goddess if one has a partner who understands the minute emotional impulses.

வேய் எனத் திரண்ட தோள், வெறி கமழ் வணர் ஐம்பால்,
மா வென்ற மட நோக்கின், மயில் இயல், தளர்பு ஒல்கி
ஆய் சிலம்பு அரி ஆர்ப்ப, அவிர் ஒளி இழை இமைப்ப,
கொடி என, மின் என, அணங்கு என, யாது ஒன்றும்
தெரிகல்லா இடையின்கண் கண் கவர்பு ஒருங்கு ஓட,
வளமை சால் உயர் சிறப்பின் நுந்தை தொல் வியல் நகர்
இளமையான் எறி பந்தொடு இகத்தந்தாய்! கேள், இனி:
பூந் தண் தார், புலர் சாந்தின், தென்னவன் உயர் கூடல்,
தேம் பாய அவிழ் நீலத்து அலர் வென்ற அமர் உண்கண்,
ஏந்து கோட்டு எழில் யானை ஒன்னாதார்க்கு அவன் வேலின்,
சேந்து நீ இனையையால்; ஒத்ததோ? சின்மொழி!
பொழி பெயல் வண்மையான் அசோகம் தண் காவினுள்,

கழி கவின் இள மாவின் தளிர் அன்னாய்! அதன், தலை,
பணை அமை பாய் மான் தேர் அவன் செற்றார் நிறம் பாய்ந்த
கணையினும், நோய் செய்தல் கடப்பு அன்றோ? கனங்குழாய்!
வகை அமை தண் தாரான் கோடு உயர் பொருப்பின்மேல்,
தகை இணர் இள வேங்கை மலர் அன்ன சுணங்கினாய்!
மத வலி மிகு கடாஅத்து அவன் யானை மருப்பினும்
கதவவால் தக்கதோ? காழ் கொண்ட இள முலை
என ஆங்கு,
இனையன கூற, இறைஞ்சுபு நிலம் நோக்கி,
நினையுபு நெடிது ஒன்று நினைப்பாள் போல், மற்று ஆங்கே
துணை அமை தோழியர்க்கு அமர்த்த கண்ணள்,
மனை ஆங்குப் பெயர்ந்தாள், என் அறிவு அகப்படுத்தே.

(கலித்தொகை - குறிஞ்சிக் கலி 57)

Explanation:

Based on this poem which is Kalithogai 57, Kurinji by Kapilar titled “What the hero said to the heroine”. The speaker describes the beauty of her lady by comparing her look, glance and everything.

Analysis:

Both the poems are love themed poems and both the speakers describe the beauty of their ladies and amazed with their beauties. In Sonnet 130 by William Shakespeare, we can observe that he compared the beauty of her lady’s eyes with a sun. The evidence is from line 1, “My mistress' eyes are nothing like the sun;”. He says that the sun is far brighter and more beautiful than the ordinary eyes of his mistress. The poem addresses the problem of stereotyping the beauty of females by setting unreachable standards for it. It shows how males have set such out of the world expectations for the beauty of their female partners. While when we look into the Kalithogai 57, the speaker described the lady of his beauty by describing her look, beauty, glance, shoulder and etc. The evidence is from line 2 “மா வென்ற மட நோக்கின், மயில் இயல் தளர்பு ஒல்கி,” where the meaning is when we translate to English is “Her gentle glances that are better than those of a deer, peacock looks.” The speaker compared the beauty of his woman of love by comparing her glance to a deer and her look as a Peacock. He adored the beauty of his woman and immersed in the beauty of her. In sonnet 130, the speaker used the word “like” to indicate and stress that her lady’s eyes are not like the sun, while in Kalithogai 57, the touch of simile by using adjectives or comparison shown in the form of comparing the woman’s look and the evidence of comparison is “மயில் இயல்

தளர்பு ஒல்கி,". Here we can observe that the comparison happened in terms of just by indicating that the girl's look is like a beautiful peacock.

**Analysis 2**

**Sonnet 147**

**William Shakespeare**

My love is as a fever longing still,
For that which longer nurseth the disease;
Feeding on that which doth preserve the ill,
The uncertain sickly appetite to please.
My reason, the physician to my love,
Angry that his prescriptions are not kept,
Hath left me, and I desperate now approve
Desire is death, which physic did except.
Past cure I am, now Reason is past care,
And frantic-mad with evermore unrest;
My thoughts and my discourse as madmen are,
At random from the truth vainly expressed;
For I have sworn thee fair, and thought thee bright,
Who art as black as hell, as dark as night.

Explanation:

Sonnet 147 is a poem by Shakespeare where engages with the themes of evil, illness and obsession. The Dark Lady, like an illness, has consumed his life. He's obsessed with her, so much so that no one can shake him back into his right mind. Like a mad person, he's racked will symptoms of his obsession. He's lost the ability to reason or think clearly. His thoughts are random and scattered. The poet's speaker refers to the Dark Lady in the last lines as an evil presence in his life. He's well aware of what he's allowed his life to become.

வார் உறு வணர் ஐம்பால், வணங்கு இறை நெடு மென்தோள்,
பேர் எழில் மலர் உண்கண், பிணை எழில் மான் நோக்கின்,
கார் எதிர் தளிர் மேனிக், கவின் பெறு சுடர் நுதல்,
கூர் எயிற்று முகை வெண்பல், கொடி புரையும் நுசுப்பினாய்!
நேர் சிலம்பு அரி ஆர்ப்ப நிரை தொடிக் கை வீசினை
ஆர் உயிர் வௌவிக்கொண்டு அறிந்தீயாது இறப்பாய்! கேள்!
உளனா என் உயிரை உண்டு உயவு நோய் கைம்மிக

இளமையான் உணராதாய்! நின் தவறு இல்லானும்,
களைநர் இல் நோய் செய்யும் கவின் அறிந்து அணிந்து, தம்
வளமையான் போத்தந்த நுமர் தவறு இல் என்பாய்!
நடை மெலிந்து அயர்வு உறீஇ நாளும் என் நலியும் நோய்
மடமையான் உணராதாய்! நின் தவறு இல்லானும்
இடை நில்லாது எய்க்கும் நின் உரு அறிந்து அணிந்து தம்
உடைமையால் போத்தந்த நுமர் தவறு இல் என்பாய்!
அல்லல் கூர்ந்து அழிவுற அணங்கு ஆகி அடரும் நோய்
சொல்லினும் அறியாதாய்! நின் தவறு இல்லானும்
ஒல்லையே உயிர் வெளவும் உரு அறிந்து அணிந்து தம்
செல்வத்தால் போத்தந்த நுமர் தவறு இல் என்பாய்!
என ஆங்கு,
ஒறுப்பின் யான் ஒறுப்பது நுமரை யான் மற்று இந்நோய்
பொறுக்கலாம் வரைத்து அன்றிப் பெரிது ஆயின் பொலங்குழாய்!
மறுத்து இவ் ஊர் மன்றத்து மடல் ஏறி,
நிறுக்குவென் போல்வல் யான் நீ படு பழியே.

(கலித்தொகை - குறிஞ்சிக் கலி 58)

Explanation:

In Kalithogai 58, the speaker described the beauty of his young lady by comparing her appearance, complexion and beauty and keep saying that his yearning of love for the woman as disease and it is killing him as she doesn't understand about it because she is young.

Analysis:

In sonnet 147, the speaker is describing her love as an illness or obsession that he couldn't get rid of. The evidence is from line 1; "My love is as a fever longing still," where the speaker compares his love to a sickness and something that is plaguing him but also, he couldn't let go. He won't do anything to cure himself of his illness. It feeds off of his sense of reason, making him do things he wouldn't normally. His sense of reason is enraged with him, like a doctor who's been trying to treat him. Finally, seeing things clearly, the speaker says that he knows that his obsession will mean the end of his life. His illness is going to completely consume him now that his reason is gone. In Kalithogai 58, Kurinji by Kapilar, the speaker describing his love in the feeling of a man yearning for a woman's love. The evidence is, line 2; "பேர் எழில் மலர் உண்கண், பிணை எழில் மான் நோக்கின்," where the meaning of this line is "flower-like eyes, bent forearms, long, delicate arms, body like the rainy season's new sprouts,". In Sonnet 147, the word

“as” is used as an important sinile to compare his love to such an illness and naming his love as a Dark Lady, while in Kalithogai 58, the speaker comparing his love by describing her eyes, body, and movements where he used the words like “பேர் எழில் மலர் உண்கண்”. He compared the woman’s eyes to a flower. In this poem the symbol of comparison or simile is shown through these two words which is a simile comparing by using adjectives “மலர் உண்கண்” which is the speaker is letting us know the eyes of the woman that he loves are like flowers.

**Analysis 3**

**Sonnet 145**

**William Shakespeare**

Those lips that Love's own hand did make,
Breathed forth the sound that said 'I hate',
To me that languished for her sake:
But when she saw my woeful state,
Straight in her heart did mercy come,
Chiding that tongue that ever sweet
Was used in giving gentle doom;
And taught it thus anew to greet;
'I hate' she altered with an end,
That followed it as gentle day,
Doth follow night, who like a fiend
From heaven to hell is flown away.
'I hate', from hate away she threw,
And saved my life, saying 'not you'.

Explanation:

In this poem by Shakespeare, he describes how the woman he loves started to hate him and badly criticizing him started to like him.

தளை நெகிழ் பிணி நிவந்த பாசு அடைத் தாமரை
முளை நிமிர்ந்தவை போலும் முத்துக் கோல் அவிர் தொடி,
அடுக்கம் நாறு அலர் காந்தள் நுண் ஏர் தண் ஏர் உருவின்
துடுப்பு எனப் புரையும் நின் திரண்ட நேர் அரி முன்கைச்,
சுடர் விரி வினை வாய்ந்த தூதையும் பாவையும்
விளையாட அரிப் பெய்த அழகு அமை புனை வினை

ஆய் சிலம்பு எழுந்து ஆர்ப்ப அம் சில இயலும் நின்
பின்னு விட்டு இருளிய ஐம்பால் கண்டு, என் பால
என்னை விட்டு இகத்தர இறந்தீவாய்! கேள் இனி!

மருளி யான் மருள் உற "இவன் உற்றது எவன் என்னும்
அருள் இலை இவட்கு" என அயலார் நின் பழிக்குங்கால்,
வை எயிற்றவர் நாப்பண் வகை அணிப் பொலிந்து, நீ
தையில் நீர் ஆடிய தவம் தலைப்படுவாயோ?

உருள் இழாய்! "ஒளி வாட இவன் உள் நோய் யாது என்னும்
அருள் இலை இவட்கு" என அயலார் நின் பழிக்குங்கால்,
பொய்தல மகளையாய்ப் பிறர் மனைப் பாடி, நீ
எய்திய பலர்க்கு ஈத்த பயம் பயக்கிற்பதோ?

ஆய்தொடி "ஐது உயிர்த்து இவன் உள் நோய் யாது என்னும்
நோய் இலை இவட்கு" என நொதுமலர் பழிக்குங்கால்,
சிறு முத்தனைப் பேணிச் சிறு சோறு மடுத்து, நீ
நறு நுதலவரொடு நக்கது நன்கு இயைவதோ?
என ஆங்கு,
அனையவை உளையவும் யான் நினக்கு உரைத்ததை
இனைய நீ செய்தது உதவாய் ஆயின் சேயிழாய்!
செய்ததன் பயம் பற்று விடாது,
நயம் பற்று விடின் இல்லை நசைஇயோர் திறத்தே.
(கலித்தொகை - குறிஞ்சிக் கலி 59)

Explanation:

In this poem, the speaker is trying to describes the beauty of the lady he loves by comparing her hair, bangles, and forearms.

Analysis:

In sonnet 145, the speaker trying to tell the readers about his wife who is best known to cuss and hate the speaker, but suddenly she started to like him. Something important has changed, and now the entire relationship is different. She no longer "hate" him. Now she says, "I hate not you," and this brings him a great deal of joy. The simile is found in the line 10; "That followed it as gentle day,". The word "as" here functioning as simile where it explains the mistress or dark lady of the speaker is started to like him and her transition from good to bad is described in such a way which is "I hate' she altered

with an end, that followed it as gentle day,". In Kalithogai 59, the simile "like" was used by the speaker to compare the bangles of his love. The evidence is "முளை நிமிர்ந்தவை போலும் முத்துக் கோல் அவிர் தொடி". The meaning of this line is, "Buds lifted like pearl, rounded bright bangles". The word "போலும்" (like) here is playing the role of simile. The speaker tried to relate the beauty of the bangle through his descriptive words and mostly adjectives were used.

## Conclusion

In conclusion, similes that found in both Shakespeare's Sonnets and Kalithogai are very important and simile functions as the main beauty or a contrast in both the poems to show the comparison. The researcher used two types of similes throughout this research which are similes formed by comparing nouns with like and as and similes formed by adjectives. This research is the first research to conduct using both Sonnets and Kalithogai as the two main subjects of this research. The challenges that researcher faced when conducting this research is Metaphor and Simile are almost same it is hard to identify the symbol of simile used in the poem and analyse it. I hope the future researchers do deep research on the study of metaphor, simile and other related literary symbols with Tamil poems, this is a chance for every researcher that love poetry to venture the beauty of poetry in different languages.

## References


A Short Analysis of Shakespeare's Sonnet 21: "So is it not with me." (2017, January 16). Interesting Literature. https://interestingliterature.com/2017/01/a-short-analysis-of-shakespeares-sonnet-21-so-is-it-not-with-me/

Green, W. (2020, January 4). All 154 of William Shakespeare's Sonnets. Poem Analysis. https://poemanalysis.com/william-shakespeare/154-sonnets/

K.Shakthivel, +91 8248977695. (n.d.). குறிஞ்சிக் கலி 57 - Kalithokai - கலித்தொகை - Ettuthogai - எட்டுத்தொகை - Sangam Literature's - சங்க இலக்கியங்கள் - Tamil Literature's - தமிழ் இலக்கியங்கள். Www.tamilsurangam.in. Retrieved May 1, 2023, from http://www.tamilsurangam.in/literatures/ettuthogai/kalithokai/kalithokai_57.html

Poetry Workshop: Meeting Shakepeare's Similes, Metaphors, and Ironies – LitChatte.com. (n.d.). Retrieved May 1, 2023, from https://litchatte.com/2018/08/07/poetry-workshop-meeting-shakepeares-similes-metaphors-and-ironies/

ValaiTamil. (n.d.). இரண்டாவது : குறிஞ்சி. ValaiTamil. Retrieved May 1, 2023, from https://www.valaitamil.com/irandaavathu-kurichchi_7419.html

What is Simile (5 Types) and How to Write One? | Lemon Grad. (2021, October 22). https://lemongrad.com/simile/

எட்டுத்தொகை – கலித்தொகை 37-65 குறிஞ்சி. (2015, December 4). Learn Sangam Tamil; Learn Sangam Tamil. https://learnsangamtamil.com

கலித்தொகை மூலமும் உரையும் - Tamill eBooks Org. (2021, January 24). Tamill EBooks Org. https://tamilebooks.org/ebooks

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# திருக்குற்றாலத் தல புராணத்தில் இயற்கை

# Nature in the Tirukkutaala Thala Puranam

பா.வேலம்மாள்/ P. Velammal[1]
[1]உதவிப்பேராசிரியர், இராணிமேரி கல்லூரி
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச்சாரம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் திருக்குற்றாலத் தல புராணத்தில் காணக்கிடக்கும் இயற்கையை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, திருக்குற்றாலத் தல புராணத்தில் காணக்கிடக்கும் இயற்கையை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு திருக்குற்றாலத் தல புராணத்தில் இயற்கையைஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** திருக்குற்றாலத் தல புராணம், இயற்கை

**Abstract**

The major objective of the research is to explore nature in the Tirukkutaala Thala Puranam. This research is designed in a qualitative approach. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the nature in the Tirukkutaala Thala Puranam. The research claims to be the first such attempt to do a study regarding the nature in the Tirukkutaala Thala Puranam.

**Keywords:** Nature, Tirukkutaala Thala Puranam

## முன்னுரை

இயற்கையால் உருவாக்கப்பட்டதே இந்த உலகம். இந்த உலகத்தில் உள்ள மக்கள் இயற்கையை தமது வாழ்வின் ஒரு அங்கமாகவே வைத்து போற்றி வருகின்றனர். இயற்கை இறைவனால் படைக்கப்பட்ட எழில் களஞ்சியம். மனிதனை வடிவமைக்கும் அழகின் இருப்பிடம். ஆற்றலின் உறைவிடம், இயற்கையின் வழி கிடைக்கும் நன்மைகள் இல்லையெனில் மனிதன் வாழ முடியாது. இயற்கையினை திருக்குற்றாலத் தல புராணத்தில் திரிகூடராசப்ப கவிராயர் எங்ஙனம் கொண்டாடி இருக்கிறார் என்பதைக் காண்பதே இவண் நோக்கம்.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## ஆய்வுப் பகுப்பாய்வு

மேலகரத்தைச் சார்ந்த திரிகூடராசப்பக் கவிராயர் திருக்குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பல்வகைச் சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார். இவர் பதினெட்டாம் நூற்றாண்டுப் புலவர். இவர் வாழ்ந்த காலத்தில் கோவை, அந்தாதி, உலா, பதிகம் போன்ற சிற்றிலக்கியங்களைப் படைத்த பல புலவர்கள் திருநெல்வேலிப் பகுதியில் வாழ்ந்து வந்தனர். அந்த மரபில் வந்தவர் திரிகூடராசப்பக் கவிராயர். இவர் கிட்டத்தட்ட பதினான்கு சிற்றிலக்கியங்களை குற்றாலநாதர் மேல் பாடியுள்ளார். பதினான்கு நூல்களிலும் மிகச் சிறப்பானதாக திருக்குற்றாலக் குறவஞ்சியாரும், இது தவிர திருக்குற்றாலத் தல புராணம், திருக்குற்றால உலா, திருக்குற்றால யமக அந்தாதி, திருக்குற்றால மாலை, திருக்குற்றாலப் பரம்பொருள் மாலை, திருக்குற்றால ஊடல், திருக்குற்றால சிலேடை வெண்பா, திருக்குற்றாலக் கோவை, நன்னகர் வெண்பா, திருக்குற்றாலக் கோமளமாலை, திருக்குற்றாலக் குழல்வாய் மொழிமாலை, திருக்குற்றால வெண்பா அந்தாதி, திருக்குற்றாலப் பிள்ளைத்தமிழ்.

இந்தியாவின் மிகப் பழைய இலக்கியங்களை வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். வேத காலத்திற்கு முன்பே புராணங்கள் கதை வடிவத்தில் வழங்கி வந்திருக்கின்றன. புராணம் என்ற சொல்லுக்கு மிகப் பழமையான வரலாறு என்பது பொருள். எது மிகப் பழைய காலத்தில் இருந்து இன்று வரைக்கும் மக்களிடத்தில் பரவி வாழ்ந்து வருகிறதோ அதைப் புராணம் என்று கூறலாம். தமிழில் புராணம் இருந்திருக்கிறது என்பதனை தொல்காப்பியம் கூறும் ‘தொன்மை’ என்ற சொல்லால் உணர முடியும்.

தமிழ்நாட்டில் புராணங்கள் என்றால் தலபுராணங்களே நினைவுக்கு வரக்கூடிய அளவிற்குத் தல புராணங்களுக்குச் சிறந்ததோர் இடம் உண்டு. கோவிலில் வழங்கும் கதைகளை வைத்துக்கொண்டு மக்களின் விருப்பதிற்கேற்ப புலவர்கள் புராணம் செய்தனர். குற்றாலநாதரை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட புராணமே திருக்குற்றாலத் தலபுராணம்.

திருக்குற்றாலத்தில் சிவபெருமான் குற்றாலநாதராக வீற்றிருக்கின்றார். இந்த இறைவனை மையமாகக் கொண்டு தானவைபவ காண்டம், சிவரகசிய காண்டம் என இருபெரும் பிரிவுகளாக இயற்றப்பட்டுள்ளது. இது பாயிரம் கடவுள் வாழ்த்து நீங்கலாகத் திருநதிச்சருக்கம் முதல் நூற்பயனுரைத்தச் சருக்கம் ஈராக 32 சருக்கங்களைக் கொண்டது.

இயற்கை என்ற சொல் பழந்தமிழில் 'இயல்பு' என்ற பொருளில் உள்ளது. மொழி வரலாற்றில் இச்சொல் பல்வேறு பொருளுடையதாக வளர்ந்தது. 'இயற்கைக்கு செயற்கைக்கு மாறானது' என்ற பொருளும் உண்டு. மனிதன் அல்லாத பிற அனைத்தும் இயற்கை; மக்கள் வாழ்வு இயற்கையோடு இயைந்தது. ஆடிவரும் தென்றலிலும், பாடிவரும் அருவியிலும், மணமிகு மலர்களிலும், கணந்தோறும் புதியபுதிய கோலங்காட்டும் வானத்தின் வண்ணத்திலும் ஈடுபடாத மனித மனம் இல்லை. கவிராயரின் பாடல்களிலும் இயற்கை சிறந்த இடத்தைப் பெறுகிறது.

திருக்குற்றால மலையில் உள்ள சித்ரா நதியானது அருவியாகப் பாய்கின்றது. இது அருவிகளுள் சிறந்ததாகும். இந்நதிக்கு சிவமது கங்கை என்ற பெயரும் உண்டு. இந்நதிப்பற்றி கவிராயர் திருநதி சருக்கம் முழுவதும் பாடியுள்ளார். சித்ரா நதியானது குறிஞ்சி, முல்லை, மருதம் போன்ற நிலங்களில் கடந்து நெய்தலாகிய கடலில் கலப்பதையும் அவ்வாறு செல்லும் பொழுது நான்கு நிலப் பொருட்களையும் கவர்ந்து சென்றதையும் கவிராயர் தம் பாடல்களில் அழகாக காட்டியுள்ளார். இந்த நதி முல்லை நிலத்து ஆயர்பாடியில் பெரிய பசுக்கூட்டங்களைத் தொடர்ந்துள்ளது. இம்மேகமானது வளைந்து அலை எனத் தாவி பத்து அவதாரங்களைக் கொண்ட செங்கண்ணையுடைய நெடிய மாயோனை ஒத்துக் காணப்படுகிறது. (திரு.நதி.சருக்கம் பா:8).

திருக்குற்றால நதியானது தூய தண்ணீர் பொருந்திய வெண்ணிறமுடையதாய் செல்லும்போது குமுத மலரின் செம்மையினையும், குவளையினுடைய கரு நிறத்தையும் பெற்றுச் செல்கின்றன. இதனை,

"வெண்கமல மேவியுயர் வெண் படிக மணிந்து
வெள்ள மேனி வாய்ந்து
தன் குமுத வாய்ச்சிவப்புந் தடங்குவளைக்
கண்கறுப்புந் தழைப்பத் தோன்றி"
(திரு.நதி சரக்கம் பா:12).

திருநதியில் நீலோற்ப மலர் மிகுதியாகவும், அவற்றுக்கு இடைஇடையே தாமரை மலர்கள் மலரப்பெற்று கற்பகத்தரு நிழலில் பொருந்துகின்றன. கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நால்வகை மலர்களும் சேர்ந்த அழகிய வெண்ணிற திருநதியாகிய பல மலர் மாலைகளையும் சுமந்து கொண்டு கடலாகிய செல்வ மகளோடு கலக்கின்றன.

தென்பாண்டி நாட்டு வருணனை திருநாட்டுச் சருக்கத்தில் கூறும்போது நால்வகை நிலங்கள் பற்றியும் பேசப்படுகின்றன. இந்திரு நாட்டு மலைகளில் மாமரம் பழுக்கும் போதெல்லாம் மலையே பழுத்து உதிர்வது போலக் காட்சியளிக்கிறது. சோலைகளில் பாக்குக் குலைகள் சிதறி, மூங்கில் ஏணி போன்று தோன்றுகிறது. மூங்கில்கள் மேலே உள்ள படிகளில் தேன் சொரியும் வளப்பம் உடையது.

"மாம் பழுக்கம் பொதும்பர் தொறு மலை பழுத்த தெனத் தோன்றி
காப்பழுக்காய்க் குலை சிதறிக் கண்ணேணிகடுத்த சினை
மீர்பழுக்கண் மிசைத்தாவும் வெய்யவன் நேர்க்கால் வழுத்
தேப்பழுக்கு முயர் பெருமைத் திருவழுதி வளநாடு" (தி.நா.ச.பா.1)

மருத நிலத்தில் விதைக்கப்பட்ட விதையானது முத்துக்களைப் போல முளையைத் தோற்றுவிக்கின்றன. பொன்னைப் போல அரும்புகின்றன. பவளம் போல பயிர்கள் வளர்கின்றன. பச்சைக் கற்களைப் போலத் தோகை விரியச் செய்து நீலநிறம் மிகுந்த சிறப்பு உடையதாய் தோன்றுகின்றன. (மேலது பா.9).

"தேன்குளிக்குந் தேன் வாவி திரைக் குளிக்குந் தூவியனம்
கான் குளிக்கும் பசுந்தென்றல் கரை குளிக்கு மெறிதரங்கம்
மீன் குளிக்கும் புனல் யாறு குறிக்குங் கருமேதி
வான் குளிக்கும் விரிபாளை மடல் குளிக்கும் வரிவாளை" (மே.பா.26)

என்று முல்லை நில இயற்கைப் பேசப்படுகின்றது.

பாண்டிய நாட்டில் நால்வகை நிலங்கள் பற்றி கூறப்படுகின்றன. குறிஞ்சி நிலத்துத் தோட்டங்களில் விளையும் திணை முல்லை நிலத்து வரகுமேல் தம் கதிர்களை நீட்டுகின்றன. முல்லை நிலத்து விளையும் அவரை, துவரை முதலியவை மருத நிலத்தில் உள்ள நெல்வேலிகள் மீது தம் காய் கொத்துகளை நெருங்க வைகின்றன. மருத நிலத்தில் வயல்களின் கரைகளில் உள்ள வாழைகள் நிழலைச் செய்து தம் கீழ்க் கன்றுகளின் இலைகளை ஏற்றுதலில், கடற்கரையாகிய நெய்தல் நிலத்தில் விளையும் தாழை தன் மகரந்தமாகிய சோற்றைச் சொரிகின்றன. (மேலது பா:37).

"செய்காட்டுந் தாமரையாத் தேன் காட்டுங் கழுநீரா
மொய் காட்டு நறுந்தளவா முருகாட்டு மாந்தளிராக்
கைகாட்டி முகங்காட்டிக் கண்காட்டி நகை காட்டி
மெய்காட்டித் திருமடந்தை விளையாடுந் திருநாடு" (மேலது பா:5)

என்று இயற்கை முழுமையாக வருணைச் செய்யப்படுகின்றது.

திருகுற்றாலத்திலுள்ள வனத்தில் பெண் வண்டும், ஆண் வண்டும் இசைக்கின்ற இனிய இசையைக் கேட்டு மானும் வேங்கையும் தம் முன்பிறப்புப் பற்றிய பகையை மறந்து ஒரே இடத்தில் காட்டில் நடனம் புரிந்து நிற்கின்றனவாம்.

"தேனுந் தும்பியும் எடுத்த பண்ணிசை செவி மடுத்து
மானும் வேங்கையும் ஒருதலைத் துயல்வது மயில்கள்
கான நாடகம் பயிறரக் கான மா மறைகள்
ஞான யோகிகள் பயில்வது னறமிசாரணியம்" (பு.வ.சருக்கும் பா:17)

திருக்குற்றாலத்தில் வீசும் மந்த மாருதம் மிகவும் பெருமை உடையது, இதனை மிகுந்த இரசனையோடு, செண்பகவனத்தில் பிறந்து, அருவியில் நீராடி, மலர்களில் நறுமணம் பெற்று திருக்கோயிலினுள் தவழ்ந்து வரும் இந்த தென்றலைக் குழந்தை என்கிறார்.

குற்றால மலையின் உச்சியில் மூன்று சிகரங்கள் உள்ளதால் இம் மலைக்குத் திரிகூடமலை என்னும் பெயரும் உண்டு. இம்மலையில்,

"பந்தி பாயமுகில் பாய் மத மாவெனத்
தந்தி பாடிமத் தந்தியை வெற்பென
மந்தி பாயுமம் மந்திகள் பாய்தல் போல்
உந்தி பாயு முயர்வரைச் சார்பெலாம்" (திரிகூட ம.சரு.பா.:3)

மேகத்தை மதம் பிடித்த களிறு என நினைத்து யானை பாய்கிறது, அவ்யானையை மலையெனக் கருதி குரங்குகள் அது மீது தாவுகின்றன என்று விளக்குகிறார்.

வட அருவி மிகவும் புனிதமானது. மற்ற அருவியில் நீராடுபவர்களுக்கு அவர்களின் நினைப்புக்கு ஏற்றபடி யாதேனும் ஒரு பயனை அளிக்கும். ஆனால் வடஅருவி தன்னை எதிர்கொண்டோர், வணங்கினோர், நினைத்தோர், புகழ்ந்தோர் மற்றும் ஒருத்துளி நீரை முடியில் தெளித்துக் கொண்ட யாவருக்கும் சிவகதியைக் கொடுக்க வல்லது.

"ஆலை நறுங் கழை விர் தொட்டயிலவதெனக் காலை முதல்
வேலை மரை பினிற் கதிகள் வியந்து தவும் பல நதிகள்
காலையினு மலையினுங் கடும் பகலும் வடவருவி
பாலையடு கட்டி தருஞ் சுவைபோலப் பலன் தருமே"
(வடவருவி சருக்கம் பா:32).

குற்றாலத் தரப் புராணத்தில் மூங்கில், மருதமரம், பாக்கு, தென்னை, கரும்பு, வாழை, சந்தனம், நார்த்தை, அகில், அகடு, இடுப்பை, மகிழ்தேவதாரு, வன்னி போன்ற மரங்கள் பேசப்பட்டாலும் செண்பகமரம், மாமரம், பலாமரம் ஆகியன மிக சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது.

"வான ரம் பையின் மாவிற் பலவின்மேல்
வான ரம் பையின் மா மயில் யாழ் செய்
வான ரம்பையின் மா மயிலானுமே" (திரி.கூ.சரு.பா:15)

மயில், வண்டு, குயில், அன்னம், கிளி, நாரை, நாகணவாய்ப் பறவை, போன்ற பறவைகளும் குரங்கு, யானை, சிங்கம், காட்டுப்பன்றி, நீர்ஆமை, மீன், குதிரை, பசு, புலி, மான், முதலை, எருது, பாம்பு, நரி, முயல், காட்டுக்கோழி போன்ற விலங்குகளும் குற்றாலத் தலப் புராணத்தில் பேசப்பட்டுள்ளன.

**நிறைவுரை**

அன்றையக் காலத்தில் மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டுள்ளான். இயற்கை மனிதனால் போற்றப்படும் வகைகளில் ஒன்று. இன்று இந்த இயற்கை நலம் குற்றாலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துகொண்டே வருகிறது.

குற்றாலத் தலப் புராணத்தின் இயற்கைக் காட்சிகளைப் படித்தால் குற்றாலத்தின் பழைய வளமையைக் கொண்டு வந்தால் மனிதன் ஆரோக்கியமான வாழ்வு வாழலாம் என்பதை உலகுக்கு உணர்த்தலாம்.

## துணைநூற்பட்டியல்


இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.

மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை

விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.

திருவாசகம் விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.

சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு

தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.

புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), சென்னை, 1971

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# திருக்குறள் காட்டும் ஆட்சிமுறை

# Politics in Thirukkural

இ.பன்னீர்செல்வம் / E. Panneer Selvam[1]
[1] முனைவர், ஸ்ரீ பாலபாரதி நர்சரி & பிரைமரி தொடக்கப்பள்ளி, கொத்தாம்பாடி, கல்பகனூர் அஞ்சல், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் திருக்குறளில் காணக்கிடக்கும் ஆட்சிமுறையை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, திருக்குறளில் காணப்படும் ஆட்சிமுறையை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு திருக்குறளில் ஆட்சிமுறையை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** திருக்குறள், ஆட்சிமுறை

**Abstract**

The major objective of the research is to explore politics in Thirukkural. This research is designed in a qualitative approach. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the politics in Thirukkural. The research claims to be the first such attempt to do a study regarding the politics in Thirukkural.

**Keywords:** Humanity, Thirukkural

## முன்னுரை

தமிழில் தோன்றிய நூல்களில் எல்லோரலும், எல்லாக் காலங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தகுதியுடைய நூல் திருக்குறள் எனலாம். தனிமனிதன், சமுதாய மனிதன், அரசியல் மனிதன் என்ற பல்வேறு படிநிலைகளில், பல்வகைப் பொறுப்புக்களையும் மேற்கொண்டிருக்கும் மாந்தர்க்கு நெறிமுறைகளையும், ஒழுங்குகளையும் வரையறுத்து விளங்கியவர் திருவள்ளுவர்.

எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்

என்கிறது திருவள்ளுவ மாலை.

வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று பாரதி பாடியுள்ளார். உலகில் மதங்கள் தோன்றிய என்று காலத்திலிருந்தே, ஒன்றொடொன்று போராடும் மதங்கள் எல்லாம் ஒருசேர ஏற்கும் பொதுமறை மாத்திரமல்லாது, ஒருமனதாகப் பாராட்டும் ஒவ்வொன்றும் தத்தமது உரிமை கொண்டாடும் ஒரே நூல் திருக்குறளே.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## ஆட்சி

அரசு என்னும் நிறுவனம் ஆட்சி என்னும் செயலியால் தான் இயங்குகிறது. ஆட்சி திறம்பட செயல்படாமல் போனால் அரச செயல் இழந்து விடும்.

“ஒரு சமூகத்தில் ஒருவனோ அல்லது ஒரு ஸ்தாபனமோ கட்டளையிட அக்கட்டளைக்கு அடங்கி அச்சமூகத்தைச் சார்ந்த மற்றவர்கள் நடந்து வந்தால் அந்த மனிதனை, அல்லது ஸ்தாபனத்தை அராசாங்கம் என்று சொல்வார்கள் அராசாங்கம் இல்லாத சமூகம் கிடையாது. சமூகமும் அரசாங்கமில்லாமல் நிலைக்க முடியாது.

[தமிழ்க் கலைக் களஞ்சியம் தொகுதி ஒன்று ப.153 ]

வள்ளுவர் பொருட்பாலில் அரசியல் என்ற இயலில் 25 அதிகாரங்களை வைத்துள்ளார். இவை தவிர அமைச்சியல் என்ற இயலில் 10 அதிகாரங்களையும், அரணியலில் 2 அதிகாரங்களையும், கூழியலில் ஒரு அதிகாரத்தையும், படையியலில் 2 அதிகாரங்களையும், நட்பியலில் 17 அதிகாரங்களையும், குடியியலில் 13 அதிகாரங்களையும்

நமக்கு அளித்துள்ளார். ஆக மொத்தம் 700 குறட்பாக்களில் பெருமளவில் அரசியற் கொள்கைகளை விவரித்துள்ளார்.

வள்ளுவர் எவ்வகையான ஆட்சி நல்லது என்று ஆராயவில்லை அரசின் அங்கங்கள் யாவை? அரசியலமைப்பு எப்படி இருக்க வேண்டும் ? ஆட்சி எவ்வாறு செயற்பட வேண்டும்? நல்லாட்சியின் கூறுகள் யாவை? இவற்றைப் பற்றி தம் சிந்தனையை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

**அரசின் அங்கங்கள்**

"படைகுடிகூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" [ கு - 381 ]

இவற்றில் குடி என்பது குடிகள், கூழ் (பொருள்) அரண் இரண்டும் ஆள் நிலத்தின் பகுதிகள், படை, அமைச்சு, நட்பு என்பன அரசியலின் பகுதிகள் என்பார் வள்ளுவர்.

அரசனைத்தாங்கி நடத்தும், அரசனுக்குப் படை, குடி, கூழ் அமைச்சு, நட்பு, அரண், கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், மாலை, முடி, கொடை, அளி, செங்கோல், மானம், குடியோம்பல் ஆகியவை உடைமைகளாம்.

" படையும் கொடியும் குடையும் முரசும்
நடை நவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய
(தொல் – 1571)

என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

**அரசாள்வருக்கான தகுதிகளும் பண்புகளும்**

வள்ளுவர் இறைமாட்சி என்ற அதிகாரத்தில் அரசாள்பவருக்கு வேண்டிய தகுதிகளையும், பண்புகளையும் விவரிக்கிறார். இந்த தகுதிகளும், பண்புகளும் தற்போதுள்ள அமைச்சரவையில் உள்ள ஒவ்வொரு அமைச்சருக்கும் ஓரளவிற்காவது இருக்க வேண்டியவையே. தகுதிகளும், பண்புகளும் பின்வருமாறு

அஞ்சாமை ஈகை அறிவு வாக்கும். (குறள் – 382)
தூங்காமை கல்வி, துணிவு (கு-383)
காட்சிக்கு எளிமை, கடுஞ்சொல் கூறாமை (கு-384)
பொறை உடைமை (கு-389)
அருள் செங்கோல் முறை (கு-390)
பொச்சாவாமை (அதிகாரம் – 54)
கண்ணோட்டம் (அதிகாரம் – 58)
ஊக்கம் உடைமை (அதிகாரம் – 40)
மடியின்மை (அதிகாரம் – 41)
ஆள்வினையுடைமை (அதிகாரம் – 62)

இடுக்கன் அழியாமை (அதிகாரம் – 63)
அறிவு அற்றம் காக்கும் கருவி (கு - 421)

மேலே சொன்ன பண்புகளும் தகுதிகளும் இல்லாத சிலர் ஆட்சியைக் கைப்பற்றினால் குடிமக்கள் துன்புறுவர் என்பது வெளிப்படை. கொடுங்கோல் ஆட்சியில் வழிப்பறிக் கொள்ளை போன்று வரி வசூலிக்கப்படும். ( குறள் – 552 ). இயற்கை சக்தியினால் இழப்பு நேரும் நிலையில் கல்வி அறிவு இல்லாதவர் ஆட்சியில் அமர்ந்திருந்தால் விருமுன்காவாது மக்களைத்துன்பத்துக்கு ஆளாக்குவர் ( குறள் – 427, 429) இவற்றையெல்லாம் சிந்தித்தால் வள்ளுவர் சொல்லிய தகுதிகளும் பண்புகளும் அவசியம் என்பது நமக்கு விளங்கும்.

**தலைமைப் பண்புகள்**

தலைமைப் இயல்பாகவே நடுநிலைமையுடன் செயல்படுவார். உள்ளத்திலும், சொல்லிலும், செயலிலும், நடுவுநிலைமை கடைபிடிப்பார். தகாத செயல் செய்ய நாணுவார். உணவு, உடை மற்றவையாவும், எல்லோருக்கும் பொது சிறந்த மனிதரிடம் காணப்படுவது தகாதவற்றைச் செய்ய நாணம்.

இற்பிறந்தார் கண் அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு - ( கு - 951 )

கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற - ( கு - 1011 )

ஊண்உடை எச்சம் உயிர்க்கு எல்லாம் வேறுஅல்ல
நாண் உடைமை மாந்தர் சிறப்பு - ( கு - 1012 )

வாழ்க்கையில் வாழ்வும் வறுமையும் மாறி மாறி வரலாம். வறுமை வரும்போது உயர்வு வேண்டும். பொருள் சேரும்போதும் உயர்பதவிகள் வரும்போதும் பணிவு தேவை.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு (கு - 943)

ஆட்சி பொறுப்பில் இருப்பவர்களுக்கு ஒழுக்கம் எப்போதும் மேன்மை தரும். யார், யார் தம் பணியை ஒழுக்கத்துடன் செய்கிறார்களோ அவர்களுக்குப் பதவி உயர்வு வருவது திண்ணம். ஒரு கால கட்டத்தில் நல்லபணி செய்பவருக்கு உரிய பாராட்டும் பதவியும் கிடைக்கவில்லை என்றாலும் பிரிதோர் காலத்தில் அவரது பணியின் சிறப்பைக் கண்டு அவருக்கு உரியவை

அளிக்கப்படும். மேலும், உயர்பதவி வகிப்பவரிடம் ஒழுங்கு இல்லை என்றால் அவர் குடிப்பிறப்புக் குறித்து ஐயம் தோன்றும்.

"ஒழுக்கத்தின் எய்துவார் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி" - ( கு - 137 )

**அரசியற் கோட்பாடுகள்**

அரசின் பொருளதாரக் கொள்கையை வள்ளுவர் சுருக்கமாகத் தனது 385-வது குறளில் கூறுகிறார்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு " - ( கு - 385 )

**வள்ளுவர் நமக்களிக்கும் கோட்பாடு**

வருவாய்க்கான வழிகளை உண்டாக்குவதும், அவ்வழியிலே பொருள் சேர்ப்பதும், சேர்த்தவற்றைக் காப்பதும், காத்தனவற்றை திட்டமிட்டுப் பயன்படுத்துவதும் அரசின் கடமை என்று அரசு எவ்வாறெல்லாம் இயங்க வேண்டுமென்று வரிசையாக சொல்லிக் கொண்டே வருகிறார்.

**அரசு செயற்பாட்டு விதிகள்**

அரசு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றி வள்ளுவர் தெரிந்து, செயல்வகை, வலியறிதல், காலமறிதல், இடனறிதல் என்ற நான்கு அதிகாரங்களில் கூறுகிறார்.

" எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு " - ( கு - 467 )

ஒருசெயலை செய்யப் புகுமுன் சிந்திக்க வேண்டும். ஒரு செயலில் வரும் அழிவையும் அதன் பின் ஆவதையும், அதன் விளைவாக வரும் ஊதியத்தையும் தன்னுடன் சேர்ந்த பெரியோருடன் கலந்து சீர்தூக்கிச் செயலைச் செய்ய வேண்டும். மேலும் ஒரு காரியத்தை தொடங்குமுன் .இது சிறியது தானே என்று பலவற்றைத் தொடங்கினால் அவை முடிக்க முடியாமல் போகலாம் என்பதை

"பீலிபெய் சாகாடும் அச்சு இறும் அப் பண்டம்
சால மிகுத்துப் பெயின் " (கு – 475)

என்று விளக்குகிறார்.

**நிறைவுரை**

ஆட்சி செய்வோர் அல்லது ஒரு அரசு பெரியோரை துணையாகக் கொள்ள வேண்டும். குற்றம் செய்யாமல் ஆட்சி செலுத்துவதைக் குறிக்கோளாக் கொள்ள வேண்டும்.

செங்கோன்மையை கடைபிடிக்க வேண்டும். அதுபோலவே வலியறிந்து, காலமறிந்து, இடமறிந்து செயலைச் செய்யும்வகை. தவறு செய்பவர்களைத் தண்டிக்கும் முறை, நாட்டு நடப்புகளை விரைந்து அறியும் முறை, போன்றவற்றுடன் அரசனானவன் கல்வி, கேள்வி முதல் பல்வேறு தகுதிகள் பெற்றிருப்பின்

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்"

என்பது முறை செய்தலும் காத்தலுமே, மன்னனின் தலையாய கடமைகள் அதனால் அவன் இதனையே தனக்குத் துணையாகக் கொள்ள விரும்புகிறான் என்று செயல்பட்டாலே நாட்டு மக்களைக் விரும்புகிறான் என்று செயல்பட்டாலே நாட்டு மக்களைக் காப்பாற்றலாம் என வள்ளுவ பெருந்தகை எடுத்துரைக்கின்றார்.

**துணைநூற்பட்டியல்**


இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.

மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை

விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.

திருவாசகம் விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.

சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு

தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.

புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), சென்னை, 1971.

தேவநேயப் பாவாணர், ஞா. திருக்குறள் – தமிழ் மரபுரை, ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பழமொழி நானூறு உணர்த்தும் விழுமியங்கள்

# Values in Palamozhi Nanuru

ஏ. பால்பிரபு சாந்தராஜ் / Y. Paul Prabhu Santharaj[1]
[1]Associate Professor, Chennai Christian College
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச்சாரம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் பழமொழி நானூறில் காணக்கிடக்கும் விழிமியங்களை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் கொடை, இன்சொல், ஊரோடு ஒத்து வாழ்தல், புறங்கூறாமை, பெரியோரின் பெருமை ஆகிய தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வின் வழி, பழமொழி நானூறில் காணப்படும் விழுமியங்களைஅறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு பழமொழி நானூறு உணர்த்தும் விழுமியங்களை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.
**கருச்சொற்கள்:** பழமொழி நானூறு, உணர்த்தும், விழுமியங்கள்

**Abstract**

The major objective of the research is to explore the values in the Palamozhi Nanuru text. This research is designed in a qualitative approach. The library work is used for this study. In this study, the topics of gifts, insolence, living in harmony with the village, unspoken ness and pride of elders have been investigated. This study is useful in teaching the younger generation about the values in the Palamozhi Nanuru text. The research claims to be the first such attempt to do a study regarding the values in the Palamozhi Nanuru text.
**Keywords:** Classical literature, Tamils, Tamil education

**முன்னுரை**

உலகில் கோடிக்கணக்கான மனிதர்கள், ஆயிரக்கணக்கான மொழிகள், ஆயிரக்கணக்கான இனங்கள் இருந்தாலும்; இந்த மானுடம் பண்பாடுமிக்கதாய் பாதுகாக்கப்பட்டு வருவதற்குக் காரணம் தனிமனித விழுமியங்களும், சமுதாய விழுமியங்களும் இங்கு பேணப்படுவதால்தான்.

விழுமியங்கள்

விழுமியம் என்பது பொதுமக்கள் வாழ்ந்து அறிந்து அடுத்த தலைமுறைக்குக் கொடுத்துச் செல்லும் நெறிகள் குறித்த நம்பிக்கைகளாகும். விழுமியம் என்ற சொல்லுக்கான பொருளாக மதிப்பு எனப் பொதுவாகக் குறிப்பிடலாம். எனினும், மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துகள் என்பவற்றின் உருவாக்கத்தில் அமைந்ததே விழுமியம். உலகம் முழுக்க அறநெறிகள், நீதிகள், ஆசாரங்கள் பல உள்ளன. அவை அனைத்தையும் ஒட்டு மொத்தமாகச் சுட்டக் கூடிய சொல்லே விழுமியம்.

தற்கால மனிதர்கள் வாழ்க்கையில் தேவைகளை அடைந்துவிட்டால் நிறைவு ஏற்பட்டுவிடும் என்று நினைக்கின்றனர். அதற்காக இரவுபகல் பாராது நீதி நியாயம் பாராது உழைக்கின்றனர். இலக்கை அடைவதே இன்றியமையாதது, அதை அடையும் வழிமுறைகள் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை என நம்புகின்றனர். ஆனால் மனித வாழ்வின் சிறப்புக்கும் உயர்வுக்கும் உறுதுணையாக மனிதனை மனிதனாக வாழ்விப்பவை மனிதர்களுக்குப் பெறுமதிப்பைத் தரக்கூடிய பண்புகள், குணவியல்புகள், நடத்தைகள், மனித விழுமியங்கள் எனலாம். மனித வாழ்க்கையை மேம்பாடடையச் செய்பவை மனித விழுமியங்கள். அவை மனித குலத்துக்கே உரிமையானவை. 'மரியாதை செய்தல், சுயக்கட்டுப்பாடு, தன்னம்பிக்கை, பொறுப்புக்கூறல், ஊக்கப்படுத்தல், இரக்கம், அன்பு, பொறுமை போன்ற பண்புகள் மனிதநேய விழுமியங்களாகும்'. விழுமியங்கள் மனித குலத்தின் மதிப்புமிக்க அரும்பெரும் சொத்து. அவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு காத்துவரும் பெட்டகங்களாக உள்ள சிலவற்றுள் முதன்மையானவை பழமொழிகளாகும்.

பழமொழி

பழமொழி என்ற சொல்லே இதன் பழமையை உணர்த்தும். பழமொழியின் தோற்றத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல இயாலாது. மனிதன் என்று பேசக் கற்றுக் கொண்டானோ அன்றே பழமொழிகள் புழங்கத் தொடங்கியிருக்கும். "பழமொழிகள் பொதுமக்கள் அனுபவத்தின் பதிவு. அனுபவம் என்பது கல்வியால் வருவதன்று அது காலத்தால் வருவது. தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் பழமொழி பற்றிப் பேசுவதிலிருந்தே பழமொழி இலக்கியத்தின் தொன்மை விளங்கும். பழமொழிகள் புலவர்களால் புனையப்படுபவையல்ல அவை மக்கள் மன்றத்தில் மலர்பவை. தொல்காப்பியம் பழமொழியின் இலக்கணத்தைப் இவ்வாறு பதிவு செய்துள்ளது. தொல்காப்பியத்தில் 'முதுமொழி' என்ற பெயரால் இது சுட்டப்பட்டுள்ளது. பழமொழி என்பது நுட்பம், சுருக்கம், கூரிய அறிவு, ஒழுங்கு, எளிமை, குறித்த பொருளை அழுத்தமாகச் சுட்டும் இறுக்கம் என்பவை அவற்றின் தன்மைகள் என்பது தொல்காப்பியர் கருத்து.

“நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றும்
குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்
ஏது நுதலிய முதுமொழி” (தொல்.பொரு.செய். 166)

அனுபவம் வாய்ந்த பெரியவர்களால் ஒவ்வொரு அனுபவத்தின் வாயிலாகவும் அடிக்கடி உபயோகப்படுத்தப்படும் சொல் வழக்குகள் பழமொழிகள் என்று பெயர் பெற்றன. பழமொழிகளால், தமிழ் மக்களின் சமூக வாழ்க்கை, அரசியல் நீதிகள், கல்வி, வணிகம் போன்றவற்றை அறிய முடிகின்றது. “ஒரு நாட்டின் உண்மையான வாழ்க்கை நெறியை, பண்பாட்டினை, நாகரிகத்தினை, பழக்கவழக்கங்களை, நம்பிக்கைகளை, சமுதாயச் சிக்கல்களை, சிறப்புகளை, அறிவின் பெருமையினை எனப் பலவற்றையும் அறுதியிடும் கருவிகளில் முன்னிற்பன பழமொழிகள்.”3 வாய்மொழி இலக்கியங்களாக இருக்கும் இவைகளைத் தமிழில் முதன்முதலில் பதிவு செய்திருக்கும் நூல் பழமொழி நானூறு.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகச் சேர்க்கப் பெற்றுள்ள பழமொழி நானூறு கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அறிஞர்களால் குறிப்பிடப் பெற்றுள்ளது. பாண்டியநாட்டில் முன்றுறை என்னும் பகுதியைச் சேர்ந்த அரச மரபினரால் இயற்றப் பெற்றது இந்நூல். நானூறு நானூறு செய்யுள்களாகத் தொகுத்தல் என்னது அக்காலத்தில் மரபாக இருந்தது. புறநானூறு, அகநானூறு, நற்றிணை நானூறு, குறுந்தொகை நானூறு என இம்மரபைப் பின்பற்றி நானூறு பழமொழிகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

அக்காலத்தில் மக்களிடையே பெறுமளவில் வழங்கி வந்ததாகக் கருதப்படும் பழமொழிகளில் நானூறு பழமொழிகளைத் தேர்ந்தெடுத்து முதலிரண்டு அடிகளில் தான் சொல்லக் கருதுகின்ற உண்மையை அமைத்தும் செய்யுளின் இறுதியில் அதற்கேற்றதும் அவ்வுண்மையை வலியுறுத்துவதுமான பழமொழியை அமைத்தும் செய்யுள்களை அமைத்துள்ளார் ஆசிரியர். இது 1874 ஆம் ஆண்டு சுப்புராயச் செட்டியாரால் முதன் முதலில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது. ஆனால் அதில் பத்துப் பாடல்கள் குறைவாகவேயிருந்தது. இக் குறையைப் போக்கும் வகையில் 1904 ஆம் ஆண்டில் ஆறுமுக நயினார் நானூறு பாடல்களையும் சேர்த்து அச்சிட்டு வெளிட்டார். இதற்குப் பின் தற்காலம் வரை பல்வேறு வகைகளில் பழமொழிகள் தொகுத்து வெளியிடப் பெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. எல்லா காலத்திற்கும் பழமொழிகளின் தேவை இருந்து கொண்டேயிருக்கிறது.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு**

ஆய்வுத் தரவுகள் கொடை, இன்சொல், ஊரோடு ஒத்து வாழ்தல், புறங்கூறாமை, பெரியோரின் பெருமை ஆகிய தலைப்புகளில் பகுப்பாயப்பட்டுள்ளன.

பழமொழிகளில் விழுமியங்கள்

சங்க இலக்கியங்கள் தொல்காப்பியம் போன்ற மிகப் பழங்கால இலக்கிய இலக்கண நூல்களின் காலங்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பழமொழிகள் மக்களிடம் புழக்கத்திலிருந்தன. இவற்றை முதன்முதலாக பழமொழி நானூறு என்னும் நூல் பதிந்து வைத்துள்ளது. இதில் உள்ள நானூறு செய்யுள்களிலும் கொடை, இன்சொல், நட்பு, ஒழுக்கம், பெரியோரின் பெருமை, மனவலிமை, தந்தையின் கடமை, முயற்சியின் உயர்வு, அறிவின் பெருமை, புலனடக்கம், போலித்தவம், பகைகளைதல் என இன்னும் பல்வேறு பொருண்மைகள் குறித்த பழமொழிகள் தொகுக்கப்பெற்றுள்ளன. கட்டுரையின் விரிவஞ்சி சில மட்டுமே இங்கு விளக்கப் பெற்றுள்ளன.

**கொடை**

கடந்த கால மானுட வாழ்வியலை நோக்கும்போது இல்லை என்று நின்றவருக்கு இல்லை எனாது கொடுக்கும் கொடைத்தன்மை பெரிதும் போற்றப் பெற்றுள்ளது. சங்க இலக்கியம் தொடங்கி தற்கால இலக்கியம் வரை இதன் பதிவைக் காணலாம். பழமொழி நானூறும் இதனைப் பதிவு செய்யத் தவறவில்லை.

புறஞ்செய்யச் செல்வம் பெருகும் அறஞ்செய்ய
அல்லவை நீங்கி விடும்.

இங்கு அறம் என்பது கொடை கொடுத்தலைக் குறிக்கிறது. அறம் செய்ய அல்லவை நீங்கி விடும். தருமம் செய்வதனால் நாம் செய்த பழைய பாவங்கள் நீங்கிவிடும் என்கிறது பழமொழி.

அடுத்தேறல் ஐம்பாலாய் யாவர்க்கே யாயினும்
கொடுத்தேழை யாயினார் இல்.

நம்மிடம் பொருள் இருப்பதே பிறருக்குக் கொடுப்பதற்காகத்தான். கொடுப்பதனால் எவரும் ஏழையாவது இல்லை. எனக் கொடையின் இன்றியமையாமை உணர்த்தப் பெறுகிறது.

**இன்சொல்**

இன்சொல் பேசுவது எவ்விதத் துன்பமும் தராது. புன்சொல் துன்பம் தரும். எனவே எப்போதும் யாரிடத்தும் இன்சொல்லே பேசவேண்டும் என்கிறது பழமொழி.

புன்சொல் இடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை
இன்சொல் இடர்ப்படுப்ப தில்.

ஒருவருக்கு உடுக்க உடை, நோய்க்கு மருந்து, இருக்க இடம், உண்ண உணவு என எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு அவரோடு இன்சொல் பேசாதது, எருமையைக் கொன்று விருந்து வைப்பவன் மசாலைப் பொருளுக்குக் கஞ்சத்தனம் செய்வது போன்றது.

உடுக்கை மருந்து உறையுள் உண்டியோடு இன்ன
கொடுத்துக் குறைதீர்த்தல் ஆற்றி-விடுத்தின்சொல்
ஈயாமை என்ப எருமை எறிந்தொருவர்
காயக்கு லோபிக்கும் ஆறு.

மேற் சொல்லப் பெற்றவை அனைத்தும் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை அவற்றினும் இன்சொல்லே மிகவும் இன்றியமையாதது என இன்சொல் பேசுவதன் தேவை உணர்த்தப் பெறுகின்றது.

ஊரோடு ஒத்து வாழ்தல்

எவ்விடத்திலும் சான்றோர் சொன்ன அறிவுரைகளை மனங்கொண்டு செய்யத் தக்கனவற்றை மட்டுமே செய்தல் வேண்டும். ஆனாலும் மக்கள் விரும்புவாரெனின் மக்களுக்காக அவர்கள் விரும்புவதைச் செய்யலாம்.

சனங்கள் உவப்பன செய்யாவும் செய்க
இனங்கழு வேற்றினார் இல்.

தான் ஆராய்ந்து அறிந்து கண்ட நுட்பத்தைப் பலகாலும் சிந்தித்து நடக்க வேண்டும். அதே நேரம் ஊரினர் நடக்கும் பாதையில் அது சரியா இது முறையா என எதுவும் கேளாமல் பின் தொடர வேண்டும்.

நாடுக தான்கண்ட நுட்பத்தைக் கேளாதே
ஓடுக ஊரோடு மாறு.

ஊரோடு ஒத்து வாழ வேண்டும் என்ற உண்மை உரைக்கப் பெற்றுள்ளது.

**புறங்கூறாமை**

ஒருவரோடு சேர்ந்திருந்து அவரால் நிறைந்த பயன் பெற்று பின் அவரைப் பற்றிப் புறங்கூறித்திரிவது உண்டவிட்டிற்குத் தீயிடுவது போன்றது.

விண்டவரோ டோன்றிப் புறனுரைப்பின் அஃதாலவ்
உண்டவில் தீயிடு மாறு.

பிறரைப் பற்றிப் பொல்லாங்கு பேசிவிட்டு மறைந்து திரியும் பேதைகள் தம் சொல்லாலேயே தமக்குத் துன்பம் விளைவித்துக் கொள்வர்.

மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயால் கெடும்.

புறங்கூறுதல் இழிவான செயல் மட்டுமின்றி தமக்கே துன்பம் தருவது என்று பழமொழி கூறுகிறது.

## பெரியோரின் பெருமை

அறிவாலும் ஆற்றலாலும் செல்வத்தாலும் உயர்ந்தவர்களை பழித்தல் தகாதது. பெரியோர் என்றும் போற்றுதலுக்குரியோர் என்பதைப் பழமொழி தெளிவாக விளக்குகிறது. நெடுங்காலம் தன்னோடு நெருங்கியிருந்தவர் தீய செயல்களில் ஈடுபடுவதைப் பெரியோர் கண்டால் உள்ளம் நடுக்குற்றுப் பெரிதும் வருந்துவர். அவ்வாறு பெரியோர் வருந்தினால் தீயன செய்தாரது குடும்பம் அழிந்துவிடும் என்று பழமொழி கூறுகிறது.

நெடுங்காலம் வந்தார் நெறியின்மை கண்டு
நடுங்கிப் பெரிதும் நலிவார் பெரியார்
அடும்பார் அணிகானற் சேர்ப்ப கெடுமே
கொடும்பாடு உடையான் குடி.

சிறியவர்கள் பெரியவர்களின் தகுதியை அறியாமல் செருக்கினால் தங்களுக்கு நிகராகக் கொண்டு தகாத செற்கள் பேசுவது திங்களை நாய் குரைத்து நிற்பது போன்றது.

தங்கள் நேர்வைத்துத் தகவல்லது கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று.

எனப் பெரியோரை மதித்து நடத்தலின் இன்றியமையாமை பழமொழியில் பதிவு செய்யப் பெற்றுள்ளது. மேலும் வாழ்க்கையின் பல்வேறு ஒழுகலாறுகளைப் பழமொழி நானூறு தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

## நிறைவுரை

மனித வாழ்வியலின் அனுபவத்திலிருந்து முகிழ்ந்தவைதான் பழமொழிகள். பண்பாட்டின் உச்சமான ஒழுகலாறுகளை அடுத்தத் தலைமுறையினருக்குக் கடத்தக்கூடியவை. பண்பாட்டில் பழமொழிகள் இருக்கின்றன. பழமொழியில் பண்பாடு தெரிகிறது. பழமொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையே இடைவெளி இல்லாத ஒன்று கலந்த தன்மை உள்ளது. அதனாலே தான் ஒவ்வொரு பழமொழியும் பண்பாட்டோடு இயைந்து, இசைந்து, இனிது, ஒசிந்து நடக்கிறது. ஒரு பண்பாட்டின் வடிகாலை ஆக்கும் கூறுக்கான அடித்தளம் பழமொழிகளில் அமைந்துள்ளது. இதை எண்ணுங்கால் பன்நெடுங்காலமாகவே மனிதப் பண்பாட்டு விழுமியங்களின் மாத்ததிரைகளாகவே பழமொழிகள் செயல்பட்டு வருகின்றன. மனித இனத்தை நேர்படுத்தி நெறிப்படுத்தும் விழுமியங்களைப் பழமொழிகள் உள்ளடக்கியிருப்பதால் அவற்றை விழுமியங்களை அடக்கி வைத்திருக்கும் விதைகள் எனலாம்.

## துணைநூற்பட்டியல்

கலாநிதி திருமதி அனுஷ்யா சத்தியசீலன், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை – 2016, ப.07.
சந்திரகாந்தன், க. பழமொழிகள் காட்டும் பண்பாட்டுக் கூறுகள், ப.13.
பொன்னுசாமி, மு. பழமொழியும் பண்பாடும், ப. 63.
விஜயலட்சுமி, வா.செ. குழந்தைசாமி, “கிராமத்துதுப் பழமொழிகள்,” என்னும் நூலின் அணிந்துரையில், ப.03.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# விடுதலைக்கு முந்திய சிங்கப்பூர்த் தமிழ் மரபுகவிதைகளில் பல்துறைப்பார்வை

# A Multidisciplinary View of Pre-Independence Singapore Tamil Classical Poetry

எம். எஸ். ஸ்ரீலக்ஷ்மி/ M. S. Shri Lakshmi[1]
[1] முனைவர், முன்னாள் விரிவுரையாளர், மலாயாப் பல்கலைக்கழகம்
Corresponding Email: lakshmishri00@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதை வரலாற்றின் தொடக்கமே மரபுகவிதை வடிவில்தான் அமைகிறது என்று உறுதிபடக் கூறலாம். இக்கவிதை மரபில் நாட்டார் மரபு, இலக்கிய மரபு என்னும் இருபெரு வழக்குகள் இடம்பெறுகின்றன. இன்னும் விளக்கமாகச் சொல்வதாயின் விடுதலைக்கு முந்திய சிங்கப்பூர்க் கவிதைப்படைப்புகளில் ஏட்டில் எழுதா வாய்மொழி மரபும் , ஏட்டில் எழுதும் யாப்பியல் மரபும் அல்லது யாப்பிலக்கண மரபும் அமைந்துள்ளன. முத்துக்கருப்பன் செட்டியார், சி.ந. சதாசிவப் பண்டிதர், ந.பழனிவேலு ஆகிய மூன்று பாவலர்களின் படைப்புகள் ஆய்வுக்கு ஏடுத்துக் கொள்ளப்படுகின்றன. இப்படைப்புகளில் பாவலர்களின் பல்துறைப் பார்வைகள் பளிச்சிடுகின்றன. சமூகவியல் பார்வை, அரசியல் பார்வை,அறவியல் பார்வை , கல்வியியல் பார்வை , வரலாற்றுப் பார்வை முதலிய பல்வேறு அணுகுமுறைகளை இப்படைப்புகளில் பொருத்திப்பார்க்க முடியும். மேலும் ஒப்பியல் அணுகுமுறையின் அடிப்படையில் படைப்பாளிகளையும் அவர்தம் படைப்புகளையும் ஒப்பிட்டும் இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

**கருச்சொற்கள்:** விடுதலைக்கு முந்தைய, சிங்கப்பூர், தமிழ் மரபு கவிதை, பல்துறைப்பார்வை

**Abstract**

This research paper confirms that the history of Tamil poem in Singapore begins with Traditional form of poetry itself. This poetical tradition consists of two major traditions namely folk tradition and prosodic tradition. This paper analyses the poetical works of the Pioneer poet Muthukaruppan Chettiar, SriLankan poet C.N. Sadhasiva Pandit and N. Pazhanivelu. This paper also applies various perspectives such as sociological, political, ethical, educational and historical perspective with the poetical works of the above. Poets. Comparative study had been conducted among the poetical works of the three poets.

**Keywords:** Pre-Independence, Singapore, Tamil poem, Multidisciplinary

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வடிவங்களுள் தொன்மை மிக்க வடிவம் கவிதை ஆகும். இக்கவிதை வடிவமே சிங்கைத் தமிழ் இலக்கியத்துள்ளும் காலத்தால் மூத்த தொன்மை மிக்க வடிவமாகத் திகழ்கிறது. குறிப்பாகச் சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதை வரலாற்றின் தொடக்கமே மரபுகவிதை வடிவில்தான் அமைகிறது என்று உறுதிபடக் கூறலாம். இக்கவிதை மரபில் நாட்டார் மரபு, இலக்கிய மரபு என்னும் இருபெரு வழக்குகள் இடம்பெறுகின்றன. இன்னும் விளக்கமாகச் சொல்வதாயின் விடுதலைக்கு முந்திய சிங்கப்பூர்க் கவிதைப்படைப்புகளில் ஏட்டில் எழுதா வாய்மொழி மரபும், ஏட்டில் எழுதும் யாப்பியல் மரபும் அல்லது யாப்பிலக்கண மரபும் அமைந்துள்ளன.

**ஆய்வின் நிலைப்பாடு**

முத்துக்கருப்பன் செட்டியார், சி.ந. சதாசிவப் பண்டிதர், ந.பழனிவேலு ஆகிய மூன்று பாவலர்களின் படைப்புகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இப்படைப்புகளில் பாவலர்களின் பல்துறைப் பார்வைகள் பளிச்சிடுகின்றன. சமூகவியல் பார்வை, அரசியல் பார்வை, அறவியல் பார்வை, கல்வியியல் பார்வை, வரலாற்றுப் பார்வை முதலிய பல்வேறு அணுகுமுறைகளை இப்படைப்புகளில் பொருத்திப்பார்க்க முடியும். மேலும் ஒப்பியல் அணுகுமுறையின் அடிப்படையில் படைப்பாளிகளையும் அவர்தம் படைப்புகளையும் ஒப்பிட்டும் இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

**சிங்கையின் மரபுகவிதை முன்னோடி**

“தற்போது கிடைக்கின்ற ஆதாரங்களின்படி, முத்துக்கருப்பன் செட்டியார் இயற்றியுள்ள ’தண்ணிமலை வடிவேலர் பேரில் ஆசிரிய விருத்தம்’ என்னும் நூல் மூத்த நூல் என்றும், இவரே மலாயா - சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்திற்குப் பிள்ளையார் சுழிபோட்டவர் எனக் கருதலாம்” என்றும் கோட்டி திருமுருகானந்தம் ( சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதை வரலாறு, ப- ) குறிப்பிடுகிறார். இந்நூலில் ‘உலகநாத சுவாமிகள் பேரில் ஆசிரிய விருத்தம்’, ‘நெல்லையம்பதி உலகநாயகி அம்மன் பேரில் ஆசிரியவிருத்தம்’, ‘குன்றாக்குடி சுப்பிரமணியர் பேரில் ஆசிரிய விருத்தம்’, ‘வங்காளம் தெண்டாயுதபாணி பேரில் ஆசிரிய விருத்தம்’ ஆகிய சிறுநூல்களும் இணைக்கப்பட்டுள்ளன. முத்துக்கருப்பன் செட்டியார் பாடிய இந்நூல் 1863 இல் வெளிவந்துள்ளது. இந்நூலின் மூலப்பிரதி சென்னைத் தரமணியிலுள்ள ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் பார்வைக்குக் கிடைக்கிறது. இந்நூல் அக்காலத்தில் பதினாறு பதிப்புகளைக் கண்டது. இக்கட்டுரையாளருக்கு 1887 ஆம் ஆண்டு வெளிவந்த பிரதி பார்வைக்குக் கிடைத்தது.

**மரபுசால் வருணனைத் திறன்**

நகரத்தார் மரபில் பிறந்த முத்துக்கருப்பன் செட்டியார் தம் குலத்துக்கே உரிய ஆழமான இறைபக்தியுடன் முதல் பக்திப்பனுவலைப் பாடியுள்ளார்.இந்நூல் குலமரபு, செய்யுள் மரபு, யாப்பிலக்கண மரபு என்னும் மரபுகளின் சங்கமமாக விளங்குகிறது. மரபுக்கவிதைகளின் அழகியல்கூறுகளில் வருணனைத் திறன் முக்கிய இடம்பெறுவதாகும். வருணனையில் கேசாதிபாதம் , பாதாதிகேசம் என்னும் இருவகை மரபு உண்டு. ஆழமான

இலக்கணப்புலமை வாய்ந்த முத்துக்கருப்பன் செட்டியார் தண்ணீர்மலை வடிவேலனை வண்ணத்தமிழால் கேசாதிபாதமாக வருணிக்கிறார். நூலைத் தொடங்கும்போதே

"சீரணியும் நவரத்ன மணிமகுட முடியுஞ் சிறந்த ஈராறு கரமும்
செய்யவெண்ணீறணியு நுதலும் வார்குழைகளுஞ் செம்பவளமொத்த
(வாயும்
பூரணச்சந்திரோதயம்போல் இலங்கியருள் பொழிதிருமுகங்களாறும்
புட்குலஞ்சுழலும்வடிவேலும்முந்நூலும்பொருந்தும்விழி பன்னிரண்டும்
வாரணக்கொடியும் மலரடியும் கடப்பமலர் மாலையும் மிகத்துலங்க
மயிலேறி வள்ளிதெய்வானையுடன் வருகுவாய் மதகஜமுகன்
(பின்னவா "

என்று வருணிப்பதுடன் நூலின் இடையே தம் பக்திநெறியையும், சைவசித்தாந்தப் புலமையையும் பதிவு செய்துள்ளார்.

**பண்டிதரின் பாண்டித்தியம்**

சி.ந. சதாசிவப்பண்டிதர் சிங்கைத்தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கிய இடம் வகித்த யாழ்ப்பாணத் தமிழர் ஆவார். வண்ணை அந்தாதி, வண்ணைநகர் ஊஞ்சல்', 'சிங்கைநகர் அந்தாதி', சித்திரகவிகள்' ஆகிய நான்கு நூல்களைப் பாடியுள்ளார். இவை நான்கும் சிங்கை மகதூம் சாயபுவுக்குச் சொந்தமான தீனோதய எந்திர சாலையில் 1887 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டன. இவற்றுள் முதலிரு நூல்களும் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் உள்ள வண்ணார் பண்ணை என்னும் வண்ணைநகரைப் பற்றியவை. வண்ணை நகரில் எழுந்தருளியுள்ள காமாட்சி அம்மன் இவ்விரு நூல்களின் பாட்டுடைத்தலைவி.

**ஆசிரியர்பற்றிய தகவற் பார்வை**

அந்தாதி ,ஊஞ்சல் என்னும் இலக்கிய வகைமைகளில் பாடப்பட்ட இரு நூல்களின் வழி சதாசிவப் பண்டிதர்பற்றிய தகவல்களை அறிகிறோம். நவீனத் திறனாய்வு முறைகளில் ஒன்றாகிய புதுத்திறனாய்வில் நூலாசிரியர்பற்றிய தகவல்களை நூலின் வழி ஆய்வது உண்டு. அவ்வகையில் குடியேறிகள் தாங்கள் பிறந்துவளர்ந்த நாட்டை அவ்வளவு எளிதில் மறந்துவிட மாட்டார்கள் என்பதற்குக் குடியேறிகள் படைத்த நூல்களில் இடம்பெறும் அவர்களின் தாய்நாட்டைப்பற்றிய செய்திகளே நல்ல சான்றாகின்றன. பொருளாதார நிலைப்பாட்டுக்கு இந்நாடுகளில் வாழ்ந்தாலும் அவர்களின் நினைப்பு அல்லது நினைவுகள் எல்லாமே தாய்நாட்டைப்பற்றித்தான் இருந்தன என்பதற்கு வண்ணைநகர் காமாட்சி அம்மனப்பற்றிய அந்தாதியும் ஊஞ்சலுமே சான்றாகின்றன. இப்போக்கு வேரை இழந்துவிட விரும்பாத அவர்களின் மனத்தைக் காட்டுவதாக அமைகிறது.

சதாசிவப்பண்டிதர் தமிழ் இலக்கண இலக்கியங்கள், சைவசித்தாந்தம் ஆகியவற்றை நன்கு கற்றவர் என்பதும் வண்ணைநகர்க் காமாட்சி ஆலயத்தின் குடமுழுக்குப் பணியையும் குறைவறச் செய்தவர் என்பதும் வண்ணைநகர் அந்தாதி முதலான நான்கு நூல்களுக்கும் சிறப்புப்பாயிரம் வழங்கிய (சிதம்பரம் அப்பியாசமடத் தலைவராக விளங்கிய) ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமிகளின் வாக்கினால் அறியவருகின்றன.

“ஆசை யுடனே அணிமணி ஏற்றிக்
கும்பா பிஷேகம் குறைவறச் செய்து
கம்பா நதிவருங் கம்பனைக் குழைத்த
அன்னையைத் துதிக்கு மந்தா தியொன்றும்
பன்னு மூஞ்சல் பகரெச்ச சரீக்கையு
மெண்ணு பராக்கு மெழின்மங் களமு
நங்கை வள்ளி நாயகன் பேரில்
சிங்கையந் தாதியுஞ் சித்திர கவிகளும்
மங்கள மாக வரைந்தனன் யாரெனின்
இலக்கண விலக்கிய விருங்கட லுண்டு
கலக்கமிலாமற் கலையெலா முணர்ந்தோன்
சொற்பொருட் சாரன் துதிகொள் ஆசாரன்
தக்கசற் சங்கன் தமிழிற் பிர்சஅங்கண்
வண்ணை மாநகரில் வாழுந் திகழ் சி.ந.
திண்ணிய நற்சதா சிவபண் டிதனே “

சதாசிவப் பண்டிதர் கோயில் அதிகாரியாக வண்ணைநகரில் பணியாற்றியவர் என்ற செய்தி அகச்சான்றாய் வண்ணைநகர் அந்தாதியின் கீழ்காணும் பாடலில்,

“மாற்று பிறவிமயல் வண்ணைநகர்க் காமாட்சி
யாற்றன்மிகு கோயி லதிகாரி- தேற்றமுட
னாகமங்கள் பூசை யறிந்தவற்றைச் செய்பவனே
மோகமெலா முன்னே முனிந்து” (பாடல் எண் 40)

இடம்பெறுகிறது. ஈழத்தில் வாழ்ந்தபோது சதாசிவப் பண்டிதர் வண்ணைநகர் அந்தாதி, வண்ணைநகர் ஊஞ்சல், எச்சரிக்கை, பராக்கு ஆகியவற்றைப் பாடியிருக்கவேண்டும்; பின்னர்ச் சிங்கையில் பணி செய்தபோது மகதூம் சாயபுவின் பதிப்பகத்தின் மூலம் அவற்றை அச்சிட்டிருக்கவேண்டும் என்பதைச் சிறப்புப்பாயிரத்தின் வழி உய்த்துணரலாம். சிங்கையில் பணிசெய்தபோதுதான் சிங்கை நகர் அந்தாதியைப் பாடியிருக்கவேண்டும்.

**பண்டிதரின் அறவியல் பார்வை**

தெய்வத்தைப் போற்றிப் பரவும் இப்பக்திப்பனுவலில் சதாசிவப் பண்டிதர் அறக்கருத்துகளைப் பாடியுள்ளார். இவ்வுலகில் அறங்கள் முப்பத்திரண்டையும் நிலைநாட்டவே அன்னை காமாட்சி எழுந்தருளியுள்ளாள் என்பதை அறிந்துகொள்ளச் சொல்கிறார் பண்டிதர். ஈயாதார் வாழ்ந்தும் பயனில்லை என்று கூறி ஈதலறத்தை வலியுறுத்துகிறார்.

“ ஈயாத மக்களுக் கென்றும் பயனில்லையென்
றோயாம லெண்ணான் குயரறத்தைத் – தாயாகும்
வண்ணைநகர்க் காமாட்சி வையகத்திற் செய்தருள
வெண்ணிவந்தா லென்றே யறி “

“அழுக்காறு என ஒரு பாவி” என வள்ளுவரால் வருணிக்கப்படும் பொறாமைக்குணம் கொண்டவர்கள் நரகத்தையே அடைவர் என்றும் அந்த நரகத்திலிருந்து மீள வழியே இல்லை என்றும் பொறாமையால் ஏற்படும் விளைவைக் கூறுகிறார். அன்னை காமாட்சியின் அருள் பெறற்கரும்பேறாகக் கிடைக்கும்போது பாதகர்களும் மனம் மாறிப் பொறாமையை விட்டொழிப்பர் என அன்னையின் அருட்டிறத்தை நீதிக்கருத்தோடு இணைத்துப் பாடுவர்.

பொய் உரைப்பது கடியப்படவேண்டும் என்னும் கருத்துடைய பண்டிதர் அவ்வாறு பொய் சொல்பவர்களைப் பேதையர்கள் என்று குறிப்பிடுவது நினையத்தக்கது. பொய் கூறுவதன் விளைவுகளை அறியாதவர் என்பதால் பேதையர் எனக் குறிப்பது பொருந்தும். இவர்களுக்கு நரகமே கிடைக்கும் என்றும் “நரகின் கூறெலாம் யான் விளக்கல் கூடாது “ என்றும் ( பாடல் எண் 33) பாடுகிறார்.

இறைவழிபாட்டுக்கு இல்லறம் உகந்ததா? துறவறம் உகந்ததா ? எனக் குழம்பிடல் வேண்டாம்; இவை இரண்டுமே சிறந்தவைதாம். அன்னை காமாட்சியை வழிபடாமல் பல அறச்செயல்களைச் செய்தாலும் பயனில்லை என்று இறைவழிபாட்டுடன் கூடிய அறப்பணியை வலியுறுத்துகிறார்.

**பண்டிதரின் தத்துவப் பார்வை**

சதாசிவப் பண்டிதர் முன்னர்க் கூறியபடி சைவசித்தாந்தப் புலமையும், பன்னூற்பயிற்சியும் மிக்கவர் என்பதால் சைவசித்தாந்தக் கருத்துகள், சக்திதத்துவம் போன்ற சமயத்தத்துவங்கள், வழிபாட்டின் பயன், தமது விண்ணப்பங்களை வெளிப்படுத்தல், வழிபாடு செய்யாதவர் படும் பாடு, பெண்மயக்கைப் பழித்தல், வாழ்க்கை நிலையாமை, யாக்கை நிலையாமை போன்ற நிலையாமைத் தத்துவங்களைப் பாடுதல் ஆகியவற்றின் மூலம் இறைவழிபாட்டு நெறிக்கு மக்களை வழிப்படுத்துகிறார்.

**பண்டிதரின் சமூகப் பார்வை**

தமிழர்களிடம் ஆரிய வெறுப்பு பலகாலமாக இருந்துவந்திருக்கிறது. ஈழத்திலும் அத்தகைய வெறுப்பு இருந்திருக்கவேண்டும். ஆகவேதான் பக்திப்பனுவலுக்கு இடையிலும் ஆரியரைத் தூஷிப்பதைப் பண்டிதர் கண்டிக்கிறார். சதாசிவப் பண்டிதரும் ஆரியராக இருக்கக்கூடும் என்று எண்ணத்தோன்றுகிறது. நூலின் முகப்பில் செல்லையர் அவர்கள் சொல்லிய வெண்பாவின்படி,

“ வண்ணைச் சதாசிவம் வாழுமருட் காமாட்சி
நண்ணுமபி ஷேகம் நடாத்தியபின் – விண்ணப்பப்
பூசை புரிவான் பொருளாகத் தித்திக்கு
நேசகவி சொன்னான் நிசம்”

என்பதால் சதாசிவ பண்டிதர் கோயிலில் பணி செய்திருக்கவேண்டும் என்பதும் . “ கோயில் அதிகாரி “ என்று முன்னர்க் குறிப்பிட்டதிலிருந்தும் ஊகிக்க முடிகிறது. ஆகவேதான் அவர்,

“ ஆயுங் கலையுணர்ந்த ஆரியரைத் தூஷிப்போர்
தேயும் பொருளோடு தேர்ந்தறிமின் “ ( பாடல் எண் 26)

என்று வேண்டுகோள் விடுக்கிறார். பக்தி இலக்கியத்தில் நீதி கூறிய பண்டிதர் சமூக நிலையையும் சுட்டிக்காட்டத்தவறவில்லை.

**கற்பனைத்திறன்தோய் முருகியற் பார்வை**

பண்டிதரின் பன்னூற் பயிற்சியும், உருவகச்சிறப்பும் கற்பனைவளமும் தத்துவஅறிவும் இருபத்திரண்டு பாடல்களில் தெரியவருகின்றன. அன்னை காமாட்சியைப் பரவிவழிபடுவதற்காக "விண்ணவர்கள் ஈண்டி இங்ஙன் வந்து நிதம் போவர்" ( அந்தாதி-பாடல் எண் 3) எனக் கற்பனை மெருகேற்றிப் பாடுகிறார். வண்ணைநகர் அந்தாதியைக் காட்டிலும் வண்ணைநகர் ஊஞ்சலில் பண்டிதரின் கற்பனைவீச்சுச் சிறப்பாய் உள்ளது. காமாட்சி அம்மன் ஊஞ்சலில் எவ்வாறு ஆடுகிறாள்?

" விண்வளரு மிந்திரவி கவிகை வாங்க
வீணைவளர் தும்புருநா ரதர்கள்பாட
பண்வளரு மரம்பையர்க ணடன மாட
பலம்வளரும் வாயுசா மரைகள் வீச
எண்வளரு நிதிக்கிழவ னடப்பை தாங்க
எழில்வளரு முனிவரெலா மாசி கூற
கண்வளரு மாடமிகு வண்ணை வாழுங்
காமாட்சி அம்மையே ஆடீர் ஊசல் " ( பாடல் எண் 7)

அம்பிகையின் பல்வேறு நாமங்களையும் அணிகலன்களையும் அடுக்கிக் கூறும் பண்டிதர் அவள் ஊஞ்சல் ஆட்டத்தைப் பிரமன் கைத்தாளம் போடவும் அம்பலக்கூத்தனாம் சிவன் அவளுடன் ஆடவும் விநாயகப் பெருமான் சப்பாணி கொட்டவும் அறுமுகக் கடவுளும் தேவேந்திரனும் ஆடவும் அச்சுதன் கருணை தேடவும் கற்பனை கலந்து நடத்துகிறார்.

**உருவகம் பொலியும் அழகியற்பார்வை**

அடக்கிச்செறித்த உவமையே உருவகம் ஆகும். உவமையைக் காட்டிலும் கவிதை இன்பம் துய்க்க உதவுவது உருவகம். வண்ணைநகர் ஊஞ்சலில் உருவகச்சிறப்பு பெரிதும் அமைந்து பண்டிதரின் கவிப்புலமையைப் புலப்படுத்துகிறது. நூலின் தொடக்கமே உருவகங்களாக அமைந்து அன்னையின் ஊஞ்சல் அமைக்கப்பட்ட திறம் பேசுகிறது.

" நலந்திகழும் நாதவிந்து கால்க ளாக
நயந்திகழும் பரம்பொருணேர் விட்ட மாக
வலந்திகழும் காலமெலாம் வடங்க ளாக
வரந்திகழும் வேதமெலாம் பலகை யாக
புலந்திகழும் பிரணவம்பொன் விதான மாக
பொருடிகழும் உபநிடதம் பீட மாக
கலந்திகழும் சலசைசெறி வண்ணை வாழும்
காமாட்சி அம்மையே யாடீ ரூசல் "

**பண்டிதர் பாடிய சிங்கைநகர் அந்தாதி**

சிங்கப்பூரில் 1859இல் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் கட்டப்பட்ட தண்டாயுதபாணி ஆலயத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது அந்தாதியாகப் பாடப்பட்ட நூல் சிங்கைநகர் அந்தாதி ஆகும். இது தமிழில் அதிகம் செல்வாக்குப்பெற்ற அந்தாதி என்னும் இலக்கிய வகைமையைச் சேர்ந்தது. நூறு பாடல்களைக் கொண்ட இந்நூல் கட்டளைக்கலித்துறை என்னும் யாப்பால் இயன்றது. பெரும்பாலான தமிழிலக்கியங்களைப் போல 'உலகெலாம்' என்னும் மங்கலச்சொல்லைக்கொண்டு தொடங்கும் தமிழ்மரபையே இந்நூலாசிரியரும் பின்பற்றியுள்ளார். மேலும் தமிழ் மரபை அடியொற்றியே 'அவையடக்கம்' என்னும் பகுதியும் இடம்பெறுகிறது. இந்நூலை இயற்றியவர் பெயரும் "ஈழப்பதியான் சதாசிவ பண்டிதனே" என நூலுள் அகச்சான்றாய் அமைகிறது.

**சதாசிவனின் சிங்கைகுறித்த பார்வை**

சிங்கைநகர்பற்றிய வருணனைகள் நினைத்துப் பார்க்கத்தக்கன. மீன்பிடி கிராமமாக இருந்த சிங்கை படிப்படியாக நகரமாகிய செய்தியை மனங்கொண்டு 'புதுநகர்ச்சிங்கை' எனக் குறிக்கிறார். சிங்காபுரம், சிங்கையூர் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் சிங்கப்பூரின் இயற்கையழகும் செல்வவளமும் நூலில் குறிப்பிடப்படுகின்றன. அவை உள்ளதை உள்ளவாறே கூறும் இயல்பின. சிங்கைநகர் வந்தார்க்குச் சிரமங்கள் இல்லாது வாழ்வில் இன்பம் கிடைத்ததைச் "சுகந்தருசிங்கை' என்னும் சொல்லாட்சியின் வழி அறிகிறோம்.

**நன்றி மறவாப் பார்வை**

குடியேறிகள் இங்கு வந்து பலவகையில் துன்புற்றபோதும் ஓரளவு பணவருவாய்க்கும் வழிசெய்துகொண்டனர்.ஆகவே வருமானம் பெறவும் வசதியாக வாழ்வும் வாய்ப்பு வழங்கிய சிங்கையைப் போற்றித் தம் நன்றிமறவாப் பண்பைப் பல தொடர்களின் வழி புலப்படுத்துகிறார்.

**உவமைகளும் ஒப்பில் அழகியற் பார்வையும்**

பக்திநலம் கனியும் பனுவல் ஆயினும் 'உவமை என்னும் தவலருங் கூத்தியின் நடனம் ' சிறப்புற அமைகிறது. கன்றினைத் தேடும் பசு, பசுவினைத் தேடும் கன்று, மலரும் மணமும், சூரியன் முன் பனி போன்ற மரபுவமைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன. சில உவமைகளைத் தம் விருப்புக்கும் கற்பனைக்கும் ஏற்ப மாற்றியமைத்துக் கொள்கிறார். 'ஞாயிற்றைக் கை மறைப்பார் இல் ' என்னும் நாலடியாரின் உவமை பண்டிதரிடம் " ககனத்தைக் காற்படியால் வீரியம் பேசி அளப்பது போலும்" என மாற்றமடைகிறது.

சில புதிய உவமைகளையும் படைக்கிறார் பண்டிதர். இதன் மூலம் பண்டிதரின் படைப்பாக்கக் கற்பனைத் திறன் பளிச்சிடுகிறது. முருகனின் புகழைப் பாவினுள் வைத்துப் பாடுவது முடியாத செயல் என்றும் முருகனின் புகழ் சொற்களுக்குள் அடங்காத ஆற்றலைகொண்டது என்றும் கூற விழையும் சதாசிவப் பண்டிதர்,

“ சேவடியைப் பாவகத்துள் வைத்துப் பாட
நினைக்கின்ற பான்மையது
பூவகத்துள் கடல்நீர் அளத்தலும் போர்க்களத்திற்
சேவகத்து அம்பெய்தல் கையிலி மானும் சிறப்பிதுவே”
(பாடல் எண் 80)

எனப் பாடியுள்ளார்.

இறைவன் காட்சிக்கு அரியன். ஆனால் முருகனைக் கண்டதாகக் கூறுவது வெறும் பிதற்றலே என்பதை விளக்கும் வகையில்,

“நின்மல னேயுனைக் கண்டவ ரென்று நிதம் பிதற்றல்
வன்மல நீக்க வகையறியாது வரிவிரல்காண
தன்நுனி தொட்டிடத் தன்வாய் முகத்தினைத் தான்கறித்துத்
தின்னுதல் போலுந் திருவளர் சிங்கைச் சினகரனே”
(பாடல் எண் 59)

என்று புதிய உவமை கொண்டு பாடுகிறார். இவ்வண்ணம் பண்டிதரின் நுண்மாண் நுழைபுலம் விளக்கும் வகையில் அமைந்துள்ள உவமைகள் முறையே 61,62,68,69,71 ஆகிய எண்களுள்ள பாடல்களில் அமைந்துள்ளன. இவை நுட்பமாகச் சிந்திப்போரின் அறிவுக்கு விருந்தாய் அமைவன ஆகும். பண்டிதர் உருவகத்தைக் கையாளும் பாங்கும் போற்றத்தக்கது.

“ உத்தம நீ கடல் ; என்னுயிர் அப்பதில் உப்பு ; மலத்
தத்திய கன்மம் வளி அலை; போதந்தரும் இரண்டு
சத்தியும் உன்னிடம் உண்டே சகத்தினைத் தாங்கு பஞ்ச
நித்தியா வேலை நிராமய னேசிங்கை நின்மலனே “
( பாடல் எண் 58)

**பண்டிதரின் பழுத்த யாப்பிலக்கணப் புலமை**

தேவார மூவருள் ஞானசம்பந்தப் பெருமான் யமகம், திரிபு, மாலைமாற்று முதலிய சொல்லணி ,பொருளணி வகைகளைக் கையாண்டு புதுமை செய்தவர். சதாசிவப் பண்டிதர் தேவாரத்தை நன்கு கற்றிருந்தவர் என்பதால் பண்டிதரும் அவர் வழி நின்று சொல்லணி ,பொருளணி வகைகளையும் சித்திரகவிதைகளையும் சிங்கையில் பாடிப் புதுமை செய்தார். இவற்றின் முன்னோடி என்ற பெருமையும் பண்டிதருக்கு உண்டு. “சித்திரகவிதையை யாப்பிலக்கணப் புலமையின் மணிமுடி” என வருணித்தால் அதன் நாயகராகச் சிங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தலைமை இடத்தைப் பெறுபவர் பண்டிதரே ஆவார்.

மாலைமாற்று வெண்பா, துவி நாக விருத்தம், அஷ்ட நாக வெண்பா, இரத வெண்பா, கமல வெண்பா, சதுரங்க வெண்பாதுவி வெண்பா, திரி வெண்பா, நிரல்நிரைக் கட்டளைக் கலித்துறை, தனு வெண்பா, வினா விடை வெண்பா, கட்டளைக் கலித்துறை இரு பா, நடு எழுத்து அலங்காரம் , திரிபங்கி, ஒரு சீர் மடக்கு, மடக்கு விருத்தம், வேலாயுத பந்தம், அடி நினைந்திரங்கல், மோனை பிறழாத ஆசிரியப்பா என 19 வகையான சித்திரகவிகளைப் படைத்துள்ளார். (இவற்றின் விரிவினை இக்கட்டுரை ஆசிரியர் எழுதிய சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் ஆழமும் அகலமும், 2005) என்னும் நூலில் காண்க.

ஒவ்வொரு சித்திரக் கவியிலும் சிங்கப்பூர் எனும் சொல் இடம்பெறுகிறது. இந்நூல் பண்டிதரின் பக்தி உணர்வையும் பறைசாற்றுகிறது.

தமிழ் இலக்கிய உலகில் கவிதை, செய்யுள் என இரு வகையிலும் படைப்புகள் வெளிவந்துள்ளன. செய்யுள் என்பது எழுத்துகளைக் கொண்டு இலக்கண விதிப்படி செய்யப்படுவது. செய்யுள் செய்வதனால் புலவருக்குச் செய்திகளை நயம்படச் சொல்லவேண்டிய கட்டாயமில்லை. ஆகவே கவிதைபோலச் செல்வாக்குப் பெற்ற வடிவமாகச் செய்யுளைக் கூறமுடியாது. பண்டிதரின் படைப்பாற்றல் அழகை அல்லது கவித்துவத்தைச் சித்திரக்கவிகள் காட்டவில்லை. இருப்பினும் பாடுபொருள் அடிப்படையில் சிங்கப்பூர் சுப்பிரமணிய சுவாமி என்னும் தண்டாயுதபாணி கருப்பொருளாக அமைவதால் சதாசிவப் பண்டிதரின் இலக்கியப்பணி சிங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது.

**ந. பழநிவேலுவின் கவிதை மலர்கள்**

ந.பழநிவேலு நாற்பததைந்து ஆண்டுகளுக்கும் மேலாக எழுத்துத்துறையில் ஈடுபட்டவர். வானொலியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 'கவிதை மலர்கள்' என்பது தொகுப்பு நூலாகும். 1947 இல் முதற்பதிப்பு வெளியீடு கண்டது. மரபுகவிதைகளும் சிறுவருக்குரிய சில கவிதைகளும் அடங்கிய நூல். நூல் மதிப்புரையில் வை.திருநாவுக்கரசு குறிப்பிடுவது போலக் கவிதையின் எளிமையும் சிங்கப்பூர்ச் சமுதாய வளர்ச்சியைக் காட்டும் குறிப்பும் இக்கவிதை நூலுக்குத் தனித்த இடத்தைப் பெற்றுத் தந்துள்ளன. நூலாசிரியர் சமூக சீர்திருத்த நோக்குக் கொண்டவர்; ஈ.வே.ரா பெரியாரின் கொள்கைகளில் தீவிரப் பற்றுக்கொண்டவர். ஆகவே, சமூக சீர்திருத்தக் கருத்துகள் கொண்ட கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**நிறைவுரை**

விடுதலைக்கு முந்திய சிங்கப்பூர்த் தமிழ் மரபுகவிதைகள் தொடக்கத்தில் பக்தியைக் கருப்பொருளாகக் கொண்டு பாடப்பட்டுப் பின்னர்ச் சமூக அரசியல் மாற்றங்களுக்கு ஏற்பப் பாடுபொருள்களை மாற்றிக்கொண்டு வளர்ந்த போக்கைக் காட்டுகின்றன. மாற்றத்தின் மூலம் வளர்ச்சியை மதிப்பிடுவதும் ஏற்புடையது அல்லவா?

**துணைநூற்பட்டியல்**

சதாசிவப் பண்டிதர், சி.ந., வண்ணைநகர் அந்தாதி, வண்ணைநகர் ஊஞ்சல், சிங்கை நகர் அந்தாதி, சித்திர கவிகள், தீனோதய எந்திர சாலை , சிங்கப்பூர், 1887.

பழநிவேலு, ந., கவிதை மலர்கள் , தை நூலகம், இரண்டாம் பதிப்பு , 1975.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# திருக்குறளில் மனிதநேயம்

# Humanity in Thirukkural

இரா. கோபாலன்/ R. Gopalan[1]
[1] தலைமை ஆசிரியர், மாநில கல்வி நிறுவனம், போர்ட்பிளேயர், அந்தமான் நிக்கோபர் தீவுகள்
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் திருக்குறளில் காணக்கிடக்கும் மனிதநேயத்தை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, திருக்குறளில் காணப்படும் மனிதநேயத்தை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு திருக்குறளில் மனிதநேயத்தை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** திருக்குறள், மனிதநேயம்

**Abstract**

The major objective of the research is to explore humanity in Thirukkural. This research is designed in a qualitative approach. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the humanity in Thirukkural. The research claims to be the first such attempt to do a study regarding the humanity in Thirukkural.

**Keywords:** Humanity, Thirukkural

## முன்னுரை

நேயம் என்ற சொல்லுக்கு அன்பு என்று பொருள். மனிதநேயம் என்ற சொல்லுக்கு மனிதர்கள் மற்ற மனிதர்களிடம் காட்டும் அன்பு என்று பொருள். ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய வாழ்க்கையில், தன் குடும்பம், உற்றார், உறவினர் போன்ற தொடர்புடையவர்களோடும், தொடர்பில்லாத மற்றவர்களோடும் பழகும் வாய்ப்பு இயற்கையாகவே அமைகிறது. தொடர்புள்ள மனிதர்களோடு ஒரு மனிதன் காட்டும் அன்பையும், தொடர்பிப்பில்லாத மற்ற மனிதர்களோடு ஒரு மனிதன் காட்டும் அன்பையும், திருவள்ளுவர் அழகாகவும், விளக்கமாகவும் தெறிவாகவும் பல குறட்பாக்களில் கூறியுள்ளார். இதனை உலகிற்கு எடுத்துயியம்புவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## தரவுப் பகுப்பாய்வு

மனிதநேயக் கருத்துக்கள் அறத்துப்பால், பொருட்பால் மற்றும் காமத்துப்பால் ஆகிய திருக்குறளின் மூன்று பகுதிகளிலும் காணப்படுகின்றன. அவற்றை ஆராய்வதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம்.

## பண்புடையவர்களால் உலகம் வாழும்

மனித நேயமிக்க மனிதர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதால்தான் இவ்வுலகம் அழிந்து போகாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று கருதுகிறார் வள்ளுவர்.

“பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்” (996)

என்ற திருக்குறள் மனிதப் பண்பு உடையவர்களால் மட்டுமே இவ்வுலகம் நிலை பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகின்றது.

## அருள் என்னும் மானிடமான்பு

அருள் என்பது அன்பு பெற்றெடுத்த குழந்தை என்கிறார் வள்ளுவர். அன்பின் வழியில் தோன்றுவது அருள் என்னும் பண்பாகும்.

”நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்

தேரினும் அஃதே துணை” (242)

என்னும் வள்ளுவரின் குறள் அருள் மிக்க வாழ்வே சிறந்த வாழ்வு என்று குறிக்கின்றது. அருளோடு வாழும் வாழ்வே சிறந்த வாழ்வாகும். உலகம் பல வழிகளில் சிறப்பாக இயங்கினாலும், அருள் தேடி வாழும் வாழ்வே சிறந்த வாழ்வு என்று மனித நேயம் மிக்க வாழ்வைச் சிறப்பிக்கிறார் வள்ளுவர்.

இக்குறளுக்குப் பல்வேறு உரைகள் எழுதப்பெற்றுள்ளன. ”எல்லாச் சமயத்தாரானும் உறுதியாக விரும்பப்படுவது அருளாதலால் உயிர்க்குறுதி வேண்டினோர் அருளுடையராக வென்பது கருத்து” என இராமானுஜ கவிராயர் விளக்கம் தருகிறார். உலகில் சமயகள் பலவாக உள்ளன. ஒரு சமயம் கூறியதை இன்னொன்று மறுக்கலாம் அல்லது ஏற்கலாம். ஆயின் அனைத்து சமயங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சில கருத்துகள் ஒவ்வொரு சமயத்திலும் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் அருளுடைமையாகிய மனிதநேயம். உன் உயிரைப் போல, பிற உயிரையும் நேசி என்ற அருள் சார்ந்த கருத்தை அதாவது மனிதநேயக் கருத்தை அனைத்துச் சமயங்களும் ஏற்று நிற்கின்றன. இவ்வாறு சமயம் சார்ந்த மனிதநேயத்திற்கும் இக்குறள் பொருந்துவதாக உள்ளது.

”அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது” (45)

ஒருவன், அன்போடும் அறத்தோடும் ஒல்வாழ்க்கை நடத்தும்பொழுது, அவனோடு தொடர்புடைய மனைவி, மக்கள், பெற்றோர் மற்றும் உறவினர் (ஒக்கல்) ஆகியோருக்கு, அவன் உற்ற துணையாகவும் ஆதரவாகவும் இருந்து அன்பு செருத்த வேண்டும் என்ற கருத்தையும் நாம் திருக்குறளில் காண்கிறோம். ஆகவே, தொடர்புடைய அனைவரிடமும் ஒருவன் அன்பாக இருக்க வேண்டும் என்பது திருக்குறளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

”இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை” (41)

”தென்புலத்தார் தெய்வம், விருந்துஒக்கல் தான்என்றுஆங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை” (43)

தன்னுடைய குடியை மேன்மேலும் முன்னேற்றும் முயற்சியைக் கைவிடேன் என்னும் பெருமையைப்போல சிறந்த பெருமையைப் போல சிறந்த பெருமை ஒருவனுக்கு வேறு ஒன்றுமில்லை என்று வள்ளவர் கூறுவது. ஒருவனுக்குத் தன் குடும்பத்தின் மீதுள்ள மனிதநேயத்தின் சிறப்பையும் அதன் பெருமையையும் குறிக்கிறது.

### நெருங்கிய தொடர்பில்லாதவர்களிடம் காட்டும் அன்பு

முதலில் தொடர்பில்லாமலிருந்தாலும், காலப்போக்கில் ஒருவன் சிலரோடு நட்பு கொள்கிறான். நட்பு கொண்ட பிறகு, அவனுக்கும் அவனுடைய நண்பர்களுக்குமிடையே உள்ள உறவு நெருக்கமாகிறது. அந்த நட்பினால், நண்பர்கள் எவ்விதத் தயக்கமும் இல்லாமல், தன்னுடைய ஆடை நழுவினால், அதை ஒருவன் உடனே

சரிசெய்துகொள்வதைப் போல் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும் என்ற கருத்தை, வள்ளுவர்.

”உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு” (788)

என்ற குறளில் கூறுகிறார். இவ்வாறு உதவி செய்வதும் மனிதநேயத்திற்கு எடுத்துக்காட்டுதான்.

வள்ளுவர் காலத்திற்கு முன்பும், அவர் காலத்திலும் துறவிகளுக்கு உணவளிப்பது இல்வாழ்க்கையில் இருப்பவர்களின் கடமையாகக் கருதப்பட்டது. உடல் ஊனமுற்றதால் அல்லது வறுமையால் வாழ்க்கையை அனுபவிக்க முடியாமல் வருந்தியவர்கள் துவ்வாதவர் என்று அழைக்கப்பட்டனர். துறவிகளுக்கும், துவ்வாதார்க்கும், வாழ்க்கைப் பாதையில் வழிதவறியவர்களுக்கும் (இறந்தார்க்கும்), இலவாழ்க்கையில் இருப்பவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுவது தொடர்பில்லாதவர்களிடத்தும் ஒருவன் மனிதநேயத்தோடு வாழ வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

”துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை” (42)

இக்காலத்தில் இருப்பதுபோல், திருவள்ளுவர் காலத்தில் நாடெங்கிலும் விடுதிகள் இல்லாததால், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்பவர்களுக்குத் தன் வீட்டில், உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து ஆதரிப்பது இல்வாழ்க்கையில் இருப்பவனின் கடமையாகக் கருதப்பட்டது. இவ்வாறு தொடர்பில்லாதவர்களை ஆதரிப்பது விருந்தோம்பல் என்று அழைக்கப்பட்டது. இல்வாழ்க்கை நெறிநின்று வாழ்வதின் நோக்கம் விருந்தோம்பல் என்று வள்ளுவர் கூறுவது திருக்குறளில் உள்ள மனிதநேயத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

மக்கள் அனைவரும் பிறப்பினால் சமம் என்றும், பிறர் துன்பத்தை தன் துன்பமாகக் கருதுவதுதான் ஒருவன் அறிவினால் பெற்ற பயன் என்றும் வள்ளுவர் கூறுவது திருக்குறளில் காணப்படும் மனிதநேயத்திற்கு மற்றுமொரு சான்று.

”பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்” (972)

”ஆறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை” (315)

மக்கள் அனைவரும் சமம் என்று உணர்வதும், மற்றவர்கள் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதுவதும் உயர்ந்த மனிதநேயக் கோட்பாடுகள்தான். ஆனால், அந்தக் கோட்பாடுகள்தான். ஆனால், அந்தக் கோட்டுபாடுகளை உள்ளத்தால் உணர்வதுதோடு நிறுத்திக்கொள்ளாமல், அவற்றைச் செயலிலும் காட்ட வேண்டும் என்றும், தன்னிடம் உள்ள உணவு, செல்வம் ஆகியவற்றை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதுதான் தலையாய செயல் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

”பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை” (322)

நாம் பிறருக்கு உதவி செய்வதை வள்ளவர் இரண்டு வகையாகப் பிரிக்கிறார். ஒன்று, வறுமையில் வாடுபவர்கள் நம்மிடம் வந்து கேட்கும்பொழுது இல்லையென்று கூறாமல், நம்மால் இயன்றதைப் பிறருக்கு அளித்து உதவுவதை வள்ளுவர் ஈகை என்று கூறுகிறார். வறியவர்களுக்குத் தேவையானவற்றை, அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்காமல் நாம் கொடுத்து உதவுவதுதான் உண்மையான ஈகை என்ற கருத்தும் திருக்குறளில் காணப்படுகிறது.

”வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து” (221)

வறுமையில் உள்ளவர்களின் நிலையை உணர்ந்து, அவர்கள் வந்து கேட்காமலேயே, அவர்களுக்குப் பலவகைகளிலும் உதவி செய்வது ஒப்புரவு. மற்றவர்களும் உதவி செய்வது ஒப்புரவு. மற்றவர்களும் தன்னைப் போன்றவர்கள்தான் என்பதை உணர்ந்தவன்தான் உயிரோடு வாழ்பவன் என்றும் அவ்வாறு உணராதவன் செத்தவன் என்றும், ஒருவன் பாடுபட்டுத் தேடிய பொருளெல்லாம் தகுதி உடையவர்களுக்குக் கொடுத்து உதவுவதற்குத்தான் என்றும் ஒப்புரவைப் பற்றிய வள்ளுவரின் கருத்துக்கள் திருக்குறளில் காணப்படும் ஒப்புயர்வற்ற மனிதநேயக் கருத்துக்களாகும்.

**மன்னனின் மனிதநேயப் பண்புகள்**

தனிமனிதன் மட்டுமல்லாமல், நாட்டை ஆளும் மன்னனும் மனிதநேயத்தோடு செயல்பட வேண்டும் என்று திருக்குறள் வலியுறுத்துகிறது. மன்னன் காட்சிக்கு எளியவனாகவும், கடுஞ்சொல் கூறாதவனாகவும் இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார். மற்றும், மன்னன் நீதி தவறாது, முறைசெய்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற கருத்தும், மன்னன் கொடை, அன்பு, செங்கோல் செலுத்துதல், குடிகளைக் காப்பாற்றுதல் ஆகிய பண்புகளை உடையவனாக இருக்க வேண்டும் என்ற மனிதநேயக் கருத்துக்களையும் திருக்குறளில் காணலாம். குடிமக்களை அரவணைத்துத் தழுவி வாழும் மன்னனே சிறந்தவன் என்றும், மழைத்துளி இல்லையென்றால் எப்படி உலகம் வாழாதோ அதுபோல் மன்னனின் அருளாட்சி இல்லையென்றால் மக்கள் வாழ முடியாது என்றும் வள்ளுவர் கூறுவது மன்னனுக்கு மனிதநேயத்தின் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது.

”காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்” (386)

”முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்” (388)

”கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தற்க்கு ஒலி” (390)

”துளிஇன்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு” (557)

மன்னனுக்கு மக்கள்மீது மனிதநேயம் இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுவது மன்னனுக்கு மட்டுமல்லாமல் இக்காலத்தில் ஆட்சியில் இருக்கும் அனைவருக்கும், நிருவனங்களின் தலைவர்களுக்கும் பொருந்தும்.

அன்பில்லாத மனிதன் உயிரில்லாதவன் என்றும் அவன் வெறும் எலும்பும் தோலும் சேர்ந்த உடம்பு மட்டுமே என்றும் வள்ளுவர் கூறுகிறார் (குறள் - 80). ஆகவே, அன்பில்லாத மனிதனே இல்லை. அன்புதான் மனிதநேயத்தின் அடித்தளம். அதனால், ஒவ்வொருவரும், அன்பை வளர்த்து, மக்கள் அனைவரும் சமம் என்ற எண்ணத்தோடு, அனைவரிடமும் இன்சொல்பேசி, விருந்தோம்பி, அடக்கத்தோடும், ஒழுக்கத்தோடும் பழகி, பொறுமையைப் பேணிக்காத்து, அழுக்காறு இல்லாமல், பிறர் பொருளைக் கவரும் எண்ணம் இல்லாமல், பயனில சொல்லாமல், புறங்கூறாமல், தீவினைகளை விலக்கி, ஈகையும் ஒப்புரவும் செய்து, வாய்மையே பேசி, சினத்தைத் தவிர்த்து, இன்னாசெய்தார்க்கு அவர் நாணூமாறு நன்னயம் செய்து (குறள்-314). பிறர் நலத்தைத் தன்னலம்போல் கருதி, எனைத்தானாம் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம் மாணா செய்யாமல் அன்போடு வாழ்வதுதான் (குறள்-317) திருக்குறள் கூறும் மனிதநேயம் என்னும் தலைசிறந்த பண்பு. இத்தகைய மனிதநேயத்தோடு வாழ்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இய்ங்குகிறது என்றும், மனிதநேயம் உள்ளவர்கள் இல்லையென்றால், இவ்வுலகம் மண்ணுக்குள் மறைந்து அழிந்துவிடும் என்றும் வள்ளுவர்.

”பண்புடையர்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்” (குறள்-996)

என்ற குறளில் கூறி. மனிதநேயத்தின் சிறப்பையும் அதன் இன்றியமையாமையையும் வலியுறுத்துகிறார். மனிதநேயத்தால்தான் உலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதில் பாண்டிய மன்னன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் கருத்தும் வள்ளுவர் கருத்தும் ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**நிறைவுரை**

அனைத்து உயிர்களிடத்தும் இரக்கம் காட்ட வேண்டும். அன்பும், அருளும், மனிதநேயமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை முடிந்தவரை மனிதநேயம் கொண்டு வாழ்வதே நல்ல நெறி இக்கருத்துகளை திருவள்ளுவர் தனது நூலில் தெளிவாக கூறுகிறார். அறம் போல் அறிவு இருப்பினும் மனித நேயம் இல்லாதவர்களை வள்ளுவர் மரம் என்கிறார். தற்காலத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி உச்சத்தைத் தொட்டிருப்பினும், மானுட உறவில் பின் தங்கியிருப்பதை பக்கத்து வீட்டின் கருத்து முரண் நினைவுபடுத்துகிறது. வள்ளுவர் விருந்துக்கும் இலக்கணம் வகுத்துள்ளார். முன்பின் அறிமுகம் இல்லாதோரே விருந்தினர் என்ற கருத்து எவ்வளவு பெரிய புரட்சி சிந்தனை என்பதனை நம்மால் உணரமுடிகிறது. இவற்றிலிருந்து மனித நேயத்தின் பிறப்பிடமாக வள்ளுவம் விளங்குவதை உலகிற்கு எடுத்தியம்பும் வண்ணம் உள்ளது. வள்ளுவ நேயத்தை வணங்கி உலகிற்கு எடுத்தியம்புவதில் மகிழ்கிறேன்.

## துணைநூற்பட்டியல்

இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.

மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை

விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.

திருவாசகம் விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.

சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு

தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.

புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), சென்னை, 1971.

தேவநேயப் பாவாணர், ஞா. திருக்குறள் – தமிழ் மரபுரை, ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சங்க இலக்கியத்தில் உளவியல்

# Psychology in Sangha Literature

ஹாயத்திரி சண்முகநாதன்/ Hayathri Shanmuganathan[1]
[1] நூலகர், கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு, இலங்கை
Corresponding Email: swaraganam@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியமானது பண்டைய தமிழ் நாகரிகம், மொழிச் சிறப்பு முதலானவற்றை அறிய விரும்புவோருக்குச் சான்றாகவும், செய்தி ஊற்றாகவும் அமைகிறது. இப்பின்புலத்திலேயே தமிழ் இலக்கியத் திறனாய்வுக் கோட்பாட்டை மேலை நாட்டறிஞர்களின் வரவு உண்த்தியது. இருபதாம் நூற்றாண்டில் இலக்கியக் கொள்கைகள், கோட்பாடுகள் என்ற புதிய சிந்தனைகள் தோன்றின. தமிழாராய்ச்சி வளர்ச்சியில் தமிழியல் ஆய்வுகள் இருபத்தியோராம் நூற்றாண்டில் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வருகிறது. அத்தகைய பரிமாணங்களில் ஒன்று தான் உளவியல். உளவியல் என்பது வாழும் உயிரினங்களின் நடத்தையைப் பற்றி அறியும் நமது முயற்சி. குறிப்பாகத் தம்மை தாமே அறியும் தனிப்பட்ட தேடுதல். தமது உணர்வுகள், எண்ணங்கள், செய்யும் செயல்களுடன் தொடர்புடையது உளவியல். இது நடத்தையைப் பற்றிய அறிவியல். நடத்தையின் வகைகளைப் பற்றி ஆய்வது. தன்னளவில் முரண்பாடுகள் அற்ற ஒத்திசைவும் சமூக அளவில் நல்லுறவான இணக்கமும் உளநலத்தின் இருபெரும் கூறுகள். இவற்றில் ஏதேனுமொன்றில் குறைவு ஏற்பட்டாலும் உள்ள முறிவு, உள்ளப்போராட்டம், உள்ள இறுக்கம் ஆகிய உணர்வுநிலைகள் ஏற்படுகின்றன. முழுக்க முழுக்கத் தன்னுணர்ச்சிப் பாடல்களாக மட்டுமே அமைந்துள்ள நமது தொல் இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் இத்தகு உணர்வு நிலைகளைப் பரவலாகக் காணமுடியும். சங்க இலக்கியங்கள் குறித்த பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்து வருகின்ற இக்காலகட்டத்தில் சங்க இலக்கிய பாடல்களை உளவியல் நோக்கில் அணுகுதல் என்பது அவசியமானதொன்று. சங்கக் கவிதைகளை உளவியல் நோக்கில் பார்க்கும் அணுகுமுறை ஏற்கனவே தமிழில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தாலும் இன்னும் கூர்மையாக்கப்படவில்லை. உளவியல் என்பது இன்று ஒரு பெரும் அறிவுத்துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. இத்துறையானது பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் பிரசித்தம் பெற்றது.

**கருச்சொற்கள்:** உளவியல், சங்க இலக்கியம், மனப்போராட்டம், மனமுறிவு

**Abstract**

Sangha literature is a source of information and evidence for those who want to know about the ancient Tamil civilization, language, etc. In the twentieth century, new ideas called literary principles and theories appeared. In the development of Tamil research, Tamil studies are gaining various dimensions in the twenty-first century. One such dimension is psychology. Credit psychology is our attempt to learn about the behaviour of living beings, especially the individual quest for self-knowledge. Psychology is the science of behaviour that deals with our feelings, thoughts, and actions. Self-contradiction-free harmony and social harmony are the two major components of psychological well-being; however, when there is a deficiency in any of these, emotional states such as internal conflict, and internal tension occur. Such emotional states are widespread in our old literature, the Sangam literature, which is almost exclusively self-conscious songs. At this time when various studies on Sangha literature are happening, it is necessary to approach the Sangha literary songs from a psychological point of view. Although the approach of looking at the Sangha poems from a psychological point of view has already been introduced in Tamil, it has not been developed yet. Many of the theories and ideologies presented by pioneers such as psychologists Freud Jung Lacan in relation to art literature are still lagging behind in this point of view. Psychology has grown into a major field of knowledge today. This field gained prominence only after the nineteenth century. However, psychological thoughts have been established among the Sanghatamizh, which can be known by studying the ancient texts. This study aims to investigate what kind of psychological thinking has been prevalent in the expression of feelings, social values and knowledge level through Sangha internal literature, based on descriptive method. It is also based on psychological principles.

**Keywords:** Psychology, Sangha Poem's, internal conflict, internal tension

**முன்னுரை**

சங்க இலக்கியம் தமிழில் கிடைத்த காலத்தால் முற்பட்ட இலக்கியமாகும். பழந்தமிழர் இலக்கியத்தினை அகம், புறம் என இரு பிரிவுகளாகப் பகுத்தனர். ஒத்த தலைமகனும், தலைமகளும் உள்ளம் கலந்து ஒன்றுகூடி வாழும் வாழ்க்கையைக் கூறும் பாடல்கள் அகம் எனப்பட்டது. போர், கொடை, வெற்றிச் சிறப்பு முதலியவற்றைக் கூறும் பகுதிகள் புறம் எனப்பட்டது. அகம் சார்ந்த காதல் வாழ்வையும் புறம் சார்ந்த வீரவாழ்வையும் பாடிய மருதநாயகம் சங்கச் சான்றோர் பெற்றிருந்த உளவியல் அறிவு அவர் காலத்தே உலகில் வேறு எந்த இனம் பெற்றிருந்த உளவியல் அறிவினும் பெருஞ்சிறப்புடையது: பெரும் வியப்பிற்குரியது என்பதை அன்னார் தம் அகப்பாடல் மரபுகள் தெளிவாகச் சுட்டிக்காட்டும் என்று குறிப்பிடுகின்றார்.

“தமிழ் கவிதையில் அகப்புறப் பாடுகள் உளவியல் அடிப்படை கொண்டவை. அகமென்பது உள்ளத்தின் கண் நிகழ்வது. புறத்தே தோன்றாது. உணர்வு அறிவது அகத்தே பூத்து மலரும் தன்மையதாகிய காதல் உணர்வை அகம் என்றனர். தமிழ்ச்சான்றோர்கள் புறமென்பது வெளியே புலனாகும் நிலைகள் தொல்காப்பியர் கூறும் ஐந்தினை மரபும் அம்மரபின் வழிப்பட்ட சங்கச் சான்றோர் செய்யுட்களும் ஆழ்ந்த உளவியல் அடிப்படை கொண்டவை. இவற்றில் சமுதாய யதார்த்தத்தினும் உளவியல் யதார்த்தமே முன்னுரிமை பெறுகின்றது” என்னும் கூற்று சங்க இலக்கியத்தின் உளவியல் சிறப்பைப் புலப்படுத்துகின்றது.

இலக்கியத்தில் உளவியல் என்பது படைப்பாளரின் படைக்கப்பெறும் பாத்திரத்தின் உணர்வுபூர்வமான அனுபவங்களைக் கொண்டது. குறிப்பாக, மனிதனின் நனவுப்பாடு, வாழ்க்கைப்பாடு, உணர்வு அதிர்ச்சி, நெருக்கடி, கவலை, மகிழ்ச்சி, குற்றம், குடும்பம் முதலியவை உள்ளடக்கிய கவித்துவமான அனுபவங்களைக் குறிப்பதாகும். இயற்கைக்குப் புறம்பான நிகழ்வுகள் சில சமயங்களில் இதில் இடம்பெறுகின்றன. இவை முன்னோர்களின் கற்பனை அனுபவங்கள், வேறொரு உலகத்தின் காட்சிகள் என படைப்பவனின் கூட்டு நனவிலியாகச் செயல்படும் தன்மையாகிறது. சங்க இலக்கியமானது, வாழ்க்கை அடிப்படையில் எழுந்த நாடகப் பண்புடையது. முற்றிலும் உளவியல் மையமாய் உருவாக்கம் பெற்றது. புறத்திணையும், அகத்திணையும் வாழ்க்கைச் சூழல் பின்னணியால் கட்டமைக்கப்பெற்ற, மனோநிலையின் எதிரொலியெனப் பாடல்கள் வாயிலாக உணரமுடிகிறது.

சங்ககாலப் புலவர்கள் காதல், வீரம், கொடை முதலியவற்றைப் பொருளாகக் கொண்டு பாடல்களை இயற்றியுள்ளனர். இப்பாடல்களில் இன்ப துன்ப உணர்வுகளின் வெளிப்பாடுகள் உரையாடல்களாகவோ தனக்குத்தானே கூறிக் கொள்வனவாகவோ அமைந்தாலும் மனவுணர்வுகள் வலுப்பெற்றுள்ளன. தலைவனின் பிரிவு, தலைவனைச் சந்திக்க இயலாத தனிமை, அத்தனிமைக்குக் காரணமான சுற்றம், தலைவனின் மாறுபட்ட செயற்பாடு (பரத்தையர் பிரிவு) போன்ற நிலைகளிலிருந்து விலக முடியாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதால் மனமிறுக்கம் ஏற்படுகின்றது. அந்த மன இறுக்கத்தின் வெளிப்பாடே உறக்கமின்மை, பகற்கனவு, திரிபுணர்ச்சி, மனவெழுச்சி வடிவாகவும் மனநோயாகவும் உருவெடுக்கிறது. முழுக்க முழுக்க தன்னுணர்ச்சிப் பாடல்களாக மட்டுமே அமைந்துள்ள நமது தொல் இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் இத்தகு உணர்வு நிலைகளைப் பரவலாகக் காணமுடியும்.

மனிதனின் ஆழ்மனத்தோடும், அதன் இயங்கு நிலையோடும் தொடர்புடைய ஒன்றாக உளவியல் காணப்படுகின்றது. உளவியலும் இலக்கியமும் என இன்று பல்வேறு ஆய்வு முயற்சிகள் இடம்பெற்றாலும் அவை பிராய்ட், யுங், லக்கான் போன்ற உளவியலாளர்கள் கலை இலக்கியம் தொடர்பாக முன்வைத்துள்ள கருத்தியல்களுக்கும், வரன்முறைகளுக்கும் ஏற்ப இன்னமும் முழுமை பெறவில்லை என்றே கூறலாம். மனஅலசல் கோட்பாட்டை இலக்கியம் கலை, வரலாறு, அந்தவகையில் சங்க இலக்கியங்களை உளவியல் சார் கருத்துக்களின் அடிப்படையில் ஆராய வேண்டியது காலத்தின் தேவை எனலாம்.

**உள்ளப்போராட்டம்**

உள்ளத்தின் நோக்கமும், ஊக்கமும் மனிதனைச் செயல்படுத்துகின்றது. ஒரே நேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட விருப்பங்கள் உடனிகழ்வாய்த் தோன்றுவதால் எதனை ஏற்பது, எதனை விருப்பம் என்னும் குழப்பம் தோன்றுகிறது. இதன் காரணமாக முடிவெடுக்க இயலாநிலையும், செயற்பட இயலாநிலையும் தோன்றுகிறது. இத்தகைய நிலையே உள்ளப்போராட்டம் எனப்படுகின்றது. "ஒரே நேரத்தில் நிறைவுற இயலாததும் ஒன்றிற்கொன்று தனித்தனியானதுமான செயல் நோக்கமும், ஊக்கமும் உள்ளத்தில் இருப்பதனால் விளைவதே உள்ளப்போராட்டம்" என உளவியலாளர்கள் விளக்குகின்றார்கள். சங்க இலக்கியங்கியச் சான்றுகளுடன் இதனை நாம் நோக்கலாம்.

**சான்று 01:**

"நீ உடம்படுதலின் யான்தர வந்து
குறி நின்றன்னே குன்ற நாடன்
இன்றை அளவைச் சென்றைக்க என்றி
கையும் காலும் ஓய்வன ஒடுங்கத்
தீஉறு தளிரின் நடுங்கி
யாவதும் இலையான் செய்ற்கு உரியதுவே|| (குறுந்தொகை – 383)

இப்பாடலில் உடன்போக்கிற்கு உடன்பட்ட தலைவி இறுதி நேரத்தில் தயங்கித் தவிக்கிறாள். தோழியின் முயற்சியில் உடன்போக்கிற்கான ஏற்பாடுகள் நிறைந்துவிட்டன. தலைவனும் குறித்த இடத்தில் வந்து நின்றுவிட்டான். ஆனால், தலைவி "இன்று ஒரு நாள் போகட்டும்" என்கிறாள். இதனை நாம் கூர்ந்து நோக்கினால், விரும்பத் தகுந்த இரண்டு இலக்குகளை ஒரே நேரத்தில் அடைய முயல்வதில் ஏற்படும் உள்ள நிலையே இத்தகைய உள்ளப்போராட்டம்" என உளவியலாளர்கள் வரையறை சொல்கின்றார்.

ஓர் இலக்கினை அடைவதில் நேர்நிலையான தூண்டல் ஒன்றும் எதிர்மறையான தூண்டல் ஒன்றும்செயற்படுகின்றன. அப்போது அந்த இலக்கினை அணுகுவதா, விலகுவதா என்னும் போராட்டம் தோன்றுகிறது.

**சான்று 02:**

"காதலை என்பதோ இனிதுமற்று இன்னாதே
அன்பினை என்பதோ இனிதுமற்று இன்னாதே
அருளினை என்பதே இனிது மற்று இன்னாதே
களிறு இயங்கு ஆர்இடை ஈங்கு நீ வருவதை அதனால்
இரவின் வாரல் விரவுவீ
அகல் அறை வரிக்கும் சாரல்
பகலும் பெறுவை இளவள் தடமென்தோளே" (கலித்தொகை – 49)

இரவுக்குறி நேரங்களில் தலைவியின் உள்ளம் போராட்டத்தில் தவிக்கிறது. இரவு நேரத்தில் காட்டு வழியில் இடியும், மின்னலும், மழையும் சூழ்ந்த வேளையில் தலைவன் தலைவியைக் காண வருதலால் அன்பின் ஆழம் புலப்படுகிறது. அதனால், தலைவி மகிழ்கிறாள். ஆனால், தலைவன் வரும் வழிக்கடுமையும் வழியிடை நேரலாகும் இன்னல்களும் தலைவியை அச்சுறுத்தலால் துன்புறுகிறாள். தலைவனின் வருகை இனிமையும், இன்னாமையும் விளைவிக்கின்றது.

**சான்று 03:**

“புள் ஒலிக்கு அமர்த்த கண்ணள் வெள்வேல்
திருந்து கழற் காளையொடு அருள் சுரம் கழிவோள்
எல்லிடை அசைந்த கல்லென் சீறூர்ப்
புனை இழை மகளிர்ப் பயந்த
மனைகெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே” (ஐங்குறுநூறு 382)

உடன்போக்கின் போது இடைவழியில் தலைவனும், தலைவியும் சிற்றூரில் ஒன்றில் தங்குகின்றனர். விருந்தாக வந்த இளையோரை விரும்பி வரவேற்றுப் பெண்டிர் மகிழ்கின்றனர். அம்மகிழ்வின் ஊடே தலைவியைப் பிரிந்து வருந்தும் தாயின் வருத்தத்தை நினைத்து வருந்துகின்றாள். விருந்தாகி வந்த புதிய உறவையும், இதனால் ஏற்கனவே பிரிந்துபோன ஒரு உறவை நினைத்து மகிழ்ச்சியும், வருத்தமும் கொள்கிறாள்.

மேற்குறிப்பிடப்பட்ட சான்று இரண்டு மற்று மூன்றினை நோக்குகையில் “விரும்பத்தகுந்த நேர்நிலையானதும் விருப்பத்திற்கு இயையாத எதிர்மறையானதுமான நிகழ்ச்சிகள் நேர்தல் வாழ்வியலாக உள்ளது. நேர்மறையும் எதிர்மறையும் விரவிய கூறுகளை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளமையால் இப்போராட்டத்தைக் கலப்பற்ற நன்மை” என உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

நனவு மனத்திற்கும், நனவிலி மனத்திற்குமானப் போராட்டங்களில் திண்ணிய திறமுடையது நிறைவு நிலையடையும். அவ்வண்ணமே சங்கக் காதலில் பகற்குறியில் தலைவியைச் சந்தித்து மணம் முடிக்க விழையும் நிகழ்வானது தலைவிக்கு மகிழ்வுக்கும் குழப்பத்திற்குமானப் போராட்டத்தை அளிக்கிறது. நப்பசலையாரின் அகநானூற்றுப் பாடலை ஆழ்ந்து நோக்குகையில் தலைவியின் மனப்போராட்டம் தெளிவுபட விளங்குகிறது.

**சான்று 04:**

“இரவந் தன்றால் திண்தேர் கரவாது
ஒல்லென ஒலிக்கும் இளையரொடு வல்வாய்
அரவச் சீறூர் காண,
பகல்வந் தன்றால் பாய்பரி சிறந்தே” (அகநானூறு 160)

இரவுப்பொழுதினில் மட்டுமே தலைவியைக் காண வந்த தலைவன், ஊரார் அறியும் வண்ணம் பகல்பொழுது வந்தது சிறப்பானதாய் உள்ளது. இனி, தலைவியைக் கைப்பற்ற யாதொரு தீவினையும் நிகழாது என்று படைக்கப்பட்ட பாடல் வரிகளில் உவமையாக்கப்பட்ட ஆமையின் சூல் உரும் காலம் நோக்கத்தக்கது.

சூல் உற்ற பெண் ஆமையானது, பிற உயிரினங்கள் அறியாதவாறு, புறத்தே குழி தோண்டி முட்டையிட்டு மறைக்கும், இதுவுணர்ந்த ஆண் ஆமை அம்முட்டைகளைப்

பாதுகாக்கும் நல்நிகழ்வில், முட்டைக்குக் காதல் உறவையும், ஆண் ஆமைக்குத் தலைவனையும், பெண் ஆமைக்கு தலைவியையும் கூறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். நெடுநாளாய் தலைவன் தன்னை மணம் புரிவதில் ஐயம் கொண்ட தலைவியின் உளப்போராட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளியானது எனலாம்.

"பெற்றோர் விதிக்கும் தடைகளும், கட்டளைகளும் ஒருவனுடைய ஒழுக்க உணர்வுகளாக உயிர் வாழ்ந்து வருகின்றன" என்கிறார் உளவியலின் தந்தை ஃபிராய்ட். சங்கமகளிரின் காதல் வெளிப்பாட்டில் இவரது கருத்து ஏற்புடையதாக அமைந்துள்ளது.

தலைவன் பொருள் தேடச் செல்கிறான். செல்லும் வழியெல்லாம் தலைவியை நினைத்துக் கொண்டே செல்கின்றான். இதனால், தலைவி மீது ஏற்படும் காம உணர்வானது வெள்ளப்பெருக்குப் போன்று பெருகின்றது. எனினும்: பொருள் தேடிச் சென்று இடையில் திரும்பமுடியாத இவ்வுலகத்து இயல்பினால் ஏற்படும் தலைவனின் உள்ளபோராட்ட நிலையை,

"..... நினைந்தனென் அல்லனோ பெரிதே
நினைத்து மருண்டனென் அல்லனோஇ உலகத்துப் பண்பே
.....
.....
அனைப் பெருங்காமம் ஈண்டு கடைக்கொளவே
(குறுந்தொகை 99)

என்று ஔவையார் திறம்பட விளக்குகின்றார்.

**ஈடுசெய்தல்**

மனம் முறிவுறுதலை மாற்றுவதற்குக் கையாளக் கூடிய மாற்றுவழிகளைப் பற்றி உளவியலாளர்கள் ஆராய்ந்துள்ளனர். ஒரு பொருளை அடைவதற்கான முயற்சியை விட்டு விடுதல், கிடைக்காத பொருளுக்குப் பதிலாகக் கிடைக்கும் பொருள் ஒன்றை அடைதல், தற்கொலை செய்து கொள்ளுதல், துன்பத்தின் மூலம் இன்பம் பெறுதல், தன்னைத் தானே தாக்குதல் ஆகிய வழிகளைக் குறிக்கிறது. இம்மாற்று வழி முறையே ஈடுசெய்தல் என்னும் இயங்கு முறைகளாகும். ஒருவரின் பிரிவால் துன்புறும் உள்ளம் அவரொடு இயைபுடைய மபொருளின் தொடர்பால் நிறைவு பெறுதலைச் சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது.
குறுந்தொகைப் பாடல் ஒன்றில், தலைவியின் மேனி அடையாளங்களைக் கண்டு தாயார் அஞ்சி, கட்டுவிச்சியிடம் குறி கேட்கின்றாள். தோழி இதுதான் சரியான நேரம் தலைவியின் காதலை வெளிப்படுத்துவதற்கு என எண்ணுகிறாள்.

"அகவன் மகளே! அகவன் மகளே
மனவுக் கோப் அன்ன நல்நெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே! அவர்
நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே" (குறுந் - 23)

எனத் தோழி அறத்தொடு நிற்கின்றாள். அன்னையர் அகவல் மகள் முதலியோர் முன்னிலையில் தலைவியின் களவுவாழ்வை வெளிப்படையாக எடுத்துரைக்க இயலவில்லை. தலைவனைப் பாடுக எனத் தயங்காமல் சொல்ல இயலாத நிலையில் குன்றைப் பாடுக என்கின்றாள். "இன்னும் பாடுக பாட்டே அவர் நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே" எனக்

கூறுகையில் ஓர் ஊக்கத்தை வெளியிட முடியாத நிலையில் தொடர்புடைய வேறு ஒன்றை வெளியிடல் அல்லது புதிய வடிவத்தில் வெளியிடல் ஆகியன ஈடுசெய்தல் எனும் உளவியல் கோட்பாட்டில் அமைந்துள்ளது.

பிரிவுக் காலத்தில் தலைவி பகலெல்லாம் தலைவனின் குன்றம் கண்டு ஒருவாறு ஆற்றியிருந்தாள். மாலை இருட்டில் அம்மலையும் மறைகிறதே என ஆற்றாமையுடன் பேசுகிறாள்.

"கண்டிசின் வாழி தோழி தெண்திரைக்
கடலாழ் கலத்தின் தோன்றி
மாலை மறையுமவர் மணிநெடுங்குன்றே" (குறுந்தொகை 240)

இப்பாடலில், குன்றத்தின் காட்சியே தலைவனின் தோற்றத்திற்கு ஈடாகத் தலைவி மனம் நினைக்கிறது. அக்குன்றம் கடலில் முழ்கும் கப்பல் போல மாலை இருட்டில் மெல்ல மெல்ல மறைகிறது. மாற்றுக் காட்சியில் தலைவி மனம் பற்றிய ஆறுதல் மெல்ல மெல்லத் துயரக் கடலில் முழ்குகிறது. "மணிநிற மால்வரை மறைதோறும் அணிமலர் நடுங்கண் ஆர்ந்தன பணியே" (நற் - 208) என்று தோழியின் கூற்றும் இணைத்துக் காணத்தக்கது. மாற்றுப்பொருள் நிலைக்கண்டு அதனால் இழப்பீடு செய்தல், இயலக்கூடிய ஒன்றே என்பதைப் பல கூற்றுக்கள் நிரூபிக்கின்றன. தலைவனின் குன்றம் கண்டவுடன், "குன்றம் நோக்கினென் தோழி பண்டை அற்றோ கண்டிசின்றுதலே" (குறுந் - 249) இதனால் தலைவியின் நெற்றிப் பசலை தெற்றென மறைகிறது. தலைவனின் குன்றத்தைப் பாடியவுடன், "வாடிய மென் தோளும் வீங்கின்" (கலித்தொகை – 41) என்கிறாள். இக்கூற்றுகள் ஈடுசெய்தல் என்னும் தற்காப்பு இயங்குமுறையின் கூற்றுகளோடு ஒத்தப்போகின்றன. இதனை "ஒன்றைச் சாதிக்க இயலாத சூழலில் ஏமாற்றமும் முறிவும், கவலையும் உற்ற உள்ளம் பிறிதொன்றைச் சாதிக்க முயல்கிறது. உள்ளத்தின் இவ்வியல்பை உளவியலாளர் ஈடுசெய்தல் என்கிறார். ஒரு நிலையின் இழப்பை மறுநிலையில் ஈடுசெய்து கொள்ள உள்ளம் முயலுதலால் இதனை இழப்பீடு என்பர்.

**மனக்காயம்**

தலைவி தன்னைப் பழித்தாள் என்று கேள்வியுற்ற பரத்தையக்குச் சினம் வந்தது அதனால், பரத்தையின் சுயமோகம் காயம்பட்டு விட்டது. இந்நிலையை மனக்காயம் என்று மன ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

"பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
யாமஃதயர்கம் சேறுந்தானஃது
அஞ்சுவது உடையாளாயின் வெம்போர்
.....
கிளையொடுங் காக்கதன் கொழுநன் மார்பே" (குறுந்தொகை – 80)

இப்பாடல் தலைவி தன்னைப் பழித்துக் கூறியமைக்கு விடை கூறும் முகமாகப் பரத்தைக் கூற்றாக அமைகிறது. பரத்தைத் தலைவன் தன்னுடன் புனலாட வருவதைக்காண இயலாதவளாகத் தலைவி அஞ்சுவதாகவும், தலைவனைத் தன்னிடமிருந்து காக்க வேண்டுமாயின் வள்ளல் எழினி பகைவர்களிடமிருந்து தன் சுற்றத்தாரோடு வந்து தன் கணவனைக் காத்துக் கொள்ளட்டும் என்கிறாள்.

மனக்காயத்தின் வெளிப்பாடாகப் பரத்தை தலைவியால் தலைவனை மீட்க முடியாது என்பதன் மூலம் தலைவியின் இடத்தில் தான் இருப்பதாகத் தன் நனவிலி ஆசையை வெளிப்படுத்துகிறாள்.

தலைவி தன்னைப் பழித்தாள் என்ற செய்தியைக் கேட்டதும் பரத்தையர் உள்ளத்தில் மனக்காயம் ஏற்படுகிறது.

"பகன்றைக் கண்ணிப் பல்லான் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும்
யாணர் ஊர! நின் மனையோள்
யாரையும் புலக்கும் எம்மை மற்று எவனோ" (ஐங்குறுநூறு – 87)

தலைவி தன்னைப் பற்றாக்குறை கூறினாள் என்ற செய்தியைக் கெட்ட பரத்தை ஒருத்தி நேரே தலைவிக்குக் கேட்குமாறு சாடையில் சொல்கிறாள். பரத்தை தலைவி மீது சினங்கொண்டு பழித்த இயல்பினை பொதுமையாக்கிக் கூறுகின்றாள். "நம்முடைய சிந்தனை பெருமளவில் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படாது. கோபம், அச்சம், வெறுப்பு ஆகிய மனவெழுச்சிகளின் செல்வாக்கினால் செயற்படுகிறது. ஒரு குழு அல்லது சமுதாயம் அல்லது இனத்தைச் சார்ந்த ஒருவரை வெறுக்கலாம். வெறுப்பின் காரணமாக அவை பழித்துரைக்கின்றோம்." இவை பொதுமையாக்கம் என்று உளவியலாளர் கூறுவதாக து.சிவராஜ் கூறுகின்றார்.

சினம் பொங்கிய பரத்தையின் சுயமோகம் காயம் பட்டுவிட்டது. இதனை மனக்காயம் என லக்கான் கூறுகின்றார். தற்காதல் எல்லா உயிர்களுக்கும் உண்டு. வந்த விருந்தினரைத் தலைவன் தானே வந்ததாகக் குறித்து, யாம் விரும்பி அயர்கம் என்கிறாள். அதாவது என்மீது (பரத்தை) எந்தக் குற்றமில்லை. தலைவன் என்னைத் தேடி வந்தான். நான் அழைக்கவில்லை. விருந்தினராக வந்த தலைவனே ஏற்று விருந்து செய்தேன் என்ற மனநிலையைப் பரத்தை பற்றிய பாடல்கள் குறிக்கின்றன.

**பின்னோக்கம்**

வாழ்வில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நிகழும் போதும், விருப்பங்கள் முறிவற்று உள்ளப் போராட்டம் மிகும் போதும் உள்ளம் தன்னை அறியாமல் இறந்த காலத்தின் இயல்பிற்குச் சென்று விடுகிறது. இதனையே பின்னோக்கம் என்பர்.

தலைவனும், தலைவியும் உடன்போக்கை மேற்கொண்டபின் நற்றாயும், செவிலியும் தன் மகளை நினைத்து வருந்துகிறாள். தன் வருத்தத்தின் போது, தன் மகளின் வாழ்வில் முன்னர் நடந்த நிகழ்ச்சியினை எண்ணிப் பார்க்கின்றாள்.

"மணிசெய் மண்டைத் தீம்பால் ஏந்தி
ஈனாத் தாயர் மடுப்பவும் உண்ணாள்
நிழற்கயத்தன்ன நீள்நகர் வரைப்பின்
எம்முடைச் செல்வமும் உள்ளாள்" (அகநானூறு – 105)

தன்மேல் அன்பாக நடந்து கொண்ட நிகழ்வுகளைச் செவிலித்தாய் நினைத்து வருந்துகிறாள். இதனை உளவியலாளர் பின்னோக்கம் என்கிறார். "வாழ்வில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நிகழும் போது, உள்ளம் தன்னை அறியாமல் இறந்த காலத்தின் இயல்பிற்குச் சென்றுவிடுகிறது. தொடக்க வாழ்க்கைக்குக் குறிப்பாகக் குழந்தைப் பருவத்துக்குரிய

உளவியல் சார்ந்த செயல்முறைகளாகிய பழைய நிலைக்குச் செல்கிறது எனும் கருத்துப்படி நோக்கினாள் செவிலி தன் மகளைப் பற்றி நினைத்தது தற்காலிகமான ஒரு பிரிவிற்குத் தற்செயலான துயரமாக அமைந்து விடுகிறது.

இற்செறிக்கப்பட்டுத் தனிமையில் புலம்பும் தலைவியின் உள்ளம் இறுக்கமும், நெருக்கடியும் மிக்கச் சூழலில் முன்பு களவுக் காலத்து தலைவன் இரவுக் குறிக்கண் வந்து சென்றமையை நினைக்கின்றாள்.

"நாம முதலை நடுங்குபகை அஞ்சான்
காமம் பெருமையின் ஞான்றை
அருகாது ஆகிய அண்கண் நெஞ்சம்" (நற்றிணை – 287)

இப்பாடலில் என் உள்ளம் அச்சத்தாலும், கவலையாலும் கேட்டு வருந்துகிறதே என்பது தலைவியின் எண்ணமாகும். தலைவனைச் சந்திக்க இயலாத சூழலில் சந்தித்த நேரங்களை எவ்வடிவிலேனும் நினையுறுமாறு உள்மனம் செயற்பட்டு ஒரு வகையான மறைமுக ஆறுதலுக்கு வழி வகுக்கிறது.

"ஆய்பூ அரும்பின் அலர்கொண்டு உதுக்காண் எம்
கோதை புனைந்த வழி
உதுக்காண் சாஅய் மலர்காட்டி சால்பிலான் யாம் ஆடும்
பாவை கொண்டு ஓடியுழி
உதுக்காண் தையால் தேறு எனத் தேற்றி அறனில்லன்
பைய முயங்கி யுழி" (கலித்தொகை – 144)

இப்பாடலில், தலைவனைப் பிரிந்து கையற்றுக் கவலையுற்றத் தலைவியொருத்தி தலைவனொடு சென்று உறவாடிய இடங்களுக்கு மீண்டும் செல்கிறாள். இதுதானே தலைவன் அரும்பின் மலர் கொண்டு எனக்காக மாலை கட்டிய இடம். இதுதானே கோரைப் புல்லால் ஆன பொம்மையைக் கொண்டு ஓடி என்னைப் பின்தொடரச் செய்த இடம். இதுவன்றோ எனக்கவன் தோய்யில் பொறித்த இடம். இதுவன்றோ பிரியேன் எனத் தெளிவுரை கூறியென்னை அணைத்த இடம் எனச் சொல்லிப் புலம்புகிறாள். "ஒரு குறிப்பிட்ட உள்ளப்போராட்டம் மிக்க சூழலைச் சமாளிப்பதற்காக முன்னிருந்த நிலைக்குத் திரும்புதல் பின்னோக்கமாகும்" என்ற உளவியல் வரையறை இச்சூழ்நிலையோடு பொருந்துகிறது.

**திரிபுணர்ச்சி**

பிறழ்ந்த நடத்தைகளில் ஒன்றாக இருப்பது திரிபுணர்ச்சி ஆகும். இத்திரிபுணர்ச்சி கொண்டோர் தற்செயலாக இயல்பான நிகழ்ச்சிகளிலும் மறைபொருளையே காண்பர். ஒருவர் அவரைச் சாதாரணமாகப் பார்ப்பதை எச்சரிக்கும் முறைப்பாகவும் இயல்பாக நடைபெறும் இயற்கை நிகழ்வுகளைத் தன்னைப் பயமுறுத்துவதாகவும் எண்ணுவர்.

பருவ மாற்றத்தின் அடிப்படையில் கார்ப்பருவம் இயல்பாக வருகின்றது. இந்நிலையில் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியைத் தேற்றிய தோழியிடம், பாம்பகள் இறந்துபடுமாறு மிகுந்த வேகத்தோடு இடிக்கப்படும் இடியோசையும், புயற் காற்றோடு வரும் பெருமழையும் தலைவனைப் பிரிந்திருக்கும் என் மீது இரக்கம் காட்டாது துன்புறுத்துகின்றன என்கிறாள்.

“..... ஆர்அளி இலையோ நீயே? பேர் இசை
இமயமும் துளக்கும் பண்பினை
துணையிலர், அளியர்இ பெண்டிர் இஃது
எவனோ? ” (குறுந்தொகை – 158)

இயற்கை பருவமாற்றமாகிய கார்காலம் தன்னைத் துன்புறுத்தவே வந்தது என நினைப்பது தலைவியின் திரிபுணர்ச்சி நிலையேயாகும்.

**தன்முகத்திருப்பம்**

மனமுறிவைத் தவிர்க்கவும், தணிக்கவும் பிறரை உள்ளத்தாலும், உடலாலும் தாக்குதல் உண்டு. மாறாக அத்தாக்குதல் வேகத்தைத் தன்மீது திருப்பிக் கொள்ளுதல் ஒரு தற்காப்பு இயங்கு முறையாகும். “தாக்குதல் வகையைச் சார்ந்த உள்மன உந்துதல்கள் புறஉலக இலக்கினின்று பின்வாங்கித் தன்மீதே செலுத்துப்படுவதைத் தன்முகத்திருப்பம்” என உளவியலாளர்கள் வரையறை செய்கிறார்கள்.

பிரிந்துசென்ற தலைவன் குறித்த நேரத்தில் வருவான் என்னும் உறுதியான நம்பிக்கை, கார்காலம் காலமல்லாத காலத்து வந்ததாகத் தோன்றும் எண்ணம் ஆகிய இரண்டிடைப்பட்டத் தலைவி பிறபொருள் மேல் வெறுப்பினைக் காட்ட இயலாத நிலையில்,

“கொல்லைக் கோவலர் எல்லி மாட்டிய
பெருமர ஒடியல் போல
அருள் இலேன் அம்ம அளியேன் யானே” (நற்றிணை – 289)

எனத் தன்னைத்தானே குறைகூறிக் கொள்கிறாள். ஆயர்கள் இரவில் கொளுத்திய வெட்டுண்ட வேர் மரக்கட்டை தானே எரிந்து தானே அவிதல் போலத் துன்பத்தீயில் தலைவி தவிக்கிறாள். அருளிலேன், அளியேன் என்னும் தொடர்களிலும் ஆதரவற்ற இரக்கத்திற்கு உரிய நிலையில் தன்னைத் தானே நிறுத்திப் பேசுகிறாள்.

“மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழிஇய துணங்கை யானும்
யாண்டும் காணேன் மாண்தக் கோனை
யானும் ஓர் ஆடுகள மகளே என்கைக்
கோடுஈர் இலங்கு வளைநெ கிழ்த்த
பீடுகெழு குரிசிலும், ஓர் ஆடுகள மகனே.” (குறுந்தொகை – 31)

காணாமல்போன தனக்கேற்றவனாகக் கருதிய தலைவனைத் தேடி ஆடுகளங்களுக்கு நான் செல்கிறேன். இவ்வாறு ஆடுகளங்களில் திரிந்து கொண்டிருப்பதால் நானும் ஓர் ஆடுமகளாகிவிட்டேன். என் வளைநெகிழும்படி என்னை வருத்துகின்ற தலைவன் ஓர் ஆடுகளமகன். இப்பாடலில் அரசியாகிய தான் ஓர் ஆடுகளமகளாகத் திரிகிறேன் என்பது தன்முகத்திருப்பமாக அமைகிறது.

**நிறைவுரை**

சங்க இலக்கியமானது மானிடவாழ்வையும் வரலாற்றையும் இயம்புவதாக அமைகின்றது. உளவியல் என்பது மனிதனை ஆராயும் இயலாக அமைகின்றது. இவ்விரண்டிற்கும் மனித மனமே அடிப்படையாக உள்ளது. மனித எண்ணங்களையும், நடத்தைகளையும் அய்வதே உளவியல் எனப்படும். மனிதனின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளையும், அதற்கான

காரியங்களையும் கண்டு ஆராயும் ஓர் அறிவியல் துறையே உளவியலாகும். தலைவன் பொருள் காரணமாகவும், பரத்தையர் கூடும் பிரிதல் மூலம் அச்சம், கவலைப்படுவதால் தலைவி உள்ளப்போராட்டத்திற்கு ஆளாகின்றாள். மேலும், அன்புடைச் சற்றம் ஒருபுறம். நெஞ்சுறைக் காதலன் ஒருபுறம். இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் தலைவி உள்ளப்போராட்டத்தினால் தவிப்பதை அறிய முடிகிறது. தலைவன் பொருளின் தேவை நினைக்கின்றான். அதனால், தலைவியை விட்டு பிரிகிறான். அப்பிரிவை ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ள முறிவுக்கு ஆளாகுகின்றதை அறியமுடிகிறது. தலைவன் - தலைவியே விட்டுப் பிரியும் போதும், தோழி இரவுக்குறி – பகற்குறி மறுக்கும் போதும் தலைவனின் உள்ள முறிவு அல்லது உள்ளம் கவலைப்படுவதை உணர்த்துகிறது. தலைவி, பரத்தையரைக் குறை கூறும்போது பரத்தையர் உள்ளம் மனக்காயம் அடைந்துள்ளதாகச் சங்க அகப்பாடல்கள் வழி அறியமுடிகிறது. துன்புறுத்தும் நிகழ்ச்சிகளில் உணர்வின் ஈடுபாட்டைக் குறைத்துக் கொள்ளுதல், துன்ப சூழல்களைப் பின்னர் எண்ணும் மனம் ஆகிய எண்ணப் போக்குகள் சங்கத் தலைவியர் பாடலில் காணமுடிகிறது. மேலும் துன்பத்தில் இருக்கும் போது, பழைய இன்ப நிகழ்ச்சிகளை நினைத்து ஆறுதல் அடைதல், ஒருவர் இன்னொருவர்க்கு ஆறுதல் கூறும்போது பழைய நிகழ்வுகளை நினைத்துப் பார்த்தல் மூலம் பின்னோக்கம் உத்தியைக் காணமுடிகிறது. சுருங்கக்கூறின், உள்ள உணர்வின் படப்பிடிப்பே இலக்கியமாகும். உள்ள உணர்வைப் பற்றிய படிப்பு உளவியலாகும். எனவே இலக்கியமும், உளவியலும் தொடர்புடையன என்பதனை இவ்வாய்வின் மூலம் அறியலாம்

**துணைநூற்பட்டியல்**


இரவிச்சந்திரன் தி.கு (2015), சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், அலைகள் வெளியீட்டகம், சென்னை

நலங்கிள்ளி. அரங்க (2020), சங்க இலக்கியம் : ஒரு ஃபிராய்டிய உளப்பகுப்பாய்வு வாசிப்பு, பரிசில்

சிவராஜ்.து , (1994) சங்க இலக்கியத்தில் உளவியல், சிவம் பதிப்பகம், வேலூர்

மருதநாயகம்.ப, சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீயும் மேல அறிஞரும்

தமிழண்ணல், சங்க இலக்கியம் ஒப்பீடு, பாரி நிலையம், சென்னை

தமிழண்ணல், ஒப்பியல் அறிமுகம், பாரிநிலையம், சென்னை

கைலாசபதி . க, (1988) சமூகவியலும் இலக்கியமும், நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை

மாணிக்கனார். வ.சுப , (2009) தமிழ்க்காதல் , பாரிநிலையம், சென்னை.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சங்க அகப்பாடல்களில் – ஆறு, யாறு

# River in the Sangam Agam Songs

முரளி/ Murali[1]
[1] Assistant Professor, Crescent Deems University, Chennai
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆறு, யாறு என்னும் இரு சொற்களின் பொருண்மைகளை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆறு, யாறு என்னும் இரு சொற்களின் பொருண்மைகளை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆறு, யாறு என்னும் இரு சொற்களின் பொருண்மைகளை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** சங்கம், அகப்பாடல்கள், ஆறு, யாறு

**Abstract**

The major objective of the research is to explore correspondences of the two words Aaru and Yaaru in the Sangam literature. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the correspondences of the two words Aaru and Yaaru in the Sangam literature. The research claims to be the first such attempt to do a study regarding the correspondences of the two words Aaru and Yaaru in the Sangam literature.

**Keywords:** River, Sangam Literature, Agam, Songs

## முன்னுரை

”எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே” எனத் தொல்காப்பியர் கூறியுள்ளாரே! எல்லாச் சொற்களுமே பொருள் உடையன. குறிப்பிட்ட ஒரு பொருள் இல்லாமல் ஒரு சொல் தோன்ற முடியாது என்பது இந்நூற்பாவின் கருத்து. அதற்கேற்ப சங்க நூல்களில் இடம்பெறும் சொற்களும் தத்தம் பொருளை எடுத்தியம்புகின்றன. ஆண்டுகள் பல சென்றாலும் வேர்ச்சொல் நின்று பொருள் விளங்கும் தன்மையுடையது. இங்கு ஆறு, யாறு எனும் இரு சொற்கள் வெவ்வேறு பொருளை தருவதனை உரிய சான்றுகளோடு நிறுவப்பட்டுள்ளது. ஆறு என்ற சொல் சங்க காலத்தில் நீர் நிலையைச் சுட்டவில்லை மாறாக வழி மற்றும் நெறிப்படுத்தலை குறிக்க பயன்பட்டுள்ளது. நீர் நிலையைச் சுட்ட யாறு எனும் சொல் வந்துள்ளது. இதனை, பஃறுளியாறு, பேரியாறு, தென்பெண்ணையாறு போன்ற சொற்களால் விளங்கிக்கொள்ள முடிகிறது. ஆனால் தற்போது நீர் நிலையைச் சுட்ட ஆறு எனும் சொல் பயன்பாட்டில் உள்ளது. இக்கருத்தானது எப்படி பயணத்தைக் குறித்த பரி எனும் சொல் குதிரையை குறித்ததோ அதுபோல வழியினை குறித்த ஆறு எனும் சொல் நீர் நிலையைக் குறிக்கிறது. இந்த மாற்றப் பொருள் பெரிய குழப்பத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால் பல்லவபுரம் பல்லாவரம் என்றும் காஞ்சிபுரம் காஞ்சிவரம் என்றும் மாறும் போது வரலாற்றுப் பிழையே நேரிட வாய்ப்புள்ளது. ஒரு நிலத்தில் தோன்றிய சொல் திரித்து எழுதுவதும் அந்நிலத்திற்கு இழைக்கப்பட்ட பேரழிவாகும். இதனை கருத்தில் கொண்டு இவ்வாய்வு நிகழ்தப்படுகிறது.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## தரவுப் பகுப்பாய்வு

தமிழரது பழமொழிகளில் எதிர்மறை கருத்தாக்கங்களை காணவியலாது. இதற்கான சான்றாக பழமொழி நானூறு விளங்குகிறது. ஆனால் சொற்களை திரித்துக் கூறும் போது நமது முன்னோர் சிந்தனையை இழிவு படுத்துவது போல் அமைந்துவிடும். எப்படியெனில் கழு தைக்க கற்பூர வாசனை வரும் என்பது பழமொழி அதாவது கழு எனும் புல் வகையிலிருந்து படுக்கை தைக்க கற்பூர வாசனை வரும் என்பது பழமொழியின் உண்மைக் கருத்தாகும். இதனை கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை எனும் போது பழமொழியின் உண்மை பொருள் கெடுகிறது. மேலும் தமிழரது நேர்மறை சிந்தனையும் கெடுகிறது. இத்தகைய கருத்தாக்கங்களோடு இக்கட்டுரையானது சங்க அகப்பாடல்களில் ஆறு, யாறு எனும் தலைப்பில் அமைந்துள்ளது.

தொல் தமிழர் வாழ்வானது இயற்கையோடு இணைந்தது. இதனை சங்கப் பாடல்களில் காணமுடிகிறது. சங்கப் பாடல்களில் மரங்கள், செடிகள், கொடிகள், மலர்கள், தானியங்கள், பழங்கள், விலங்குகள், பறவைகள், மீன்கள் என இயற்கைத் தொடர்பான குறிப்புகள் பல காணப்படுகின்றன. அக்குறிப்புகள் யாவும் பழந்தமிழருடைய வாழ்வியல் நெறிமுறைகளை அறிந்துகொள்ள உதவுகிறது. சங்க அகப்பாடல்களில் ஆறு, யாறு என்னும் இரு சொற்களின் பொருண்மைகளை எடுத்தியம்புவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

வறண்ட சுரத்தைச் சார்ந்தப் பகுதியில் புலியானது கள்வர்களை உண்டு வாழும். அவ்வறண்ட நிலத்தின் வழியே கள்வர்கள் சென்றுள்ளார்கள். இதில் வழியென்னும் பொருளில் ஆறு ஆளப்பட்டுள்ளது. இதனை,

"ஆறு செல் மாக்கள் சென்னி எறிந்த"
(நற்றிணை 2, 3)

என்னும் பாடலடியில் கட்டப்பட்டுள்ளது.

தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்லும் தலைவன் தன் நெஞ்சிற்கு சொல்லியதாக காட்சி அமைகிறது. இக்காட்சியில் ஆறு என்னும் சொல் வழியென்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. இதனை,

"பனைக் கான்று ஆறும் பாழ்நாட்டு அத்த"
(நற்றிணை 126, 6)

என்னும் பாடலடியில் சுட்டப்பட்டுள்ளது.

தலைவனது இரவுக்குறி வருகையினால் தலைவி அச்சப்படுகிறாள். ஏனெனில் தலைவன் கடந்து வருகின்ற வழியானது கொடுமையானது. இருள் சூழ்ந்த வானம், கொடிய காடு, கடுஞ்சினத்தையுடைய புலி, இத்தகைய கொடிய வழிகளைத் தலைவன் கடந்து வருவதை விட வாராமை நல்லது என தலைவி எண்ணுவதாக பாடல் அமைகிறது. இப்பாடலில் ஆறுயென்னும் சொல் வழியென்னும் பொருளில் குறிக்கப்பட்டுள்ளது. இதனை,

"விலங்கு மலை ஆர் ஆறு உள்ளுதொறும்"
(நற்றிணை 154, 11)

என்னும் அடியில் ஆறு என்னும் சொல் வழியென்னும் பொருளில் சுட்டப்பட்டுள்ளது.

தலைவன் தலைவியுடன் களவுக்காலத்தில் சுர வழியில் கூடியிருந்தான் அப்போது களிறொன்று பிரிதொரு காரணத்தினால் பிளிறியது. அவ்வொலியினைக் கேட்ட பிடி தன்னை அழைப்பதாக எண்ணி தானும் பிளிறியது. இதனைத் தோழி களவுக் காலத்தில் சுர வழியில் தலைவியுடன் கூடியிருந்தமையை தலைவனுக்கு நினைவு படுத்தியதாக பாடல் அமைகிறது. இங்கு ஆறுயென்னும் சொல் சுர வழியினைக் குறிக்க ஆளப்பட்டுள்ளது. இதனை,

"ஆறு இடையிட்ட அளவைக்கு வேறு உணர்ந்தது"
(நற்றிணை 318, 7)

என்னும் அடியினில் சுட்டப்பட்டுள்ளது.

பகற்குறி இடையீடு ஏற்பட்டமையால் தலைவன் இரவக்குறிக்கு தோழியிடம் உதவி நாடுகிறான். அவ்வேலையில் தோழியும் தலைவனிடம் எங்கு எப்போது வரவேண்டுமென

கூறுகிறாள். தலைவனும் தோழி சொன்ன வழியில் தலைவியை இரவுக்குறியில் காணச்செல்கிறான். இக்காட்சியில் ஆறுயென்னும் சொல் வழியென்னும் பொருளில் வருவதை அறியமுடிகிறது. இதனை,

“வரும் ஆறு ஈது அவன் மறவாதீமே”
(நற்றிணை 323, 11)

என்னும் அடியினால் அறியமுடிகிறது.

பொருள்வயிற் பிரிந்த தலைவன் தான் வருவதாய் குறித்துச்சென்ற பருவம் வந்தது. ஆனால் தலைவன் வரவில்லை. மணமிக்க மலர்களும் யாற்று நீர் ஒட்டமும் பருவக் காலத்தை உணர்த்தியது. இதனை

”தேறுநீர் கெழீஇய யாறுநனி கொடிதே”
(நற்றிணை 97, 4)

என்னும் அடிகளில் யாறு என்னும் சொல் பருவக்காலத்தை உணர்த்த ஆளப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

இரவுக் குறியில் வரும் தலைவன் கொடிய யாற்றை கடக்க நேரிடும். இதனையுணர்ந்த தோழி அச்சத்தோடு தலைவியிடம் தெரிவித்தாள். இடியேறு விழுந்தமையால் களிறு இறந்தது. இறந்த களிற்றின் கோட்டினை அறுத்து எடுத்துக்கொள்வார்கள். வானம் தூறலிட்டுக் கொண்டே இருந்தமையால் நீர் பெருக்கெடுத்தது. யாறு அகன்ற அழுத்தத்தோடு ஓடியது. இந்த யாற்றை கடந்து வரும் தலைவனின் நிலை கொடுமையானது என தோழி தலைவியிடம் கூறுகிறாள். இங்கு யாறு என்னும் சொல் நீர் நிலையினைக் குறிக்க ஆளப்பட்டுள்ளது. இதனை,

”யாறுகிடந் தன்ன அகனெடுந் தெருவில்”
(நற்றிணை 200, 4)

என்னும் அடிகள் வழி அறியமுடிகிறது.

நற்றினையில் ஐந்து இடங்களில் ஆறு என்னும் சொல் வந்துள்ளது. இவ்வைந்து இடங்களிலும் ஆறு என்னும் சொல் வறண்ட சுர வழியெனக் குறிக்கப்பட்டுள்ளது. குறிஞ்சியும் முல்லையும் தம்முறையில் திரிந்த நிலை பாலை என அறியப்படுகிறது. நற்றிணையில் ஆறுயென்னும் சொல் பெரும்பாண்மையாக பாலைத்திணையில் சுட்டப்பட்டுள்ளது. ஆறு நேரடியாக நீர் நிலையைக் குறிக்காமல் நீர் சென்ற வழியினைக் குறித்துள்ளது. இதனை சங்க அகப்பாடல்களில் சுட்டப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. நீண்டு அகன்று ஓடக்கூடிய நீர் நிலையினைக் குறிக்க யாறு என்னும் சொல் ஆளப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் தேடிச் சென்றுள்ளான். அவன் சென்றுள்ள நிலமோ வறண்ட சுரப்பகுதி. கொடிய கள்வர்கள் உள்ள அவ்வழியில் தலைவன் சென்றுள்ளமையை எண்ணி தலைவி வருத்தமுற்றாள். இங்கு ஆறு என்னும் சொல் வழியென்னும் பொருளில் குறிக்கப்பட்டுள்ளது. இதனை,

”ஆறுசெல் மாக்கள் புட்கொளப் பொருந்தும்”
(குறுந்தொகை 140, 2)

என்னும் அடியில் காணமுடிகிறது.

கொடிய சுர வழியில் பொருள் தேடிச் சென்றுள்ளான் தலைவன். சுர வழியில் மலையிடுக்கில் புலியானது தன்னுடைய புலாலுணவை பதுக்கி வைத்திருக்கும். அவ்வழியினைக் கடந்து செல்லும் தலைவன் தலைவியை நினைத்துப் பார்க்கவில்லை. அவ்வாறு நினைத்திருந்தாள் மணமிக்க மலரைச் சூடிய தலைவியை விரைந்து சேர்வான். இதில் ஆறுயென்னும் சொல் கொடிய சுர வழியென்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. இதனை,

”ஆறுசெல் மாக்கள் சேக்கும்”

(குறுந்தொகை 253,7)

என்னும் அடியில் சுட்டப்பட்டுள்ளது.

கூறிய வில்லினைச் செருத்தக் கூடிய கொடிய மக்கள் வாழ்கின்ற சுரப் பகுதியில் தலைவன் செல்லவிருக்கின்றான். அவ்வாறு தலைவன் தனித்துச் செல்வதைக் காட்டிலும் உடன் தலைவி சேர்ந்து செல்வது இனிது என தோழி கூறுகிறாள். இக்கொடிய வழியினை ஆறு என்னும் சொல்லால் ஆளப்பட்டுள்ளது. இதனை,

”மாறுநின் றிறந்த ஆறுசெல் வம்பலர்”

(குறுந்தொகை 297, 3)

என்னும் அடியில் வருவதை அறியமுடிகிறது.

மாமரத்தினது தளிரையொத்த தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் தேடிச் செல்கின்றான். அவ்வாறு செல்லும் நிலமோ நீர் வற்றிய மூங்கிலையுடைய அரிய வழி. அவ்வழியில் கள்வர்கள் கொலைத்தொழில் புரியும் நிலமது. இக்கொடிய நிலத்தினை ஆறு என்னும் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. இதனை

“ஆறுசெல் வம்பலர் தொலைய மாறு நின்று”

(குறுந்தொகை 331, 2)

என்னும் அடியினால் அறியமுடிகிறது.

பொருள்வயிற் பிரிந்த தலைவனை எண்ணி தலைவி கலங்குகிறாள். இதனைக் கண்ட தோழி தேற்றுகிறாள். கொடிய காட்டைக் கடந்து பொருள் வேட்கையால் தலைவன் சென்றுள்ளான். இதில் வறண்ட நிலமானது ஆறு என்னும் சொல்லால் அறியப்படுகிறது. இதனை

“ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்”

(குறுந்தொகை 350, 6)

என்னும் அடியினுள் சுட்டப்பட்டுள்ளது.

குறுந்தொகையில் ஆறு என்னும் சொல் ஐந்து இடங்களில் வருகிறது. அவ்வைந்து இடங்களிலும் பாலைத்திணையில் வருவதனை அறியமுடிகிறது. வறண்ட கொடிய நிலப்பகுதியை ஆறு என்னும் சொல்லால் குறுந்தொகையில் ஆளப்பட்டுள்ளது. குறுந்தொகையில் ஆறு என்னும் சொல் நீர்நிலைப் பகுதியைக் குறிக்கவில்லை. நீர்நிலையினைக் குறிக்க யாறு என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள பழைய நீர்நிலைப் பகுதிகளில் ஒன்றான சேயாறு குறிக்கப்பட்டுள்ளது. இதனை,

”சேயாறு சென்று துனைபரி யசாவா”

(குறுந்தொகை 269, 1)

என்னும் அடியில் வருவதனை அறியமுடிகிறது.

யாற்றினையுடைய வளமிக்க பகுதிக்கு உரியவன் தலைவன். அவ்வளமைக்கு உரிய தலைவன் பரத்தையிடம் சென்றான். இந்நிகழ்வு தலைவிக்கு துன்பம் தருவதாய் அமைந்தது. இதனை,

“யாறுநிறை பகரு நாடனைத் தேறி”

(குறுந்தொகை, 271, 2)

என்னும் அடியில் சுட்டப்பட்டுள்ளது.

வினை முடித்து இல்லம் திரும்பும் தலைவன் விரைந்து தேரைப்பூட்டுமாறு தேர்ப்பாகனிடம் தேரைச் செலுத்தச் சொன்னான். யாற்று நீரையொட்டியப் பாதையில் தேரானது செல்லவிருக்கிறது. இதில் சேயாறு குறிக்கப்பட்டுள்ளது. இதனை,

”சேயாறு செல்வா மாயின் இடரின்று”

(குறுந்தொகை 400, 1)

என்னும் அடியில் சுட்டப்படுள்ளது.

போர்த் தொழிலை முடித்து இல்லம் திரும்பும் தலைவனது மனநிலை மகிழ்ந்திருந்தது. அவ்வேலையில் தலைவன் தேரை விரைந்து செலுத்துமாறு தேர்ப்பாகனிடம் உரைத்தான். இவ்வுரையாடலில் ஆறு என்னும் சொல் வழியென்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. உ.வே.சா. அவர்களும் இக்காட்சியில் வரும் ஆறு என்னும் சொல்லின் பொருள் வழியென உரை கொடத்துள்ளார். ஐங்குறுநூற்றில் ஆறு என்னும் சொல் வரும் அடியாவது.

”ஆறுவனப்பு எய்த அலர்தா யினவே”

(ஐங்குறுநூறு 483, 1)

என்னும் அடியில் குறிக்கப்பட்டுள்ளது.

விரைந்து தேரைச் செலுத்த வறண்ட நிலம் தேவை. இவ்வறண்ட நிலவழியினைக் குறிக்க ஐங்குறுநூற்றில் ஆறு என்னும் சொல் பயன்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

கலித்தொகையில் ஆறு என்னும் சொல் நெறியென்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. மணங்கமழ் கள்ளினை உண்டவர் நெறிதவறி பேசும் இயல்புடையவர். இதனை,

”ஆறு அல்ல மொழி தோற்றி அறவினை”

(கலித்தொகை 147, 1)

என்னும் அடியினால் அறியமுடிகிறது.

அகநானூற்றில் ஆறு என்னும் சொல் இருபத்துமூன்று இடங்களில் வருகிறது. பெரும்பாண்மையாக பாலைத்திணையில் இருபத்தோறு இடங்களில் வருகிறது. அகநானூற்றில் ஆறு என்னும் சொல் அதிகமாக இடம்பெருவதை ஆய்வின் வழி அறியமுடிகிறது. அவ்வாறு வருமிடங்களில் ஆறு என்னும் சொல் வழி நெறி என்னும்

பொருளில் குறிக்கப்பட்டுள்ளது. ஆறு என்னும் சொல் அகநானூற்றில் நீர் நிலையினைக் குறிக்கவில்லை. மாறாக வறண்ட நிலப்பகுதியைக் குறிப்பதனை அறியமுடிகிறது. சங்க அகப்பாடல்களில் யாறு என்னும் சொல் வடசொல்லான நதியென்னும் பொருளையொத்தது. தற்போது யாறு என்னும் சொல் நேரடியாக வழக்கத்தில் இல்லை. யாறு என்னும் சொல்லுக்கு மாற்றாக ஆறு என்னும் சொல்லை மக்கள் வழங்குவதை அறியமுடிகிறது. யாண்டு என்னும் பழஞ்சொல் தற்போது ஆண்டு என வழங்குவதை அறியமுடிகிறது. அவ்வாறு யாறு என்னும் சொல் ஆறு என மாறியதாகப் பொருள் கொள்ள முடியாது. ஏனெனில் சங்க அகப்பாடல்களில் மிகத் தெளிவாக யாறு, ஆறு என்னும் இருச் சொற்களும் பயன்பாட்டில் இருந்துள்ளது. அதன் இருபொருளும் வெவ்வேறு என்பதாகும். அதில் ஆறு என்பது வறண்ட நிலப்பகுதியைக் குறித்துள்ளது. இதனை வெளிப்படுத்தும் பாங்கில் சங்க அகப்பாடல்கள் பல அமைகின்றது. தலைவன் பொருள்வயிற் பிறிவினை மேற்கொண்டு பலகாலம் ஆகிவிட்டது. தான் வருவதாய் சொல்லிச்சென்ற காலமும் வந்தது. ஆனால் தலைவன் வரவில்லை. இதனை எண்ணி தலைவி கவலைக் கொள்கிறாள். ஏனெனில் தலைவன் சென்றுள்ள சுர வழி மிகக் கொடுமையானது. இதில் கொடிய சுரவழியானது ஆறு என்னும் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. இதனை

”வெந்து ஆறு பொன்னின் அந்தி பூப்ப”
(அகநானூறு 71, 6)

என்னும் அடியின் வழியே அறியமுடிகிறது.

அகநானூற்றில் ஆறு என்னும் சொல் கொடிய சுர வழியில் தலைவன் சென்றுள்ளமையும் தலைவி தலைவனோடு மேற்கொண்ட உடன் போக்கு தலைவியின் துயரை தோழி தேற்றுதல் என்ற கருத்தில் குறிப்பு ஆமைந்துள்ளது. அக்குறிப்புகள் யாவும் ஆறு என்னும் சொல் வழி நெறி என ஆளப்பட்டுள்ளமையை அறியமுடிகிறது. தலைவியின் மனக் குழப்பத்தை உரிய வழியில் நெறிப்படுத்த பணியினை தோழி செய்வதாக காட்சி அமைகிறது. இதனை,

”ஆறு அன்று என்னா வேரு அல்காட்சி”
(அகநானூறு 73, 9)

என்னும் அடியினால் அறியமுடிகிறது.

அகநானூற்றில் யாறு என்னும் சொல் நீர்நிலையினைக் குறிக்க பயன்பட்டுள்ளது. தலைவியை தலைவன் விரைந்து மணங்கொள்ளுமாறு தோழி வேண்டுகிறாள். அவ்வேலையில் தலைவனது நாட்டின் வளத்தைத் தோழி பட்டியலிடுகிறாள். வயிரத்தையொத்த கோட்டினையுடைய பன்றியானது சேம்பின் கிழங்கை நிறையத்தின்று யாற்று நீர் ஒட்டத்தை அடுத்துள்ள பக்கத்தில் சுவை மிக்க ஊற்று நீரைப் பருகும்.

இங்கு யாறு என்னும் சொல் நீர் நிலையினைக் குறிக்கக்கூடிய பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது. இதனை,

“யாறு சேர்ந்தன்ன ஊறுநீரப் படாஅர்ப்”
(அகநானூறு 178, 7)

என்னும் அடியினுள் சுட்டப்பட்டுள்ளது.

தலைவன் பரத்தையுடன் அகன்ற யாற்றில் நீர் விளையாட்டில் ஈடுபட்டான். இதனை ஊரவர் கண்டதால் தலைவி சினங்கொள்கிறாள். ஆகையால் தோழி தலைவனுடைய வாயிலினை ஏற்க மறுக்கிறாள். இக்காட்சியில் தலைவன் பரத்தையோடு விளையாடிய நீரநிலைப் பகுதி யாறு என்னும் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. சங்க அகப்பாடல்கள் முழுமையும் நாம் தற்போது வழங்கும் ஆறு என்னும் சொல் முற்றிலும் யாறு என்று வழங்கப்பட்டுள்ளது. ஆறு என்பது முற்றிலம் நீர்நிலைச் சாராத வறண்ட வழி, நெறி என்னும் பொருளில் குறிக்கப்பட்டுள்ளது. அகநானூற்றில் யாறு என்னும் சொல் நான்கு இடங்களில் ஆளப்பட்டுள்ளது. அந்நான்கு இடங்களிலும் தற்போது அறியப்படும் ஆறு என்னும் சொல் போல யாறு குறிக்கப்பட்டுள்ளதை ஆய்வின் வழி அறியமுடிகிறது.

முல்லைப் பாட்டில் பாசறையின் இயல்பு என்னும் பகுதியில் யாறு என்னும் சொல் குறிக்கப்பட்டுள்ளது. அகன்ற காட்டில் யாறு சூழ்ந்துள்ள பகுதியில் பாண்டிய மன்னனுடைய படையானது அகன்ற பாசறையை அமைத்திருந்தனர். இதனை,

”கான் யாறு தழிஇய அகல் நெடும்புறவில்” (முல்லைப்பாட்டு 21)

என்னும் அடியில் சுட்டப்பட்டுள்ளது.

பட்டினப் பாலையில் யாறு என்னும் சொல் குறிக்கப்பட்டுள்ளது. காட்டாற்று வெள்ளம் போனபின் காய்ந்து கிடக்கும் வெண்மணலின் ஓரத்தில் பேக்கரும்பின் பூ வெள்ளை வெளேரென்று பூத்துக் கிடப்பதுப் போல சோறு படைக்கும் அறச்சாலையில் கொடி கட்டப்பட்டிருந்தது. பலவகைக் கொடிகள் கட்டப்பட்டிருந்த காட்சி பட்டினப்பாலையில் பேசப்பட்டுள்ளது. அக்காட்சியில் யாறு என்னும் சொல் நகரின் வளமையைக் குறிக்க எடுத்தாளப்பட்டுள்ளது. இதனை,

“வருபுனல் தந்த வெண்மணற் கான்யாற்று”
(பட்டினப்பாலை 161)

என்னும் அடியில் ஆளப்பட்டுள்ளது.

பட்டினச் சிறப்பினை எடுத்தியம்புவது பட்டினப்பாலை. இதில் பலவகைக் கடைகளை அடையாளங் கண்டுகொள்ள கொடிகளானது பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் யாறு என்னும் சொல்லும் பட்டினச்சிறப்பற்காக ஆளப்பட்டுள்ளது. சங்க அகப்பாடல்களில் ஆறு யாறு என்னும் இரு சொற்கள் முற்றிலும் வெவ்வேறு பொருள்களில் இருப்பதனை அறியமுடிகிறது. இதில் ஆறு என்பது சங்கச் சூழலில் நெறி வழி என்னும் பொருளில் சுட்டப்பட்டுள்ளது. ஆறு என்னும் சொல் நீர் நிலைச்சாராத சூழலில் நெறி வழி என்னும் பொருளில் சுட்டப்பட்டுள்ளது. ஆறு என்னும் சொல் நீர் நிலைச்சாராத சூழலில் குறிக்கப்பட்டுள்ளது. சங்க அகப்பாடல்களில் ஆறு என்னும் சொல் தற்போது வழங்கும் பொருளில் உள்ளதைப் போல இல்லை. முற்றிலும் மாறாக எதிர்ப் பொருளில் வறண்ட நிலத்தைக் குறித்துள்ளது. திருவள்ளுவர் ஆறு என்னும் சொல்லை நெறி வழி எண் என மூன்று பொருளில் குறிப்பிடுகிறார். திருவள்ளுவர் ஆறு என்னும் சொல்லினை எண் என்று குறிப்பிடும் இடமாவது.

”படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு”

(திருக்குறள் 381)

என்னும் திருக்குறளில் ஆறு என்னும் சொல் எண்ணிக்கையை குறிப்பதனை அறியமுடிகிறது. ஆற்றல்மிகு படை, அறிவார்ந்த குடிமக்கள், குறையாவளம், குறையற்ற அமைச்சு, முரிபடாத நட்பு, மோதியழிக்க முடியாத அரண் ஆகிய ஆறு சிறப்புகளை கொண்ட அரசன். அரசர்கள் பலருக்கிடையே சிங்கம் போன்றவனாவான்.

## நிறைவுரை

ஆறு நீர்நிலை என்று வள்ளுவர் குறிப்பிடவில்லை. நீர்நிலையைக் குறிக்கின்ற தற்போது பயன்படுத்தக் கூடிய ஆறு என்னும் சொல் சங்க அகப்பாடல்களில் யாறு என்று ஆளப்பட்டுள்ளது. இதனை சங்க அகப்பாடல்களின் வழியே அறியமுடிகிறது. யாண்டு என்னும் சொல் ஆண்டு என மருவி வந்துள்ளது. இதில் யாண்டு ஆண்டு இரண்டும் ஒரு பொருளைக் குறிக்கக் கூடியவை. யாறு என்னும் சொல் காலப்போக்கில் ஆறு என மருவி வந்தது, எனப் பொருள் கொள்வது பிழை, ஏனெனில் தெளிவாக ஆறு, யாறு என்னும் இரு சொல்லும் ஒரு பொருளைத் தருவன அல்ல. இரண்டும் வெவ்வேறு பொருள் தருவன என்பதனை சங்க அகப்பாடல்கள் வழியே அறியமுடிகிறது.

## துணைநூற்பட்டியல்


இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.

மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை

விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.

திருவாசகம் விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.

சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு

தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.

புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), சென்னை, 1971.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# அகம்பேசும் புறம்

# Self-talking Side

கே. இரா. கமலாமுருகன் / K.R. Kamala Murugan[1]
[1] Assistant Professor, Queen Mary's College
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச்சாரம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் அகப்பாடல்களில் காணக்கிடக்கும் புறச் செய்திகளை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, பண்டை இலக்கியங்களில் காணப்படும் தமிழரின் கல்வி முறைகளை அகப்பாடல்களில் காணக்கிடக்கும் புறச் செய்திகளை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு அகப்பாடல்களில் காணக்கிடக்கும் புறச் செய்திகளை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** அகம், புறம்

**Abstract**

The major objective of the research is to explore the self-talking side. This research is designed in a qualitative approach. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the self-talking side. The research claims to be the first such attempt to do a study regarding the self-talking side.

**Keywords:** Akam, Puram

## முன்னுரை

உலகமொழிகளில் பண்பான வாழ்வியலைப் பாங்காக எடுத்துரைக்கும் மொழிகளின்கருவூலமான இலக்கியங்களை மிக பழங்காலம் முதற் கொண்டு பெற்றுவளர்ந்து சிறந்தது நம்முடைய இன்தமிழ் மொழியாகும். அவ்வகையில் கிடைத்த புதையல்களான சங்க இலக்கியங்கள் முதன்மை ஆதாரங்களாய்ப் பொலிந்து சங்கத்தமிழரின் வாழ்வியலின் இருக்கூறுகளாகிய அகம் புறம் இரண்டினையும் இருவேறு திறன்களில் எடுத்துரைக்கின்றன.

அவ்வகையில் அகம் உணர்வுகளைப் பதிவுச்செய்ய எழுந்த அகநானூறு என்றபாடல்கள் தொகுப்பில் பல புறம் சார்ந்த சிந்தனைகள் குறிப்பாக மன்னர்கள் பற்றியவரலாற்றுச் சிறப்பு மிக்க செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை அடையாளப்படுத்துவதாக இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு

### அகத்தில் புறம்

அகநானூறு அகத்தைப் பேச எழுந்த நூல் எனினும் இதனை ஒரு ‘வரலாற்றுப் பெட்டகம்’ என்று கூறும் வகையில் பல்வேறு அரிய வரலாற்றுச் சிறப்புடைய மன்னர்களின் தகவல்களை எடுத்துரைக்கக் கூடியதாக அமைந்துள்ளது. அவ்வகையில் மூவேந்தர்கள் மற்றும் குருநிலமன்னர்கள் பற்றிய பல முக்கிய குறிப்புகளை எடுத்துரைக்கும் பாடலடிகளினை அடையாளம் காண முடிகின்றது. மேலும் பல வாழ்வியல் தொடர்பான புறச் செய்திகளும் இங்கு காண இயலுகின்றது.

### குறுநிலமன்னர்கள்

குறுநில மன்னர்களில் சிலர் தம் வள்ளல் தன்மையால் மிகுதியான புகழினைப் பெற்றவர்களாக வாழ்ந்தார்கள். இத்தகைய சிறப்புடைய மன்னர்களைப் பற்றிய குறிப்புகளை அகநானூறு பல்வேறு பாடல்களில் சுட்டியுள்ளது.

“ஏந்து கோட்டு யானை வேந்தர் ஒட்டிய கடும்பரிப் புரவிக்கைவன் பாரி” (அக-78)

என்ற பாடலடிகளில் பாரியின் வள்ளல் தன்மையினை நக்கீரர் சுட்டுகின்றார்.

“வரைபுரை களிற்றோடு நன்கலன் ஈயும்

உரைகல் வண்புகழ்ப் பாரி” (அகம் 303)

என்று ஔவை பாடுகின்றார்.

பாரி ஒரு வரலாற்றுச் சிறப்புடைய வள்ளல் தன்மையில் சிறந்த மன்னன் என்பது பலரும் அறிந்த உண்மை. எனவேதான் அகநானூற்றுக் காலமாகிய சங்ககாலத்திலேயே பாரியின் சிறப்பினை,

“பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப் பதுவே” (புறம் 107)

என்று சுட்டுகின்றது.

பாரி முல்லைக் கொடிக்குத் தேர் வழங்கிய சிறப்பினைப் பழமொழி,

“முல்லைக்குத் தேரும் –” என்று (பழமொழி நானூறு 361)

எவை எவையார்க்கு அணி என்பதனை சுட்டுகிறது.

காரிஇ வல்வில்ஓரியினைப் பற்றிய குறிப்பினை,

“முள்ளூர் மன்னன் கழல்தொழக் காரி
செல்லா கல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலறுக்கு ஈத்த” (அகம் -209)

என்ற பாடலடிகளிள் அறிய இயலுகின்றது.

இம்மன்னன் பற்றிய குறிப்பினை புறநானூறு,

“வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும் பிரிது உறி இப்
புகழ் தலைப் புகாக் கலை உருட்டி உரல்தலைக்
கேழல் பன்றி வீழ்அகியலது
ஆழற் புற்றத்து உடும்பில் செற்றும் (புறம்- 152)

இப்பாடல் வல்வில்ஓரியின் வீரத்தின் சான்றாக அமைகின்றது.

திருமுடிகரி என்னும் மன்னன் வல்வில்ஓரியைக் கொன்று கொல்லிமலையைச் சேர்ந்தவர்க்கு அம்மலையை உரிமையாக்கியவன் என்பதளானக் குறிப்பினை, அகம் -209 சுட்டுகின்றது. மேலும்,

“ ---------- கோவற் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கால் மூன்றுறை
பெண்ணை அம் பேரியாற்று நுண் அயல் கடுக்கும்” (அகம் -35)
என்று குடவாயிற் கீரனார் சுட்டுகின்றார்.

ஆய் அண்டிரன் என்ற மன்னன் மேகங்கள் தவழும் பொதிய மலையின் அருகில் இருந்த ஆய் குடியின் தலைவன் ஆவான்.

"இழை அணி யானை இயல்நேர் மிஞலியோடு
நண்பகல் உற்ற செருவில் புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்கு அமர் வீழ்ந்தென்" (அக 208)

என்ற பாடலடிகளால் அவனது வீரச் செயலைப் போற்றுகின்றது.

அதியமான் நெடுமான் அஞ்சி என்பனப் பற்றிய குறிப்பினை,

"பத்து புடைப்பன்ன பாணிப் புல்அயர்
சில்பரிக் குதிரை பல்வேல் எழினி
கெடல் அருந் துப்பின் விடுதொழில் முடிமார் (அகம் -105)

என்ற பாடலடிகளில் சுட்டுகின்றது அகநானூறு.

**பேகன்**

மயிலுக்கு குளிருக்குப் போர்வை போர்த்தி அதன் நடுக்கம் தீர்க்க முனைந்தான் என்பதான குறிப்பு பேசப்படுகின்றது.

இன்றுவரை இச்செய்தியை பலரும் மயில் குளிரில் நடுங்கியதைக் கண்டு அதற்குப் போர்வை வழங்கினான் என்று பேசுகின்றது.

ஏன் அந்த பேகன் வான் மழை கண்டு தன் தோகை விரித்தாடும். மயிலின் அழகினைக் கண்டு அதனை சிறப்பு செய்ய வேண்டும். என்ற நோக்கின் அதற்குப் பொன்னாடை போர்த்தும் இன்றைய மரபினைப் போன்று போர்வை சார்த்திருப்பான் என்று தான் எண்ணவேண்டியுள்ளளது. எனினும் இச்செய்தியினை,

"வண்டுபடு நறவின் வண்மகிழ்ப் பேகன்
கொண்டல் மாமலை நாறி" (அகம் 262)

என்று பரணர் சுட்டுகின்றார்.

இவரது கொடைப் பண்பின் சிறப்பினையும் தமிழ்மீது கொண்ட காதலையும்,

"பெருமலை விட ரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு நீத்தனையே !" (புறம் 91)

என்ற பாடலடிகளில் ஔவையின் வாக்கால் அறிய இயலுகின்றது. தொடர்ந்து இவ் வரிசையில் நள்ளி என்ற மன்னனும் சுட்டப்படுகின்றார். இவர் 'தோட்டி' என்னும் மலை நாட்டின் மன்னன் என்பதாகக் குறிப்பு உள்ளது. இவரது சிறப்பினை,

"வானம்போல இரப்போர்க்குத்
தேரினைக் களிற்றொடு பரிசிலாக
வழங்கும் தன்மையன்" (அகம் 238)

என்பதனை சுட்டுகின்றது.

மேலும் ஆற்றலையுடை வீரர்களின் தலைவன் என்பதனை,

"தோலில் வல்வில் இளையர்
பெருமகன் நள்ளி" (அகம் 152)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

கடைஏழுவள்ளல்கள் என்ற சிறப்புடைய இவர்கள் பற்றிய குறிப்புகள் மட்டுமின்றி ஆவி, எழினி, நன்னல் பறையன், பொருநள், ஆதன், மிஞிலி, தரும்பன், மத்தி, நித்தன், உதியன், பண்ணன், அன்னி, பெரியன், அதியன், புல்லி, எவ்வி, வாணன், ஆட்டனத்தி, குரும்பியன், எருமை என்ற மன்னர்கள் பற்றிய குறிப்புகளும் கிடைத்துள்ளன.

**கோசர்கள்**

தென்னிந்திய அரச இனங்களாகத் திகழ்ந்த நான்கினுள் சத்புத்திரர் எனப்பட்டவர்களும் அடங்குவளர். இவர்களே வரலாற்றில் கோசர்கள் எனச் சுட்டப்படுகின்றனர். கோசர் என்பதற்கு கொங்கு மண்டலத் தரசர், பழைய வீரர் குடியினருள் ஒருவர் என்று கழகத்தமிழ் அகராதி பொருள் கூறுகின்றது. அகநானூற்றில் கோசர்களைப் பற்றிய குறிப்புகளை மாமூலனார், பரணர், நக்கீரர், இகல்லாடனார், ஐயூர் முடவனார் முதலான புலவர்களின் பாடல்களில் அறிய இயலுகின்றது.

கோசர்கள் மோகூர் பழையன் என்னும் அரசரின் அவைகளத்திலுள்ள மறவர்கள் இவர்கள் சொன்ன சொல் மாறாதவர்கள் என்பதனையும் அவருடைய நற்பண்பினையும் நக்கீரர்,

"வாய்மொழி நிலைகிய சேன் விளக்கு நல்லிசை
வளங்கெழு கோசர் விளங்கு படை நுறி
நிலங்கொள் வெஃகிய பொலம் பூங்கிள்ளி" (205)

என்று போற்றுகின்றார்.

**யவணர்**

யவணர்கள் என்பவர்கள் பழங்காலத்தில் கிரேக்கர்களையும் ரோமர்களையும் குறித்த சொல்லாக சங்க இலக்கியம் சுட்டுகின்றது. அவ்வகையில் அகநானூற்றின் 149இ 251 உள்ளிட்ட பாடல்களில் யவணர் பற்றிய குறிப்புகளை அவர்களது வணிகச்சிறப்புகளை வீரத்தைப் பேசுகின்றன.

**மோரியர்**

புலவர் உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார் மோரியர் பற்றிய குறிப்பினைப் பதிவு செய்துள்ளார் (அகம் 69)

**மூவேந்தர் சிறப்புகள்**

அகநானூற்றின் பல பாடல்கள் மூவேந்தர் தம் சிறப்புகளைப் பாடலடிகளில் எடுத்துரைக்கின்றன. இந்நூலினுள் பாண்டியன் நெடுஞ்செழியன்இ பசும்பூட் பாண்டியன்இ கரிகாற்சோழன்இ கிள்ளி வளவன்இ நெடுஞ் சேரலாதனஇ; களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்இ உதயஞ் சேரலாதன்இ நன்னன் போன்ற பெருவேந்தர்கள் பற்றிய குறிப்புகளைக் காண இயலுகின்றது. சான்றாக,

கிள்ளி வளவன் சிறப்பை,

"இழை அணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறந்த
கிள்ளிவளவன் நல் அமர் சாஅய்
கடும்பரிப் புரவியோடு களிறு பல வல்லி
ஏதில் மன்னர் ஊர்கொள" (346)

என்று நக்கீரர் போற்றுகின்றார்.

சோழனின் சிறப்பினை,

"அண்ணல் யானை அடுபோர்ச்
வெண்ணெல் வைப்பின் பருவூர்ப் சோழர் பறந்தலை ----------
இருபெறு வேந்தரும் பொருது களத்து ஒழியஇ
ஒளிருவாள் நல் அமர்க் கடந்த ஞான்றை
களிறுகவர் கம்பலை போல" (96)

என்று மருதம் பாடிய இளங்கோ பதிவு செய்கின்றார்.

சேர மன்னனை அன்னி யானைப் பற்றிய பதிவில்,

"அன்னி குறுக்கைப் பறந்தலை திதியன்
தொல் நிலை முழுமுதல் துமியப் பண்ணி" (அகம் 45)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன.

பாண்டியர்கள் பற்றிய சிறப்பினுக்கு,

"மறப்போர் பாண்டியர் அறத்திற் காக்கும்
கொற்கை" (அகம் 27)

என்ற பாடலடிகள் சான்றாகின்றன.

## நிறைவுரை

அகநானூறு என்னும் நெடுந்தொகையில் வேந்தர்கள் குறுநில மன்னர்கள் மட்டுமின்றி வாழ்வியல் சூழல், போர்நிலைகள் பற்றிய பல்வேறு செய்திகளை சுவையாகவும் சிறப்பாகவும் எடுத்துரைப்பதனைக் காண்கிற போது இந்நூல் மட்டுமல்ல சமுதாயத்தில் குறிப்பாக சங்க கால மக்கள் எதனைப் பாடுகிறபோதும் நாட்டுப் பற்றோடும் சமுதாய உணர்வோடும் மொழிப் பற்றோடும் வாழ்ந்துள்ளமையினை அறிய இயலுகின்றது. கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்ப வாசிப்பின் நேசிப்பில் புரியும். புரிந்த பாவேந்தன் கூறிய,

"நூலைப்படி நூலைப்படி சங்கத்தமிழ் நூலைப்படி"

என்பது வேக்கு புறத்தில் அகம் காணலாம் என்பது அன்றைய மொழி அகத்தில் புறம் காணலாம் என்பது என்றும் உள்ள மொழி.

## துணைநூற்பட்டியல்


இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.

மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை

விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.

திருவாசகம் விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.

சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு

தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.

புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), சென்னை, 1971

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# திருக்குறளில் நீரியல்

# Hydrology in Thirukkural

ராஜகுமாரி. ஈ / Rajakumari[1]
[1] முனைவர்பட்ட ஆய்வாளர், இலக்குமிபுரம் கலை & அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி மாவட்டம்
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் திருக்குறளில் காணக்கிடக்கும் நீரியல் குறித்த தகவல்களை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, திருக்குறளில் காணப்படும் நீரியலை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு திருக்குறளில் நீரியல் குறித்த தகவல்களை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** திருக்குறள், நீரியல்

**Abstract**

The major objective of the research is to explore the hydrology in the text of Thirukkural. This research is designed in a qualitative approach. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the the hydrology in the text of Thirukkural. The research claims to be the first such attempt to do a study regarding the hydrology in the text of Thirukkural of Tamils.

**Keywords:** Hydrology, Thirukkural

## முன்னுரை

அறம் பொருள் இன்பம் எனும் முப்பாலும் அமையப் பெற்று முக்காலத்தையும் நிலைநிறுத்தி எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஏற்றமிகு செவ்விலக்கியம் திருக்குறளாகும். இதில் இல்லாத கருத்துக்களே இல்லை எனும் அளவிற்கு அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியத் திருக்குறளை, 'ஓதற்கெளிதாகி உணர்தற்கரிதாகி வேதப்பொருளாய் விளங்குவது' என மாங்குடிமருதனார் புகழாரம் சூட்டுகிறார். அந்த வகையில் மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான நீரைப் பற்றியும் வள்ளுவம் அழகுற எடுத்தியம்புகிறது. 'நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே' எனும் மோசிக்கீரனாரின் மொழிக்கேற்ப நீர் மனிதனின் உயிர்நாடியாக விளங்குகிறது. திருக்குறளில் காணப்படும் நீரின் சிறப்புகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## நீரின் சிறப்புகள்

மனிதனின் முக்கியத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் என்பனவற்றுள் முதலாவதுத் தேவை உணவாகும். உணவென்பது திடப்பொருள்களையும், நீர்மத்தையும், உள்ளடக்கியதாகும். தூயத்தண்ணீர் ஒரு தலைசிறந்த மருந்தாகும். உணவில்லாமல் பல நாள்கள் உயிரோடு வாழலாம். ஆனால் நீரருந்தாமல் அதிகநாள்கள் வாழமுடியாது. தண்ணீரின் மகத்துவத்தை உணர்ந்தே நம்முன்னோர்கள் 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்று சொல்லி வைத்துள்ளனர். மேலும் 'நீர் கெடுந்தோறும் சீர் கெடும்' எனும் முதுமொழி நீரின் வளமையை வைத்தே ஒரு சமூகம் உயர்ந்த நிலைமைக்குச் செல்லமுடியுமென்று உணர்த்துகிறது. "தாயில்லாப் பிள்ளை கெடும், நீரில்லாப் பயிர் கெடும்" எனும் பழமொழி நீரை தாய்மைக்கு ஒப்பாக்குகிறது. இரண்டு உலகப்போர்களைச் சந்தித்த இவ்வுலகமானது, மூன்றாவதாக ஒரு யுத்தத்தைச் சந்திக்குமானால் அது தண்ணீரை வைத்தே ஏற்படுமென்று இயற்கை வல்லுநர்கள் கூறுகின்றனர். இறைவனே நீர் (அப்பு) லிங்கமாக திருவானைக்காவல் கோவிலில் குடிக்கொண்டுள்ளார். நீர் மேலாண்மையை அதிகரிக்க நீர்நிலைகளை உருவாக்கிய மன்னர்கள், கோவில்களிலும் திருக்குளங்களை வெட்டி நீர்மேலாண்மைக்குச் சிறப்பான தொண்டாற்றியுள்ளனர்.

**இலக்கியங்களில் நீர்**

நீராதாரம் சிறப்பாக இருந்தால் தான் ஒரு நாடும், நாட்டு மக்களும் சிறப்பாக வாழமுடியும். இக்கருத்தை,

"வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும்,
குடியுயரக் கோலுயரும் - கோலுயரக் கோன் உயரும்"
(புறநானூறு – 58)

எனும் பாடல் நீரின் சிறப்பை, ஔவையின் வாழ்த்துப் பாவாக விளக்கி நிற்கிறது. மேலும் புறநானூற்றுப்பாடலானது,

"நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம் - உண்டிக் கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே! உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உண்வெனப்படுவது நிலத்தொடு நீரே"
(புறநானூறு – 18)

என நீரின் சிறப்பபை விளக்குகிறது. திருவாசகத்தில்,

"நீரிலின் சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட"
(திருவாசகம், திருவண்டப்பகுதி – 25)

என ஈசனே நீரின் சுவையாகத் திகழ்கிறாரென மாணிக்கவாசகர் பதிவு செய்துள்ளார்.

"பெருங்குளக் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனவே "
(அகநானூறு 252, 13 – 14)

பாடல், தாய் தன் குழந்தைகளைப் பேணிக்காப்பதுபோல நீர் நிலைகளை பராமரித்ததை நக்கணையார் பதிவு செய்துள்ளார். இதுபோல பல்வேறு இலக்கியங்களும் நீரின் சிறப்புகளைப் பதிவு செய்துள்ளன.

**மழைநீர் உயிர்நீர்**

நீரின் சிறப்பை அறிந்தே வள்ளுவரும் கடவுள் வாழ்த்திற்கு அடுத்ததாக வான்சிறப்பு அதிகாரத்தைப் படைத்துள்ளார். மழை நீரானது உயிர் நீராகும். மாரியல்லாமல் காரியமில்லை. இப்புவியில் மூன்றில் இரண்டு பங்கு நீரால் சூழ்ந்து காணப்பட்டாலும், மனிதத் தேவைக்கான தண்ணீர் தட்டுப்பாடாகவே காணப்படுகின்றது. நீரே உலக செல்வங்களுக்கெல்லாம் அடிப்படை ஆதாரம். நீருக்கு ஆதாரமான மழை இல்லையென்றால் இவ்வுலகம் ஒழுக்கத்தினின்றும் தவறிவிடும். என்பதனை,

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையாது ஒழுக்கு" (குறள் - 20)

எனச் சுட்டுகிறது. முறையான மழை பெய்யாவிடில் ஒழுக்கத்தின் அடிப்படைகளான தானம், தவமிரண்டும் முறையாக நடைபெறாமல் போய் விடும். மழைபெய்யாமல் வறட்சி நிலவுமாயின் பிறர்க்குதவும் உயர்ந்த குணமும் இல்லாமற்போய்விடும். இதனை வான்சிறப்பின்,

“தானம் தவம் இரண்டும் தாங்கா வியன் உலகம்
வானம் வழங்காதெனின்” (கு – 19)

எனும் குறள் நற்குணங்களுக்கு மூலாதாரமாக விளங்குவதே மழை என குறிப்பிடுகிறது. இக்கருத்தையே நான்மணிக்கடிகை,

“நீர் இடும்பை புள்ளினுள் ஓங்கல் அறியும்” (நான் மணிக்கடிகை – 97)

என்ற அடி மூலம் குறிப்பிடுகிறது. மேலும்,

“சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு” (கு – 18)

எனும் குறள் ஒழுங்காக மழை பெய்யாமல் போனால் வானத்துத் தேவர்களுக்கு நடத்தும் திருவிழாக்களும், தினந்தோறும் நடக்கும் வழிபாடுகளும் நடைபெறாமல் போய்விடுமென்று மழையின் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது.

மழை பொழிவதாலேயே உலக உயிர்கள் நிலைத்து வாழ்கின்றன. மழைநீரானது உயிர்களுக்குச் சாவா மருந்தான அமிழ்தம் போன்றதென,

“வான் நின்று உலகம் வழங்கி வருதலால்தான்
அமிழ்தம் என்றுணரல் பாற்று” (குறள் - 11)

என குறள், மழையை அமிழ்தமாக உயர்வாய்க் கூறுகிறது. மேற்கூறிய கருத்துக்களையே பகவான் கிருஷ்ணர், மழையிலிருந்தே உணவு உற்பத்தியாகிறதெனவும், வேள்விகள் மூலம் மழை பொழிவதாகவும் பகவத்கீதையின் கர்மயோகப் பாடலில்,

“அன்னாத் பவந்தி பூதானி பர்ஜன்யாதன்ன ஹம்பவ:1
யக் ஞாத்பவதி பர்ஜன்யோ யக்ஞ: (கர்மயோகம் - 14)

எனும் அடிகள் மூலம் விளக்குகிறார்.

மழை, உண்பவர்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை விளைவித்து தானும் ஓர் உணவாகப் பயன்படுகிறதென வான்சிறப்புக் குறள்,

“துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை” (குறள் - 12)

என பதிவு செய்துள்ளது. மேலும் பருவமழை பொய்க்குமாயின் இவ்வுலகம் பசியால் வாடுமெனவும், (கு – 14), மழை பெய்தால் தான் சிறு புல் கூட முளைக்குமெனவும் (கு – 16), உரியகாலத்தில் பெய்யாமல், பாழ்பட்டு போன உயிர்களை உயிரூட்டுவதும் மழையெனவும் (கு – 16), கடல்நீரை ஆவியாக்கி பெய்யும் மழையானது பெய்யாமல் போனால் இப்பரந்த சமுத்திரமே தன் வளமையிலிருந்து குன்றி விடுமெனவும் (கு – 17) குறிப்பிட்டு, நீருக்கு ஆதாரமான மழையின் சிறப்பைக் குறள் விளக்குகிறது.

## குறள் வழி நீரின் சிறப்புகள்

எந்தப் பிரதிபலனுமின்றி சான்றோர்கள் செய்யும் கைம்மாறு கருதாத உயர் குணத்திற்கு நிகரானது, கைம்மாறு கருதாமல் பெய்யும் மழையெனவும் (கு – 211), உலகத்தார் விரும்பும் வண்ணம் உதவிகள் செய்யும் பேரறிவாளனுடைய செல்வத்திற்கு ஒப்பானது, ஊரின் நடுவே அனைவருக்கும் பயன்படுமாறு அமைந்திருக்கும் குளமெனவும் (கு – 2) ஒருவருடைய உள்ளத்து தூய்மையினை அவர் பேசும் வாய்மைச்சொற்கள் வெளிப்படுத்துதல் போல, அவருடைய புறத்தூய்மை நீரால் அமையுமெனவும் (கு – 298), உறவுகளோடு கலந்து பழகாத ஒருவருடைய வாழ்க்கையானது, கரையில்லாத குளத்திலே உள்ள தண்ணீரைப் போல பயனற்றதெனவும் (கு – 523), நிலத்தடிநீர், புவியின் மேற்பரப்பிலுள்ள நீர், ஆறுகள் போன்றவை ஒரு நாட்டின் முக்கிய உறுப்புகளாகுமெனவும் (கு – 737) நீரின் சிறப்புகளை பட்டியலிடும் குறள், பல சிறப்புகளையும் பெற்ற நீரானது உயிர்களுக்கும், உடமைகளுக்கும் துன்பத்தைத் தருமாயின் அது தீயதெனவும் (கு – 881) நீரின் பல்வேறு சிறப்புகளையும் குறள்கள் பதிவு செய்துள்ளது.

## நீர் நிலைகள்

எவ்வளவுதான் சிறப்பாக மழை பொழிந்தாலும், அம்மழைநீரைப் பாதுகாப்பான முறையில் சேமித்து வைக்காவிட்டால், மழை நீரினால் அதிகப் பயனை நாம் பெறமுடியாது. மழை இல்லாத காலத்தில் தண்ணீர் தேவைகளுக்காக நம் முன்னோர்கள் அணை, ஏரி, குளம், கிணறு, இலஞ்சி போன்ற நீராதாரங்களை உருவாக்கி நீரை சேமித்து வைத்தனர். நிலத்தில் சராசரியாக பெய்யும் மழையில் 40% கடலில் கலப்பதாயும், 35% வெயிலில் ஆவியாகுவதாகவும், 14% நிலத்தடி நீராகவும், 10% புவியின் ஈரப்பதத்திற்கு உதவி செய்வதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நிலத்தடிநீர் மட்டம் குறைந்து வரும் நாடுகளில் நம்முடைய இந்திய நாடும் ஒன்றாகும். வள்ளுவம் நீரினை மழை, நீர், புனல், வெள்ளம், துளி, போன்ற சொற்களால் அடையாளப்படுத்துகிறது. நீர் நிலைகளான கடல். உவரி, கேணி, ஊற்று, ஊருணி, குளம், அகழி, போன்றவற்றை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். நீரின் சிறப்புப் பெயர்களாக ஊற்றுநீர், மாறாநீர், இருபுனல், தமர்நீர், தெளிநீர், மணிநீர், விரிநீர், நெடும்புனல், உள்நீர் என்றெல்லாம் பதிவு செய்துள்ளார். ஆழமான நீரை நெடும்புனல் (கு – 495) எனவும், வற்றாத கடலை மாறாநீர் எனவும் (கு – 701) நிலத்தடிநீர், மேல் மட்டநீரை இருபுனல் எனவும் (கு – 737), தலைவன் தலைவி காதலைக் காமக்கடல் எனவும் (கு – 1164), கண்ணில் உற்பத்தியாகும் நீரை கண் நீர் எனவும் (கு – 780), கண்ணிறை நீர் எனவும் (கு -1315), உள்நீர் எனவும் (கு - 1177) உமிழ்நீரை வாலெயிறு ஊறியநீர் எனவும் (கு – 1121) பலவாறு நீரைப் பதிவு செய்துள்ளார் திருவள்ளுவர்.

## நீர் மாசுபடுதல்

மனிதர்கள் தேவையற்ற கழிவுகளை ஆறு, ஏரி, கடல், முதலான நீர் நிலைகளில் வீசுவதால் நீராதாரம் மிகவும் பாழ்பட்டு போகிறது. செயற்கை கழிவுகளால் கடலில் மிதக்கும் தீவுகள் உருவாகின்றன. நீர்வாழ் உயிரினங்கள் அதிக அளவில் அழிந்து வருகின்றன. நமக்கு

இயற்கையாகக் கிடைக்கின்ற நீரைச் சரியாக பாதுகாக்காமலும், நீராதாரங்களை முறையாக பராமரிக்காமலும், கழிவுகளைக் கொட்டுவதாலும், அங்கிருக்கும் நீரால் எவ்வித பயனுமில்லை. வெயில் படாமல் நிழலிலிருக்கின்ற நீரானது நோய்களையே உருவாக்கும். இதனை வள்ளுவம்,

"நிழல் நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்" (கு – 881)

எனக் குறிப்பிடுகிறது.

**வேளாண்மையில் நீர்**

நீரின் உயர்வை வைத்தே ஒரு நாட்டில் வேளாண்மையும் செழிக்கிறது, எவ்வளவோ கனிம வளங்கள் நிறைந்து காணப்பட்டாலும் ஒரு நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையவில்லையெனில், அந்நாடு வளத்தில் பின்தங்கிவிடுகிறது. உணவு உற்பத்திக்கு அடிப்படையான வேளாண்மை, நீரை நம்பியே பெரிதுமிருக்கிறது.

ஒரு வயலில் ஏர் உழுதலை விட எரு இடுதல் நன்று. இவை இரண்டிற்கும் அடுத்தபடியாகக் களை எடுத்து நீர் பாய்ச்ச வேண்டுமென்பதனை உழவு அதிகாரத்தின் குறள்,

"ஏரினும் நன்றால் எரு இடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு" (கு – 1038)

என பதிவு செய்துள்ளது. மேலும் காமநோய் அலர் தூற்றுதலை எருவாகவும், அன்னையின் கடுஞ்சொற்களை நீராகவும் கொண்டு சிறப்பாக வளர்கிறதென (கு – 147) கூறி காமநோயை பயிருக்கும், கடுஞ்சொற்களை உயிர்ஊக்கியான நீரிற்கும் ஒப்புமைபடுத்தி குறள் குறிப்பிட்டுள்ளது. வேளாண்மையில் நீரின் சிறப்பைக் குடபுலவியனார்,

"வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன் - வைப்பிற்று ஆயினும்
தண்ணி ஆளும் இறைவன் தாட்கு உதவாதே! ஆதனால் அடுபோர்ச்
செழிய இகழாது வல்லே – நிலன் நெளி மருங்கின் நீர்நிலை
பெருகத் - தட்டோர் அம்ம! இவன் தட்டோரே
(புறம் - 18; 24 – 30)

என புறநானூற்றில் பதிவு செய்துள்ளார்.

**நிறைவுரை**

வாழ்வியல் நெறிகளை வகுத்துக்கூறும் குறளானது இயற்கையின் அருங்கொடையான நீரின் சிறப்புகளையும் செம்மையுற முன்வைக்கிறது. இந்த உலகம் நீரை அடிப்படையாகக் கொண்டதென்றும், நீரானது பிறருக்குத் தானம் செய்யும், சுயநலமில்லா செல்வந்தரின் செல்வத்திற்கு ஒப்பானதென்றும், நீரானது ஒரு நாட்டை வளப்படுத்துவது மட்டுமல்லாமல், அரணாகவும் காத்து நிற்கிறதென்றும், வேளாண்மையில் நீரின் இன்றியமையாமை, பல்வேறு

நீர்நிலைப் பெயர்கள், நீரின் மாறுபட்ட அடைமொழிப் பெயர்கள் என நீரின் சிறப்பியல்புகளை இக்கட்டுரை மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.

**துணைநூற்பட்டியல்**

இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.

திருவாசகம் விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.

மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை

விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# தமிழ் இலக்கியங்களில் தமிழரின் உணவு முறைகள்

# Food Patterns of Tamils in Tamil Literature

சு. சதாசிவம் / S. Sathasivam[1]
[1] Assistant Professor, Chennai Christian College
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச்சாரம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் தமிழ் இலக்கியங்களில் காணக்கிடக்கும் தமிழரின் உணவு முறைகளை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் தமிழர்களின் உணவு முறைகளாகிய அமுது படைத்தல், உணவும் உயிரும், பசியெனும் தீ ஆகியவை ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வின் வழி, தமிழ் இலக்கியங்களில் காணப்படும் தமிழரின் உணவு முறைகளை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு தமிழ் இலக்கியங்களில் தமிழரின் உணவு முறைகளை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** தமிழ் இலக்கியம், தமிழர், உணவு முறைகள்

**Abstract**

The major objective of the research is to explore the food patterns of Tamils as found in Tamil literature. This research is designed in a qualitative approach. The library work is used for this study. The findings show that the food patterns of the Tamils such as Amudhu Charan, food and life, and fire and hunger have been investigated. This study is useful in teaching the younger generation about the the food patterns of Tamils found in Tamil literature. The research claims to be the first such attempt to do a study regarding the Tamil literature to examine the food patterns of Tamils.

**Keywords:** Tamil literature, Tamils, food patterns

**முன்னுரை**

உலகத்து உயிர்கள் அனைத்தையும் உய்விப்பதற்கு அடிப்படைக் காரணி உணவு. அஃறிணை, உயர்திணை ஆகிய உயிர்கள் யாவும் உயிர்வாழ்தலின் பொருட்டு உணவுத் தேடுவதிலேயே பெரும்பகுதி நேரத்தைச் செலவிடுகின்றன. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களால் ஆனது உடல். ஆதி மனிதன் முதல் தற்கால அறிவியல் யுக மனிதன் வரை உணவின் முக்கியத்துவத்தை உணராதவர் இல்லை. செடி, கொடி, பறவை, விலங்கு எனப் பலவகை உயிரினங்களும் தங்களுக்கேற்ற உணவை இயற்கையிலிருந்து பெறுகின்றன. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனித இனம் நாள்பட நாள்பட அவற்றிலிருந்து மெல்ல மெல்ல விலகி செயற்கை உணவினை உண்டு தங்களது சுயத்தையும் சுகத்தையும் இழந்து வாழும் இழிநிலை தற்போது ஏற்பட்டுள்ளது. உணவு ஆரோக்கியத்தின் அடிப்படையாக இருப்பின் உடலும் மனமும் ஆரோக்கியம் பெறும். உடலும் மனமும் ஆரோக்கியமானதாக இருப்பின் செயலும் விளைவும் செம்மையுடையதாக அமையும். சமூக மேம்பாட்டிற்கு மனித ஆரோக்கியம் முக்கியமெனில், மனித ஆரோக்கியத்திற்கு நலம் தரும் நல்வகை உணவுகளே தேவை. மாதக்கணக்கில் கெட்டுப்போகாத ஆயத்த உணவுகள் தெருவெங்கும் தென்படும் இவ்வேளையில் ஆரோக்கிய உணவுகளைத் தேடி அலையும் அவலம் தற்போது அதிகரித்திருக்கிறது. இன்றைய நிலையிலிருந்து நமது முன்னோர்கள் உணவு முறைகளில் எவ்வாறு இருந்தனர் என்பதை அறியும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**ஆய்வு நெறி முறைகள்**

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு**

ஆய்வுத் தரவுகள் தமிழர்களின் உணவு முறைகளாகிய அமுது படைத்தல், உணவும் உயிரும், பசியெனும் தீ ஆகிய பிரிவுகளில் பகுப்பாயப்பட்டுள்ளன.

அமுது படைத்தல்

‘அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு’ என்பது பழமொழி. அமிழ்தம் என்பது தேவர்கள் அருந்தக்கூடிய உணவு என்பதை,

> “இருந்தமிழே உன்னால் இருந்தேன் தேவர்
> விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்” (தமிழ்விடுதூது)

என்னும் தமிழ்விடுதூது பாடலடிகள் சான்றளிக்கின்றன.

பிற்கால ஔவையார் விநாயகப் பெருமானிடம் பால், தேன், பாகு, பருப்பு ஆகிய நான்கையும் கலந்த சுவைமிக்க உணவை உனக்குத் தருகிறேன். அதற்கு மாறாக நீ எனக்கு இயல், இசை, நாடகமாகிய முத்தமிழையும் தருவாயாக என வேண்டுகிறார். இதனை,

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் – கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா" (நல்வழி, கடவுள் வாழ்த்து)

எனும் பாடல் நமக்குப் புலப்படுத்துகிறது.

வடலூர் இராமலிங்க சுவாமிகள் மாணிக்க வாசகர் அருளிய திருவாசகத்தைப் பாடும் போது, நல்ல கருப்பஞ்சாற்றில் தேனும் பாலும் அத்துடன் சுவைமிக்க கனிகள் ஆகியன கலந்த உணவின் இனிமையைப் போன்று உள்ளதாகக் கூறுகின்றார். இதனை,

"வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"
(இராமலிங்க சுவாமிகள் பாடியது)

என்னும் பாடலடிகள் சுட்டுகின்றன.

"உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்று என்றே கண்கள் நீர் மல்கி"
(திருவாய்மொழி)

எனும் நம்மாழ்வார் பாடலடிகளும் உணவை இறைநிலையில் வைத்துப் போற்றுகின்றன.

உணவும் உயிரும்

நமது உடல் இயக்கத்திற்குப் பல்வேறு காரணங்கள் இருப்பினும் அவற்றுள் உணவே முதன்மையானது. இதனை மனதில் கொண்டே பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனிடம் குடபுலவியனார் என்னும் புலவர்,

"நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" (புறம் 18:18-23)

என்று பாடுவதிலிருந்து உணவின் முக்கியத்துவம் நமக்குப் புலனாகிறது,

உயிர்ப் படைப்பு இறைவனது என்றாலும், படைக்கப்பட்ட உயிர் நிலைத்து வாழ்வதற்கு உணவே அடிப்படைக் காரணமாக அமைகிறது. இதனைத் தொல்காப்பியர்,

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தியாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருஎன மொழிப" (தொல்.பொ.364)

எனத் தமது நூற்பாவில் தெய்வத்திற்கு அடுத்த நிலையில் உணவை வைத்துப் போன்றினார் போலும்.

பசி எனும் தீ

பசியென வந்தவர்க்கு உணவளித்தலே தருமங்களில் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' எனும் பழமொழி வழக்கில் உள்ளதும் நினைவுகூறத் தக்கது. 'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்னும் பழமொழியும் வழக்கில் உண்டு. மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, காமுறுதல் என்னும் பத்தும் பசியின் முன்பு நில்லாமல் மறைந்து விடும். இதனை ஔவையார்,

"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை – தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திட பறந்தும் போம்" (நல்வழி, பா.26)

என்று கூறுகின்றார். மேலும், பசியின் துயரத்தை ஔவையார்,

"ஒருநாள் உணவை ஒழிஎன்றால் ஒழியாய்
இருநாளுக்கு ஏல் என்றால் ஏலாய் – ஒருநாளும்
என்நோவு அறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது" (நல்வழி, பா.11)

என்று பகர்கின்றார்.

ஔவையின் கூற்றுக்கு வலுசேர்க்கும் விதமாக மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார்,

"குடிப் பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும் புணை விடூஉம்
நாண் அணிகளையும் மாண் எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி அது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என் நா நிமிராது"
(மணிமேகலை, 11:76-81)

எனப் பகர்வதாலும் அறியலாம்.

எவ்வளவுதான் பசிவந்து நம்மை வாட்டி வருத்தினாலும் எடுத்துக் கொள்ளும் உணவின் அளவு என்னவோ குறிப்பிடும்படியானதுதான் என்பதை ஔவையார்,

'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' (நல்வழி, பா.28"1)

என்றும், மதுரைக்கணக்காயர் மகனார் நக்கீரனார்,

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரோக்கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே" (புறம்.189:5-8)

என்றும் கூறுவதனால் அறியலாம்.

உணவு உயிர் வாழ்க்கைக்கு அடிப்படை என்பதனால் பிறர் பழிக்கும்படியான வழியில் அதனைப் பெறலாகாது. நம்மை ஈன்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய தாயாக இருப்பினும் சான்றோர்கள் பழிக்கும்படியான செயலில் ஈடுபட்டு பசிதீர்த்தல் கூடாது என்பதை வள்ளுவர்,

"ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" (குறள். 656)

எனக் கூறுகின்றார். நாம் உண்ணுகின்ற உணவு முறையாகவும் உடலுக்கு ஆரோக்கியம் தருவதாகவும் இருத்தல் வேண்டும். ஊறு விளைவிக்காத உணவை உண்டால் நமது உடலுக்கு நோய் தீர்க்கும் மருந்து என்ற ஒன்று அவசியமில்லை என்பதை வள்ளுவர்,

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு" (குறள், 945)
"மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (குறள், 942)

எனும் குறட்பாக்களின் வழி கூறுகின்றார்.

## நிறைவுரை

உலக அளவில் உணவு குறித்த விழிப்புணர்வு தற்போது அதிகம் ஏற்பட்டுள்ளது. அஃறிணை, உயர்திணை ஆகிய இருபால் உயிரினங்களுக்கும் உணவு என்பது அடிப்படை. உணவின் வகைபாடுகள் குறித்து பிங்கல நிகண்டு,

"உணாவே வல்சி யுண்டி யோதன
மசினப் பதமே யிரையா கார
முறையே யூட்ட முண வெனலாகும்" (பிங்கல நிகண்டு, 153)

எனக் கூறுகிறது. நமது முன்னோர்கள் இயற்கையில் விளைந்த உணவை உண்டு இயற்கையோடு இயைந்த ஆரோக்கியமான வாழ்வை மேற்கொண்டனர். நீண்ட ஆயுளோடும் வளமான மன ஆரோக்கியத்தோடும் இருந்தனர். உணவை இறைநிலைக்கு அடுத்து வைத்துப் போற்றினர். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனும் முதுமொழிக்கேற்ப வாழ்ந்தனர். இன்றைய உணவுக் கலாச்சாரத்திலிருந்து மீண்டு நம் முன்னோர்களின் பாரம்பரியம் மிக்க உணவு முறைகளுக்கு மாறுவது காலத்தின் கட்டாயமாக உள்ளது. விளம்பர உணவுகளை விட விளம்பரமற்ற தரமான உணவு வகைகளே நமக்குத் தேவை. கல்வியும் அதனால் நேர்ந்த கண்டுபிடிப்புகளும், நம் பழந்தமிழன் எதை உண்ண வேண்டும், எதைத் தவிர்க்கவேண்டும் எனக் கண்ட அனுபவத்திற்கு முன் இணையாகாது.

## துணைநூற்பட்டியல்


இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.

மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை

விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.

திருவாசகம் விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.

சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு

தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பண்டை இலக்கியங்களில் தமிழ்க் கல்விமுறை

# Tamil Education in Classical Literature

சு. சதாசிவம் / S. Sathasivam[1]
ச. பிறைசூடன் / S. Piraisoodan[2]
[1] Assistant Professor, Chennai Christian College
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச்சாரம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் பண்டைஇலக்கியங்களில் காணக்கிடக்கும் தமிழ்க் கல்வி முறைகளை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் கல்வியும் பயனும், கற்றல் கற்பித்தல் முறைகள், சமயக் கல்வி முறை ஆகிய தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வின் வழி, பண்டை இலக்கியங்களில் காணப்படும் தமிழரின் கல்வி முறைகளை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு பண்டை இலக்கியங்களில் தமிழரின் கல்வி முறைகளை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** பண்டை இலக்கியம், தமிழர், கல்வி முறை

**Abstract**

The major objective of the research is to explore the Tamil Education in the classical literature. This research is designed in a qualitative approach. The library work is used for this study. In this study, the topics of education and effectiveness, learning and teaching methods, and religious education system have been investigated. This study is useful in teaching the younger generation about the Tamil education found in classical literature. The research claims to be the first such attempt to do a study regarding the classical literature to examine the Tamil education.

**Keywords:** Classical literature, Tamils, Tamil education

## முன்னுரை

பழந்தமிழர் இயற்கையோடு இயைந்த செம்மாந்த வாழ்வை மேற்கொண்டனர் என்பது பழந்தமிழ் இலக்கியங்களால் பெறப்படுகிறது. இசை, நாடகம் என்னும் மூவகைக் கல்வியை வலியுறுத்துகின்றன. இம்மூன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இலக்கியமும் இலக்கணமும் உண்டு. இம்மூவகைக் கல்வியில் சிறந்தோங்குவதே பழங்காலக் கல்வியின் நோக்கமாக இருக்கப் பெற்றுள்ளது. அக்காலக் கல்வி, தொழில் சார்ந்ததாக இல்லாமல் அறிவை வளர்க்கும் சார்புடையதாக இருக்கப்பெற்றது என்பதை நம் தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. காலந்தோறும் கல்விச் சார்ந்த சிந்தனைகள் எவ்வாறு புலவர்களின் மனத்தில் எழுந்துள்ளன என்பதை இக்கட்டுரை முன்வைக்கிறது.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு

ஆய்வுத் தரவுகள் கல்வியும் பயனும், கற்றல் கற்பித்தல் முறைகள், சமயக் கல்வி முறை ஆகிய தலைப்புகளில் பகுப்பாயப்பட்டுள்ளன.

கல்வியும் பயனும்

பல்துறையிலும் வல்லவர்களாவது ஒரு சிலருக்கு மட்டுமே வாய்க்கிறது. அதுவும் குறிப்பிட்டதொரு வரம்பிற்குட்பட்டே அமைகிறது. நமது அறிவுக்கு எட்டாத ஆயிரமாயிரம் செய்திகள் எப்போதும் இருந்தே வருகின்றன. இதனை உணர்ந்து கொண்டதின் பயனாக ஔவையார்,

கற்றது கைம்மண்ணளவு கல்லாதது
உலகளவென்று கலைமடந்தை ஓதுகிறாள்

என்று துணிவுடன் கூறுகின்றார். கற்றவர்களே கண்கள் உடையவர்கள். கல்லாதவர்கள் கண்களைப் பெற்றிருப்பினும் அவை புண்களே ஆகும் என வள்ளுவரும் உரைக்கின்றார். இதனை,

கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்உடையர் கல்லா தவர்

என்னும் குறட்பா உணர்த்துகிறது. எத்தகைய செல்வங்களை ஒருவர் பெற்றிருப்பினும் அவை, இறுதியில் அழிந்து போவது திண்ணம். ஆனால், ஒருவர் கல்வியாகியச் செல்வத்தைப்

பெற்றிருப்பாராகில் அச்செல்வம் அழிவில்லாதது மட்டுமன்றி, அவரது அடுத்தடுத்தப் பிறவிக்கும் உடனிருந்து பயன்தரும். கல்விச் செல்வம் எப்பிறவியிலும் அழிவில்லாதது என்பதனை வள்ளுவர்,

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து

என்னும் குறட்பாவில் உணர்த்துகிறார். கல்லாதவர்கள் தன்னடக்கம் இல்லாதவர்கள். தம்மை எப்போதும் பெருமைப்படுத்திப் பேசுவதை விரும்புவர். கற்றறிந்த சான்றோர்கள் சொல் வணக்கத்துடன் பணிந்துப் பேசுவர். கல்லாதவர் வணங்கினாலும் அவரது வணக்கம் வில் வணக்கத்திற்கு ஒப்பானதாகும் என்பதனை முன்றுறையரையனார் என்னும் புலவர்,

கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார்

என்று கூறுகின்றார். கற்றறிந்தவர்களின் சொல்வண்மை பச்சை ஓலையைப் போன்றது. சலசலப்பு இல்லாதது. கல்லாதவரின் வாய்ச்சொல் சலசலப்புடன் கூடிய காய்ந்த ஓலைக்கு ஒப்பானது. பச்சை ஓலைக்கு ஒலி இல்லை. காய்ந்த ஓலைக்கு ஒலி உண்டு. இதுவே, கற்றோருக்கும் கல்லாதவருக்கும் உள்ள வேறுபாடு என்பதனை நாலடியார்,

கற்றறிந்த நாவினார் சொல்லார்தம் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர் பனையின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி

என்று கூறுவது முன்றுறையரையனாரின் கருத்தோடு ஒன்றிப்போகிறது. மனித சமூகத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற ஏற்றத்தாழ்வு எப்போதும் இருந்து வரும் ஒன்று. கற்றோர் தாழ்ந்த குடியில் பிறந்தவர்களாக இருப்பினும் அவர்கள் செல்வ வளம் மிக்க உயர்ந்த குடியினரைவிட மேலானவர்களாக வைத்துப் போற்றப்படுவர். கற்றோரை மதித்துப் போற்றும் பண்பு காலந்தோறும் இருந்துள்ளதை நாலடியார்,

கடைநிலத்தோராயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்

என்று உரைக்கின்றது. இதேபோல், ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் தாம் பாடிய பாட்டொன்றில் கல்வியின் சிறப்பையும் மேன்மையையும் இவ்வாறு கூறுகிறார். மாணவன் தன் குருவுக்கு இன்னல் ஏற்படும் நேரத்தில் அது தீர்க்க உதவி செய்யும் பண்பாளனாகவும், பொருள் கொடுத்துக் கல்விப் பயில்பவனாகவும், வணங்கும் குணமுள்ளவனாகவும் இருத்தல் வேண்டும். தன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளாயினும் தாய் கல்வியில் சிறந்தவர்களையே போற்றுவாள். நாடாளும் மன்னனும் மூத்தோன் சென்ற வழியைப் பின்பற்றாது, கல்வியில் சிறந்த அறிவுடையோன் சொல் வழியிலேயே நடப்பான். வேறுபாடுகளுடைய நான்கு வகை மக்களினத்திலும் கீழ்க்குடியில் பிறந்த ஒருவன் கல்வியில் சிறந்திருப்பானாகில் அவனை எல்லோரும் போற்றுவர் எனும் கருத்தை,

உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போரன்ன வுடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலாற் தாயுமனந்திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனாநரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே

என்னும் பாடலடிகள் வழி பாண்டிய மன்னன் உணர்த்துகிறான். இதனால், சங்க காலக் கற்றல் கற்பித்தல் முறைகளும், கல்வியின் சிறப்பும், கற்றோரின் மேன்மையும் தெற்றெனத் தெரிகிறது.

கற்றல் கற்பித்தல் முறைகள்

காலந்தோறும் கற்றலிலும் கற்பித்தலிலும் மாற்றங்கள் நிகழ்ந்து வந்திருப்பதை அறிய முடிகிறது. கல்வி என்னும் சொல்லிற்கு “அறிவு, வித்தை, கற்கை, நூல்” 8 என்னும் பொருள் கொள்ளப்படுகிறது. எழுதுபொருள்களும் காகிதங்களும் இன்று ஏராளமாகக் கிடைக்கும் நிலை இருந்து வருகிறது. கடந்த காலங்களில் இவ்வாறான நிலை இருக்கவில்லை. ஏட்டில் எழுதுவோரை விட மனப்பயிற்சியால் பல்வேறு செய்திகளை மனத்தில்கொண்டு வெளிப்படுத்துவோரே அதிகம் இருந்தனர் எனலாம். ஆரம்பகாலப் பள்ளிக் கல்வியில் இன்றும் மாணவர்களுக்கு மனப்பாடம் செய்வதற்குரிய செய்யுள்கள் தரப்பட்டு வருகின்றன. இது கற்போரின் நினைவாற்றலை அதிகரிக்கும் நோக்கில் தரப்படுவது எனலாம். இதனைக் கம்பர் கால ஔவையார்,

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்

என்று கூறி உறுதி செய்கிறார். பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிற்கால ஔவையார், கணக்கு முதலியவற்றிற்கு அடிப்படையான எண்களையும், இலக்கியத்திற்கு ஆதாரமான எழுத்துகளையும் இழிவாகப் பேசுதல் கூடாது என்றும் கூறுகிறார். இளம் பருவத்திலேயே அறிவை வளர்க்கும் சிறந்த நூல்களைக் கற்றல் வேண்டும் என்றும், எண்களும் எழுத்துகளும் கண்களுக்கு ஒப்பானதாகும் என்றும், கல்லாதவருக்கு உணர்வுடன் கூடிய நன்னெறி இருக்காது என்றும் பல்வேறு செய்திகளை மொழிந்துள்ளார். இதனை,

எண் எழுத்து இகழேல்
இளமையில் கல்
நூல் பல கல்
எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்
ஓதாதவர்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்

என்னும் பாடல் வரிகள் தெளிவுப்படுத்துகின்றன. நீரில் உள்ள அல்லிச் செடியானது நீரின் அளவே வளரக் கூடியது. அதுபோல், ஒருவருக்கு இருக்கும் நுண்ணறிவு என்பது அவர் கற்றறிந்த நூல்களின் அளவைப் பொறுத்தே அமையும் என்பதை ஔவையார்,

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான்கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண்அறிவு

என உணர்த்துகின்றார். இதனையே வள்ளுவர்,

கற்றனைத் ஊறும் அறிவு

என்று கூறியுள்ளார். கற்றவர் போல் இருக்க நினைக்கும் கல்லாத ஒருவனின் செயல், தோகை விரித்தாடும் அழகிய மயிலைக் கண்ட வான்கோழி, தனது அழகற்ற சிறகினை விரித்து ஆடியது போன்றதாகும் என்பதனை ஔவையார்,

கானமயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி

என்று சுட்டுகின்றார். ஒரு நாட்டு மன்னரையும், கற்றறிந்த சான்றோரையும் ஒப்பிட்டு நோக்கினால் மன்னனைவிட கல்வியில் சிறந்த சான்றோனே மேன்மையுடையவன் ஆவான். மன்னனுக்குத் தனது தேசம் அல்லாமல் வேறிடத்தில் சிறப்பு இல்லை. ஆனால் கற்றறிந்த சான்றோனுக்கு எங்குச் செல்லினும் சிறப்பு உண்டாகும் எனவும், குளத்தில் உள்ள அழகிய தாமரை மலரை அன்னப் பறவை அடைந்தது போல், கல்வியில் சிறந்தோரைக் கல்வியில் சிறந்தவர்களே விரும்பிப் போற்றுவர் எனவும் ஔவையார் உரைக்கின்றார். இதனை,

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடம் எல்லாம் சிறப்பு

என்றும்,

நல்தாமரைக் கயத்தில் நல்அன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்

என்றும் வரும் பாடலடிகளால் அறியப்படுகிறது. அழகு எனப்படும் யாவற்றிலும் சிறந்து விளங்குவது கல்வி அழகே ஆகும். கல்வி ஒன்றே அறியாமையாகிய மன இருளைப் போக்கும் மாமருந்து போன்றது. கல்வி கரைக் காண இயலாதது. கற்பவரின் வாழ்நாள்களோ மிகக் குறைந்த அளவுடையன. அதனால், வாழ்க்கைக்குத் தகுந்த நூல்களைக் கற்பது சிறப்புடையது என்பன போன்ற கருத்துக்களை நாலடியார்,

நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு,

எம்மை யுலகத்தும் யாங்கானோம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து,

கல்வி கரையில கற்பவர் நாள்சில,

என்னும் பாடலடிகள் வழி சுட்டுகிறது. எத்தகைய அறிவு சார்ந்த நூல்கள் பலவற்றைக் கற்று நுண்ணறிவு படைத்தவராக இருப்பினும் ஊழ்வினையின் பயனாக அவரின் பேதமை (அறிவின்மை) உணர்வே மேம்பட்டு நிற்கும் என்பதை வள்ளுவர்,

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்

என்று கூறுவது மிகுந்த ஆராய்ச்சிக்குரியது.

சமகாலக் கல்வி முறை

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் குரு என்றழைக்கப்படும் ஆசிரியருக்கு சங்கக்காலம் முதல் சமகாலம் வரையிலும் ஒரு சமூக முக்கியத்துவம் இருந்து வருவது உண்மை. ஆனால் கற்றல் கற்பித்தலில் ஆரம்பக்காலத்தில் ஒரு ஆசிரியருக்கு இருந்த சமூகத் தேவைகள் இன்று மெல்ல குறைந்துவிட்டது போல் தோன்றுவதற்குக் காரணம், நவீன கற்பித்தல் முறையில் ஏற்பட்டுள்ள அளப்பெரிய மாற்றங்கள் என்பதில் ஐயமில்லை. ஒரு மாணவன் ஆசிரியரின் துணையின்றி எந்தவொரு பொருண்மையிலும் தன் அறிவைப் பெருக்கிக் கொள்ள இயலும் என்கிற நிலையைக் கணினி, கைபேசி, வலைதளம், தொலைக்காட்சி போன்ற சமூக ஊடகங்கள் பெரும் அளவில் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றன. புத்தகமும் கையுமாக இருந்த நிலை மெல்ல மாறி கண்டுபிடிப்புக் கருவிகளோடு புழங்கும் நிலை இன்று எங்கும் விரவியுள்ளது. எதிர்காலத்தில் காகிதமில்லாக் கற்றல் கற்பித்தல் முறையே நீண்டதூரம் பயணிக்கும் என்பதில் ஐயமில்லை. சங்க காலக்கல்வி முறையிலும், ஆசிரியர் மாணவர் இணைந்து பயணிக்கும் வகுப்பறைக் கல்விமுறையிலும் இருந்த நறுமணம் இன்றைய நவீனக் கல்விமுறையில் கமழ்கிறதா என்பதில் ஐயமே.

**நிறைவுரை**

பழங்காலத்தில் இயல், இசை, நாடகம் என்னும் முறையில் கல்வி அமைந்திருந்தது. முடிவேந்தர் முதலாகக் கற்றறிந்தச் சான்றோர்களின் வழிகாட்டுதலின் படியே சமூகப் பயணம் தொடர்ந்துள்ளது. கற்றவர்கள் எச்சூழலில் பிறந்திருப்பினும் அவர்கள், சமூகத்தில் உயர்ந்தோராகப் போற்றப்பட்டனர். ஒருவனது நுண்ணறிவு அவன் கற்கும் நூல்களின் அளவைப் பொருத்தே அமையும். எல்லாவிதமான புற அழகையும்விட மன இருளைப் போக்கும் கல்வி அழகே மேம்பட்டது ஆகும். ஆதலால் வாழ்கின்ற குறைந்த காலத்தில் வாழ்க்கைக்குத் தேவையான மெய்நூல்களைக் கற்பது நலம் தரக்கூடியது. இன்றைய இளைய சமுதாயத்தினர் நல்வாழ்வு வாழ இலக்கியக் கல்வியைத் துணைக்கொள்வது அவசியமாகிறது.

## துணைநூற்பட்டியல்

இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.
மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை
விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.
திருவாசகம் விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.
சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு
தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.
புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), சென்னை, 1971
ஔவையார், தனிப்பாடல் திரட்டு, பாடல், 39.
பழமொழி நானூறு
நாலடியார், பா. 256.
பவானந்தம்பிள்ளை, சு. தமிழ்ச்சொல்லகராதி, ப. 100.
ஔவையார், கொன்றைவேந்தன், பா.7.
மேற்படி நூல், பா.91
ஔவையார், மூதுரை, பா.7.